# வசந்த காலத்திலே!

[ஸ்டாலின் பரிசு நாவல்]

ஜார்ஜி குலியா

தமிழாக்கம்

தி. க. சிவசங்கரன்

...NAI UNIVERSITY LIB...
28 OCT 1968

தமிழ்ப் புத்தகாலயம்

576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.

முதற் பதிப்பு: மார்ச், 1951
இரண்டாம் பதிப்பு: மார்ச், 1956
மூன்றாம் பதிப்பு: செப்டம்பர், 1963
உரிமை பதிவு

விலை ரூ. 2—25

**TAMIL PUTHAKALAYAM**
576, Pycrofts Road,
Triplicane Madras-5.

ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், சென்னை-17.

# நண்பர்களுக்கு

சுமார் நான்கு மாதங்களுக்கு தமிழ்ப் புத்தகாலயத்தாரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது ; "ஒரு முக்கியமானவிஷயமாகப் பேசவேண்டும்" என்று அதில் கண்டிருந்தது.

நான் அங்கு சென்றதும், அவர்கள் ஒரு புத்தகத்தை என்னிடம் தந்து, அதை உடனே தமிழாக்கித் தரவேண்டுமென்றனர். புத்தகத்தைத் திறந்துபார்த்தேன், ஜார்ஜி குலியா எழுதிய 'ஸ்டாலின் பரிசு' பெற்ற நாவல் ! "உண்மை தமிழ் நாட்டிற்கும், தமிழ் இலக்கியத்திற்கும் இது மிகமுக்கியமான விஷயம்தான்" என்ற முடிவுக்கு வந்தேன். அதன் விளைவே, இதோ உங்கள் கையில் இருக்கும் "வசந்த காலத்திலே" (Sprink Time in Saken) என்ற நாவல்.

மாக்ஸிம் கார்க்கி மிக நன்ருகச்சொன்னர் : "சோவியத் இலக்கியம் மருத்துவச்சியாகவும், கல்லறை தோண்டுவோனுகவும் ஒருங்கே வேலே செய்கிறது" என்று. ஆம் ! புதிய மனிதனேச் சிருஷ்டிக்க உதவுவதும், புதிய சமுதாயத்தைச் சமைப்பதில் மக்களின் நல்வாழ்விற்குத் தடையாக உள்ள எல்லாவற்றையும் அழிப்பதும்தான் சோவியத் இலக்கியத்தின் இலட்சியம்.

ஜார்ஜி குலியாவின் இந்நாவலே வாசியுங்கள் ; கார்க்கி கூறியது சரிதானு என்று சிந்தியுங்கள்.

சோஷலிஸ்ட் சகாப்தத்தின் வீரம் மிகுந்த சாதனேகளேச் சித்திரிப்பதே சோவியத் இலக்கியத்தின் குறிக்கோள். இடையருது வளர்ந்தோங்கும் சோவியத் சமூகத்தின் வாழ்வை, புதிய மனிதனின் பண்புகளேச் சித்திரிப்பதே அதன் ஜீவநாடியாகும்.

சோவியத் இலக்கியம் கேவலம் சாதாரணச் சரித்திர மல்ல; அது மக்களின் அறிவை வளர்க்கும் சக்திவாய்ந்த கருவியாகும்.

ஜார்ஜி குலியாவின் இலக்கியத்தைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகம் செய்யும் வாய்ப்பை எனக்களித்த தமிழ்ப் புத்த காலயத்தாருக்கு என் மன மார்ந்த நன்றி.

தமிழ் நாட்டில் பெரும்பாலான பிரசுரகர்த்தர்கள் எதை எதையோ பிரசுரித்துவரும் இந்நாளில், ஒருருஷ்ய நவீனத்தை வெளியிட்டு இந்திய - சோவியத் நல்லுறவை வளர்க்கும் அரும் பணியைச் செய்கின்றனர் தமிழ்ப் புத்தகாலயத்தார். அவர்களது சீரிய முயற்சிக்கு, தமிழ்நாடு தக்க ஆதரவு நல்குமென்று நம்புகிறேன். வணக்கம்.

சென்னை,

15—2—51 தி. க. சி.

# வஸந்த காலத்திலே !

ஸாகேனில்...ஆனால் முதலில் ஸாகேன் என்னும் இடம் எங்கிருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உலகப் படத்திலே இதைத் தேடவேண்டாம்; இந்தச் சிறிய இடத்தைக் குறிப்பதற்கு அதிலே அளவுகள் இல்லை. (இதனால் ஸாகேன் வாசிகளுக்கு யாதொரு மன வருத்தமும் கிடையாது) அப்காஸீயாவின் தேசப் படம் உங்களுக்குக் கிடைத்தால், அதன் வடகிழக்கு மூலையில் ஸாகேன் தென்படும்.

இயற்கையே இந்த ரமணீயமான நெஞ்சை அள்ளும் கிராமத்தை யார் கண்ணிலும் படாமல் மறைத்து வைக்கத் தீர்மானித்துவிட்டதாகத் தோன்றும். நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்; இதன் வடக்கே செங்குத்தான காக்கேசிய மலைச் சிகரங்கள்; கிழக்கே விண்ணுயர நிமிர்ந்து, சோகமயமாய்நிற்கும் குவாகுவா மலைத்தொடர்; மேற்கே,எதற்கும் கைவசம் இருக்கட்டுமென்று சில பனிப் பாறைகளை எப்போதும் தன்னிடம் வைத்திருக்கும் தந்திரமுள்ள கிளைச் மலைத் தொடர்; தெற்கில் என்ன இருக்கிறது? அங்கே ஸாகேனுக்கு வரும் பாதையை ஒன்பது கணவாய்களும், எட்டு மலை ஆறுகளும் காவல் செய்கின்றன. அவை ஒன்றைவிட ஒன்று பயங்கர அரணாக அமைந்துள்ளன. மந்திரக் கதைபோல இருக்கிறதல்லவா? இருப்பினும் ஸாகேன் வாழ்கிறது; முன்னேறுகிறது!

காகஸஸ் மலைப்பக்கம் சென்றவர்களுக்கு, குளுகோர் கணவாயைப்பற்றி நன்கு தெரிந்திருக்கும். கடலை நோக்கிச் செல்லும் ரஸ்தாவையும் அவர்கள் அறிந்திருப்பார்கள். குவாந்திரா கோடார் என்னும் இரு பொல்லாத நதிகளின் செங்குத்தான கரைகளின் வழியே வளைந்து செல்லுகிறது இந்த ரஸ்தா. குவாந்திரா கோடாருடன் கலக்குமிடத்தில் தங்கியிருந்தபொழுது, அவர்கள் மலையிடுக்குகளின் வழியே தவழ்ந்து வரும் சுகந்தம் கமழ் பூங்காற்றைச் சுவாசித்திருப்பார்கள். இந்தப் பூங்காற்று ஸாகேனிலிருந்து வீசுகிறது.

ஸாகேன் பல்லூழி காலமாக—இப்போது காகஸஸ் என்று அழைக்கப் பெறும் பகுதியைத் தவிர மீதியுள்ள இடத்தைக் கடல்கொள்ள ஆரம்பித்த காலத்திலிருந்தே—இருந்து

வருகிறது. ஸாகேனுக்குள் மனிதன் எப்படி வந்தான் எதற்காக வந்தான் என்பதை யாராலும் கூற முடியாது. ஒன்று மட்டும் நிச்சயம்; கற்பனைக்கெட்டாத காலந்தொட்டு, ஸாகேனில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

நாற்பதாண்டுகளுக்கு முன்னர், காச நோயினால் பீடிக்கப் பெற்ற ஒரு சுசூமி நகரசபை அதிகாரி, மலைக் காற்றிற்காகவும், மலிவாகக் கிடைக்கும் ஆட்டுப் பாலுக்காகவும் ஸாகேனுக்கு வந்தார். மக்களின் உபசாரத்தினால், அவருக்கு இரண்டுமே இலவசமாகக் கிடைத்தன. இவ்வதிகாரி அநேகமாக உம்மணா மூஞ்சியாகவே இருப்பார்; அச்சமயத்தில் இவரை யாரும் அணுக முடியாது. அவர் சில சமயம் இரவில் தூங்க மாட்டார். ஆனால் ஒரு கனத்த நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருப்பார். அவர் ஜனங்களோடு பேசும்போது ஸார் சக்கரவர்த்தியையும், மன்னர்களையும் திட்டுவார். கேட்பவர்கள் காதைப் பொத்திக்கொள்ள நேரிடும்! ஆம். அவர் தற்பெருமை கொண்டவர்; சிறிதும் பணிந்து கொடுக்காதவர். ஆகவேதான் இப்போது கஷ்டப்பட நேர்ந்தது. ஆனால் விவசாயிகளுக்கு அவர்மீது அன்புண்டாயிற்று. அவர்களால் இயன்ற உதவிகளையெல்லாம் செய்தார்கள். ஒருநாள் இந்த அதிகாரி மலையிலே ஒரு சுடுகாட்டைக் கண்டார். பண்டைய மனிதன்—மிகப் பழங்கால மனிதன்—ஏதோ ஒரு காரணத்தினால் இங்கு வசித்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். இதை அவர் தன்னை உபசரிப்போரிடம் கூறினார், அந்த ஆசாமிகள் தங்கள் அண்டை வீட்டுக்காரரிடம் கூறினர். பல்லூழி காலமாகத் தங்கள் செம் மண் நிலத்தில் மனிதர்கள் வாழ்கின்றனர் என்பதை அறிந்த ஸாகேனிய நன்மக்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

என்ன காரணத்திற்காகவோ இந்த அதிகாரி-அவர் ஒரு கெட்டிக்கார மனிதர்—கிராமத்திற்கருகிலுள்ள குன்றின்மீது அக்கறை காட்ட ஆரம்பித்தார். குன்றிலுள்ள மெல்லிய மணலை வயல்களின்மீதும் தோட்டங்களின்மீதும் தூவும்படி விவசாயிகளை வற்புறுத்தினார். ஆனால், அவர் புத்திமதியை ஒருவரும் கேட்கவில்லை. வஸந்த காலத்தில் அவர் வாயிலிருந்து இரத்தம் பீறிட்டு அடித்தது; அவர் இறந்துவிட்டார். அவரது உடைமைகளில் கீழ்க்காணும் தலைப்புடன் ஒரு கையெழுத்துப் பிரதி அகப்பட்டது. ஸாகேனில் இயற்கை பாஸ்பரைட். நெடுங்காலமாக இந்தக் கையெழுத்துப் பிரதி பலகைகளுக்குத் தாவிற்று கை எழுத்து முத்து முத்தாக இருப்பினும், கடைசியில் அது சிகரெட் தாளாகத்தான் பயன்

பட்டது. அதன் முதல் பக்கம்மட்டும் நெடு நாட்களாக ஒரு ஸாகேனியக் குடிசையை அலங்கரித்து வந்தது. அந்தக் குடிசையின் பலகையிலிருந்த சிறு கீறலை மறைக்க அது பயன் பட்டது. அந்தக் குடிசையில் வசித்த சிறுவன், நாளாவட்டத் தில் அந்த எழுத்துக்களை மனப்பாடம் செய்துவிட்டான். சுடு மூஞ்சி அதிகாரியின் வார்த்தைகள் அவன் நினைவில் ஆழப் பதிந்துவிட்டன...

ஸாகேனுடைய கடந்த நூற்றுண்டுச் சரித்திரத்தின் உயிருள்ள நினைவுச் சின்னமாயிருப்பவர் கிழவர் ஷாங்கேரி கான்பா. அவருக்கு நூற்றுமுப்பது வயதாகிறது. தமது நீண்ட வாழ்வில் இரு தடவைகள்தான் அவர் ஸாகேனுக்கு வெளியே சென்றிருக்கிருர்; அவரிடமிருந்து களவாடப் பெற்ற குதிரையைத் தேடி ஒரு முறை; தனது வரம்பற்ற வம்சாவளியில் ஒருவனுக்கு ஜோடி தேட அடுத்த கிராமத்திற் குச் சென்றது மற்ருேர் முறை. முதல் பிரயாணத்தின்போது அவருக்குக் கை ஒடிந்து போயிற்று; அவரும் அவரது குதிரை யும் ஒரு கணவாயில் பல்டியடித்து விட்டனர். இரண்டாம் பயணத்தின்போது ஒரு பனிப் பாறை அவரது குதிரையை நசுக்கிக் கொன்றுவிட்டது. அதிலிருந்து, ஊருக்கு அப்பால் ஒருபோதும் தலை நீட்டுவதில்லையென்று ஷாங்கேரி விரதம் பூண்டுவிட்டார். எனவே, ஸாகேனியர்கள் தங்கள் மலைக் கூடுகளைவிட்டு வெளி வருவதில்லை. பள்ளத்தாக்கிலிருந்து ஸாகேனுக்கு வரும் யாத்திரிகர்களும் மிகக் குறைவுதான்.

1899-ம் ஆண்டின் இறுதியில், லெப்டினன்ட் ஸ்டுகாவ் அதிகாரியாக வரும்வரை, ஸாகேன் கிராமப் பகுதிகளின் பட்டியலில் ஓரிடத்தைப் பெற்றிருந்தது. இந்த அதிகாரி ஸாகேனின் நிலைமையை உணர்ந்து, வரி வசூலிப்போரின் வார்த்தைக்குச் செவி சாய்த்து—அவர்கள் ஒன்பது மலைகளை யும், எட்டு மலை ஆறுகளையும் ஸாகேனிய விவசாயிகளின் அற்பக் காசிற்காகக் கடக்க இஷ்டப்படவில்லை—ஸாகேனைத் தமது பட்டியலில் இருந்து நீக்கிவிட்டார். ஆனால் இந்தக் கடுமையான ராஜதந்திரம் யாதொரு தொல்லையையும் தந்து விடவில்லை. ஸாகேன் உலகிலிருந்து துண்டிக்கப் பெற்று அநாகரிகமாய் இருந்தாலும், பிரபஞ்சத்தில் அதற்கு ஓர் இட முண்டு. அது எட்ட முடியாத பூமியாய்ப் பெருமிதத்துடன் நிமிர்ந்து நிற்கிறது.

சுருங்கக் கூறின், இதுவே ஸாகேனின் சரித்திரம். இன் றுள்ள ஸாகேனைப் பற்றிக் கூற வேண்டுமானுல், அதைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளப் பிரமாதமாக ஒன்று

மில்லை. இதை ஆரம்பத்திலேயே பரிபூரணமாக ஒப்புக் கொண்டுவிட வேண்டியதுதான்!

எங்கள் ஜில்லாவிற்கு வந்தால், உங்கள் கண்களுக்குச் சரியான விருந்து கிடைக்கும். எங்கள் கிராமங்கள் பெரியதாகவும், அழகாகவும், செழுமையானதாகவும் இருக்கும். இப்போது, கொழுத்த எருதுகளைவிட யந்திரக் கலப்பைகளே எங்களிடம் அதிகம். எங்கள் ரஸ்தாக்களில், ஒன்றோடொன்று மோதிக்கொள்ளுமோ என்றெண்ணும் படியாக ஏராளமாக லாரிகள் ஓடுகின்றன. அநேகம் கூட்டுப் பண்ணைகளுக்குச் சொந்த மோட்டார்கள் இருக்கின்றன. சுருங்கச் சொன்னால்—அவை செல்வம் மிகுந்தவை. இதெல்லாம் ஸாகேனைப் போன்ற ஜில்லாவில்! இதைப்பற்றி அநேகம் ஜில்லாக் கமிட்டிக் காரியதரிசிகள் தங்கள் மண்டையைச் சொரிந்திருக்கின்றனர். ஸாகேன் பிரச்னையைத் தீர்ப்பது எப்படி என்று யோசித்திருக்கின்றனர். ஆனால் ஒருவருக்காவது விடை புலப்பட்டால்தானே!

சரி. ஸாகேன் எப்படியாவது ஒழியட்டும். வேறு கிராமங்களைப் பற்றி எழுதும்—என்று நீங்கள் சொல்லலாம். ஸாகேன் இப்படியிருக்கிறது, அப்படியிருக்கிறது, பின்தங்கியிருக்கிறது, எட்ட முடியாத உயரத்திலிருக்கிறது—இவை எல்லாம் எங்களுக்கு எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். அப்படிக் கேட்பது எளிது. ஆனால், நான் ஸாகேனில் பிறந்து வளர்ந்தவனானால், அது என் சொந்தக் கிராமமாய் இருந்தால் நான் என்ன செய்வது? எனவே, ஸாகேனைப் பற்றி நான் எழுதப் புகுந்தது சரிதான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். பிற கிராமங்களைப் பற்றி எழுத நிறையப்பேர் இருக்கிறார்கள். அவைகளைப் பற்றி யாரும் எழுதாவிட்டாலும்கூட, அவை ஏற்கனவே பிரசித்தி பெற்றவைதாம்.

ஸாகேனிய வழமுறைப்படி என்னை நானே அறிமுகம் செய்துகொள்ள வேண்டும். நான் பிறந்தது—நாசமாய்ப் போன ஸாகேனில்! அதற்காக ஆரம்பத்திலே வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. பிறப்பிலிருந்துதான் ஒரு மனிதனின் வாழ்க்கை ஆரம்பிக்கிறதென்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் நான் எப்போது பிறந்தேன். பழைய ஸாகேனியப் பஞ்சாங்கப்படி, ரஷ்ய—ஜப்பான் யுத்தம் ஸாகேனுக்குத் தெரிய வந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு நான் பிறந்தேன். ஆனால், அந்தச் செய்தி ஸாகேனுக்கு எப்போது வந்தது? யாரால் சொல்ல

முடியும்! இருப்பினும், இந்த முக்கியமான தேதியை நிர்ணயிக்க மற்ருெரு வழியிருக்கிறது. நான் பிறந்து நான்கு வருடங்களுக்குப் பிறகு, பலத்த பனி மழை பெய்ததாம். அது 1911-ம் வருடம். அப்படியானல், கணக்குப் பாருங்களேன்—அந்த யுத்தச் செய்தி ஸாகேனை எட்டிப் பிடித்து எனது பிறந்த நாளைச் சிறப்பிக்க மூன்ருண்டுகள் ஆயின!

அநேகம் குடியானவக் குழந்தைகளைப் போல, நானும் ஆடு மேய்ப்பவனுகத்தான் வளர்ந்தேன். ஜனங்கள் சொல்வதுபோல், இயற்கையிடம்தான் பாடம் கற்றேன். ஸோவியத் ஆட்சி வரும்வரையில்—அதாவது எனக்கு மீசை முளைக்கும் வரையில், நான் உண்மையான புத்தகத்தைத் தொட்டதேயில்லை.

சித்திரக்காரனுகலாமென்று நான் 1933-ல் ஸாகேனுக்கு வந்தேன். என் எண்ணத்தை அறிந்தவுடன், மக்கள் கைகொட்டிச் சிரித்தனர். ஆனல், சில கிராம வாசிகளின் படங்களை நான் வரைய ஆரம்பித்ததும், அவர்களின் சிரிப்பு நின்றுவிட்டது. அதற்குப் பதில் ஆச்சரியம் பொங்க ஆரம்பித்துவிட்டது. அடடே! ஒரு ஸாகேனியனுல் புகைப் படக்காரனேடுகூடப் போட்டிபோட முடியும் போலிருக்கிறதே!—இந்தக் கண்டுபிடிப்பு அவர்களுக்குப் பெரும் வியப்பைத் தந்தது. நான் 1947 மாரிக்காலத்தையும், வஸந்தத்தையும்ஸாகேனில் கழித்தேன். அப்போதுதான் எனது மற்ருெரு தொழிலைப் பற்றிக் கிராமவாசிகள் அறிந்தனர். (கிழவர் கான்பா என்னை 'எழுத்தாளன்' என்று அழைத்தார்; அதிலே அவருக்கு நிரம்பப் பெருமை).

ஆனல், இது என்னைப் பற்றிய கதையல்ல; வஸந்தத்தைப் பற்றிய கதை; ஸாகேனிய வஸந்தத்தைப் பற்றிய கதை.

## 2

என் கதை ஆரம்பமாகும் நாளில், ஸாகேனில் பிரகாசமான சூரிய ஒளி நிறைந்த பருவம், மார்ச் மாதம் கழிய இன்னும் சில தினங்களே இருந்தன. இளஞ்சூடான காற்று, வஸந்தம் விரைவில் வருகிறதென்று கட்டியம் கூறியது. பூமியிலிருந்து ஆவி கிளம்பிக்கொண்டிருந்தது. மலையிடுக்குகளிலும், நீரோடைகளின்மீதும் மங்கலான மூடு

பனி தவழ்ந்து கொண்டிருந்தது. அது சுழல் காற்றிலே மேலே எற்றுண்டு, கனத்த மூடுபனியாக மாறியது.

ஸில்வர்மெடோ (வெள்ளிப் புல் தரை) எனப் பெயர் பெற்ற கிராமத்தின் மேலே, இருண்டமேகங்கள் மிதந்தன. அந்தக் க்கிராமம் மலைக்கு வெகு அருகாமையில் நிமிர்ந்து நிற்கிறது. எனவே, அந்த மேகங்களுக்குத் தப்பித்துச் செல்ல வேறு வழியில்லை. அவை பைன் மரங்களின் உச்சியை வருடின; பிறகு சிதறிப்போய் மீண்டும் ஒன்று கூடின. பக்கத் துக் கணவாயிலிருந்து ஸாகேன் நதிப் பள்ளத்தாக்கை நோக்கி வீச முயன்ற சுழல்காற்றிற்குப் பணிந்து கொடுத்து, மெதுவாகக் கிழக்கே நகர்ந்தன. பின்னர் கருநீல ஆகாயத்தைக் கிழித்துக் கொண்டு, கதிரவன் பூமியைக் களிப்பில் ஆழ்த்தினான்.

ஸாகேனுக்கு வெளிப்புறத்தில், நதிச் சமவெளியில் அமைந்திருக்கும் நுட்கல்விக் கிராமத்தில் வஸந்தம் மலர்ந்து விட்டது. ஒரு சில கிலோமீட்டர்கள் தாம் இரு கிராமங் களையும் பிரிக்கின்றன. ஆனாலும் இரண்டிற்குமிடையே என்ன வேற்றுமை! இங்கே மனித மனம் குளிர் சுனைகளின் மீதும், நிழல் செறிந்த சோலைகளின் மீதும் வட்டமிடுகின்றது. வேலையை ஆரம்பிப்பதற்குச் சரியான சமயம்தானா என்று. குடியானவர்கள் வியாபார ரீதியில் பூமியை நோக்கினர், வஸந்தகாலத்து வெயிலில் கால்களைப் பரப்பிக்கொண்டு, முற்றங்களில் நாய்கள் படுத்துக் கிடந்தன. தரையிலே மரகதப் புல் படர்ந்திருந்தது. மாரிக்காலத்திலே கேட்க முடியாத பற வைகளின் இசைவெள்ளம் மீண்டும் பிரவகிக்கத் தொடங் கிற்று. மரங்களிலே அரும்புகள் மலர ஆரம்பித்தன. வஸந் தத்தின் இனிமை ததும்பும் இளஞ்சூடு பூமியெங்கும் பாய்ந் தோடியது.

எவ்வளவுதான் சூரியன் பிரகாசித்தாலும், ஏப்ரல் மாத ஆரம்பத்தில் தங்குவதற்கு மலைச்சுனை ஏற்ற இடமல்ல. காற்றிலே இன்னும் ஈரம் புரையோடி யிருந்தது. இதயத்திலே சோக எண்ணங்கள் முளைப்பதைப்போல, மாரிக்காலக் குளிர் பூமியில் இன்னும் ஊசலாடிக்கொண்டுதான் இருந்தது. கதி ரவன் ஒளியைப் பூமி இன்னும் அருந்தவில்லை; வெறுமனே ஆவியைக் கக்கிக்கொண்டுதானிருந்தது. நாலு அங்குலத்திற் குக் கீழே பிப்ரவரி மாதத்துக் குளிர் இன்னும் ஆட்சி செலுத் திக் கொண்டிருந்தது.

இரண்டு கிராமத்தார்களுக்கும் பயன்பட்டு வந்த நீரோடைக்கு அருகில், கெஸ்ஸோ மிர்பா உட்கார்ந்திருந்

தான். அவனுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். அவன் பொழுதைப் போக்குவதற்காக ஒரு மரக்கொம்பைச் செதுக்கியவண்ண மிருந்தான். மலைப்பிரதேசத்து இடையர்கள் அணிந்துகொள்ளும் அகன்ற விளிம்புள்ள தொப்பி அருகில் கிடந்தது. செங்குத்தான இடங்களில் ஏறும்போது, அவனுடைய ஊனமடைந்த காலுக்கு உதவி செய்யும் கழியும் அங்கே கிடந்தது. கெஸ்ஸோ காக்கி உடை தரித்து, அகலமான ராணுவப் பெல்ட்டை அதன் மீது தொளதொளவென்று அணிந்திருந்தான். அவனது உயரமான ராணுவப் பூட்ஸுகள், வெள்ளாட்டின் கொழுப்பினால் மெருகு தீட்டப்பெற்றுப் பளபளத்தன.

மலைக்காற்றைப்போல் தெளிவாக இருந்த நீரோடையைச் சுற்றி, பசுங்கொடிகள் படர்ந்துள்ள சிறு குன்றுகள் குதிரைலாடத்தைப் போலக் கவிந்திருந்தன. நீரோடை உருக்கிவிட்ட கண்ணாடியைப் போன்றிருந்தது. அதன் மீது விழுந்த மரத்துண்டுகள் தாம், நீர்ப்பரப்பின் மீது டஜன் கணக்கான வளையங்களை உண்டாக்கின. அந்த வளையங்கள் பெரும் வட்டங்களாயின. கெஸ்ஸோ அதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இந்த ஓடையருகே இன்னும் ஒரு நிமிடத்தில் இரண்டு பேர்—ஒருவரையொருவர் பார்க்க விருப்பமில்லாத இரண்டு மனிதர்கள் சந்திக்கப் போகின்றனர். அவர்கள் எதிரிகள் அல்ல; ஆனால் சிறந்த நண்பர்கள் என்று கூறி விடவும் முடியாது. அவர்கள் ஒருவர்மீது ஒருவர்வெறுப்புக்கொண்டிருந்தனர் இதற்குக் காரணமான ஓர் அப்பாவிப் பெண்ணும் ஓடையை நோக்கி வந்துகொண்டிருக்கிறாள். விஷயம் என்னவென்றால், அந்தப் பெண்ணிடம் நிக்கோலா காதல் கொண்டிருக்கிறான். அந்த விஷயத்தில் கெஸ்ஸோ தலையிட்டு இடைஞ்சல் பண்ணுகிறான் என்பது நிக்கோலாவின் சந்தேகம். ஓர் அழகிய மனைவியைப் பெறவேண்டிய வயது தனக்கு வந்துவிட்டது என்று நிக்கோலா நினைத்தான். தனது திட்டங்கள் வெற்றிபெறும் என்று அவன் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தபோது, இந்தப்பயல் கெஸ்ஸோ எங்கிருந்தோ இடிபோல் விழுந்து காரியத்தைக் குட்டிச்சுவராக்கி விட்டானே! கெஸ்ஸோ போர்முனைக்குச் செல்லுமுன்னர், இவ்விருவருக்கும் தோன்றிய காதல் இன்னும் அவிந்துவிடவில்லைபோலும். இருவரும் பரஸ்பரம் பொறுமையுடன் பழகி வந்தனர். ஆனால் அந்தப் பொறுமையை வெளிக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் இவர்களின் விரோதத்திற்கு வேறொரு காரணமும்

இருந்தது. அன்றுட வாழ்க்கையில் தான் அதன் அடிப்படைகள் இருந்தன. விஷயத்தை வெளிப்பபடையாகச் சொன்னால், கெஸ்ஸோ தலைவர் பதவிக்கு நிற்கப்போகிறுனென்று நிக்கோலா கருதினான். இந்தத் திறமை மிகுந்த இளைஞன் கிராம சோவியத்தின் தலைவனாகி விடுவானோ என்று அவனுக்குப் பயமுண்டாகிவிட்டது. இது நல்லதல்ல. அப்படி நேர்ந்துவிட்டால், கிராம மக்களின் முன்னிலையிலே நிக்கோலா தாழ்ந்தவனாகி விடுவான். கிராம சோவியத்தின் விவகாரங்கள் நடத்தப்பெறும் முறை கெஸ்ஸோவிற்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவன் பகிரங்கமாகவே தன் அதிருப்தியை வெளியிட்டு வந்தான்.

நிக்கோலா எச்சரிக்கையுடன் புதரை விலக்கி நிரோடைப் பக்கம் எட்டிப் பார்த்தபோது, தலை மறைவாக இருக்க வேண்டும் என்பதுதான் அவன் எண்ணம். ஆனால், கெஸ்ஸோ அவனைக் கவனித்துவிட்டான். ஆகவே புதரிலிருந்து கீழிறங்கி, அவனை - ஸாகேனியர்கள் சொல்லுகிறபடி—அலட்சியமாகப் பல்லைக்காட்டி வரவேற்பதைத் தவிர வேறு வழியில்லை. நிக்கோலாவை வரவேற்கும்போது கெஸ்ஸோவிற்கும் அலாதி மகிழ்ச்சி ஏற்பட்டுவிடவில்லை.

''ஸ். வெயில் ஆளைக் கொல்லுகிறது!'' என்றான் நிக்கோலா. மத்திம வயசு என்றாலும், அவனுக்குப் பெருத்த சரீரம். கன்னங்கள் சதையேறி உப்பியிருந்தன. ஒடுங்கிய இமைகளிலிருந்து, சஞ்சலம் நிரம்பிய கண்கள் ஊடுருவிப் பார்த்தன. ஆனால் அவனது வாய் நிறைந்த சிரிப்பு, இரு வரிசையிலும் ஒழுங்கான வெண்பற்கள் மின்னிடும் சிரிப்பு, அவனுக்கு ஒருவிதக் கவர்ச்சி யளித்தது. நிக்கோலா ஒரு பெரிய கைக்குட்டையைத் தண்ணீரில் நனைத்தான். முகத்தையும் கழுத்தையும் துடைத்துக்கொண்டான்.

''இங்கே என்ன செய்கிறாய்?'' என்று எதையோ கண்டு பிடித்துவிட்ட மாதிரி, கெஸ்ஸோவைப் பார்த்துக் கண்ணடித்துக்கொண்டு கேட்டான். பிறகு ஓடையை அலட்சியமாகப் பார்த்துக்கொண்டு மர்மமாகப் பேசினான்: ''எனக்குத் தெரியும்...''

நிக்கோலா வேண்டுமென்றே ஒரு சிரிப்புச் சிரித்தான். மீண்டும் கைக்குட்டையை எடுத்துத் தண்ணீரில் அலச ஆரம்பித்தான். ஏதாவது வேலை வேண்டுமே!

''சும்மா உட்கார்ந்து, இதைச் செதுக்கிக் கொண்டிருக்கிறேன்'' என்று கடுகடுப்பாகக் கெஸ்ஸோ மரக்கொம்பைத் தூர வீசினான்.

''அது எனக்குத் தெரியாதா?'' என்று சிரித்துக் கொண்டே தண்ணீரைப் பார்த்துச் சொன்னான் நிக்கோலா. அவனது இதழ்க்கடைகள் மேலும் கீழும் துடித்தன.

அவன் தண்ணீரோடு விளையாடுவதைக் கெஸ்ஸோ கவனித்தான். எப்போதும் சிரித்துக்கொண்டும், தன்னைச் சூழ்ந்துள்ளோர் சலித்துப் போகும்படி ஓரளவு அலட்சிய மாகவும் இருக்கும் இந்த ஆசாமியைக் கவனித்தான். நிக்கோலாவின் ஆரோக்கியம் மிளிரும் சிவந்த கன்னங்களைக் காணும்போதெல்லாம், கெஸ்ஸோவுக்கு எரிச்சல்மூண்டது. அவன் சுத்தச் சோம்பேறி என்பது கெஸ்ஸோவின் அபிப்பிராயம். நிக்கோலா கிராம சோவியத் தலைவனின் ஆசனத்தில் அமர்ந்திருக்கையில், எப்படியோ அவனது கன்னச் சிவப்பு மறைந்துவிடும். அவன் ஆபீஸ் அறையில் நிதானமும் கௌரவமும் உடையவனாக, பேச்சிலும் அங்க அசைவிலும் அமரிக்கை உடையவனாக இருந்தான். ஓர் உண்மையான வேடனுக்கு, ஆபீஸில் ஜோலி இல்லை என்பதை அவன் உணர்ந்திருந்தானோ என்னவோ! நிக்கோலா உண்மையிலேயே மிகச் சிறந்த வேடன். நிர்வாக வேலை சம்பந்தமாக, தன்னை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்பதுதான் அவன் விருப்பம். ஜனங்கள் அவனிடம் கிராம சம்பந்தமான பிரச்னைகளைக் கொண்டு வரும் போது, ''அமைதி! ஒழுங்கு!'' என்று ஆர்ப்பாட்டம் செய்வான் நிக்கோலா. அவன் சோம்பேறி தானோ அல்லது தகுதியற்ற ஸ்தானத்தில் அமர்ந்து விட்டதனால் அவதிப்படுகிறானோ என்னவோ? இம்மாதிரியும் நேர்வதுண்டு! எல்லோரும் தலைவர் பதவிக்குத் தகுதியுடையவர்கள் அல்லவே!

''ஸாகேன் என்பது என்ன?'' என்று நிக்கோலா சில சமயம் தன்னைத் தானே கேட்டுக்கொண்டு பதிலும் அளித்துக்கொள்வான். 'மலைகளுக்கிடையே மறைந்திருக்கும் ஒரு துண்டுச் செம்மண் நிலம், கரடியின் குகையை விடச் சிறந்ததல்ல...' இந்த எண்ணம் தான், அவனது தோல்வி மனப்பான்மையின் ஆணிவேர். அதன் அறிகுறிகள், கிராம சோவியத்துக்குச் சென்றவர்களுக்குத் துலாம்பரமாகத் தெரிந்தன. கிராம சோவியத் தலைவரின் தடித்த முகம், உடைந்த ஜன்னல் கதவுகள், கீரிச்சிடும் நோஞ்சான் கதவுகள்...இத்தியாதி.

நிக்கோலா அடிக்கடி சொல்லுவதுபோல, அவனும் தன் வாழ்நாளில் வெடிமருந்தை ''மோந்து'' பார்த்திருக்கிறான்.

அவன், போர்க்களத்தில் இரண்டு வருஷம் துப்பாக்கியைக் கீழே வைக்காமல் போராடியிருக்கிறான். அவனது துப்பாக்கிச் சனியனில் காணப்படும் சிறு சிறு கீறல்களெல்லாம், அவனது ராணுவ தீரத்திற்கு அடையாளங்களாகும்......யுத்தம் முடிந்தது. நிக்கோலா வீடு திரும்பி, கிராம சோவியத்தின் தலைவனாகி விட்டான். ''எனது ராணுவ விருதுகளால் ஜனங்களை மயக்கிவிட்டேன்'' என்று தலைவர் ஆசனத்தில் உடம்பை நெளித்துக் கொண்டே நிக்கோலா பகிரங்கமாக ஒப்புக்கொண்டான். வாஸ்தவத்தில் காடும், காட்டு மிருகங்களும்தான் அவனுக்கு உளமார்ந்த மகிழ்ச்சியைத் தந்தன. அவன் ஒரு பிறவி வேடன். அவன் இன்னும் தலைவர் பதவியை வகித்து வருகிறான் என்றால், கிராமஜனங்கள் அவன்மீது கடும் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அதன் காரணம் அவனுடன் வேறு திறமையான ஆட்கள் உழைத்து வருவதுதான். அவர்கள் தான் கிராமத்தின் பிரச்னைகளைக் கவனித்துக் கொண்டு, தலைவனையும் முன்னே சுமந்து செல்பவர்கள்.

நிக்கோலாவின் அலட்சிய புத்தி, அநேகருக்கு எரிச்சலை உண்டாக்கியது. அவர்களில் கெஸ்ஸோவும் ஒருவன். ஆனால் நிக்கோலாவை யாராவது கண்டனம் செய்தால், அவன் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லித் தன் கொள்கையை ஸ்தாபித்து வந்தான். சுருங்கச் சொன்னால், தற்காலிகமாக ஏதோ ஒப்பேற்றி வந்தான்...

நிக்கோலாவிடம் பேசுவதற்கு வேறு நல்ல விஷயம் இல்லாததால், கெஸ்ஸோ வேட்டையைப் பற்றித் தன் அபிப்பிராயங்களை உதிர்த்தான்.

''இது வேட்டைக்கு நல்ல சமயம்'' என்றான் அவன்.

''நல்ல சமயமா?'' என்று விசிலடித்தான் நிக்கோலா. ''கழுகுகள் எங்கே பறக்கின்றது பார்த்தாயா? காட்டில் இப்போது ஒன்றுமே அகப்படாது...''

நிக்கோலா புல் தரையில் படுத்துப் புறங்கையைத் தலைக்கு வைத்துக்கொண்டான். பேச்சு ஓடவில்லை. கெஸ்ஸோ தனது பெரிய கைக் கடிகாரத்தைப் பார்த்தான். அது யுத்த சேவையின் ஞாபகச் சின்னம்.

''அவசரமில்லையே? அல்லது யாருக்கேனும் காத்துக் கொண்டிருக்கிறாயா?''

''ஏன் அப்படிக் கேட்கிறீர்?''

''நான் கேட்டது சரிதானே?'' என்று கிண்டலாகப் பார்த்தான் நிக்கோலா.

இந்தக் கேள்வி கெஸ்ஸோவுக்கு எரிச்சல் மூட்டியது. அவன் சடாரென்று எழுந்திருந்து, பெல்ட்டை இறுக்கிக் கட்டினான்.

"இரு அப்பா...நீ யாராவது ஒரு பெண்ணுக்காகக் காத்துக் கொண்டிருப்பாய், நான் போகிறேன்."

கெஸ்ஸோ வெட்கினான். ஏனெனில், அந்தக் கிண்டல் குறிவைத்த இடத்தில் பாய்ந்துவிட்டது. ஆகவே, அவனுக்கு உண்மையான கோபம் வந்துவிட்டது.

"சரி அப்பா சும்மா விளையாட்டுக்காகச் சொன்னேன்" என்று, நிக்கோலா கைக்குட்டையைத் தண்ணீரின் மீது அறைந்தான். "கெஸ்ஸோ! நீ என்ன செய்வாய்? நாமெல்லோரும் மனிதர்கள் தானே!..."

அவன் ஏன் கெஸ்ஸோவை அவ்விதம் அர்த்த புஷ்டியுடன் நோக்கவேண்டும்? அந்த இடத்தை விட்டு உடனே தொலைந்து போகக் கூடாது?......

காலையிலிருந்து கெஸ்ஸோவின் உள்ளத்தில் துள்ளிக் கொண்டிருந்த குதூகலம் மறைந்தது. அங்கே இடியும், புயலும் உண்டாயிற்று.

"இங்கு எல்லோரும் வரலாம். ஓடைக்கரைக்கு வருகிறவர்களை நீர் தடை செய்ய முடியாது" என்று கெஸ்ஸோ உறுமினான்.

"தடை செய்ய முடியாது! தடை செய்ய முடியாது!!" என்று நிக்கோலா எக்காளமிட்டான். "சரி, நான் போய் வருகிறேன்" என்று கைக்குட்டையை உதரிக் கொண்டு கிளம்பினான்.

ஆனால் அப்போது புதர்களுக்கிடையே சலனம் உண்டாயிற்று. ஒரு பெண் ஓடையை நோக்கிக் கீழிறங்கி வந்தாள்.

காமா (அதுதான் அவள் பெயர்) இந்த எதிர்பாராத காட்சியைக் கண்டதும், மான்குட்டியைப்போலத் துள்ளி நின்றாள். ஒன்றல்ல, இரண்டு ராணுவ உடையணிந்த ஆசாமிகள் இருப்பதைக் கண்டதும் அவளுக்கு என்னவோ போலிருந்தது. ஆனால் உலகத்தின் மற்றப் பகுதிகளைப் போல, ஸாகேனியப் பெண்களுக்கும் தங்களைச் சமாளித்துக் கொள்ளும் சாதுர்யம் உண்டு.

ஆகவே, காமா தண்ணீர் எடுக்கக் கீழிறங்கி வந்தாள். இரண்டு ஜோடிக் கண்கள் தன்னையே உற்று நோக்குவதை உணர்ந்தாள். வெகு அலட்சியமாகத் தலையிலுள்ள பட்டுக் கைக்குட்டையைச் சரிப்படுத்திக் கொண்டு, மண் குடத்தைத் தூக்கி வைத்தாள். அவள் கண்கள் நாணத்துடன் பூமியை நோக்கின.

''நில்!'' என்று ஏதோ ஒரு மனக்குரல் காமாவிடம் சொல்லிற்று. இது வரப்போகும் ஆபத்திற்கு அறிகுறி என்பதில் சந்தேகமில்லை. அந்த இடத்தை ஆபத்து வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஏனெனில், அவ்விடத்தில் பற்பல கோரமான சண்டைகள் நிகழ்ந்துள்ளன. அந்த நீரோடை பண்டைக் காலமுதலே காதலர்கள் சந்திக்குமிடமாக இருந்திருக்கிறது. போர்க்களமாகவும் இருந்திருக்கிறது. (ஸகேனில் பொறாமைக்காரர்களுக்கு என்றும் குறைச்சல் இல்லை!)

கெஸ்ஸோ முகத்தைச் சுளித்துக்கொண்டு நின்றான். நிக்கோலா கபடச்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான். இதெல்லாம், அவ்விருவரும் சண்டை போட்டுக் கொள்கின்றனர் என்ற எண்ணத்தையே காமாவுக்கு உண்டாக்கிற்று.

இதற்கு என்ன சொல்லுகிறாய்? பிளான் போட்டு வந்திருக்கிறீர்களா? என்று இரைந்தான் நிக்கேலா.

''அப்படியிருந்தால்தான் என்ன?'' என்று வெண் பற்கள் ஒளி வீச, குறும்புத்தனமாய் தலையாட்டிக் கொண்டு காமா கேட்டாள்.

கெஸ்ஸோ அப்பாவிபோல் மூஞ்சியை வைத்துக் கொண்டான்.

''நாமிருவரும் ஒத்துப் பேசி வந்திருக்கிறோமென்று இவர் கூறுகிறார்'' என்றான்.

''அப்படித்தானிருக்கட்டுமே!'' என்று காமா நாசூக்காகப் பின்னலைப் பின்புறம் தூக்கிப் போட்டாள்: ''என்னைச் சந்திக்க நிச்சயமாகயாரும் மனம் கூசமாட்டார்கள்.''

''கெஸ்ஸோ வேறுவிதமாக நினைக்கிறான்'' என்றான் நிக்கோலா.

''நானா? நான் ஏன் அப்படி நினைக்கவேண்டும்?''

''எனக்குத் தெரியாது'' என்று நிக்கோலா தனது பெரிய கைக்குட்டையை நிஜார்ப் பைக்குள் திணித்தான். ''ஓ! குமரன் குமரிகளே! நீங்களிவரும் கலவரமடைந்து விட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். வேடிக்கை கிடக்கட்டும். கெஸ்ஸோ! வேலை யென்ருல் வேலைதான். நாளைக்கு சோவியத்துக்குவா. முக்கிய விஷயமாக உன்னேடு பேச வேண்டும். உனக்குத் தெரியுமல்லவா? வஸந்தம் நம்வீட்டு வாயிலண்டை வந்து விட்டது.''

நிக்கோலா குன்றின்மீது குதித்தோடினன். மறைந்து போகுமுன்பு மற்ெருரு முறை அர்த்த புஷ்டியோடு சொன்னன்:

''உனக்குத் தெரியுமல்லவா? வஸந்தம் வந்து விட்டது!''

அதன்பின் நீச்சல்காரன் நீரில் மூழ்குவதைப்போல, புதரில் மறைந்துவிட்டான்.

## 3

கெஸ்ஸோவும், காமாவும் கதவு தாளிடப் பெற்ற அறையில் தனிமையில் விடப்பட்டதைப் போல இருந்தனர். அவர்களால் தங்கள் சிந்தனையை ஒன்று திரட்ட முடியவில்லை.

காமா மண்குடத்தைத் தரையில் வைத்து, அதன் கரி படர்ந்த பாகங்களை மணலால் தேய்க்க ஆரம்பித்தாள்.

கெஸ்ஸோ, ஒரு கழியினல் மணலில் விசித்திரக் கோலங்கள் தீட்டிய வண்ணம் இருந்தான்.

''எவ்வளவு கலவர மடைந்து விட்டீர்கள்?'' என்று காமா அவனை ஏறிட்டுப் பாராமலே கூறினள்.

''நானு?''

''ஆம்.''

''நான் ஏன் கலவரமடைய வேண்டும்?''

''எனக்கென்ன தெரியும்? ஒரு வேளை உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லையோ என்னவோ?''

''காமா!'' என்று அவளை நெருங்கினன் கெஸ்ஸோ.

''கிட்டே வராதீர்கள். அது ஒளிந்து பார்த்துக்கொண்டிருக்கும்!'' என்று காமா எச்சரித்தாள்.

கெஸ்ஸோவின் முகம் சுண்டிப்போயிற்று. காமாவின் நெஞ்சமும் அதைக் கண்டு வருந்தியது. அவள் அவனருகில் அமர்ந்து, அவனுடைய அகன்ற கையைத் தன் கைமீது பதித்துக்கொண்டாள்.

''என்ன யோசனை ?''

காமா அவன் கையைத் தடவிக்கொடுத்தாள்; அவன் விழிகளை உற்று நோக்கினாள். அவளுடைய குறும்புத்தன மான கருவிழிகள் தன்னிடம் மிகவும் நெருங்குவதைக் கெஸ்ஸோ உணர்ந்தான். ஆனால், அவளுடைய கனிவுக்குப் பதிலளிக்க அவனால் இயலவில்லை.

''அவன் உன்னைக் காதலிக்கிறான்'' என்று மிகச் சிரமப் பட்டு வார்த்தைகளை வெளித் தள்ளினான்.

காமா கரங்களினால் அவன் கழுத்தைப் பின்னினாள். தன் உதடுகள் அவன் காதில் படும்படியாக முணுமுணுத்தாள்! ''நான் உங்களைக் காதலிக்கிறேன்...''

கெஸ்ஸோ மீண்டும் பிடிவாதமாகச் சொன்னான்:

''அவன் உன்னை நிச்சயமாகக் காதலிக்கிறான்.''

''காதலிக்க எல்லோருக்கும் உரிமையுண்டு...''

''அவன் காதலிப்பதற்குச் சில காரணங்கள் இருக்க லாம்.''

''அசடு! அவனை நாம் மறந்து விடுவோம்'' என்று, காமா தன் காதலன்மீது சாய்ந்துகொண்டு கூறினாள்.

அவள் தனக்குத் தானே சிரிப்புடன் கூறிக்கொண்டாள். 'அவனுக்குப் பிசாசைப் போன்ற பொறுமை இருக்கிறது.''

இதற்கிடையில், அந்தப் ''பிசாசு'' முகத்தைச் சுளித்துக் கொண்டு பரிதாபமாக உட்கார்ந்திருந்தது. ஆனால் ஆண்மை யின் கௌரவத்திற்குப் பங்கம் வராமல், இந்த இளப்பமான நிலையிலிருந்து அவன் எப்படித் தப்புவது?

ஸாகேனிய ஆண்பிள்ளைகள் தமது பயங்கரமான பொறுமைக் குணத்தால் மலைப்பிரதேசத்தில் கீர்த்திபெற் றிருந்தபோது, பெண்மணிகள் அப்பாவிகளாக, சாதுப் பிராணிகளாகக் கருதப்பட்ட காலம் உண்டு. ஆனால் ஸாகே னில் ஒரு பள்ளிக்கூடமும், உபாத்தியாயரும், டாக்டரும்,

மிருக வைத்தியரும் தோன்றியதிலிருந்து அந்தப் பழைய காலம் மலையேறிவிட்டது. செய்திப் பத்திரிகைகள் கூட அடிக்கடி ஸாகேனில் தலை நீட்டின. ஸாகேனியர்களின் குணம் மெதுவாக மாற ஆரம்பித்தது. ஆண்கள் தங்கள் மனைவிமார் களைப் பிரியமாக நடத்த முற்பட்டார்கள்: பெண்கள் புத்திக் கூர்மை மிகுந்து தங்கள் திருமணப் பிரச்னைகளைத் தாமே தீர் மானிக்கத் தொடங்கினர். ஸாகேனிய ஆடவர்கள் தம்மை யறியாமலே எதிரிகளிடம் மிகவும் சகிப்புத் தன்மை காட்ட ஆரம்பித்தனர். ஸாகேனிய நிலத்தில் வேர்விட்ட 'ஓக்' மரங்க ளாகத் தம்மைக் கருதியிருந்த கிழவர்கள், தம் மக்களிடையே சிந்தனையிலும் செயலிலும் ஏற்பட்டுள்ள புதுமையைக் கண்டு அதிசயத்தில் மூழ்கினர். சில வேளைகளில் ஒரு மனிதன் தன்னைப் பண்பாட்டின் காவலன் என்று முரசறைந்து கொண்டு, தனது முன்னோர்களின் ஆசார அனுஷ்டானங்களை ஆவேசத்துடன் நிலைநிறுத்த முயல்கிறான். ஆனால் முடிவில் அவன் முட்டாள் பட்டம் கட்டிக்கொண்டு வருந்த நேரிடு கிறது. ஏனெனில், வாழ்க்கை வெகு வேகமாக முன்னேறிச் செல்கிறது. இருப்பினும், சில ஸாகேனியர்களிடையே மிகுந்த சிரமத்தின் பேரில்தான் குணாதிசயங்கள் மாறின. அதிகம் விவரிப்பானேன்? சுயமரியாதையும், வைராக்கியமும் நிறைந்த கெஸ்ஸோவை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் தவறு செய்து விட்டானென்று அவனுக்கே தெரியும்; இருந்தாலும் அதை ஒப்புக்கொள்ள மாட்டான்...ஆகவே, தனது காயம்பட்ட கால் வலிக்கிறதென்று கெஸ்ஸோ பாவனை பண்ணினான்.

''வலிக்கிறதா?'' என்று காமா கேட்டாள்.

அவன் முகத்தைச் சுளித்தான்.

''வலியில்லை; ஆனால் வேதனை இருக்கிறது.''

காமா கெஸ்ஸோவுடன் பேசிக்கொண்டே மீண்டும் குடத்தைச் சுத்தமாகத் துலக்க ஆரம்பித்தாள்.

''வலியோ, வேதனையோ, எல்லாம் ஒன்றுதான். காலுக்கு வைத்தியம் செய்ய வேண்டியது அவசியம். மாரிக்காலம் முழுவதும் நீங்கள் படுக்கையில் இருந்தீர்கள். இப்படியிருந் தால் இனிமேலும் வலி யிருந்துகொண்டு தானிருக்கும்.''

''உங்கள் டாக்டரிடம் நான் போகமாட்டேன். அவ ருக்கு ரொம்பத் தெரியுமாக்கும்! குடிப்பதில்தான் அவர் நிபுணர். ராணுவத்திலிருக்கும்போது, எங்களுக்கு எப்பேர்ப்

பட்ட டாக்டர் இருந்தார் தெரியுமா? அவர் ஒரு பேராசிரியர். சாதாரண டாக்டரல்ல! அவருக்கும் குடியிலே ஆசைதான்: இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் மனுஷனுக்கு என்ன மூளை! என்ன புத்திசாலித்தனம்!''

''அந்த மனுஷன் இப்போது எங்கே? பக்காக் குடிகாரர் ஆகிவிட்டார்போலும்!''

''இல்லை. லுவாவ் அருகில் அவர் ஒரு குண்டுக்குப் பலியாகி விட்டார்.''

இருவரும் பேச்சற்று ஊமையாகிவிட்டனர்.

''காலைக் கவனித்துக்கொள்ளுங்கள். இல்லையெனில் முடமாகக் கிடக்க வேண்டியதுதான்.''

''அப்படியானால் நீ என்னைக் காதலிக்க மாட்டாயோ?''

''சண்டித்தனம் பண்ணுகிறவர்களுடன் என்னால் பேச முடியாது.'' அவள் தண்ணீருள் குடத்தை முக்கினாள். குமிழியிடும் ஓசை பலமாகக் கேட்டது. ''காலுக்கு வைத்தியம் செய்துகொள்ளுங்கள். தலைவர் கூறியதைக் கேட்டீர்களல்லவா? வஸந்தம் வாயிலண்டை வந்துவிட்டது!''

வெய்யிலில் பூனை படுத்துக் கிடப்பதைப் போல, கெஸ்ஸோ குதூகலத்துடன் காலை நீட்டிப் படுத்துக் கிடந்தான்.

''வஸந்தத்தின் வருகையை நான்தான் முதலில் கண்டுபிடித்தவன். உங்கள் தலைவர் அல்ல!...உன்னை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப் போகிறது ஒரு விஷயம்; அதை வஸந்தகாலத்திற்கு ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறேன்!''

காமாவின் இதயம் துடித்தது. அவர் குறிப்பிடுவது எதுவாயிருக்கும்?

''என்னையா ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப் போகிறீர்கள்? துப்பாக்கி மருந்தைக் கண்டுபிடிக்கத் திட்டமிடுகிறீர்களாக்கும்?'' என்று அவள் தன் ஆவலை மறைத்துக்கொண்டு கேட்டாள்.

அப்போது, ஒடித்த மரக்கிளை யொன்றைக் கெஸ்ஸோ புதரில் வீசி எறிந்தான்.

''வெடி மருந்து எதற்கு, அதைவிடப் பெரிய குண்டுகள் இருக்கும்போது?'' என்று அவன் கவலையோடு கேட்டான். ''நமது வேலை எல்லாம் நிலம் சம்பந்தமாகத்தான்.''

''இதையா சொல்லுகிறீர்கள்?'' என்று ஒரு பிடி மஞ்சள் மணலைக் கெஸ்ஸோவின் பாதங்களில் காமா தூவினுள்.

''அது நிலமில்லையா? அதற்காகக்கூட மனிதனுக்கு வீட்டு நினைப்பு வந்துவிடும்! உனக்குப் பாட்டுத் தெரியுமல்லவா?''

''நிலத்தினைப் பிரிந்தேன்
நிலத்தினைப் பிரிந்தேன்
நிலத்தினை என்றுமே பிரிந்தேன்
..................................
ஆனுல்—
பனிநிறை காலையில்—அற்புதப்
பனிநிறை காலையில்
நிலத்தினில் நுழைந்தேன்
நிலத்தினில் என்றுமே நுழைந்தேன்.''

கெஸ்ஸோ, ராகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இரண்டொரு பாடல்களைப் பாடினுன். திடீரென்று பாடலை நிறுத்திவிட்டுக் கேட்டான்:

''காமா, ஒரு அதிசயத்தைப் பார்க்கிருயா?''

''அதிசயம் என்பது இல்லை என்று நீங்கள் முன்பு ஒருதரம் சொல்லவில்லையா? பள்ளிக்கூடத்திலும் அப்படித் தான் சொல்லித் தந்திருக்கிருர்கள்.''

கெஸ்ஸோ பொறுமையற்றுப் போய்விட்டான்.

''என் கேள்விக்குப் பதில் சொல்லு.''

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''நானு?'' என்று கால்களை அகலவிரித்து, கைகளை மார்பிலே கெஸ்ஸோ கட்டிக்கொண்டான். ''சொல்லுகிறேன் கேள். தலைவர் வஸந்தத்தைப் பற்றி அளக்கிருர். ஆனுல் என்னிடம் ஒரு விஷயம் இருக்கிறது...ஒரு*ஹெக்டாரிலே ஐநூறு †'பூடு'கள் சோளம் விளைவிப்பதைப் பற்றி நீ என்ன சொல்லுகிருய்?''

''ஓ! இதைப்பற்றித்தான் நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தீர்களோ?'' என்று காமா ஏமாற்றத்துடன் கேட்டாள்.

* ஹெக்டார்—சுமார் 325 அடி.

† 'பூடு (pood)—ரஷ்ய அளவு; 36 பவுண்டு.

''நூறு 'பூடு'கள் நம்மால் விளைவிக்க முடியாமலிருக்கும் போது, ஐநூறைப் பற்றிப் பேசிப் பயனென்ன?''

''இங்கேதான் அதிசயம் இருக்கிறது.''

''அற்புதங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டு என் காலத்தை வீணுக்க நான் தயாரில்லை.''

அவன் அவளைப் பார்த்துச் சிரிக்கிருஞ ? அல்லது...?

கெஸ்ஸோ நெடுநாட்களுக்கு முன் நடந்த விஷயத்தை நினைவுக்குக் கொண்டு வருபவன்போல, மிக ஈடுபாடுடன் பேசினுன்:

''உனக்கு ஞாபகமிருக்கிறதா?...இல்லை; உனக்கு எப்படி ஞாபகமிருக்கும்?...அப்போது நீ மிகச் சின்னவள்...முன்பு ஒரு நோயாளி அதிகாரி இங்கு இருந்தானும். அவன் செத்துப்போய்விட்டான். அவன் ஒரு தாளில் என்ன எழுதியிருந்தான் என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. அது என் படுக்கையருகில், சுவரில் ஒட்டப்பெற்றிருந்தது. அவன் குன்றைப் பற்றி எழுதியிருந்தான். கருணைக் குன்றைப் பற்றி உனக்குத் தெரியுமல்லவா? நம் வீட்டுக்குப் பின்னுல் உள்ளது. நான் யுத்தத்திற்குச் செல்லு முன்னர், இங்கே அதைப் பற்றிப் பேச்சு அடிப்பட்டது. சரி, பொறுத்திருந்து பார்...''

காமா குடத்தைத் தூக்கினுள். அதை அவளால் தூக்க முடியவில்லை என்பதைக் கெஸ்ஸோ கண்டான். ஆனுல், உதவிசெய்ய முயன்ற அவனுடைய கையைக் காமா தூரத் தள்ளிவிட்டாள்.

''நானே தூக்கிக்கொள்வேன்'' என்று கூறிவிட்டு அவள் பாதையை நோக்கித் திரும்பினுள். ''என்னைப் பின்தொடர வேண்டாம்—யாரேனும் பார்த்து விடுவார்கள். போய் வருகிறேன்.''

கெஸ்ஸோ ஓடைக்குத் திரும்பினுன். காமாவின் காலடி ஓசை மணலில் எழுந்து அவன் செவியில் புகுந்தது. அவளுடைய கைக்குட்டை புதருக்கிடையே பறந்தது. அவன் மீண்டும் தனியனுனுன். சிந்தனையில் ஆழ்ந்தவனுய் நீரை நோக்கினுன். புருவத்திற்கும் உதடுகளுக்கும் இடையில் மடிப்பு விழுந்த அவனுடைய அகன்ற, சிந்தனை கவிந்த முகம் நீரில் பிரதிபலித்தது. சூரிய ஒளியில் பிரகாசிக்கும் நீரின் அடித்தளத்தில் எங்கேயோ அவன் சிந்தனைகளுக்கு விடை இருக்கிறதோ என்னவோ?

## 4

அதே தினத்தில், கிராமத்தின் நடுவே செல்லும் ரஸ்தாவில் ஒரு மனிதன் நடந்து வந்தான். அவனுடைய தோற்றம் வசீகரமாயிருந்தது. அவன் வெயிஸ்ட் கோட்டும், ராணுவ நிஜாரும் அணிந்திருந்தான். காக்கேசியர்களின் தொப்பியைப் போன்று, தனது பெரிய ராணுவக் கோட்டைத் தலைக்கு மேலே மடித்து வைத்திருந்தான். சாதாரண மனிதனின் காலுக்கு ஒவ்வாத மிகப் பெரிய பூட்ஸ் அணிந்திருந்தான். அவனுடைய நிஜாரில் மண் அடை அடையாகப் படிந்திருந்தது. பூட்ஸுகளில் நீர் நிரம்பியிருந்தது. அவை, அவன் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும்போதும் கிரீச்சிட்டன. அவன் அவைகளை வெறுப்புடன் பார்த்துக் கொண்டே நடந்தான்.

இடப்புறம் வலப்புறமும் வெயிலில் அடிபட்ட வேலிகள். ரஸ்தாவுக்கு அருகாமையில் ஒரு சிறு கட்டிடம் தெரிந்தது. அதை நோக்கி யாத்திரிகன் நடந்தான். அந்தக் கட்டிடத்தை நெருங்கியதும், (அது கிராமத்தின் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்) அந்த மனிதன் ஒரு குஷியான பாடலை ஆரம்பித்தான்.

**"யாருடைய வீதி இது**
**யாருடைய வீடு இது?..."**

அவன் மிக உரக்கப் பாடினன். அவன் குரல் கூட்டுறவுக் கடையை எட்டியது. இந்தப் பழம் பாடலைக் கிராமத்தவர் கேட்டு நெடுநாளாயிற்று. ஆகவே அது உடனே கவனத்தைக் கவர்ந்தது. மலர்ந்த முகத்துடன் அநேகர் வெளியே வந்தனர்.

"அவன் தலையிலிருப்பது என்ன தலைப்பாகை?" என்று ஒருவன் கேட்டான்.

"ஆகாசத்திலிருந்து குதித்தவன் போலிருக்கிறது!" என்றான் மற்றொருவன்.

கடையின் மானேஜரான அதாமூர், பந்தைப் போன்று உருண்டு திரண்ட பெருந்தடியன். அவன் மூன்றாவது நாடியைச் சொறிந்துகொண்டு, (மேலிருந்து கீழே எண்ணுக) சிறிது நேரம் பேசாமல் நின்றான். 'கர், புர்' என்ற பெருமூச்சாக அவனது ஆச்சரியம் வெளிக் கிளம்பியது. அவன் கண்கள் வழுக்கைத் தலையைத் தொட்டுவிடுவனபோல் உயர்ந்தன. அவன் மீசை—அவனது பெருமையின் சின்னம்—சிலிர்த்து

நின்றது. யாத்திரிகன் பாடிக்கொண்டே நிதான நடையில் வந்தான்.

''சமவெளியிலிருந்து வரும் முதல் வானம்பாடி'' என்ருன் அதாமூர்.

''அப்படியானல் ரஸ்தா திறந்திருக்கிறது.''

''அதைச் சீக்கிரம் தெரிந்துவிடுவோம்.''

அந்த யாத்திரிகன் வழியிலுள்ள குட்டையிலிருந்து விலகிச் செல்லாமல், நேராகக் கடையை நோக்கி வந்தான்.

''ஸாகேனியர்கள் நீடூழி வாழ்க!'' என்று உரத்த குரலில் வாழ்த்திஞன். ''படை வீரர்களே—அட்டென்ஷன்! ஹாந்தே ஹோச்!''

ஸாகேனியர்கள் திக்பிரமை யடைந்துவிட்டனர்.

''அட்ஈஸ்!'' என்று உத்தரவிட்டு, அந்த யாத்திரிகன் தலையை உதறி, தனது பெரிய கோட்டைத் தரையில் விழும் படி செய்தான். அடுத்த விஞடியில் அதாமூரின் தொந்தியில் ஒருகுத்து விழுந்தது. ஒரிஜினலான இந்த வணக்கம் செய்யும் முறை, புதிய ஆசாமியார் என்று உடனே காட்டிக்கொடுத்து விட்டது. யுத்தத்தில் தீர்ந்துபோய்விட்டான் என்று நெடு நாட்களுக்கு முன்னரே கைவிடப்பெற்ற ரஷீத் டோவாதான் அவன்!

''ரஷீத்!'' என்று எல்லோரும் ஒரே குரலில் அவனை அணைத்துக்கொண்டனர். அவனைச் சுற்றிச் சுற்றி, தங்கள் சந்தேகம் தீரும்வரை நாலா திசைகளிலிருந்தும் அவன் உடம் பைப் பரிசிலனை செய்தனர்.

ஆறு வருடம் ஊரில் இல்லாதிருந்தும், ரஷீத் சிறிதேனும் மாறுதல் அடையவில்லை. அவனது முகம் கறுத்து, கிழடு தட்டிப் போனது உண்மைதான். ஆனல், அவனது பிரசித்தி பெற்ற கழுகு மூக்கு இன்னும் நீளமாகவும், வளைந்தும் தோன்றிற்று. அவனது நெற்றியில், நெடு நாளைக்கு முந்திய காயத்தின் தழும்பு பெரிதாக இருந்தது.

ரஷீத் முதலில் கடைக்குள் சென்ருன். தட்டி வைத்து அடைக்கப்பட்டிருந்த ஒரு அறையைக் கடந்து, கடைசியில் ஒரு பீப்பாயின்மேல் உட்கார்ந்தான். எல்லோரும் அவன் பின்னே நுழைந்தனர். பீப்பாய்களின் மீதும் காலியான பெட்டிகளின் மீதும் அமர்ந்தனர்.

''எல்லோரும் சுகம்தானே?'' என்று அங்கிருந்த பாட் டில்களின் மீது கண்ணை ஓடவிட்டுக்கொண்டு, உபசாரத்திற்

காகக் கேட்டான் ரஷீத். ''ஸாகேன் இன்னும் பழைய மாதிரிதான் இருக்கிறதா?''

''ஓர் அங்குலம்கூட நகரவில்லை!''

''பேஷ். நமது படை எப்படி இருக்கிறது?''

''நிலத்தை உழுதுகொண்டிருக்கிறது.''

இந்த விபரம் போதுமானபடியிருந்ததால், ரஷீத் மேற்கொண்டு கேள்வி கேட்கவில்லை. அதைப் பயன்படுத்திக் கொண்டு, அதாமூர் ஒரு கோப்பையில் மது ஊற்றினன்.

''ஆண்டன்!'' என்று கண்ணிமைகள் வீங்கி, அப்பாவி மனிதனைப் போன்று தோற்றமளித்த ஆசாமியைப் பார்த்துச் சொன்னன்: ''நமது விருந்தாளியின் ஆரோக்கியத்திற்காகக் குடி.........''

அங்குள்ள எல்லோரிடமும் மதுக்கோப்பை சுற்றி வந்தது. அதிலிருந்து விருந்தாளி மூன்று முறைபருகினன்.

''சரி, ரஷீத்! நீ எங்கு போயிருந்தாய்? என்னென்ன செய்துகொண்டிருந்தாய்? சொல்லு.''

ரஷீத் ரொட்டியை மென்றுகொண்டு சுருக்கமாக, ஆனல் விறுவிறுப்பாகத் தனது கடந்த கால சரிதையைக் கூறினன்:

''சண்டைக்குப் பிறகு (தனக்கும் மற்றொருவனுக்கும் ஸாகேனில் நடந்த கைகலப்பைக் குறிப்பிடுகிறன் ரஷீத். அந்த சண்டையில் அவன் தோல்வியடைந்தான். அதனல் தான் அவன் நெற்றியில் தழும்பு விழுந்தது) நான் பட்டணத்துக்குச் சென்றேன். அங்கே ஓரிடத்தில் வேலைக் கமர்ந்து செருப்புத் தைக்கக் கற்றுக்கொண்டேன். பிறகு யுத்தம் ஆரம்பித்தது... போர்முனை...கார்ப்பேத்தியர்கள்—அவர்களை உங்களுக்குத் தெரியுமல்லவா? எல்லா இடங்களுக்கும் சென்றேன். ஜனங்கள் சொல்லுவது போல, வெடி மருந்தை 'மோந்து' பார்த்தேன்...ஹாத்தே ஹோச்!''

''அப்பாடா! எப்படியும் நீ வந்து சேர்ந்துவிட்டாய். கடவுள் காப்பாற்றினர்'' என்று அதாமூர் கோப்பையில் மதுவை ஊற்றினன். ''நாங்கள் உன்னைக் காணத் தவித்தோம்; எமலோகத்திற்கு டிக்கெட் எடுத்துவிட்டாயோ என்று நினைத்தோம்! இங்குள்ள குமரிகள் உன்னைக் காணுமல் என்ன பாடுபடுகிறர்கள் தெரியுமா? பொய்யில்லை, அவர்களுக்கு இனிக் குஷிதான். கழுகு திரும்பி வந்துவிட்டது!''

ஆன்டன் இரண்டொரு வார்த்தைகளை முணுமுணுத்து விட்டு, ஒரே மடக்கில் மதுவைக் காலி செய்தான்.

''என் நண்பர்கள் எல்லோரும் க்ஷேமம்தானே?''

''யாரைப்பற்றிக் கேட்கிறாய்?'' அதாமூர் குனிந்து மண் பானையிலிருந்து ஒரு வெள்ளரிக்காய் ஊறுகாயை எடுத்தான். விரல்களை நக்கிக்கொண்டு உதட்டைச் சப்புக் கொட்டினான்.

''நிக்கோலா?''

''எல்லாக் காட்டு மிருகங்களும் நினைந்து வருந்தும்படி உயிரோடு இருக்கிறான்!...அவன்தான் கிராம சோவியத்தின் தலைவன்.''

''ஷாங்கேரி?''

''இன்னும் பத்து வருஷங்களுக்கு அவரிடம் சாவு என்ற பேச்சை எடுக்கவே கூடாது!''

''ஓஹோ! ஒரு மனிதனுக்கு நூற்றைம்பது வயது போதாதோ?''

''அவர் அப்படி நினைக்கவில்லை.''

''ம், கிழட்டு மீர்பா எப்படியிருக்கிறார்?''

''அவர் இங்கேதானிருக்கிறார்.''

''அவரது மகள்?''

''கானரிப் பறவை போன்று குஷியாயிருக்கிறாள்.''

''அந்த...கெஸ்ஸோ?''

''சண்டை முடிந்து திரும்பி வந்துவிட்டான். மழைக் காலம் முழுதும் படுக்கையில் கிடந்தான்...அவன் காலில் ஏதோ கோளாறு...மண்டைக் கனத்துடன்தான் யுத்தத்திலிருந்து வீடு திரும்பி இருக்கிறான்.''

மதுக்கோப்பை மீண்டும் சுற்றி வந்தது.

''மண்டை கனத்துவிட்டதா அவனுக்கு?''

''ஆம். எவ்வளவு மண்டைக் கனம் தெரியுமா? எல்லாவற்றிற்கும்குறை சொல்லுகிறான்!...பெரிய மனிதன் மாதிரி நடிக்கிறான்...நமது நிலம் அவனுக்குத் திருப்தி தரவில்லை. விளைச்சல் மிகக் குறைவாயிருக்கிறதாம்...சுருக்கமாகச் சொன்னால், தான் பெரிய மேதாவி என்று எண்ணம்.''

"இந்தமாதிரி அநேகம் பேரைப் பார்த்திருக்கிறேன்... பள்ளிக்கூட வாத்தியார்கள் எப்படியிருக்கின்றனர்?"

"அவர்களின் எண்ணிக்கை இப்போது அதிகரித்து விட்டது."

"டாக்டர்?"

"இப்போது புதிய ஆள்...நட்புக்காக எதையும் செய்வார்."

"பேஷ்! தாராஷ் சுகமாயிருக்கிறனல்லவா?"

"அதைப்பற்றி எனக்குத் தெரியாது" என்று அதாமூர் பெரிய ரொட்டித் துண்டை முறித்து வாய்க்குள் தள்ளினன். அதைச் சுவைத்து விழுங்கும்வரை அவன் ஒன்றும் பேசவில்லை. "எனக்குத் தெரியாது. சென்ற சில வருடங்களாக அவன் கூட்டுப் பண்ணைத் தலைவனுக இருந்தான். நன்ருக உழைத் தான். அப்புறம் அவனுக்கு க்ஷயரோகம் வந்துவிட்டது... கழிந்த கோடையில் அவர்கள் அவனை அனுப்பினர்கள்..."

"யார் அனுப்பினர்கள்?"

"ஏன்? கூட்டுப்பண்ணைக்காரர்கள்தான். அந்த இடத்தின் பெயரென்ன. ஞாபகமில்லையே? ஆம். அவனை அவர்கள் குல்ரிப்ஷுக்கு அனுப்பினர்கள்."

"யாருடைய செலவில்? கூட்டுப் பண்ணை தானே அச் செலவைக் கொடுத்தது?"

"அவன் அதற்குத் தகுதியுள்ள மனிதன் என்பது அவர்கள் கருத்து. ஆகவே தகுதியானவனுக்குப் பணம் அகப்படத்தான் செய்யும். அது சட்டம் தம்பி!......உனக்கு ஞாபகமிருக்கிறதா? யுத்தத்திற்கு முன்பு அவர்கள் ஏராளமான மக்களைச் சுகவாச ஸ்தலங்களுக்கு அனுப்பினர்கள்; கல்வி கற்க அனுப்பினர்கள்; எல்லாம் கூட்டுப் பண்ணையின் செலவில்தான். இப்போது நாம் மீண்டும் காலூன்றிய பிறகு, அவர்கள் முன் போலவே கல்விப் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்களாம். இதற்குப் பெயர்தான் அக்கறை என்பது! தெரியுமா உனக்கு?" எனறு ஆண்டனைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டு, அதாமூர் முன்கைச் சட்டையினல் மீசையைத் துடைத்தான்.

"ஆகவே உங்களுக்குத் தலைவன் இல்லை? சேர்மன் இல்லை?...அந்தப்பதவியை இப்போது யார் வகிக்கிறர்கள்?"

''தற்சமயத்திற்கு கான்ஸ்டான்டின்'' என்முன் ஆன டன்.

''கான்ஸ்டான்டின்......கான்ஸ்டான்டின்?'' என்று ரஷீத் தலையைச் சொறிந்தான்.

''தெரியவில்லையா? மூன்ருவது கூட்டுப் பண்ணைக் கோஷ்டியின் தலைவன்! கூட்டுப் பண்ணைப் போர்டில் ஒரு அங்கத்தினன். நமது கட்சிக் காரியதரிசி.''

''ஞாபகம் வருகிறது'' என்று முனங்கினுன் ரஷீத். ''அவனுக்கு எச்சமயத்திலாவது, எம்முறையிலாவது தன்னை முறியடித்தவர்களைப் பற்றி யோசிக்க மனம் வருவதே இல்லை. ம்—சலுமான் —அந்த ஆசாரி என்னவானுன்?''

ஒரு கந்தையில் அதாமூர் கையைத் துடைத்தான். ஆண்டனின் வாய் அசை போடுவதை நிறுத்தியது. அமைதி நிலவியது.

''அவன் இறந்துவிட்டான்'' என்முன் அதாமூர். ''ராஸ்டாவுக்கருகில் கொல்லப்பட்டான்.''

''பாவம் நல்ல மனிதன். அவன் ஆன்மா சாந்தி யடைக.'' அவர்கள் மௌனமாக மதுவை அருந்தினர்.

''இன்னும் யாரெல்லாம் வீடு திரும்பவில்லை?'' என்று சோகத்தோடு ரஷீத் கேட்டான்.

''ஹாஷிம். ஸையத் என்னும் இரு சகோதரர்கள் திரும்பவில்லை'' என்று அதாமூர் பதிலளித்தான். டேவிட் ஆலன் என்னும் வாத்தியாரும்...மைக்கேல் ராஸ்பாவும், அவனது அத்தான் காச்சும்...''

ரஷீத் குறுக்கே பேசினுன்:

''ஆம். நண்பர்களே!'' என்று மதுவிற்காகக் கோப்பையை நீட்டிக்கொண்டே கூறினுன். ''ஸாகேனியர்களும் மிகக் கஷ்டப்பட்டு விட்டனர். அவர்களின் எலும்புக்கள் இப்போது எங்கே அழுகிக் கொண்டிருக்கின்றனவோ?''... ரஷீதின் நெற்றி சுருங்கியது. உதடுகளை இறுக மூடி, பீப்பாயைத் தட்டிக்கொண்டு அவன் சொன்னுன்: ''அந்தக் கஷ்டம் நம்மையும் விட்டுவிடவில்லை. நாமும் துன்பப்பட்டிருக்கிரும். ஆனுல், அங்கு உள்ள நிலைமையை நீங்கள் கண்டிருக்க வேண்டும்'' என்று பெருவிரலை முதுகுப் பக்கமாக ரஷீத் தூக்கிக் கட்டினுன். ''நகரங்களெல்லாம் தூள் தூளாகி விட்டன. எவ்வளவு மக்கள், நமது சொந்த, மக்கள் வீடற்றுப் போயினர் தெரியுமா?''...

அச்சிறு அறையில் அமைதி நிலவியது. எல்லோரும் சிந்தனையில் மூழ்கினர்.

ஆண்டன் தனது கோப்பையைக் கீழே வைத்துவிட்டுப் பாட்டிலைத் தூரத்தள்ளிப் பெருமூச்சுவிட்டான். ரஷீத் எதிரே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். ஏனையோர் சிரம் தாழ்த்தி யிருந்தனர். விருந்தாளியைக் குஷிப்படுத்த வேண்டியது தன் கடமையென்று அதாமூர் உணர்ந்தான்.

''அது தொலையட்டும்! இன்று நமக்கு அருமையான இளைஞன் கிடைத்திருக்கிறான். விரைவில் நமக்குத் திருமண விருந்து கிடைக்கும்!''

எல்லோரும் 'ஹோ' வென்று நகைத்தனர். ரஷீதுக்கு ஒன்றும் புரியவில்லை.

''இவ்வளவு சீக்கிரத்திலா?'' என்றான். ''எனக்கு முதலில் வேலை தேடிக்கொள்கிறேன்...அப்புறம்...''

அதாமூர் அவன் பேச்சை முடிக்க விடவில்லை.

''ரஷீத்! முக்கிய விஷயம் என்னவென்றால், நீ இன்னமும் உயிரோடு க்ஷேமமாய் இருக்கிறாய்! இதை விட ஒரு மனிதனுக்கு வேறென்ன வேண்டும்? நீ இல்லாமல் கிராமமே களையிழந்து போய்விட்டது அப்பனே! உண்மையான மனிதர்களே இங்கு இல்லை; ஸாகேனின் புகழுக்கேற்றபடி ஒரு செயலும் இல்லை!''

ரஷீத் பீப்பாயிலிருந்து குதித்தான்.

''அதாமூர்! அந்த இழிச் சொல்லை நாம் எடுத்தெறிவோம்! இது சத்தியம்'' என்று பீப்பாயின் மீது ஓங்கிக் குத்தினான். ''நான் ஒரு மலை ஜாதியினன்...நாம் எல்லோரும் அப்படித்தான்...அப்படியென்றால் என் இரத்தம்—மதுவைப் போன்று மெதுவாகவா துடிக்கும்? நமக்கென்று தனிச் சட்டங்கள் இருக்கின்றன; நமது பண்டையப்பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. ஆம். சகோதரா! நினைவு வைத்துக் கொள். நீயுமோர் மனிதன். இனிமேல் மாபெரும் வீரச் செயல்கள் இங்கே நடக்கும். அதாமூர்! நமது மூதாதையரின் ஆணையாகச் சொல்லுகிறேன், ஏதேனும் ஆட்சேப முண்டா? எல்லோரும்—ஆமோதிக்கிறீர்கள்!''

அவன் மதுக்கோப்பையுடன் இங்குமங்கும் அசைந்தாடினான்.

## 5

மிக நிர்மலமான காலை நேரம்; உலகத்தை மூடியிருக்கும் கண்ணாடிச் சிமினியைத் துடைத்து விட்டாற்போல வானம் அற்புதமாக இருந்தது. ஆகாயவெளியில் ஒரே நீலம்; ஓரிரு இடங்களில் மட்டும் மெல்லிய செம்மை விளிம்பு கட்டி யிருந்தது. புல்லின் மீது பெரிய பனித்துளிகள் மின்னின. புகை சுழன்று சுழன்று கம்பி போலச் செங்குத்தாய் மேலே ஏறிக்கொண்டிருந்தது. எதிர்காலத்தின் சுபிட்சத்திற்கு எல் லாப் பொருள்களும் கட்டியங் கூறிக்கொண்டிருந்தன.

எதையோ கேட்டுக்கொண்டு நிற்பவன் போல, கெஸ்ஸோ விசாலமான முற்றத்தின் நடுவே நின்றான். பசுக்கள் 'அம்மா' வென்று குரல் கொடுத்தன; நாய்கள் குரைத்தன; வானத்தில் ஒரு பருந்து தன்னந் தனியாக வட்டமிட்டு, முதல் முதலாகத் தனது வேட்டையை ஆரம்பித்துக் கொண் டிருந்தது.

முக்கி முனகிய வண்ணம் கெஸ்ஸோவின் தகப்பனை யேகூப் படிகளில் இறங்கினான். அவன் ஓர் ஒடிசலான மனிதன். மகனைவிடக் குள்ளம். இடைக்கு மேலே முதுகு வளைந்திருந்தது. மலை ஜாதியினனுக் கேற்ப, அவனது தீர்க்கமான முகத்தில் இரண்டு பெரிய நீலக்கண்கள் பிரகாசித் தன. அவனுக்கு ஒரு குட்டையான தாடி இருந்தது. மீசை, உதட்டிற்குக் கீழே வளைந்து தொங்கிக் கொண்டிருந்தது. இளம் வயதில் யேகூப்பிற்கு வாழ்க்கை இன்பமாயிருக்கவில்லை. அதன் கொடுமையால்தான், அவனுக்கு வயதாகு முன் மூப்பு வந்துவிட்டது. அடிக்கடி நோய் வாய்ப்பட்டாலும், அவன் கடின உழைப்பாளி. இப்போது ஆள் மிகவும் தளன்று விட்டா லுங்கூட, அவனுக்கு இன்னும் அறுபது வயது நிரம்பவில்லை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், மீர்பா குலத்தினருக்கு நல்ல ஆள்கட்டு இருந்தது. இந்தக் குலத்தினரிடம் மக்களுக்கு நல்ல மதிப்பு; பயமுங்கூட. யேகூப்பின் சகோதரனான, கார மன் மீர்பா பிரக்கியாதி பெற்ற வீரன். அவன் காக்கேசிய மலையைக் கடந்து, தானும் வாங்காத—பிறரிடமும் பரிசு பெறாத ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு திரும்பி வந்து விடு வான்!

யேகூப்பன் சித்தப்பாக்கள் வலிமையும், வைராக்கியமும் மிகுந்தவர்கள். ஆனால் ஸாகேனை அரசாண்ட மார்ஷான் மன்னர்கள், மீரபா சகோதரர்கள் ஒற்றுமையுடனிருந்தால்

தங்கள் ஆட்சிக்கு ஆபத்து என்று கருதி, சகோதரச் சண்டையை மூட்டிவிட்டு அவர்களை அழிந்துபோகச் செய்தனர். ''ஒரு முட்டாள் கூடப் பாம்பைப் பிடித்துவிடலாம்'' என்ற பழமொழி பொய்யல்ல!

சகோதரச் சண்டையின்போது, சந்தர்ப்ப வசமாகவே யேகூப் உயிர் தப்பினன். அம்மாவைப்பெற்ற பாட்டி அவனைக் காப்பாற்றினள், வாலிபனுகும்வரை அவன் பாட்டி வீட்டில் தான் வளர்ந்தான். ஸாகேனில் அமைதி நிலவியவுடன் அவன் தகப்பன் வீட்டிற்கு...இல்லை—அவரது பாழ்மனைக்குத் திரும்பினன். அங்கே அவன் வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்கி, விவசாயியின் துயரச்சுமையை எல்லாம் தாங்க வேண்டியிருந்தது. ஏப்ரல் வரைக்கும் தான் சோளம் இருந்தது. அதன் பின் ஆண்டவன் பேரில் பாரத்தைப் போட்டு, எப்படியோ உயிர் வாழ்ந்து வந்தான். அவன் வீட்டில் இல்லாத சமயத்தில் அவனுடைய தகப்பனின் நிலத்தில் பெரும் பகுதியை, அண்டை வீட்டுக்காரனை அதாமூர் விழுங்கி விட்டான். மேலும், நிலம் மிகவும் மோசமாய் இருந்ததால் அதைக் கொண்டு சுகமாக வாழலாம் ' என்ற எண்ணத்திற்கே இடமில்லை.

ஆனல் யேகூப்பிற்கு வாழ்நாள் முழுவதும் துயரப்பட வேண்டிய தலைவிதி இல்லை—அதிருஷ்டம் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தது. தாயார் மரணப் படுக்கையில் அவனை ஆசீர்வதித்தாளே அது சுப முகூர்த்தம் போலும்! தனக்குப் போதுமான அளவுசாகுபடி நிலம் அளிக்கப்பெற்றதைக்கண்டு, யேகூப் திக் பிரமை யடைந்து விட்டான். இது புரட்சியின் விளைவு என்று தெரிந்தது. ''புரட்சியா? அது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான் அவன். ''அது இங்கேயே இருக்கிறது'' என்று நகரத்தைச் சேர்ந்த மனிதர்கள் அவனிடம் கூறினர். ஆம். நண்பர்களே! எல்லா மலை ஜாதியினரையும் போல, அப்போது யேகூப்பும் இன்பக் கடலில் ஆழ்ந்தான்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு கூட்டுப் பண்ணையை ஸ்தாபிப்பது நல்லதென்று ஸாகேனியர்கள் சொன்னபோது, விவசாயிகள் எல்லோருடைய இதய ஒலியான கருத்தை யேகூப் உணர்ந்தான். அவன் சொன்னன்: ''நான் கூட்டுப் பண்ணை விவசாயி ஆக விரும்புகிறேன். அவ்வளவு தான்...'' அவன் அண்டை வீட்டாரிடம் கூறினன். ''நேற்று வானம் எப்படியிருந்ததென்று ஞாபகமிருக்கிறதா?—கரு மேகங்கள் எங்கும் சூழ்ந்திருந்தன? இவ்விதம் தான் என் கடந்த கால வாழ்க்கை இருந்தது.'' அவன் இச் சொற்களைத் திரும்பத்

திரும்பக் கூறுவான். இவைதான் அவனது இதய ஆழத்தில் அலை வீசும் உணர்ச்சிகளின் அடையாளம்.

...யேகூப் இப்போது கழியை ஊன்றியவாறு முற்றத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிருன். அவனுடைய பழைய ஸிர்காசியன் கோட்டு, அவனுக்குச் சொந்தமில்லாததைப் போன்று தோளில் தொங்கிக் கொண்டிருக்கிறது. கெஸ்ஸோ அவனைக் கவனித்துக்கொண்டிருந்தான். யுத்தத்தின்போது விவசாயிகள் நடத்திய கடின வாழ்வைத் தகப்பஞரின் உருவத்திலே கண்டான். "கூடாது. அவர் இனிமேல் வேலை செய்யவே கூடாது...இது எனக்கு அவமானம்!" என்று எண்ணிஞன் கெஸ்ஸோ. மைந்தனின் அன்பு ததும்பும் பார்வையைக் கண்ட கிழவன் சுறுசுறுப்பு எய்திஞன்.

"நாம் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுவோம், வா" என்று மகனை அழைத்தான். "இந்த வேலியைப் பார்— தூள் தூளாக நொருங்கி வருகிறது. அந்தப் பள்ளம் வரையுள்ள தூண்களும் இற்றுப்போய்விட்டன. ஆனல் அவை தற்காலத்திற்கு ஒப்பேறும். நமக்குக் குறைந்தபட்சம் ஐந்து வண்டிச் சுள்ளிக்கட்டுகள் தேவை. வேலியில்லா முற்றம் பயிரில்லா வயல் மாதிரி. அப்படித்தானே?"

ஒரு விவசாயின் கூர்மையான கண்ணோட்டத்துடன் எல்லா வற்றையும் கவனித்துக்கொண்டு, கெஸ்ஸோ தகப்பஞரைப் பின்தொடர்ந்தான். யுத்தத்திலிருந்து வந்தபின், அவனது முதல் மாரிக்கால வாழ்க்கை முடிவுற்றது. புதிய கவலைகளைச் சுமந்து கொண்டு வஸந்தம் வந்துள்ளது. எல்லாவற்றையும் அம்பலமாக்கிய வண்ணம் பனி உருகத் தொடங்கியது; பார்வைக்கு இனிமை தருபவை ஒன்றுமில்லை. செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. ஆனல் எங்கிருந்து தொடங்குவது?

"வாசலைப் பார். அதை வாசல்என்று சொல்லுவது? அதன் கதவைத் திறந்து பார். அதை மூடுவது பெரும்பாடு ஆகிவிடும். சுத்த அவமானம்; ஆண்டவனின் சாபம் மாதிரி, பள்ளத்திற்கு அப்பாலிருக்கும் சிறு பாலத்தைப் பார். குதிரை கால் தவறி விழுந்து விட்டால், எவ்வளவு பணம் கொடுத்தாலும் அதை வெளியே எடுக்க முடியாது; எருதுகளை உபயோகித்தாலும் காரியம் நடக்காது...கெஸ்ஸோ! மனம் தளர வேண்டாம். அங்கு வேறு என்ன இருக்கிறது என்று கவனிப்போம், வா."

அவர்கள் முற்றத்தை முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டு, வீட்டை நோக்கி நடந்தனர். கிழவன் ஒவ்வொரு குற்றத்

தையும், அந்தக் கண்டுபிடிப்பில் இன்பம் துய்ப்பதைப் போலச் சுட்டிக் காட்டினான்; பட்டைகளின் மீது கைத் தடியினால் பல மாகத் தட்டினான்; உளுத்துப்போன மரப்பொடியைக் குத்தி வெளித் தள்ளினான். ஆனால், கெஸ்ஸோ பிரச்னையின் மூலா தாரத்தைப் புரிந்துகொள்ளும் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இல்லை; உளுத்துப்போன வேலியோ அல்லது உடைந்துபோன வாயில் கதவோ முக்கியப் பிரச்னையல்ல. நிலம்தான், நிலத்தின் வரட்சிதான் இன்று முக்கியப் பிரச்னை.

''ஏதோ ஒரு வீடு!...கடவுளே, மன்னிப்பீராக!...படிகள் அந்திம காலத்தை நெருங்கிவிட்டன. சுவர்கள் குட்டிச் சுவர்கள் தான். அந்த உத்திரத்தை மாற்றவேண்டும்: இல்லாவிடில் அது யார் தலையிலாவது விழுந்து விடும். புதுக்கூரை வேயவேண்டும். ஆனால் அதற்குப் பலகை வேண்டுமே! குறைந்தது நூறு கட்டைகளும், மூன்று வண்டிப் பலகைகளும் வேண்டும்...''

யேசூப் படியில் உட்கார்ந்துகொண்டு புகை குடிக்க ஆரம்பித்தான். அவன் சொன்னான்:

''மாட்டுத் தொழுவம் உயிரை விட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு நல்ல விவசாயி, நாயைக்கூட அங்கு வைத்திருக்க மாட்டான்! மாட்டை மட்டும் எப்படிக் கட்டி வைப்பது? அதன் நிலைமை மனதிற்கு எத்தனை வேதனையைத் தருகிறது.''

''வருத்தப்படாதீர்கள், அப்பா...''

''என்ன நினைக்கிறாய் இதைப் பற்றி? இது சிரிப்பிற்கு உரிய விஷயமல்ல,'' யேசூப் குரலைத் தணித்தான்: ''உன் தங்கை இன்னும் சிறு குழந்தை அல்ல. அவளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். அவளுக்கு மணமுடிக்கவேண்டும். நமக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது.''

''அவளை யாராவது பெண் பேசி வந்தார்களா என்ன?''

''நாசமாய்ப் போக! அவர்கள் நம்மை உற்றுக் கவனிக்கிறதும், நமது சொத்து சுகங்களை விசாரிக்கிறதுமாகப் பிராணனை வாங்குகிறார்கள். நீ தான் இன்னும் குடும்ப பாரத்தை ஏற்கவில்லையே. அது உன் குற்றமல்ல, உனது கால் இப்போதுதான் குணமடைகிறது. ஆனால் பொறுத்திருந்து பார்—எல்லாம் விளங்கும்...இதோ வஸந்தம் வந்துவிட்டது. ஆனால் துவேஷத்தின் பேரில் அவர்கள் உன் கோஷ்டிக்குப் படுமோச

மான நிலத்தைத் தந்திருக்கின்றனர். களைகள்கூட அதில் முளைக்காது; ஆனால் சோளம் பயிர் செய்யவேண்டுமாம்! நான் விடுவேனா என்ன? ஒரேயடியாக மறுத்துவிட்டேன்; நிர்வாகத்தினர் எல்லோரிடமும் சொல்லிவிட்டேன். இது மட்டும் நிச்சயம்—நமது பண்ணைக் கோஷ்டி அந்த நிலத்தில் சுண்டு விரலைக்கூட அசைக்காது! கோஷ்டித் தலைவன் என்ற முறையில் இதை நான் உன்னிடம் சொல்லிவிடுகிறேன்...''

யேகூப்பிற்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. அவன் சட்டைக் காலரை அவிழ்த்துவிட்டான். அது அவன் கழுத்தை நெரித்தது போலும்.

தகப்பனின் தோள்மீது கைவைத்து, கெஸ்ஸோ அவனைச் சமாதானம் செய்தான்.

யேகூப் மீண்டும் தன் புகைக் குழாயை நிரப்பினான். நெருப்பைப் பற்ற வைத்தான்.

''கெஸ்ஸோ! உன் எண்ணம் என்னவென்று தெரியவில்லை. யுத்தத்தைப் பற்றிப் பேசியது இருக்கட்டும்; இப்போது நாம் சிறப்பாக வாழத் தொடங்கவேண்டும் கிராம சோவியத்திடமோ அல்லது அது சம்பந்தபட்டவர்களிடமோ பேசி, நமக்கு உதவி செய்யும்படி நீ ஏன் கேட்கலாகாது? தாய் நாட்டிற்காகப் போராடி வீரப் பதக்கங்களுடன் திரும்பி இருக்கிறாய். மாரிக்காலம் முழுவதும் படுக்கையில் கிடந்தாய். அவர்களிடம் நமது ரிப்பேர்களைச் செய்யச் சொல்: நல்ல நிலம் தரச் சொல்; இது நமது உரிமை அல்லவா?''

கெஸ்ஸோ, முற்றத்திற்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்த பருந்தை உரக்கக் கூவி விரட்டினான். பிறகு தகப்பனார் அருகில் உட்கார்ந்தான்.

''நான் யாதொரு உதவியும் கேட்கப் போவதில்லை. நான் முடவனல்ல''

''உனது ஊனம் கால்கூட அல்ல! தன்னகங்காரம் தான்.''

''ஆண்டவனருளால் என் உடல் தெம்பாகத்தான் இருக்கிறது. வீடு வேலி, தொழுவம்—அவை எல்லாம் கொஞ்ச காலம் அப்படியே இருக்கட்டும்; அவை எங்கும் ஓடிப் போய் விடாது. நிலமும், பயிர்த் தொழிலும் அப் படியல்ல, அதைத் தான் உடனடியாகக் கவனிக்க வேண்டும்.''

''அதுவரையில் நாம் திறந்த வெளியில் வாழவேண்டுமாக்கும்?''

கெஸ்ஸோ வார்த்தையை எடைபோட்டு, நிதானமாகப் பேசினுன்.

''அப்பா! உழவு தான் முக்கியம்.''

''எதிலே நீ உழப்போகிருய்—உன் தலைமேலா?''

''...உழவுதான் முக்கியம், அப்பா, ஸாகேனைச் சுற்றியுள்ள நிலமெல்லாம் உப்புச் சப்பற்றது. மஞ்சள் நிலம், சிவப்பு நிலம்...நதி யருகேயுள்ள நிலங்கள் அனைவருக்கும் போதாது. குன்றின் பக்கமும் சிலர் பயிரிட வேண்டியது தான்.

''நாம் மட்டும் ஏன் அதைச் செய்ய வேண்டும்?''

''பிறர் ஏன் அதைச் செய்ய வேண்டும்?''

''நீ போர் முனைக்குச் சென்றவன். நாங்கள் உன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.''

கெஸ்ஸோவின் முகத்தில் வெறுப்பு நெளிந்தது.

''நாம் தானம் கேட்கப்போவதில்லை அப்பா. இப்போது நான் காயமுற்ற துப்பாக்கி வீரனல்ல; ஓர் ஆரோக்கியமான பண்ணைத் தலைவன்.''

இறுக்கமான கவுன் அணிந்து, கைகளை மடக்கி விட்டிருந்த ஒரு பெண் சமையலறையின் வழியே எட்டிப் பார்த்தாள். அவளை அழகி என்று கூற முடியாது; ஆனுல், அவளிடம் ஏதோ ஓர் அழகு இருந்தது. அவளது சிறந்த நடையுடை பாவனைகள் தான் அதற்குக் காரணம் என்றனர் சிலர்; தகப்பனைப் போன்ற நீல விழிகள் தாம் அதற்குக் காரணம் என்றனர் வேறு சிலர். வாலிபர்கள் அவளைத் திருட்டுப் பார்வை பார்த்தனர். அண்டை வீட்டார் பேட்டி போட்டுப் புகழ்ந்தனர்; எல்லாவற்றிக்கும் தகுந்த காரணம் இருந்தது.

''நீனு, இங்கே வா'' என்ருன் கிழவன். ''உன் அண்ணு சொல்வதைக் கேள். அவன் வீட்டைப் பற்றியே கவலைப்படவில்லை. அவன் கவலையெல்லாம் வயலைப்பற்றித்தான்...... நமது தலைவர் பேசுவாரே அந்தத் தினுசான பேச்சுத்தான்...''

நீனு தனக்குச் சம்பந்தமில்லாதவர்களின் விவகாரத்தைக் கேட்டதுபோல, அப்பாவையும் அண்ணுவையும் ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவர்களின் பேச்சுக்குக் குறுக்குச்சால் ஓட்ட அவளால் இயலவில்லை. அவளால் எந்தப் பக்கமும் சேர முடியவில்லை.

கெஸ்ஸோ, அங்குமிங்கும் பல தடவை மௌனமாக உலாவினுன்; பிறகு திடீரென்று கேட்டான்:

''நீங்கள் பணக்காரராக வேண்டுமா?''

அப்பாவும், மகளும் ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

''இதில் ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை. ஆம். பணக்காரராக வேண்டுமா என்றுதான் கேட்கிறேன்! எப்படி? வெகு சுலபம்.'' கெஸ்ஸோ திடீரென்று திரும்பினான். ''அப்பா! கருணைக் குன்றை உங்களுக்குத் தெரியுமல்லவா?''

கிழவன் ஒரு கணம் வாயடைத்துப் போய்விட்டான். பிறகு கேட்டான்:

''அதை எனக்குத் தெரியும். நாசமாய்ப் போக! அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''அதைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?''

கிழவனுக்குக் கோபம் வந்தது. அவன் மகன் அவனைக் கேலி பண்ணுகிறானா என்ன?

''ம்—அப் பெயரில் ஒரு குன்று இருக்கிறது. இதோ நமக்கு அருகே இருக்கிறது. அதைப்பற்றி உனக்கு இன்னும் என்ன தெரியவேண்டும்?''

கெஸ்ஸோ நீனாவை அழைத்து அவளிடம் மெதுவாக, உறுதியான குரலில் சொன்னான்:

''நாம் கருணைக் குன்றை உரம் தரும் குன்றாக மாற்றப் போகிறோம். அப்பா, காதில் விழுகிறதல்லவா? கேலி கிடக்கட்டும்'' என்று அவன் ஆர்வத்தோடு கூறத் தொடங்கினான். ''யுத்தத்திற்கு முன்பு ஜனங்கள் என்ன பேசுவார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா? அவர்கள் குன்றைப் பற்றிப் பேசினார்கள். அப்படித்தானே? அதைப் பற்றித்தான் எனக்குச் சதாச் சிந்தனை—போர்க்களத்திலுங்கூட! யுத்தம் அதற்கு இடைஞ்சல் செய்துவிட்டது; அது என் குற்றமல்ல...''

''யுத்தம் இடைஞ்சல் செய்துவிட்டது'' என்று கிழவனும் புருவங்களை நெரித்துக்கொண்டு சொன்னான்: ''நமது மக்கள் அந்தக் குன்றை விரும்புகிறார்கள் என்று எனக்குத் தெரியும். நெடு நாளைக்கு முன்பு ஓர் அதிகாரி இங்கிருந்தான்; அவன் ஒரு நோயாளி...அவனிடம் ஏராளமான எண்ணங்கள் இருந்தன...நீயும் அவனைப்போல் தானிருக்கிறாய்...கடவுள்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும்!''

''கவலை வேண்டாம் அப்பா. கொஞ்சம் பொறுத்திருங்கள். வஸந்தம் வரட்டும்!'' என்றான் கெஸ்ஸோ.

ஏப்ரல் மாதத்துச் சூரியன், வஸந்தத்திற்காக யார் இவ்விதம் ஏங்குகிறார்கள் என்று அறிய, பூமியை நோக்கி ஆவலுடன் எட்டிப் பார்த்தான். கத கதப்பான—பிரகாசமான கதிரொளியைக் கண்டு, உண்மையான வஸந்தகாலச் சூரியனைக் கண்டு, மக்களுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று.

## 6

காலைச் சாப்பாட்டின்போது, நீனா தன் கோஷ்டியினரின் புகையிலை நடுகையைப் பற்றிப் பொரிந்து தள்ளினாள். எல்லா அலுவல்களும் அற்புதமாக நடக்கின்றனவாம். நெற்றியில் விழுந்து புரண்ட கூந்தலை அடிக்கடி ஒதுக்கிக்கொண்டு, அவள் விரைவாகச் சாப்பிட்டாள்.

யேகூப் எப்போதாவது ஒரு தடவை முக்கியமில்லாத இரண்டொரு கேள்விகளை நீனாவிடம் கேட்டுக்கொண்டே மௌனமாகச் சாப்பிட்டான்.

கெஸ்ஸோவின் சிந்தனைகள் எங்கோ படிந்திருந்தன. நீனாவின் இரைச்சலில் பாதி அவன் செவியில் விழவில்லை. நாற்று அருமையாக இருக்கும் என்று அவள் பெருமையுடன் சொன்னபோதுதான் அவன் இடைமறித்துத் தண்ணீர் கேட்டான். நீனா, பாதி வாக்கியத்தை அப்படியே நிறுத்திவிட்டுச் சாப்பிடக் குனிந்தாள். கிராமத்தில் ஒரு முக்கியஸ்தன் என்று தான் கருதியிருக்கும் சகோதரன், அவளுடைய அலுவலை அலட்சியமாக மதிப்பதைக் கண்டு நீனாவுக்கு வருத்தமுண்டாயிற்று. அப்பா, தலையை ஆட்டினார். அனுதாபத்தோடு அவளைப் பார்த்துப் புன்னகை செய்தார். யேகூப் தன் மகளின் நற்குணத்தை மிகவும் நேசித்தான். அவளுடைய உபசாரம், மரியாதை எல்லாம் அவன் இதயத்தைக் கனிவித்தன. அவன் தன் மகளின் புகையிலை நடுகையைப் பற்றியும், பாத்தி பண்ணைகளைப் பற்றியும் நாள் முழுதும் கேட்கத் தயாராயிருந்தான்.

நீனா எழுந்தாள். கெஸ்ஸோவும் சிந்தனை தேங்கிய முகத்துடன் அவள் பின்னால் எழுந்தான். அவன் திட்டமிட்ட தினம் சுலபமாகக் கழிந்துவிடாது. அவன் எல்லாப் பண்ணைத் தலைவர்களையும் காணவேண்டும்; கோஷ்டியின் அலுவலைப் பற்றிய அவர்கள் கருத்தை அறியவேண்டும்; அவர்களுக்கு உற்சாகமூட்ட வேண்டும். அதன் பின் கூட்டுப் பண்ணை நிர்

வாகத்துடனும், கிராம சோவியத்துடனும் தீர்க்கமாக ஆலோசனை செய்யவேண்டும். அதனால் சில மனத்தாங்கல்கள் கூட ஏற்படலாம்.

''நான் போய் வருகிறேன்'' என்று குல்லாவைத் தலையில் வைத்துக்கொண்டு கெஸ்ஸோ வெளியே கிளம்பினான்.

கோஷ்டித் தலைவனான கெஸ்ஸோ, முதன் முதலில் ஆன்டன் ராஷ்பாவிடம் சென்றான். அவனை அதாமூரின் கடையில் நாம் அறிமுகம் செய்துகொண்டோம்.

ஆண்டன் விறகு பிளந்து கொண்டிருந்தான். அவன் தனது வளைந்த, ஒடிசலான காலைச் சிரமத்துடன் ஊன்றிக் கொண்டு, கோடரியைப் பாய்ச்சினான். கெஸ்ஸோ கூப்பிட்டதும், கையைக் கண்களின்மீது குவித்து நோக்கினான்.

கோடரியைத் தூர எறிந்த வண்ணம், ''உள்ளே வா'' என்றான்.

''வந்தனம். நான் அவசரமாகப் போகவேண்டும்'' என்று தன் பேச்சுக்கு அழுத்தம் கொடுப்பதுபோலக் கெஸ்ஸோ கடிகாரத்தைப் பார்த்தான்: ''நீங்கள் சிறந்த விறகுவெட்டியாகி விட்டீர்கள்''

ஆண்டன் இருமினான்; நொண்டிக்கொண்டு வேலியை நோக்கிச் சென்றான்.

'நமது கோஷ்டித் தலைவர் எங்கே போனார் என்று நான் இப்போதுதான் எண்ணினேன்.'' அவன் வார்த்தைக்கு வார்த்தை இருமிக்கொண்டே பேசினான். ''அமைதியான வாழ்க்கை உனக்குச் சலிப்பைத் தரவில்லையே?''

''ஏன் சலிப்பைத் தரவேண்டும்? எங்களால் இயன்ற வரை நாங்கள் போராட்டத்தில் கலந்துகொண்டோம்; இப்போது அந்த வேலை முடிந்துவிட்டது.''

''வாஸ்தவம்...'' ஆண்டன், கண்கள் சிவக்கும்வரை கை முஷ்டியினால் தேய்த்தான். ''உள்ளே வா. ஒரு கோப்பை ஒயின் சாப்பிடு.''

கெஸ்ஸோ அதை வந்தனத்துடன் மறுத்துவிட்டான்,

''விஷயங்கள் எப்படியிருக்கின்றன?''

''என்ன விஷயங்கள்?'' என்று ஆண்டன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

''பண்ணை விஷயங்கள்தாம்'' என்றான் கெஸ்ஸோ.

''அதுவா?'' என்று ஆண்டன் இழுத்தான்: ''எல்லாம் சரியாகத்தான் நடக்கிறது.''

''சரிதான். உழவை ஆரம்பிக்க வேண்டாமா?''

''உழவா? அதற்கென்ன அவசரம்? அந்தக் காலத்திலே...'' என்று ஆண்டன் சிரித்தான்.

அவனைக் கவனியாமலே கெஸ்ஸோ வானத்தை அண்ணாந்து பார்த்தான். நாளைக் காலையில் பண்ணையாட்கள் முழுவதும் வேலைக்கு வந்துவிட வேண்டும் என்று ஆண்டனிடம் கூறினான். அதற்குப் பனி சரியாக உருகவில்லையென்றும், அது உழவுக்கு ஏற்ற பருவமல்லவென்றும் ஆண்டன் சாக்குப் போக்குகள் சொன்னான். ஆனால், கெஸ்ஸோ அவனது ஆட்சேபணைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

''நாளைக் காலை சரியாக ஏழு மணிக்கு வயலுக்கு வந்துவிட வேண்டும்.''

''என்னால் முடியாது'' என்றான் ஆண்டன்: ''என் காலில் ஒரு சுளுக்கு இருக்கிறது. பொய்யா சொல்கிறேன்?'' என்று சிரித்தான். ''உண்மைதான்......திடீரென்று எனது கால் பெருவிரல் வலிக்க ஆரம்பித்து விடுகிறது. அதைக் கவனிப்பதற்குள் சுண்டுவிரலில் வலி ஆரம்பமாகி விடுகிறது. பிறகு அந்த விளகால் முழுதும் பரவிவிடுகிறது ஒரு உண்ணியைப்போல வலி துள்ளுகிறது. புரிகிறதா அப்பனே?''

''இல்லை.'' ஆண்டன் தனக்குத்தானே எவ்வளவு வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டுமென்று, (இத் தொழில் ஸாகேனியர்களிடம் விசேஷமாகப் பரவி இருக்கவில்லை!) கெஸ்லோ விரைவாக நடந்தான்.

''இம்மாதிரி உதவாக்கரைகளிடமிருந்து ஒன்றும் எதிர்பார்க்க முடியாது'' என்றுஎண்ணிக்கொண்டே நடந்தான். ''ஆனால் மக்களில் பலவிதம் உண்டு. நல்லவர்களும் கெட்டவர்களும் எங்குமிருக்கிறார்கள். எல்லோருடனும் சேர்ந்து வேலை செய்ய வேண்டியதாய்த்தானிருக்கும். அது சங்கடமானதுதான். என்றாலும் வேறு வழியில்லை. செய்யவேண்டியதென்ன? பின் தங்குபவர்களைக்கூட இழுத்துச் செல்ல வேண்டும். அவர்களிடம் சரியாக வேலை வாங்கவேண்டும்.''

கெஸ்ஸோ, கோபத்துடன் முஷ்டியைக் குவித்தான் வஸந்தத்தைக் கேலி செய்யும் யாரையும் குத்தித் தள்ளுவதற்கு அவன் தயார். ''அந்த முட்டாள்களுக்குப் பாடம் கற்பிக்கவேண்டும்'' என்று தனக்குள் சொல்லியவாறு,

ஆண்டனை மனமாரச் சபித்தான். ஆனால் மற்றக் கோஷ்டித் தலைவர்களுடன் பேசிய பேச்சுக்கள் அவனுக்குச் சிறிது தெம்பை அளித்தன. அற்புதமான பருவகாலம் தான் அவனது குதூகலத்திற்கு முக்கிய காரணம். இம்மாதிரி நாட்களில், சின்ன இடைஞ்சல்களெல்லாம் அவனுக்குக் கொசுக்கடி போலத்தான். பெரும் இடைஞ்சல்களைக் கண்டு அவன் அஞ்சுவதேயில்லை. கெஸ்ஸோ, வழியில் எதிர்ப்படுவோரிடமெல்லாம் தமாஷ் பண்ணினான். பெண்களைக் கண்டு பவ்வியமாக வணக்கம் செய்தான். அவனது புகழ்மொழிகளினால் அப்பெண்களின் கன்னம் சிவந்தது.

கெஸ்ஸோ ஒரு பாட்டை விசிலடித்துக் கொண்டிருந்தான். அவன் குட்டைகளைத் தாண்டிச் செல்லவில்லை; அவைகளை ஒரு தாவுத் தாவினான். (என்னை நம்புங்கள். ஸாகேனில் அநேகம் குட்டைகள் உள்ளன.) அவன் ஒவ்வொரு குட்டையையும் தாவும்போது. மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தான்.

புழுதி படர்ந்த ரஸ்தாவிலே, (ஸாகேனில் இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது!) சேறு மிக ஆழமாக இருந்தது. வஸந்தச் சூரியனின் கிரணங்கள் குட்டை நீரில் நிழலாடின. எத்தனை குட்டைகள் உள்ளனவோ அத்தனை சூரியன்! கெஸ்ஸோ கண்ணைப் பறிக்கும் கோளங்களின் வரிசையைக் கடந்து சென்றான். வஸந்த காலத்தில் யுக்ரேனிலும், போலந்திலும் நீர் நிறைந்திருக்கும் ரஸ்தாக்கள் அவனையறியாமலே நினைவுக்கு வந்தன. ஸ்டுடிபேக்கர் கார்கள்கூட அவற்றில் சிக்கிக்கொள்ளும். "அடே பசங்களா! ஆழமான சகதி இருக்கிறது. உங்கள் பூட்ஸுகளைக் கழற்றிவிடுங்கள்" என்னும் அவனது நண்பனின் ஜீவன் நிறைந்த குரல் (அவன் யரோஸ்லாவ்லைச் சேர்ந்த செம்பட்டைமயிருள்ள துப்பாக்கி வீரன்) அவன் செவியில் ஒலித்தது. அந்தக் குரல் அவன் நினைவில் சுழன்றது-அவன் நடையும் தளர்ந்தது...அவன் போலந்து மண்ணில் புதையுண்டுவிட்டான். அவனுடன் போர் முனையில் எல்லா இன்பதுன்பங்களையும் பகிர்ந்துகொண்ட கெஸ்ஸோ, அவனது கல்லறையில் கண்ணீர் வடித்தான். அது மூன்று ஆண்டுகளுக்கு முந்திய சமாச்சாரம். ராணுவ நண்பர்களின் நினைவு, கெஸ்ஸோவின் உள்ளத்தில் திளைத்துக் காகஸஸ் மலைக்குக் கொண்டுவரப்பட்டதைப் போல, அந்த மண்மேடு இன்னும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறதோ அல்லது காற்று அதைத் தகர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டதோ?...

# 7

கிராம சோவியத்திற்குச் செல்லும் வழி நீண்டு கொண்டே போயிற்று. காலை சென்று, மாலையும் வந்து விட்டது. கிராம சோவியத்தில் பேசுவதற்குக் கெஸ்ஸோ குறிப்பிட்டிருந்த நேரமும் கழிந்துவிட்டது. முச்சந்தியில் நின்று கெஸ்ஸோ சிந்தித்தான். என்ன செய்வது? நேரே சோவியத்துக்குச் செல்வதா அல்லது மூன்றும் பண்ணையின் தலைவனான குடாலின் வீட்டிற்குச் செல்வதா?

இச்சமயத்தில் ரஸ்தாவின் திருப்பத்தில் ஒரு வண்டி வந்தது. யானைபோன்ற இரு எருதுகள் அதை இழுத்து வந்தன. இந்தப் பிராணிகளின் சோம்பேறித்தனம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். என்றாலும், ஸாகேனிய எருதுகள் மண்டைக்கனம் பிடித்த மலைவாசிகளுக்குத் தொந்தரவு தரவே தோன்றின போலும்!

வண்டி கண்ணுக்குத் தெரிந்ததும், அதிலிருந்து எருதுகளின் மீது வசைமாறி பொழியும் குரலும், கோபமான சாட்டையடிகளும் காதில் விழுந்தன.

"ஏ! ஓநாய்களின் தீனியே! சைத்தான் குஞ்சுகளே!" என்று சாட்டையால் அடித்துக்கொண்டே வண்டிக்காரன் ஏசினான். கடைசியாகப் பொறுமையிழந்து வண்டியை விட்டுக் கீழே குதித்தான். சட்டைக் கைகளை ஆத்திரத்துடன் மேலே சுருட்டினான். உங்களை லேசில்விடப்போவதில்லை என்று அவைகளைப் பயமுறுத்தினான்.

"குடால், என்ன விஷயம்?"

வண்டிக்காரன், கெஸ்ஸோவைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். பூமியிலிருந்து திடீரென்று முளைத்து வந்து விட்டவனைக் கெஸ்ஸோ அவனுக்குத் தோன்றினான்.

"நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று விரோதிகளை (எருதுகளை) முறைத்துப் பார்த்துக்கொண்டே குடால் கேட்டான். பேச்சு முடிந்ததும் அவைகளை உதைக்கவேண்டுமென்று அவன் தீர்மானித்தான். "ஆகாயத்திலிருந்து குதித்துவிட்டாயா அப்பனே?"

அவன் அங்க அபிநயங்களுடன் குரலைக் கிரீச்சிடும்படி உயர்த்திய வண்ணம் பேசினான்; குடாலுக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். புத்திக் கூர்மையும், சுறுசுறுப்பும், திடகாத்திரமும் உள்ளவன். எந்த இளைஞனுக்கும் வேலையில் சளைக்காதவன்.

கெஸ்ஸோ கையைப் பின்புறம் கட்டிக்கொண்டு சிரித்தான்.

''அவைகளைக் கொன்றுவிட வேண்டாம். அப்புறம் வருந்த நேரிடும்.''

''நான் ஏன் வருந்த வேண்டும்?'' என்று எருதுகளைப் பார்த்துக் குடால் ஆங்காரத்துடன் பேசினான். அவை, பெருமூச்சுவிட்ட வண்ணம் ஒரு புதரை நோக்கிச் சென்றன. ''நண்பனே! என்னை உனக்குத் தெரியாது. நான் நினைப்பதைச் செய்து முடிப்பவன். ஆனால், இந்தச் சோம்பேறி எருதுகள் என்னைப் பைத்தியமாக்கி விடும்போலிருக்கின்றன.''

குடால் மீண்டும் அவைகளைச் சாட்டையால் வெளுத்தான். கெஸ்ஸோ அவனைச் சிரமத்துடன் தூர இழுத்தான்; அவனிடம் ஒரு சிகரெட்டை நீட்டினான். சிகரெட் புகையோடு, குடாலின் கோபமும் பறந்துவிட்டது.

''நான் ஒரு சாமானை வீட்டுக்குக் கொண்டு போகிறேன்'' என்றான் குடால். ''அதன் பெயர்—இரு, சொல்கிறேன்—ஒரு கப்பலில் இருக்குமே அது என்ன?''

''கப்பலிலா?''

''ம்...இரு...'' என்று நெற்றி வியர்வையை வழித்தபடி குடால் யோசிக்கத் தொடங்கினான்.

''புகைக் குழாய்?'' என்றான் கெஸ்ஸோ.

''இல்லை, இல்லை. புகைக்குழாய் இல்லை.''

''கயிறுகள்,''

''அட, அதை யாரப்பா சொன்னார்கள்!''

''கொடி. சரிதானா?''

''நீயே ஒரு கொடிதானே! நாசமாய்ப்போக! இங்கேபார், இதைப்பற்றி உனக்குத் தெரிந்திருக்கலாம்...என் மகன் சென்ற கோடையில் பட்டினத்திலிருந்து இதைக் கொண்டு வந்தான். இது மாத்திரமல்ல...நான் கருமான் வீட்டிலிருந்து வருகிறேன்.''

இருவரும் வண்டியில் ஏறினார்கள். வைக்கோலைப் போட்டு வைத்திருந்த பெட்டியில், கம்பி சுற்றிய ஓர் உருளை கிடந்தது.

'' டைனமோ போல இருக்கிறது '' என்றான் கெஸ்ஸோ.

இல்லை, அதன் பெயர்...'' என்று குடால் தடுமாறினன். ''கப்பல்களில் இருபப்தென்ன ? என்னேடு வா. என் மகன் அதைப்பற்றி உனக்குச் சொல்லுவான். இதன் விலை என்ன தெரியுமா? ஐநூரு ரூபிள்! பணம் கிடக்கட்டும், என்ன சிரம மான வேலை! மலைச் சிகரங்களையும், கணவாய்களையும் தாண்டி இதைக் கொண்டு வரவேண்டுமே!''

கெஸ்ஸோ தலையைச் சொறிந்தான். காதை நிமிண்டி ஞன். (அது ஆழ்ந்த சிந்தனைக்கு அடையாளம்!)

''டைனமோவாகத்தானிருக்கவேண்டும்...''

''என்ன சொல்கிருய்?'' குடாலுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

''டைனமோ என்கிறேன்.''

''இல்லை. அது இல்லை'' என்று சோகமாகச் சொன்ஞன் குடால். ''என் மகன் அதற்கு வேறு ஏதோ பெயர் சொல்லு கிருன். கெஸ்ஸோ! எங்கள் வீட்டிற்குவா. ஆச்சரியத்தினல் விழி பிதுங்கிவிடும்படியான ஒரு பொருளைக் காண்பாய். நாங்கள் மில்லிலிருந்து ஒரு கால்வாய் வெட்டி, அதன் குறுக்கே சகல விதிகளின் பிரகாரம் ஒரு அணையைக் கட்டி யிருக்கிருேம். தண்ணீரின் அளவை ஓர் ஆள் உயரம் உயர்த்தி யிருக்கிருேம். வீட்டிற்குப் பின்ஞல் ஒரு சரிவு இருக்கிறது. அதிலே நீ உட்கார்ந்தால் அம்பு மாதிரிப் பறந்துவிடுவாய். அங்கே நாங்கள் பள்ளம் தோண்டினேம். அதிலிருந்து குண்டு பாய்வதுமாதிரித் தண்ணீர் பீறிட்டு அடிக்கிறது. இயந்திரம் சுழல ஆரம்பித்ததும், பட்டணத்தைப்போல எங்களுக்கும் வெளிச்சம் கிடைக்கும் வெளிச்சமல்ல அப்பனே! மின்னல்!..''

''சபாஷ், அப்படியாஞல் நீங்கள் ஒரு எலெக்டிரிக் ஸ்டேஷனைக் கட்டுகிறீர்களாக்கும்?''

''என்ன சொன்ஞய்?'' என்று கேட்டான் குடால். பிறகு யோசித்துப் பார்த்துவிட்டு ''அது இல்லை!'' என்ருன்.

ஆச்சரியத்தில் ஆழ்த்தக்கூடிய செய்தி யென்ருலும் கெஸ்ஸோ இம்முயற்சியை வரவேற்ருன். திடீரென்று குடால் ஒரு எலக்டிரிக் ஸ்டேஷனைக் கட்ட ஆரம்பித்து விட்டார்!— ஆச்சரியமாக இருக்கிறதே! கெஸ்ஸோ அவனை வழியனுப்ப விரும்பவில்லை. மின்சார விளக்குகள் சம்பந்தமாய் ஏதோ முயற்சிகள் செய்துகொண்டிருக்கும் சாகேணியனைக் காண்பது எவ்வளவு ஆனந்தம் தருகிறது!

''குடால்! யுத்தம் மாத்திரம் இல்லாவிடில், நாம் எப்போதா மின்சார லிளக்குகளைப் பெற்றிருப்போம்.

1941-ல் இதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. நாமும் அந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தோம். இதற்குள் ஒரு எலக்டிரிக் ஸ்டேஷன் இங்கே வேலை செய்துகொண்டிருந்திருக்கும்......''

''இரண்டும் இரண்டும் நாலு என்பது மாதிரி, இதில் சந்தேகத்திற்கு இடமில்லை.''

''ஆனால், இப்போது 1949க்கு முன் நமக்கு மின்சார ஒளி கிடைக்காது...''

குடால் வண்டியில் ஏறினான்.

''நில்லுங்கள். உழவு விஷயம் என்னவாயிற்று?''

''உழவா? பருவம் பக்குவமாக இருந்தால், நான் எப்போதும் தயார். நமது கோஷ்டியைக் கூப்பிடு. என்னிடம் ஏர், கலப்பை எல்லாம் தயாராயுள்ளன. எருதுகள் சேட்டை பண்ணினாலும், தங்கள் பங்கை அவை முடித்துவிடும்.''

''சபாஷ்! நாளைக் காலை ஏழுமணிக்கு...''

''ஆறு மணிக்கென்றாலும் நான் தயார்...''

குடால் எருதுகளை அதட்டினான். அவை நகர ஆரம்பித்தன. ''கெஸ்ஸோ! எங்கள் வீட்டுக்கு வந்து ஸ்டேஷனைப் பார். திறப்பு விழாவன்று உனக்கு விசேஷ அழைப்புக் கிடைக்கும்.''

வண்டி இடதுபுறம் திரும்பியது. அதன் கடபுடாச் சப்தம் ஸாகேனைக் குலுக்கியது.

கெஸ்ஸோ தன் நடையைத் தொடர்ந்தான். ஆனால் சிறிது நேரத்தில் குடாலின் கூச்சல் கேட்டது. அவன் தொண்டை வெடிக்கக் கத்தினான். கெஸ்ஸோ நின்றான்.

''காதில் விழுகிறதா?'' என்று குடால் புதருக்கு அப்பாலிருந்து இறைந்தான்.

''விழுகிறது'' என்றான் கெஸ்ஸோ.

''ஞாபகம் வந்துவிட்டது. அதன் பெயர் ஆர்மேச்சர்! ஆர்—மேச்சர்!''

''டைனமோ ஆர்மேச்சரா!'' என்று யோசித்தபடி, கெஸ்ஸோ வேகமாக நடந்தான்.

## 8

கிராம சோவியத் கட்டிடம் முன்னைவிடப் பழமையாகக் காணப்பட்டது; அதன் ஜன்னல் கண்ணாடிகள் எல்லாம்

உடைந்துபோயிருந்தன. இதைத் தவிர, யுத்த காலத்திலிருந்து அதில் யாதொரு மாறுதலும் இல்லை. முற்றம் முன்னைப்போலவே வெகு சுத்தமாய் இருந்தது. 1940–ல் நடப்பெற்ற பாப்லார் மரங்கள் பருத்து உயர்ந்துவிட்டன.

அதன் காரியதரிசியான ஓர் இருபது வயது இளைஞன், முன் அறையில் உட்கார்ந்து தன்மேஜையைச் சுற்றியிருந்த குடியானவர்களிடம் ஏதோ விளக்கிக் கொண்டிருந்தான். கெஸ்ஸோ அவர்கள் எல்லோருக்கும் வணக்கம் செலுத்தினான்: ஒவ்வொருவர் உடல் நலனையும் விசாரித்தான். அதிலேயே அதிக நேரம் கழிந்துவிட்டது.

அடுத்த கதவு வழியாகச் சென்றால் கிராம சோவியத்தின் தலைவரைக் காணலாம். அது விசாலமான அறை. அதில் ஒரு ஆடி அசையும் மேஜை. அதன்மீது சிவப்புத் துணி விரிக்கப்பட்டிருந்தது. மேஜையின் நடுமையத்தில் ஒரு மண் தட்டு இருந்தது. அதில் சிகரெட் துண்டுகளும் செத்துப் போன ஈக்களும் கிடந்தன.

நிகாலா அரசாங்க அலுவல்களை இரவு முழுவதும் கண்விழித்துச் செய்தவன் போல, மேஜையருகில் உட்கார்ந்திருந்தான் வலது கன்னத்தைக் கையிலே தாங்கிக் கொண்டு முகத்தைக் கோணல்மாணலாக வைத்திருந்தான். கெஸ்ஸோ வந்ததும் அவன் நிலையில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. இப்போது, அவன் வலது கன்னத்தைவிட்டு இடது கன்னத்தைக் கையினால் தாங்கிக்கொண்டான்!

கட்சிக் காரியதரிசியும், ஒரு பண்ணைக் கோஷ்டியின் தலைவனுமான கான்ஸ்டான்டின் ஆலன் ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்திருந்தான். ஆலன் மெதுவாகச் சிந்திக்கக் கூடிய, ஊமைக்குணம் படைத்த மனிதன். ஆனால், நிக்கோலாவோ 'சடபட'வென்று பொரிந்து தள்ளக்கூடியவன். இதனால், அவர்கள் பேச்சில் ஒரு தனி ரகமான குணவிசேஷம் காணப்பட்டது. நிக்கோலா பேசிக்கொண்டேயிருப்பான்; கான்ஸ்டான்டின் முத்து உதிர்த்தாற்போல ஒன்றிரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லுவான். ஆனால், அவர்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டனர். சம்பாஷணை என்றால் அதுதானே முக்கியம்?

''அந்த நாற்காலியில் உட்காராதே. உன் கழுத்து ஒடிந்து விடும்'' என்று, நிக்கோலா கெஸ்ஸோவை எச்சரித்தான்.

''அவ்வளவு சீக்கிரமாகவா?'' என்று கெஸ்ஸோ வேறொரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டான்.

அந்த மாஜிப் பட்டாளத்தானின் க்ஷேமத்தைப்பற்றிக் கான்ஸ்டான்டின் அன்புடன் விசாரித்தான். பெரிய நகரங்களைவிட இது அமைதியாகத்தானே இருக்கிறது? கெஸ்ஸோ இரைச்சல் நிரம்பிய பல நகரங்களைப் பார்த்திருப்பான். யார் கண்டார்கள்? ஐந்து மாடி வீடுகளில்கூட அவன் வசித்திருக்கலாம்! . . ஆம், கெஸ்ஸோ ஐந்து மாடி வீடுகளில் வசித்திருக்கிறுன். ஆனுல் அவற்றைவிட, ஸாகேனிலுள்ள மரவீடுகளைத்தான் அவன் மனம் விரும்பியது. கெஸ்ஸோ சரடு விடுகிறுன் என்னும் பாவனையில், நிக்கோலா கான்ஸ்டான்டினைப் பார்த்துக் கண்ணடித்தான்.

''நீ எங்கெல்லாம் போயிருக்கிறுய்?''

''டான் நதியிலிருந்து ஜெர்மனி வரை போயிருக்கிறேன். நண்பர்களே! உண்மையைச் சொல்லுகிறேன். தூரம் செல்லச் செல்ல எனக்கு ஸாகேன் மீது பிரியம் அதிகரித்தது. வெகு விரைவில் ஊருக்குத் திருப்பவேண்டுமென்று கனவு கண்டு கொண்டே இருந்தேன்.''

கான்ஸ்டான்டின் எழுந்திருந்து ஜாடியிலிருந்த தண்ணீரைக் கோப்பையில் ஊற்றி, ஒரே மடக்கில் குடித்தான்.

அமைதி நிலவியது. பிறரிடம் தன்னைப்பற்றி நல்ல எண்ணத்தை உருவாக்கிவிட்டோமென்று கெஸ்ஸோ எண்ணிஞன்.

''நமது காரியத்தைக்கவனிக்கலாமா?'' என்று நிக்கோலா மௌனத்தைக் கலைத்தான். டிராயரிலிருந்து ஒரு திறந்த கவரை எடுத்தான்.

''ஜில்லா நிர்வாகத்திடமிருந்து இக்கடிதம் வந்திருக்கிறது...விதை விதைப்பதைப் பற்றியும், மற்றும் பல முக்கியமான விஷயங்களைப் பற்றியும் எழுதியிருக்கிறுர்கள். அற்புதத்தின் விளைவாகத்தான் இக்கடிதம் கிடைத்திருக்கிறது. யார் இதைக் கொண்டுவந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?'' நிக்கோலா கெஸ்ஸோவைக் கூர்ந்து பார்த்தான்; ''யார் என்று நினைக்கிறீர்கள்?''

''ஸாகேனுக்கா கொண்டுவந்தார்கள்?'' என்று கான்ஸ்டான்டின் அதிசயித்தான்: ''அப்படியாஞல் ரஸ்தா திறந்திருக்கிறதா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை. . . . இதை ஜில்லா நிர்வாகத்திடமிருந்து ரஷீத் கொண்டு வந்தான்.''

''யார் அந்த ரஷீத்? டோவா?''

''ஆம், அவனேதான்.''

இதைப்பற்றி நெடுநேரம் பேச்சு அடிபட்டது. ரஷீத் நாலு ஆண்டுகள் போர்முனையில் கழித்தானென்றும், இப்போது நல்லவனுகிவிட்டா னென்றும் நிக்கோலா கூறினுன். போர் முனையில்கூட ரஷீத் ஒழுங்காயிருந்திருப்பானு என்று கெஸ்ஸோவுக்குச் சந்தேகந்தான். ரஷீதைப் பற்றிய சிறு ரகஸியத்தைக் கூற இதுதான் சரியான சமயம்! கெஸ்ஸோ இதை மிகவும் அந்தரங்கமாக வைத்திருந்தான். விஷய மென்னவெனில், ரஷீத் துப்பாக்கி மருந்தைமோந்து பார்த் ததுகூட இல்லை! அவன் யுத்தகாலமுழுதும், பின்னணியிலுள்ள கமிஸரி ஸ்டோர்ஸில் வேலை பார்த்து வந்தான்; அவன் அங்கு சுண்டெலியைப் போலப் பதுங்கிக் கிடந்தான்! பட்டணத்து வாசிகளுக்கு இச்செய்தி தெரியும். ஆனுல் ஸாகேனுக்கு அது விரைவாக வந்து சேரவில்லை.

ரஷீத் கடந்த இரண்டு நாட்களாக எங்கேயோ கேளிக்கை யில் ஈடுபட்டிருந்தான். அவன் இன்னும் வீட்டுக்குப் போய்ச் சேரவில்லை.

''பொதுவாகப் பார்த்தால், அவன் நல்ல இளைஞன். வேலை வேண்டுமென்று கேட்கிருன்'' என்ருன் நிக்கோலா.

''அப்படியானுல், இன்னுமொரு சோம்பேறி வந்துவிட்டா னென்று உம்மைப் பாராட்டுகிறேன்'' என்ருன் கெஸ்ஸோ.

கான்ஸ்டான்டினுடைய சிரிப்பு அவன் மீசையில் ஒளிந்துகொண்டது.

''இருக்கலாம், ஆனுல் ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன என்பதை மறக்காதே. எப்பேர்ப்பட்ட வருஷங்கள்!'' கான்ஸ்டான்டின் ஒரு வினுடி மௌனமாயிருந்தான். ''ஆனுல் அதைப் பற்றிப் பேச நான் விரும்பவில்லை......நிக்கோலா! அந்தக் கடிதத்தைப் பற்றி என்ன சொல்லுகிறீர்?''

''கடிதம் மோசமில்லை'' என்று நிக்கோலா கிண்டலாகச் சொன்ஞன். (ஏதோ ஒரு காரணத்திற்காக அறையின் வலது மூலையைச் சுட்டிக்காட்டி) ''முதலில் அந்த ஜில்லா நிர்வாகிகள் இங்கு வரவேண்டும்; இங்கு வந்து போனபின் அவர்கள் கடிதம் எழுதட்டும்...இதை வாசித்துப் பார்!'' என்று நிக் கோலா கெஸ்ஸோவிடம் ஒரு கடிதத்தை நீட்டினுன்.

அது ஒரு டைப் அடிக்கப் பெற்ற சுற்றறிக்கையின் மங்க லான பிரதி. அதன் எழுத்துக்களை வாசிப்பது கெஸ்ஸோ விற்கு மிகச் சிரமமாயிருந்தது. இவ் வருடம் விவசாயிகளெல்

லாம் அமோகமாக உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும், ஒரு ஹெக்டாருக்கு 500-லிருந்து 1000 'பூடு'கள் விளைவிக்க வேண்டுமென்றும் அதில் கண்டிருந்தது, ''இன்று உலகம் முழுவதும் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறது'' என்று அது கூறிற்று. ''ஜோதி கூட்டுப்பண்ணை (இப்பெயர் கையி னுல் எழுதப்பட்டிருந்தது) யிலுள்ளோர் உட்பட, எல்லா சோவியத் மக்களும் தேசத் தலைவர்களின் திட்டத்தை நிறை வேற்ற வேண்டியது கடமையாகும். 1947-ம் ஆண்டு, அமோக உற்பத்தி ஆண்டாக இருக்கவேண்டும். அதன் முன் னேற்றம் யுத்தத்தினுல் ஓரளவு தடைபட்டு விட்டாலுங் கூட...'' இதன் பிறகு, அந்தச் சுற்றறிக்கையில் அநேகருடைய பெயர்களும், அவர்களைப் பற்றிய விபரங்களும், சிறந்த கூட் டுப் பண்ணைகளின் பட்டியலும் கண்டிருந்தது.

''சபாஷ்!'' என்று கூவினுன் கெஸ்ஸோ: ''நானும் இதே காரியமாகத்தான் வந்திருக்கிறேன். ரொம்ப நல்லது. ஆயிரம் 'பூடு'களா?—அபாரம்! என்ன நினைக்கிறீர்கள் இதைப்பற்றி?''

''அதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை'' என்று நிக்கோலா தனது பெரிய கைக்குட்டையை எடுத்து, பிரபல மேடைப் பிரசங்கி நீண்ட பேச்சுக்குத் தயாராவதுபோல, மிகத் தட புடலாக மூக்கைச் சிந்தினுன்.

நிக்கோலா தும்மியதாக நினைத்துக்கொண்டு, ''வாழ்க'' என்ருன் கான்ஸ்டான்டின்.

நிக்கோலா கைக் குட்டையைப் பையில் திணித்தான். ஒவ்வொரு கிராமத்தையும், கூட்டுப் பண்ணையையும் அதன தன் தன்மைக்கு ஏற்ப நடத்தத் திறமையற்றவர்கள் என்று ஜில்லா நிர்வாகிகளைக் குறை கூறினுன். எல்லாவற்றையும் ஒன்றுபோல எடை போடுவது தவறு என்ருன். ''ஸாகேனைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? எட்ட முடியாத இடத் தில், நெடுந் தூரத்தில் இருக்கிறதென்றுதான் அவர்களுக்குத் தெரியும்; அதன் விளைச்சலைப் பற்றியும் தெரியும். ஐநூறு 'பூடு'கள் ஆயிரம் 'பூடு'கள் என்று எழுதி விடுவது சுலபம். நானும் காகிதத்தில் இதைவிடப் பிரமாதமாக எழுதுவேன்! 'கடற்கரையில் பயிரிடு; ஆயிரம் 'பூடு'களை விளைவி' என்று என்னுலும் எழுத முடியும்...ஆனுல் நிலத்தின் தன்மை என்ன? அதைப்பற்றி யோசிக்க வேண்டாமா? நமது நிலம் சுத்த ஊத வாக்கரை என்பதுதான் நமக்குத் தெரியுமே?''

நிக்கோலா கோபத்துடன் தனது நீண்ட ஆஸ்ட்ராகான் தொப்பியைத் தலையில் அணிந்தான்.

''வேட்டையை எடுத்துக்கொள்ளுங்கள்—அதன் விஷயமே தனி'' என்று நிக்கோலா மீண்டும் தொடர்ந்தான். "நமக்கு எவ்வளவு ரோமம் நஷ்டமாகிறது என்று எண்ணிப் பாருங்கள்! அதனால் நமது பண்ணைக்கு எவ்வளவு லாபம் வரும்!...ஹூம்...பேசிப் பயன் என்ன?...''

நிக்கோலா நம்பிக்கையின்றிக் கையை அசைத்தான். பிறகு காரியதரிசியை அழைத்தான். அந்த வாலிபன் சுண்டெலியைப்போல அறைக்குள் நுழைந்தான். அவன் மூக்குச் செக்கச் செவேல் என்றிருந்தது. அவன் இடைவிடாமல் மூக்கைச் சிந்திக்கொண்டிருந்தான்.

''உடம்புக்கு என்ன?'' என்று கேட்டான் நிக்கோலா.

''ஜ...ஜ...ஜலதோஷம்.''

''என்ன?''

பதிலளிப்பதற்குப் பதிலாக, காரியதரிசி தும்மினான்; தும்மலின் மூலமாகவே விஷயத்தை விளக்கினான்.

''அவனுக்கு ஜலதோஷம்'' என்றான் கான்ஸ்டான்டின். ''அவன் தோற்றத்திலிருந்தே கடுமையான ஜலதோஷம் என்று தெரிகிறது.''

''ஜன்......னல்...ஜன்...னல்...வெள்ளம்'' என்று தும்மிக்கொண்டே காரியதரிசி ஜன்னலைக் காட்டினான்.

''அதனாலென்ன?'' என்று நிக்கோலா காரியதரிசியை எரிச்சலோடு பார்த்தான். ''நானென்ன இரும்பாலே செய்தவனா? என்னைப் பார். எனக்கு ஒரு கேடுமில்லை.'' இதை நிரூபிப்பதற்காக, அவன் மார்பிலுள்ள சுவாசத்தை யெல்லாம் மூக்கு வழியே வெளித் தள்ளினான்.

கான்ஸ்டான்டின் உடல் வெட வெடவெடத்தது. ''நாசமாய்ப் போன குளிர்காற்று இந்த அட்டூழியம் பண்ணுகிறது'' என்றான் அவன்.

நிக்கோலா, காது கேளாதவன்போல் இருந்துவிட்டான். கண்ணுக்குத் தெரியாத யாரோ ஒரு ஆளை விரலைக் காட்டிப் பயமுறுத்திக்கொண்டு, ஜில்லா நிர்வாகிகளுக்கு அனுப்ப வேண்டிய பதிலைக் காரியதரிசிக்கு விளக்க முயன்றான். அது சூடான பதிலாயிருக்க வேண்டுமென்பது அவனது அங்க அசைவுகளிலிருந்து புலனாயிற்று. அவர்கள் பீடம் தெரியாமல் சாமியாடுகிறார்கள்! ஸாகேனில் 500 'பூடு'கள் விளைந்ததேயில்லை...காரியதரிசி மீண்டும் தும்ம ஆரம்பித்தான்.

''சரி போ அப்பா. போய்ப் பதிலை எழுது'' என்று நிக்கோலா வெறுப்புடன் கூறினான்.

காரியதரிசி அவ்விடத்தைவிட்டு அகன்றான். அறையில் நிசப்தம் நிலவியது. விஷயத்தை யெல்லாம் பேசித் தீர்த்தாகி விட்டது போலத் தோன்றியது. நிக்கோலா ஒரு தீக்குச்சி யின் முனையினால் பல்லைக் குத்திக்கொண்டு, தலைவருக்குரிய நாற்காலியில் கம்பீரமாய் அமர்ந்திருந்தான். கான்ஸ்டான் டின் மேஜையில் தாளம் போட்டான். அது கெஸ்ஸோவுக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. ''இது ஒரு விநோதமான ஐந்து. எல்லாவற்றையும் பார்க்கிறது; புரிந்துகொள்ளுகிறது. ஆனால் யாரோ குரல்வளையை அமுக்கிக் கொண்டிருப்பதுபோலச் சும்மா யிருக்கிறது; இது சரியல்ல. நீ ஒரு கம்யூனிஸ்டானால் உண்மையைத் தைரியமாக எடுத்துச் சொல்லவேண்டும். அதைப் பற்றித் தயக்கமே கூடாது,'' கெஸ்ஸோவின் இதயத் தில் வேதனை மிகுந்தது. அவன் திடீரென்று எழுந்தான்; கம்பளிக் கோட்டை இறுக அணிந்தான்; குல்லாவைச் சரி பண்ணினான்; உயரமான பூட்ஸுகளை இழுத்து மாட்டினான்.

''நிக்கோலா! நீர் பேச விரும்பியது இவ்வளவுதானா!''

''உனது விருப்பம்தான் என்னவோ?'' என்று போலிப் பணிவுடன், கைகளை அகல விரித்துக்கொண்டு நிக்கோலா கேட்டான்: ''இது போதாதா?''

கெஸ்ஸோ பைக்குள் கையைத் திணித்துக்கொண்டு சொன்னான்:

''...நாம் உண்மையான அலுவலைப் பற்றிப் பேசுவோம் என்று நான் எண்ணினேன். ஆனால் அது தவறு என்று இப் போது தெரிகிறது.''

''சரி, உனக்கு எது பிடிக்கவில்லை? கெஸ்ஸோ சொல்லட் டும். நாம் கேட்போம். சரிதானே?'' என்று நிக்கோலா கான்ஸ்டான்டின் பக்கம் திரும்பினான்.

தான் பேசவேண்டிய வேளை வந்துவிட்டது என்று கான்ஸ் டான்டின் முடிவு செய்தான்.

''கொஞ்சம் பொறும்'' என்று அவன் ஒரு தாளையும் பென் சிலையும் எடுத்து, அதில் ஏதோ மர்மமான குறியீடுகளை வரைந்துகொண்டு பேசினான்: ''ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு அபிப்பிராயம் இருக்கும். அதுபோல எனக்கும் ஒன்று இருக்கிறது. என் கருத்து என்னவென்றால், அவசரப்பட்டுப்

பதிலெழுத வேண்டாம். நாம் எல்லோரும் கலந்து நன்ருக யோசிப்போம்...''

கான்ஸ்டான்டின் ஆழ்ந்த யோசனையுடன், அமைதியாகப் பேசினுன். அவன் பேச்சு கெஸ்ஸோவுக்கு மகிழ்ச்சிஅளித்தது. ஆகவே, அவன் மறுபடியும் நாற்காலியில் அமர்ந்தான்.

''முதலாவதாக, கெஸ்ஸோ ஏதாவது சொல்லவேண்டுமானுல் சொல்லட்டும்'' என்று கான்ஸ்டான்டின் கேள்விக் குறியுடன் கெஸ்ஸோவை நோக்கினுன்.

''நான் சொல்ல வேண்டியது இருக்கிறது'' என்று உறுதியான குரலில் கெஸ்ஸோ ஆரம்பித்தான்: ''அது மிக முக்கியமான விஷயம் மலைப்பிராந்தியத்தில் எவ்வளவு நல்ல விளைச்சல் இருக்கும் என்பதை எங்கள் கோஷ்டி காண்பிக்கப் போகின்றது. யுத்தத்திஞல் தடைப்பட்ட உற்பத்தி அளவை நாம் எட்டிப்பிடித்தே ஆகவேண்டும்'' அவன் உற்சாகத்தோடும், அரைகுறை வேதனையோடும் பேசினுன்: ''எங்களிடம் ஒரு திட்டம் இருக்கிறது. நாங்கள் ஜில்லா நிர்வாகிகளின் அறிக்கையை ஆதரிக்கிருேம்.''

அவன் அந்த அறிக்கையை மேஜையிலிருந்து எடுத்து, கொடியைப்போல உயர்த்திப் பிடித்தான்.

''சரி. அப்புறம்?'' என்ருன் நிக்கோலா. ''முதலில் எங்களிடம் உன் திட்டத்தைச் சொல்லு. அது எல்லோருக்கும் பிடிக்கலாம்; பிடிக்காமலும் போகலாம்.''

''அது உண்மைதான்'' என்று கான்ஸ்டான்டின் தலையாட்டிஞன். ''நமக்குள் எவ்வித ரகசியமும் இருக்கக்கூடாது. உனக்கு ஒரு யோசனை தோன்றிஞல், அதை எல்லோரிடமும் கூறு.''

கெஸ்ஸோ ஒரு விஞடி சிந்தித்தான். பிறகு, அவன் தீர்மானமாகச் சொன்ஞன்.

''இப்போது முடியாது, கான்ஸ்டான்டின்! முதலில் அதைப்பற்றி நான் உங்களுடன் பேச விரும்புகிறேன். நீங்கள் தானே இப்போது கூட்டுப் பண்ணையின் தலைவராக இருந்து வருகிறீர்கள்?'' கெஸ்ஸோ கடைக்கண்ணுல் நிக்கோலாவைப் பார்த்தான். ''நாளைக்கு எங்கள் பண்ணைக்கு வருகிறீர்களா? மிக முக்கியமான விஷயம்; சாமானியமானதல்ல.''

ஒன்றையும் கேளாதவன் போல, நிக்கோலா மேஜை டிராயரைத் துழாவிக்கொண்டிருந்தான். கான்ஸ்டான்டின் கேட்டான்:

''நாளைக்கு உழவை ஆரம்பித்துவிடுகிறீர்களா?''

''ஆம்.''

''சபாஷ்! சரியான ஆட்கள்! நாம் மற்றவர்களையும் முடுக்கிட விடவேண்டும். நான் உங்கள் கோஷ்டியை நாளைச் சந்திக்கிறேன்'' என்று வாக்குறுதி அளித்தான் கான்ஸ்டான்டின். ''போய் வருகிறேன்'' என்று விடைபெற்றுக்கொண்டு, கெஸ்லோ அங்கிருந்து கிளம்பினான்.

## 9

ரஷீதின் மதுபானக் கேளிக்கை இரண்டு நாள் நடந்தது. அவனது சகபாடிகள் குடிப்பதில் ஒருவரையொருவர் மிஞ்சி விட்டனர். எல்லோரும், ரஷீதின் யுத்த அனுபவங்களைக் கேட்பது தமது கடமை என்று எண்ணினர். ஒவ்வொரு பாட்டிலும் உள்ளே செல்லச் செல்ல, அவனது யுத்தகாலச் 'சவடால்கள்' அதிகரித்தன; பற்பல திநுசுக் கதைகள் பிறந்தன. அந்தக் கதைகளின் நாயகன் (ரஷீத்) எதிரிகளை வழிமறித்தான்; வீராவேசமாகத் தாக்கினான்; எண்ணற்ற நதிகளில் நீந்திச் சென்றான். மது மிகப் போதையுள்ளதாயிருந்ததால், ரஷீதின் நெருங்கிய நண்பரெல்லோரும் இதை நம்பினர். அதாமூர் மட்டும் (அவன் தன்னை ''யாரும் ஏமாற்றிப் பிடிக்க முடியாத பறவை'' என்று வர்ணித்துக் கொண்டான்) இந்தக் கட்டுக்கதையைக் கண்டுபிடித்துவிட்டான். ஆனால் அவன் தந்திரசாலியாகையால், அனாவசியக் குறுக்குக் கேள்விகள் கேட்டுத் தன் குடிகார விருந்தாளியைத் தொந்திரவு செய்ய விரும்பவில்லை.

கடைசியில், (ஸாகேனியர்கள்கூட எந்தக் கேளிக்கைக்கும் முடிவு உண்டு என்று கருதுகின்றனர்) ஒரு நாயின் ரோமத்தைப் பிய்த்தெறிந்துவிட்டு, ரஷீத் தன் அத்தை வீட்டிற்குத் தட்டுத் தடுமாறிச் சென்றான். அவன் மிக்கக் குதூகலத்துடன் புறவாசல் வழியாக நுழைந்தான்; கைகளை ஆட்டிக் கொண்டும், பைகளில் திணித்துக்கொண்டும், குஷியாகச் சீட்டியடித்துப் பாடிக்கொண்டும் நடந்தான்.

ரஷீத் யாதொரு முக்கிய நோக்கத்தோடும் வீடு செல்லவில்லை. அநேக ஆண்டுகள் வீட்டைப் பிரிந்திருந்த காரணத்திற்காகத்தான் அவன் வீட்டிற்குச் சென்றான். ஆனால், குடும்பப்பாசம் ரஷீதின் பலவீனமல்ல. ஏனெனில், போகும் வழியில் பெண்களின் 'கலீர்'ச் சிரிப்பைக் கேட்டதும், அவன் வீட்டு ஆசையை மறந்து சிரிப்பொலி வந்த திசையை நோக்கி நடக்கத் துவங்கினான்.

பெண்கள் படுகைகளில் வேலைசெய்து கொண்டிருந்த னர். அநேக இளைஞர்கள் சூடேறும் உரத்தையும், களிமண்ணை யும் ஒன்றாகக் கலந்து கொண்டிருந்தனர். வடிகட்டப் பெற்ற கலவை, அருகாமையில் சூடாக்கப்பட்டுக் கொண்டி ருந்தது; நிலத்தின்மீது சாம்பல்நிற ஆவி கனமாகப் படிந் திருந்தது.

முழங்கைகள்வரை சேறு படிந்திருக்க, காமா ஒரு படு கையை ஒழுங்கு பண்ணிக் கொண்டிருந்தாள். நீனு அவளுக்கு எதிரே குந்திக்கொண்டு ஒரு சிறிய கழியினால் நிலத்தின் ஆழத்தை அளந்துகொண்டிருந்தாள். வாட்டசாட்டமான ஒரு வாலிபன் அருகில் வருவதைக் கண்டதும், இரு பெண்களும் ஒருவருக்கொருவர் பார்வை பரிமாறிக் கொண்டனர். நீனு தனது இருக்கையைச் சிறிது மாற்றிக் கொண்டாள். மற்றவர் கள் இந்த அந்நியனைக் கண்டதும், தங்கள் தங்கள் பண்பிற் கேற்றஉணர்ச்சிகளை அனுபவித்தனர். உரத்தயாரிப்பு மானேஜ ரான தாவுத் இதைச் சட்டை செய்யவில்லை. ஏனென்றால், அருகிலே ஆள் வந்தால் தான் அவனுக்குத் தெரியும்; அவனுக் குக் கண்பார்வை சரியில்லை. அவன் 'பிரேம்'களைக் கவனமாகப் பரிசீலித்துக் கொண்டிருந்தான்; கண்ணாடியில் மீசை தொடும் அளவுக்குக் குனிந்துகொண்டிருந்தான்.

ரஷீத் கம்பீரமாக வாழ்த்துக் கூறினான்.

''இந்த வீட்டில் அமைதி நிலவட்டும்! ஹாந்தே ஹோச்!''

பெண்கள் ஒன்றும் புரியாமல் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். இந்தக் குஷியான வாலிபனைக் கண்டு யாதொரு வெறுப்பும் கொள்ளவில்லை யென்பதை அவர்களின் புன்னகை எடுத்துக் காட்டிற்று.

''ரஷீத்'' என்று நீனுவின் காதில் மெல்ல முனங்கினாள் காமா. இருவரும் அவனை வரவேற்பதற்காகச் சிறிது நிமிர்ந் தனர்.

''குட்மார்னிங்'' என்று தன் குருட்டுக் கண்களைத் தாவுத் கொட்டினான். புது மனிதனுக்கு அருகில் வந்து, ''அட! ரஷீத் அல்லவா!'' என்று கூவினான்.

ரஷீத்தின் கண்கள் சுறுசுறுப்பாகப் பெண்கள்மீது வட்ட மிட்டன. நீனுவைப் பார்த்து அவன் சிரித்த சிரிப்பு, 'நான் உன்னைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்பது போன்றிருந்தது. காமாவின் குனிந்த தலையைக் கண்டதும், ரஷீத் பற்களை

'நறநற'வென்று' கடித்தான்; (அதிக அன்பிற்கான அடை யாளங்களில் ஒன்று!) அவளை விழுங்குவதுபோலப் பார்த் தான்.

அவளை மெய் மறக்கச் செய்யவேண்டுமென்ற நோக்கத் துடன், இன்னொரு ஆவேசப் பார்வை பார்த்துக்கொண்டு தாவுத்துடன் பேசினான்; உலக அனுபவம் கனிந்த ஞானியின் குரலில் பேசினான்.

''கிழவனாரே! நிலத்தைப் பண்படுத்துகிறீரோ?''

தன் நண்பர்களின் வேலையைப் பற்றிப் பெருமை அடித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது என்ற மகிழ்ச்சி யினால், தாவுத் தொழிலின் ரகசியத்தை இவ்விளைஞனுக்கு வெளியிட்டான்.

''ரஷீத்! கவனமாய்க் கேள். எங்கள் ரகசியத்தை உன்னி டம் சொல்லுகிறேன்'' என்று கிண்டலாகக் கண்ணடித்துக் கொண்டு, காற்றில் உலர்ந்துபோன தன் உதடுகளைச் சப்புக் கொட்டினான். ''நமக்குள் ஒரு விஷயம்...நாங்கள் முன்னை விடச் சீக்கிரமாகவே நடுகையை ஆரம்பிக்கிறோம். கவனித் தாயா?''

அந்தக் கிழவன், உரம் தயாரிக்கும் விதம் பற்றி விபர மாகக் கூறினான். ஐம்பதினாயிரம் புகையிலை நாற்றுக்கள் நடவேண்டுமென்பது திட்டம். ஆனால், அவன் அதைப்போல இரு மடங்கு நடப்போகிறான். நல்ல நாற்றுக்களை நட்டால் நல்ல விளைச்சல் கிடைக்கும். கீழேயுள்ள சமவெளியில் இருப்ப தைப் போன்று நல்ல விளைச்சல் இராதென்பது உண்மை தான். ஆகவே, ஸாகேனிலும் அதைப்போன்று நல்ல விளைச்சல் காணுவதற்கு வழி செய்ய வேண்டும். அதற் காகப் பயிரிடும் முறையைச் செம்மையாக்க வேண்டும். இல்லையா?

தாவுத் கைகளைப் பக்கவாட்டில் வீசி, நரைத்த தலையைப் பின் தள்ளி, கம்பீரமாக உடலை நெளித்தான்.

''எதற்காக'' என்று ரஷீத் மறதியாகக் கேட்டான். ''அதிகப் படியாக ஐம்பதினாயிரம் எதற்கு?''

''என்ன கேள்வி கேட்கிறாய் நீ? அதிகமாக நட்டால் தான் அதிகப் புகையிலை விளையும். அப்புறம், நாற்றுக் களைப் பிற இடங்களில் நடுவதற்காக விற்பனை செய்ய லாம்.''

ரஷீத் இதைப்பற்றி அக்கறை கொள்ளாமல், கிழவனை நோக்கிக் கையை நீட்டினான்,

''மீதியுள்ளதை நான் எடுத்துக்கொள்ளுகிறேன். என்னுல் முடியாதா என்ன?''

கிழவன் ஊமையாகிவிட்டான்.

''நீயா?''

''ஆம்......'' என்று கிழவன் அருகில் சாய்ந்து, ரஷீத் எல்லோர் காதிலும் விழும்படி கத்தினுன்: ''பொத்தான் துவாரத்தில் அவற்றை அணிந்து கொள்ளப்போகிறேன்.'' இரு பெண்களும் வாயை மூடிக்கொண்டு சிரித்தனர்.

தனது கோமாளித்தனத்திஞல் ரஷீத்துக்குக் குஷி கிளம்பிற்று. ஆனுல், கிழவன் அங்கேயிருப்பது அவனுக்குச் சங்கடமாயிருந்தது.

''வேடிக்கை கிடக்கட்டும்...நான் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறேன்'' என்று அவன் மன்னிப்புக் கேட்கும் தோரணையில் கூறினுன்.

தோள்களை அலட்சியமாகக் குலுக்கிவிட்டு, தாவுத் தனது வேலையைக் கவனிக்கச் சென்ருன். ரஷீத் இரு பெண்களின் அருகில் உட்கார்ந்தான்.

''எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள்.''

நீனு ஒரு வாளியைக் காண்பித்தாள்,

''உங்கள் உதவியை வரவேற்கிருேம். இங்கே கொஞ்சம் உரம் எடுத்து வாருங்கள்.''

ரஷீத் முகத்தைக் கோரணி செய்து கொண்டு, சட்டைக் கைகளை மடித்த வண்ணம் அந்த வேலையைக் கவனிக்க விரைந்தான். ஒருவிஞடியில் அவன் வாளி முழுதும் நிரப்பிவிட்டான். ஆனுல் அதைத் தூக்க முடியாதவன்போல் முக்கி முனகிக் கொண்டு, படுகைகளுக்குத் தூக்கி வந்தான். அவனது கோனஷ்டைகளைக் கண்டு, இரு பெண்களும் கலகலவெனச் சிரித்தனர்.

''அவர் எவ்வளவு குஷியாக இருக்கிருர்'' என்று காமாவின் காதுகளில் நீனு முனகினுள்.

''அம்மாமார்களே! உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்ற வண்ணம் ரஷீத் விரல்களால் கட்டிகளை உடைத்து, நிலத்தைச் சமனப்படுத்திஞன். ''வாழ்க்கை எப்படியிருக்கிறது? வேலை எப்படியிருக்கிறது? காதல் எப்படியிருக்கிறது?''

"நீங்கள்தான் பார்க்கிறீர்களே, நாங்கள் வேலை செய்வதை" என்றாள் நீனா. (தாவுத்தைச் சுட்டிக்காட்டி) "எங்கள் தலைவர் மிகக் கண்டிப்பானவர். அதிலும் இன்று கண்டிப்பு அதிகம். மாரிக்காலம் முடியு முன்பே, எங்களைப் பண்ணைக்கு வரும்படி உத்திரவிட்டுவிட்டார்; நிலத்தில் இன்னும் பனி இருக்கிறது...நாங்கள் சீக்கிரம் நடுகையை ஆரம்பிக்கப் போகிறோம்."

"அவருக்கு உங்கள் மீது சிறிதேனும் இரக்கமில்லையா?" என்று ரஷீத் காமாவைப் பார்த்துப் புன்னகை புரிந்து, முனகினான்: "என்ன அற்புதமான பிஞ்சுக் கைகள்..."

காமாவைச் சொல்ல முடியாத வெட்கம் சூழ்ந்து கொண்டது. அவள் வேலையில் ஆழ்ந்துவிட்டதைப் போன்று நடித்தாள். ரஷீத் அவளைப் பேச்சுக்கு இழுக்க முயன்றான். ஆனால் தாவுத் சனியன்போல் அங்கு வந்துவிட்டான்.

"இந்தப் படுகைகளில் சில முளைகள் கிளம்புகின்றன. இதோபார்; கண்ணாடிச் சில்லு உடைந்திருக்கிறது—இரவில் வீசும் குளிர்காற்று இளம் முளைகளைக் கொன்று விடும். தெரிகிறதா?"

தாவுத் அப்பெண்களை உரம் தயாரிக்கும் இடத்திற்கு அனுப்பினான்.

"ஜாக்கிரதை! ஒரு புல்கூட இருக்கக் கூடாது. நாம் புல்லை நடவில்லை; நாற்றை நடுகிறோம். காமா! நீ கலவையைத் தயார் செய்து, இளம் முளைகளுக்குத் தூவு. குஷியாய் இரு."

"அது என்ன கலவை?" என்று ரஷீத் காமாவிடம் கேட்டான்.

"அப்பா பிள்ளையாண்டான்! உன் அரட்டையை நிறுத்து. என் பெண்களிடம் உன்னைக் காதல் செய்ய விடமாட்டேன். அவர்களின் வேலையைக் கெடுக்கிறாய் நீ!" என்று இரைந்தான் தாவுத்.

"காதில் விழுகிறதா?" என்று காமாவுக்கும் ரஷீதுக்கும் நடுவில் நீனா வந்து நின்றாள். "தாவுத்திற்குக் கோபம் வந்துவிட்டது...என் அண்ணாவுக்குத் தெரிந்தால் இன்னும் கோபப்படுவான்!" என்று ரஷீதைப் பார்த்துக் கிண்டலாகக் கண்சிமிட்டினாள்.

"உன் அண்ணுவைப் பற்றியா சொல்லுகிருய்? என் கழுத்துச் சுருக்கை அவிழ்த்துவிடு; இல்லாவிடில் நான் பொருமையினுல் செத்துப் போவேன்!" என்று காலி வாளிகளை இடித்துக் கொண்டு, ரஷீத் கிணற்றை நோக்கி ஓடினுன்.

"நீஞ, இவர் பெரிய தமாஷ் பேர்வழியாக இருக்கிருரே!" என்ருள் காமா.

"அவருக்கு உன்மேல் ஆசை."

"நான் அப்படி நினைக்கவில்லை."

"உனக்காகத்தான் அவர் இங்கே தங்கிஞர்" என்று நீஞ அழுத்தமாகச் சொன்னுள்.

காமா கோபத்துடன் கையை வீசிவிட்டு, வெப்பமான படுகைகளுக்கு நீர் ஊற்றச் சென்ருள்.

"இளைஞர்களே! அவர்களைப் பாருங்கள். நாம்தான் ஜெயிப்போம். ஹாந்தே ஹோச்!" என்று கத்திய வண்ணம், ரஷீத் ஓரிடத்தில் தீயைச் சுற்றிப் பிசாசுபோல் குதித்துக் கொண்டிருந்தான்.

வேலையில் ரஷீத் உண்டாக்கிய ஜீவனையும், சிரிப்பையும் தாவுத் கவனித்தான். "பொருத்தமான ஆள்" என்று மனத்துள் சொல்லிக் கொண்டான். ஆனுல் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, ரஷீத்தின் இரைச்சலை அவனுல் தாளமுடியவில்லை. அவனுடைய கூத்தாட்டத்தைக் கண்டு வேறுபுறம் திரும்பிக் கொண்டான். இரு பெண்களும் அவனது கோனஷ்டைகளை மிகவும் ரசித்தனர். அவர்கள் வேலை செய்து கொண்டும், அதே சமயத்தில் அவனது விளையாட்டுக்களை அனுபவித்துக் கொண்டும் இருந்தனர். ரஷீத் ஏககாலத்தில் நாலு வாளிகளைத் தூக்கிக் கொண்டு, ராணுவ உத்திரவுகளை முழங்கிஞன்.

"துப்பாக்கியைச் சரியாகப் பிடி! பார்—இருபது! சுடு!"

காலி வாளிகள் 'கடபுட'வென்று தரையில் உருண்டோடின.

## 10

செங்குத்தான மலைமீது ஏறுவதாகக் கெஸ்ஸோ கனவு கண்டான். அவன் அவசர அவசரமாக ஏறுகிருன்; மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது...கெஸ்ஸோ கண்ணைத்திறந்தான்.

சாம்பல் நிறமான ஜன்னல் எதிரே தென்பட்டது. துள்ளி எழுந்தான். கடிகாரமுட்கள் ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தன.

அவன் வேகமாக உடை உடுத்திக் கொண்டு சமையலறைக்குச் சென்ருன். அப்பா, இரவு முழுதும் எரிந்து கொண்டிருந்த கணப்பருகே உட்கார்ந்திருந்தார். அதி காலையிலேயே அக்கிழவன் புகை குடித்துக் கொண்டிருந்தான்.

"ஏன் அதி காலையில் எழுந்துவிட்டாய்?" என்று யேகூப் மகனைப் பார்த்துக் கேட்டான்.

"அப்பா, புறப்படவேண்டிய நேரமாகிவிட்டது. கடைசியில் போய்ச் சேருவது நன்ருயிராது."

கிழவன் முணுமுணுத்துக்கொண்டே ஆடை அணிந்தான்.

"என் பூட்ஸுக்களை எடுத்து வரும்படி உன் தங்கையிடம் சொல்லு."

நீனு அடுத்த அறையில் தூங்கிக்கொண்டிருந்தாள். தூக்கத்தில் அவளது அழகிய உதடுகள் அசைந்தன. அவள் பேசுகிருளோ என்று கெஸ்ஸோ சிறிது நின்ருன். ஆனல் அவள் நன்ருக உறங்கிக்கொண்டிருந்தாள். ஆழ்ந்த மூச்சு வந்து கொண்டிருந்தது. அவளை எழுப்ப வேண்டியிருக்கிறதேயென்று கெஸ்ஸோ வருந்தினன்.

"ம்...என்ன செய்வது?..." என்று கெஸ்ஸோ தங்கையின் கரத்தை மெதுவாக அசைத்தான்.

அவள் மறுபுறம் திரும்பினுள்; ஒருவினடி தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். பிறகு கண்ணைத் திறந்தாள்.

"அம்மா சோம்பல் நிறைந்த காலம் போய்விட்டது. எழுந்திரு. வேலைக்குச் செல்லவேண்டாமா? இது வஸந்த காலம்!"

வர்ணக் கலவையற்ற வானம், பூமிக்கு மேலே திரையைப் போலத் தொங்கிக்கொண்டிருந்தது. கிளேச் மலையின் சிகரங்களில் சூரிய ஒளி படர, இன்னும் அரைமணி நேரமாகும். உதய சூரியனின் கதிர்கள் பட்டாலும், குவாகுவா மலை ஒரு பயங்கரமான நிழல் மாதிரித்தான் தோன்றும்.

இது கெஸ்ஸோவுக்குப் பிடித்தமான நேரம். புதுப் புது உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும், ஆசைகளையும் தன் ஒளியோடு ஏந்தி வரும் புதிய தினத்தை நன்ருக அனுபவிக்கக் கூடிய நேரம்......

முதன் முதலில் கெஸ்ஸோவும், யேகூப்பும் கலப்பையைச் சரிபார்த்தனர். எல்லாம் சரியாக இருந்தது. கிழவன் குளிர்ந்த இரும்பைத் தடவினுன்: மிகத் திருப்தியோடு கலப்பையைப் பலமுறை வலம் வந்தான். ஆனுல், எருதுகளின் நிலை அவனுக்குத் திருப்தி தரவில்லை.

''மாரிக்காலத்தில் அவை மெலிந்து போய்விட்டன. அவைகளுக்குப் போதுமான தீனி போடுவது லேசான காரியமல்ல'' என்ருன் கிழவன்.

கெஸ்ஸோ அதை ஒத்துக்கொள்ளவில்லை. தந்தையோடு பேசுவதற்குப் பதிலாக, அவன் தனக்குள்ளேயே பேசிக் கொண்டான்.

''நாம் வேடிக்கை மனிதர்கள்...நம்மை இயற்கை பாழாக்கிவிட்டது. அது நமக்கு எல்லாவற்றையும் தரவேண்டுமென்று நாம் பிச்சைக்காரனைப்போல் எதிர்பார்க்கிருேம்... நாம் புல் பூண்டுகளைப் போல இப்பிராணிகளை மதிக்கிருேம்... அவைகளுக்குக் குளிர்காலத்தில் அதிகத் தீனி போடவேண்டியிருக்க, அவைகளே ஆகாரத்தைத் தேடிக்கொள்ளட்டும் என்றிருக்கிருேம். அதே சமயம் நம்மிடத்தில் செதுக்கப்படாமல் எத்தனையோ புல்வெளிகள் இருக்கின்றன...''

“ரொம்ப அழகுதான்'' என்று மகனைப் பார்த்துச் சொன்ஞன் கிழவன். ''ஆடுமாடுகளுக்குக் காலை உணவும், மத்தியானச் சாப்பாடும் தயார் செய்வதைப் பற்றி நான் இப்போது தான் கேள்விப்படுகிறேன்!''

''இதைப்பற்றி இன்னும் ஒருவரும் தெரிந்து கொள்ளாததுதான் வருந்தத் தக்கது'' என்று கூறிவிட்டு, “வாருங்கள், போவோம்'' என்று கெஸ்ஸோ எருதுகளைப் பார்த்துச் சொன்ஞன்.

கலப்பை, முற்றத்தை இரைச்சலுடன் வகிர்ந்து கொண்டு சென்றது.

வயலில் ஒருவரும் இல்லை. சென்ற வருஷச் சோளத்தின் தாள்கள் இன்னும் வயலில் இருந்தன. காலைப் பனி, சோம்பலுடன் அவைகளின் மீது உருண்டு கொண்டிருந்தது.

36199
MADURAI UNIVERSITY LIBRARY

கெஸ்ஸோ எருதுகளை அவிழ்த்தான். கிழவன் கீழே உட்கார்ந்து, அவசரமாகப் புகை குடித்துக்கொண்டிருந்தான். கெஸ்ஸோ நீண்ட சாட்டையைத் தேடி அலைந்தான்.

சிறிது நேரத்தில் கோஷ்டி முழுவதும் வந்துவிட்டது. குடால் ஒரு வண்டியில் மற்றொரு கலப்பையைக் கொண்டு வந்தான். அக் கலப்பையின் கொழு, கண்ணாடி போலப் பிரகாசித்தது.

''அசல் கத்திதான்; சந்தேகமேயில்லை'' என்று குடால் பெருமையடித்துக்கொண்டான்.

ஆண்டன் காலைக் குளிரில் நடுங்கியவாறு, உருட்டிவைத்திருந்த சிகரெட்டைப் புகைத்துக்கொண்டிருந்தான். யேகூப்பைச் சுற்றி நின்ற வயோதிகர்கள், தமக்குள் தமாஷ்பண்ணிக் கொண்டிருந்தனர்.

தூரத்தில் ஒரு மனித உருவம் தெரிந்தது. அந்த ஆள் பூமியை அடிக்கடி காலால் சோதனை செய்து கொண்டு கோஷ்டியை நோக்கி வந்தான். அருகில் வந்ததும் அவனது கனத்த குரல் கேட்டது.

''நிலம் அருமையாய் இருக்கிறது...தோழர்களே! சுகம் தானே?''

''குட்மார்னிங், கான்ஸ்டான்டின்!''

''சுகம்தானே?''

''உங்கள் கோஷ்டிதான் முதலில் வந்திருக்கிறது. நான் கிராமம் முழுவதையும் சுற்றிப் பார்த்து வருகிறேன்...''

அவனது புகழ்மொழிகளை ரசித்து, கெஸ்ஸோ கையை அசைத்தான்.

''அவர்களிடம் சில வார்த்தைகள் சொல்லுங்கள். வழியனுப்பும் உபசாரமாக இருக்கட்டும்'' என்று கெஸ்ஸோ கூறினான்.

கான்ஸ்டான்டின் அதற்கு இணங்கவில்லை.

''அதிருக்கட்டும்...நீயே பேசு, நாங்கள் கேட்கிறோம்.''

ஒரு தளபதி தன் துருப்புக்கள் தாக்குதலைத் துவங்கு முன்னர் பேசுவதைப் போல கோஷ்டினர் வேலையை உற்சாகத்துடன் செய்து முடிக்கும் வண்ணம், ஏதாவது எளிமையாக—மனதில் பதியும்படி சொல்ல வேண்டுமென்று கெஸ்

ஸோ விரும்பினுன். ஆனுல் இந்தச் சந்தர்ப்பத்தில் இயற்கையாக உண்டாகும் பரபரப்புடன், அவன் கான்ஸ்டான்டினை நோக்கினுன். கான்ஸ்டான்டின் மெதுவாகச் சொன்னுன்:

''அறுவடை...சிறந்த விளைச்சல்...உன் வாக்குறுதியை முதலில் கொடு...''

கெஸ்ஸோ சரியென்று தலையை அசைத்தான்.

''தோழர்களே!''

ஆயிரம்பேர் கொண்ட கூட்டத்தில் பேசுவதுபோலக் கெஸ்ஸோ ஆரம்பித்தான். ஆனுல் இருந்தது இருபது பேர் தான்!...தங்கள் தலைவரின் இயற்கைக்கு மாருன குரலைக் கேட்டு, விவசாயிகள் திடுக்கிட்டுப்போயினர்.

''தோழர்களே!'' சிறிது அமைதியுடன் கெஸ்ஸோ மீண்டும் ஆரம்பித்தான்; ''நாம் பண்ணை வேலையைத் துவங்குவதற்காக இங்கு குழுமியுள்ளோம். இன்று ஓர் மகத்தான நாள். ஏனென்று நீங்கள் கேட்கலாம். நமக்கு முன்னுல் மக்கள் உழுது விதைத்தது இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆம், இதற்கு முன்னும் இப்படி நடந்திருக்கிறது. ஆனுல் இன்று நாம் உன்னதமான அறுவடைக்காகப் போராடப் போகிருேம். நாம் ஒரு புதுமையை விளைவிக்கப் போகிருேம்...நூறு 'பூடு'கள் அல்ல ஆனுல், ஐநூறு 'பூடு'கள் அறுவடை செய்யப்போகிருேம்...யுத்த காலத்தில் நாம் ஒரு கொடிய எதிரியிடம் போரிட்டோம்; ஓர் அற்புதத்தை உலகுக்குக் காட்டினேம். அப்படியானுல் நமது நிலத்தை, நமது ஸாகேன் நிலத்தைக்கூட வெற்றிகரமாகப் பயிரிட முடியாதா என்ன? நாம் அறுவடை செய்வோம்; நூற்றுக்கணக்கான 'பூடு'கள் அறுவடை செய்வோம்! அதற்குக் குறையமாட்டோம்! குறையவே மாட்டோம்!''

தலைவர் நடக்க முடியாத காரியத்தைப் பேசுகிருர் என்று விவசாயிகள் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டனர்.

''உமக்கு எங்கள் நன்றி'' என்று ஆண்டன் கிண்டலாகக் கூறினுன்.

அங்குமிங்கும் சிரிப்பு வெடித்தது.

''சத்தியம் செய்கிறேன், ஆண்டன்! ஐநூறு 'பூடு'கள் ஏன் அதற்கு மேலுங்கூட நாம் அறுவடை செய்வோம்...இது சும்மா கதை அளக்கிற விவகாரம் அல்ல'' என்று கெஸ்ஸோ

கூடாகப் பதிலளித்தான்: "நாம் வயல்களில் சரியானமுறையில் பயிரிடப் போகிருேம்—உரம் தான் முக்கிய விஷயம்."

"தேவையான உரத்தை எங்கிருந்து கொண்டுவரப் போகிறீர்?" என்று ஒரு குரல் எழுந்தது.

கொஸ்ஸோ பேசினுன்:

"நமக்கு உரம் தேவைதான். முற்றங்களிலிருந்தும், புல் தரைகளிலிருந்தும், ரஸ்தாக்களிலிருந்தும் அதைச் சேகரிப்போம். ஆனுல் அது போதாது. நமக்கு மலிவான உரம் நிரம்ப வேண்டும். அது நம் அருகிலேயே இருக்கவேண்டும். சரிதானே?"

"ஆமாம்" என்ருன் குடால்.

ஆனுல், கெஸ்ஸோ பேசுவதை ஒருவரும் புரிந்துகொள்ள வில்லை என்பது நன்கு புலனுயிற்று. அறுவடை என்பது அருமையான விஷயம். அதை ஒருவரும் மறுப்பதற்கில்லை. ஆனுல், எடுத்த எடுப்பில் ஐநூறு 'மூடு'கள் வாக்களிப்பது மிக விநோதமானது; புரிந்துகொள்ள முடியாதது. தன் மகன் ஆழம் தெரியாமல் காலைவிட்டு விட்டான் என்று யேகூப் நினைத் தான். ஒரு நிமிட அமைதியைப் பயன் படுத்திக் கொண்டு சொன்னுன்:

"உரம்தான் நமது தொழிலுக்கு ஜீவநாடிஇது யாருக்குத் தான்தெரியாது? ஆனுல், அதை எங்கிருந்துபெறுவது என்பது தான் பிரச்னை."

கெஸ்ஸோ மகிழ்வோடு பேசினுன்:

"எனக்குத் தெரியும். அதை எங்கிருந்து பெறுவதென்று எனக்குத் தெரியும். நம்மிடம் ஒரு குன்று இருக்கிறது. அற்புத மான குன்று." உடனே அவன் கருணைக் குன்றின் புகழ்பாட ஆரம்பித்து விட்டான். அவன் பேசப் பேச, எல்லோருக்கும் சந்தேகம்தான் வளர்ந்தது. இதெல்லாம் மிகைப் பேச்சா னுல் என்ன செய்வது? அந்தக் குன்றில் பாஸ்பரைட் இருக் கிறதென்று வைத்துக் கொள்வோம். ஆனுல், அதன் உள்ளே இருப்பதை யார் நிச்சயிப்பது? தன் வார்த்தை களைக் கோஷ்டியினர் முழுதும் நம்பவில்லை யென்பதைக் கெஸ்ஸோ உணர்ந்தான். அவனுக்கே ஒரு விநாடி தன் எண் ணத்தைப் பற்றிச் சந்தேகம் வந்துவிட்டது.

அந்தக் குன்று அவன் பேச்சைப் பொய்யாக்கி விட்டால் என்ன செய்வது?

"உட்காருவோம்" என்று சிறிது அவகாசம் பெறுவதற்காகக் கெஸ்ஸோ கூறினான். உட்கார வேண்டிய காரணம் எதுவுமில்லை என்பதை அவன் மறந்து விட்டான். கான்ஸ்டான்டின் அவனருகில் வந்து ரகசியமாக ஏதோ சொன்னான்:

"பயிரிடுவதைப் பற்றி என்ன? பண்படுத்துவதைப் பற்றி என்ன? சரியான சமயத்தில் விதைப்பதைப் பற்றி என்ன? உழுதல், களைபிடுங்குதல்—இதிலெல்லாம் கவனம் செலுத்த வேண்டாமா? அதெல்லாம் முக்கியமில்லையா? அவைகளைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!"

கான்ஸ்டான்டினைக் கெஸ்ஸோ ஏறிட்டுப் பார்த்தான். நன்றியுடன் தலையாட்டினான். ஆமாம், சரியான முறையில் பயிரிடுவது முக்கியமல்லவா? உற்சாகம் மீண்டும் தலைக்கேற, கெஸ்ஸோ பெருமையுடன் எழுந்து நின்றான்:

"அருமைத் தோழர்களே! நமக்கு உரம் கிடைக்கவில்லையென்றே வைத்துக் கொள்ளுவோம்"—நடக்க முடியாததை ஒப்புக்கொள்வதுபோல் அவன் சிரித்தான். "இருந்தாலும்... நாம் சொல்லுகிறோம்—விவசாய சாஸ்திர விதிகள் சொல்லுகின்றன; ஆழமாகஉழுங்கள்—இருபதிலிருந்து இருபத்தைந்து ஸெண்டி மீட்டர்கள்; இருமுறை உழுங்கள்; நன்றாய்ப் பரம்படியுங்கள்; அடிக்கடி சுத்தமாகக் களை பிடுங்குங்கள். களைகளை உங்கள் பரம விரோதிகளாகக் கருதி வயலிலிருந்து விரட்டியடியுங்கள்!...சிறந்த கூட்டுப் பண்ணைகளின் அனுபவம் என்னவென்றால், நாம் வரிசை வரிசையாக நடவேண்டும்; சம அளவில் ஒழுங்காக நடவேண்டும் நீங்கள் இதை வேடிக்கையாக நினைக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். சமவெளிகளுக்குச் சென்று பாருங்கள்; அங்கே எப்படி விவசாயம் நடக்கிறதென்று கவனியுங்கள். பிறகு, நம்மைவிட அவர்கள் நன்கு பயிரிடுகின்றனர் என்று திட்டமாகக் கூறுவீர்கள்."

விவசாயிகள் தலையை ஆட்டிப் பெருமூச்சுவிட்டனர் கெஸ்ஸோ வெற்றி வீரனைப்போல் ஆரம்பித்தான்—

"நாம் சரியானமுறையில் பயிரிடவில்லை. நமது தாத்தாக்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே, அதுபோல நமக்கும் கிடைக்காது என்று எண்ணிக்கொண்டு, ஏனோதானோவென்ற முறையில் பயிர் செய்து வருகிறோம். ஆனால் நாம் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, எல்லோரும் ஒன்று சேர்ந்து

சரியான முறையில் பயிர் செய்ய ஆரம்பிப்போம். சத்திய மாகச் சொல்லுகிறேன்! ஒரு ஹெக்டாருக்கு முன்னூறு 'பூடு' களுக்குக் குறையாமல் நிச்சயம் கிடைக்கும். அப்படிக் கிடைக்காவிட்டால், என் காதை அறுத்து விடுகிறேன்! நாடு முழுதும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஸாகேனியர் களாகிய நாமோ பின் தங்கி நிற்கிறோம். வெட்கம், வெட்கம்!''

கான்ஸ்டான்டின் அவனை ஆமோதித்தான்.

''அவன் சொல்வது உண்மை.''

ஆண்டன் முன்னால் வந்தான். தொண்டையைப் பிடித்துக் கொண்டு மூச்சுத் திணறுகிறவன் போலப் பேசினான்.

''உழைத்து உழைத்து நாம் பிராணனை விட்டால், ஒரு வேளை சிறந்த அறுவடை கிடைக்கலாம்!'' என்று துள்ளிக் குதித்துக் கொண்டு கூட்டத்தில் மறைந்தான்.

எல்லோரும் மௌனமாகச் சிரித்தனர்.

''நான் உம்மோடு அப்புறம் பேசிக் கொள்ளுகிறேன்...... காதில் விழுகிறதா?'' என்று ஆண்டனை நோக்கிக் கெஸ்ஸோ கத்தினான்.

கான்ஸ்டான்டின் அவனைத் தட்டிக் கொடுத்துச் சமா தானம் செய்தான்.

''சரி, சரி'' என்றான் கெஸ்ஸோ, அவன் குல்லாவை எடுத்து, வயலைச் சுட்டிக் காட்டிக்கொண்டு கத்தினான். ''நாம் இப்போது வேலைக்குச் செல்வோம்!''

யேகூப்பிற்குத் தன் மகன்மீது கோபமுண்டாயிற்று. ''பயலுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? ஏன் இப்படி உளறுகிறான்?'' என்று எண்ணினான். ஆனால், கோஷ்டித் தலைவனாகிய தன் மகனைப் பகிரங்கமாக மூக்கை அறுக்க அவன் விரும்பவில்லை. ''வீட்டுக்குச் சென்றதும் கவனித்துக் கொள் கிறேன்'' என்று முடிவு செய்தான்.

தன் கோஷ்டிக்குக் கெஸ்ஸோ கட்டளைகள் இட்டான்.

''நாம் தாள்களையும், கற்குவியல்களையும் நீக்க வேண்டும். கற்களை அந்தச் சாக்கடையில் எறியுங்கள்; குப்பை கூளங் களைக் குவித்து எரியுங்கள். அது தான் நமது முதல் வேலை.''

''பண்ணைத் தோழர்களே! நீங்கள்தான் வஸந்தகால விதைப்புக்கு முதலில் வந்திருக்கிறீர்கள். நாளைக் குப்பிறர்

உங்களைப் பின்பற்றுவார்கள். முக்கியவிஷயம் என்னவென்றால் —நாம் பின்தங்கி நிற்கக்கூடாது!''

கோஷ்டி பலமாகக்கைதட்டியது. யாரோபாட்டுப் பாடத் துவங்கினார்கள். எல்லோரும் பாடிக்கொண்டே வயலில் இறங்கினர்.

'இதுதான் முதல்படி' என்று எண்ணினான். கெஸ்ஸோ ஸாகேனில் இவ்வளவு சீக்கிரம் இதற்குமுன் உழவு நடக்கவில்லை. ஆகவே, இதைக்கண்டு ஆத்திரப்படவேண்டிய அவசியமில்லை!

## 11

போர்க்களத்தைச் சேனாதிபதிகள் பார்வையிடுவதுபோல கான்ஸ்டான்டினும் கெஸ்ஸோவும் ஒரு சிறு குன்றின் உச்சியில் ஏறி நின்றனர். அருகிலிருந்த காட்டிற்கு அப்பாலுள்ள நிலத்தின் ஒரு பகுதிக்குக் குடாலும், அவள் கோஷ்டியும் போய்க் கொண்டிருந்தனர். ஆண்டனுக்கு, எதிர்ப் பகுதி கொடுக்கப்பட்டிருந்தது. அப்போதுதான் அவனைக் கண்காணிக்கச் சௌகரியமாயிருக்கும். எல்லோரும், அவரவருக்கு அளிக்கப்பட்டிருந்த பகுதிகளுக்குச் சென்று கொண்டிருந்தனர்.

கையிலிருந்து சில தஸ்தாவேஜிகளைப் பார்த்துக் கொண்டு. ''அந்தமட்டுக்கும் நல்லது'' என்றான் கான்ஸ்டான்டின். ''நாளை, பாக்கியுள்ள எல்லோரும் வந்துவிடுவார்கள் ''

''கான்ஸ்டான்டின்! அவர்கள் நாளைக்கு வந்துவிடவேண்டியது அவசியம் மிக மிக அவசியம்'' என்றான் கெஸ்ஸோ.

''அது நிச்சயம். நான் வேறு விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன்......பயிரின் விளைச்சலைப் பற்றி. கெஸ்ஸோ! நீ போலி வாக்குறுதிகள் ஒன்றும் தரவில்லை என்று நம்புகிறேன். அப்படித்தானே?''

கெஸ்ஸோ ஒன்றும் பேசாமல் கான்ஸ்டான்டினுடைய கையைப் பற்றி இழுத்தான்.

''வாருங்கள். அதைப்பற்றி உங்களுடன் யோசிக்க வேண்டும்.''

குன்றின் சரிவை நோக்கி நெளிந்து நெளிந்து சென்ற ஒரு பாதைக்குக் கெஸ்ஸோ சென்முன். புதருக்குள் நுழையும் மஞ்சள் நிறப் பாம்பைப் போன்றிருந்தது. அப் பாதை.

கெஸ்ஸோ உணர்ச்சி கொந்தளிக்கச் சொன்னுன்.

''குன்றைப் பற்றிய எண்ணம் எப்போதும் என் நினைவில் குமுறிக்கொண்டிருக்கிறது. இது என் மன அமைதியைக் குலைக்கிறது...நான் வீடுதிரும்பும்போது ஜில்லா நிர்வாகிகளைச் சந்தித்தேன்...எங்கு பார்த்தாலும் அதிக விளைச்சலைப் பற்றித் தான் பேச்சு. அறுவடை வரம்பைத் தோற்கடித்தவர்களைப் பற்றித்தான் பேச்சு...அப்போது நானும் நினைத்தேன். ஸாகேனியர்களும் ஏன் இவ்விதம் அறுவடை செய்யக் கூடாதென்று? நாம் கையைக் கட்டிக் கொண்டு சும்மாயிருக்கலாகாதென்று எண்ணினேன். என் கால்மட்டும் சரியாய் இருந்திருந்தால், இளையுதிர் காலத்திலேயே இவ்விவகாரத்தை முடித்திருப்பேன்...''

அவர்கள் நிற்குமிடத்திலிருந்து ஐந்து நிமிடத்தில் எட்டிவிடக் கூடிய அந்தக் குன்று, கெஸ்ஸோவின் இதயத்தை நெடுநாள் உறுத்திக்கொண்டிருந்தது. யுத்தம் ஆரம்பிக்கு முன், அதன் வலிமையைப் பரிசோதிக்க அவனிடம் எல்லாம் தயாராய் இருந்தன. அந்த நோயாளி அதிகாரி எழுதிய காகிதம், அவன் மனத்தைவிட்டு அகலவேயில்லை. யுத்தத்திற்கு முன்ஞல், யாரோ ஜில்லாப் பத்திரிகையில் இக்குன்றைப் பற்றி எழுதியிருக்கிருர்கள் என்றும், கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த கருமான் கல் உடைக்கும் மெஷின் ஒன்றைக் கண்டு பிடித்து விட்டானென்றும் ஸாகேனில் பேச்சு அடிபட்டது. ஆனல் யுத்தம் வந்து விட்டது. கெஸ்ஸோ தூரப் பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டியதாயிற்று; கருமான் யுத்தத்தில் கொல்லப்பட்டான்; குன்றைவிட முக்கியமான பல காரியங்கள், ஸாகேனியர்களுக்கு இருந்தன. கெஸ்ஸோ வீடு திரும்பும்போது, நாட்டின் மேற்கு எல்லையில் எங்கோ ஓரிடத்தில், குன்றைப்பற்றிய நினைவு அவன் மூளையை மீண்டும் உக்கிரமாகத் தாக்கியது. அவன் ரயில் வண்டியில், பெட்டியின் மேற்குப் பகுதியில் படுத்துக்கொண்டு, அதன் கூரையிலுள்ள இருண்ட, நீளமான பலகைகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். கீழே பிரக்யாதி பெற்ற சில போர் வீரர்கள் ஒன்று கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் இறந்த காலத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் பேச்செல்லாம்

எதிர்காலத்தைப் பற்றித்தான் கெஸ்ஸோவின் மனத்திலும், எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம்தான் குடிகொண்டிருந்தது. காகஸஸ் மலையடிவாரத்திலுள்ள தன் வீட்டிலிருந்து, அந்தக் குன்றையும்— அதன் மேலிருக்கும் வளைந்த மரத்தையும் தெளிவாகக் காண்பதாக அவன் மனத்தில் நிழலாடியது...

அந்தக் குறுகிய பாதையில் கெஸ்ஸோவும், கான்ஸ்டான்டினும் தோளோடு தோள் இணைந்து வேகமாய் நடந்தனர். ராணுவ உத்தரவை நிறைவேற்றுவதுபோல, அவர்கள் ஒரு ஓடையை ஒன்ருகத் தாண்டினர்; ஒருகாட்டுப் பாதைக்கு வந்தனர். அவர்களுக்கு நேர் எதிரே, அந்த நெடிய சாம்பல் நிறக்குன்று நின்றது. அதன் விளிம்புகளில் பசுமை படர்ந்திருந்தது. அதனுச்சியில், கேள்விக் குறியைப்போல ஒரு வளைந்த மரம் இருந்தது.

கெஸ்ஸோ மூச்சை உள்ளே இழுத்தான். குல்லாவைக் கையிலெடுத்து, நெற்றியில் விழுந்திருந்த தலைமுடியைப் பின்னல் தள்ளினன்.

தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைச் சதியுலகம் என்று கருதுபவன்போல, சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு கெஸ்ஸோ கூறினன்: ''இதைக் கேளுங்கள். நமது நிலம் மோசமானது. கடற்கரை மணலைவிடச் சிறந்ததல்ல. நமது பாட்டனரும், முப்பாட்டனரும் அதைக் கசக்கிப் பிழிந்துவிட்டனர். அதைக் கொண்டு நாம் கௌரமாக வாழ வேண்டுமானல், இதுவரை உரம்போட வேண்டும்!'' என்று தொண்டைவரை அவன் கையைக் காண்பித்தான். ''ஆனல் எங்கிருந்து உரம் பெறுவது? அதுதான் பிரச்னை. இங்கு ரஸ்தாக்கள் இல்லை; பாலங்கள் இல்லை—ஆகாய விமானம் மட்டும்தான் வரமுடியும். என் இதயத்திலிருந்து இக்குன்றை அகற்ற முடியாது. இதைக் கருணைக்குன்று என்று நம் முன்னேர்கள் அழைத்ததற்கு, ஏதோ காரணம் இருக்க வேண்டும்...இதிலுள்ள மண்ணை எடுத்து நம் நிலத்தின்மீது தூவினல் என்ன?''

''என்ன, இந்தப் பாறைகளையா?'' என்ருன் கான்ஸ்டான்டின்.

''பாறைகள் ஏன்? அவைகளை நொறுக்கித் தூளாக்க வேண்டும்...சம்மட்டியைக் கொண்டோ, அல்லது வேறு எதனலோ அதை உடைக்க வேண்டும். இது மிக அவசியம்.'

கான்ஸ்டான்டின் இதற்குப் பதில் சொல்பவன்போல, காலடியில் கிடந்த இரண்டு சிறு கற்களை எடுத்து, ஒன்ருே

டொன்று தட்டினான்; சந்தேகத்துடன் கெஸ்ஸோவைப் பார்த்தான். சம்மட்டியினால் அந்தப் பாறையை உடைப்பதென்பது எளிதல்ல. கான்ஸ்டான்டின் அந்தக் கற்களை மேலும் கீழும் போட்டுப் பிடித்தான்; அப்புறம் அவைகள் எங்கு விழுகின்றன என்பதைக்கூடக் கவனியாமல் தூர எறிந்தான். அவன் கையிலிருந்த தூசியைத் துடைத்துவிட்டு, அன்புடன் கெஸ்ஸோவின் தோளைப் பற்றிக்கொண்டு சொன்னான்.

''உனக்கு உணர்ச்சி வேகம் அதிகம்...''

''பிரச்னைக்கு அது பதில் அல்ல.'' கெஸ்ஸோவின் குரலில் கோபம் தொனித்தது. அவன் சுருக்கமாகப் பேசினான். ''சூப்பர் பாஸ்பேட் என்று ஒரு பொருள் இருக்கிறது. அது பாக்டரிகளில் தயாரிக்கப்படுகிறது. ஆனால் அது ஆண்டவன் புண்ணியத்தில் 'ரெடிமேடா'கவே இங்கு இருக்கிறது; இதற்குத்தான் இயற்கை பாஸ்பரைட் என்று பெயர்.''

''உண்மையாக நான் அதைப் பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை'' என்று ஒப்புக்கொண்டான் கான்ஸ்டான்டின். ''நீங்கள் எங்களுடைய கட்சிக் காரியதரிசி; கூட்டுப் பண்ணையின் தற்போதையத் தலைவர். உங்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. நிக்கோலாவை எதிர்பார்த்துப் பிரயோசனமில்லை. அவன் சுண்டுவிரலைக்கூட அசைக்காத சோம்பேறி...நாம் இந்தக் காரியத்தைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். எல்லோரிடமும் இதைப்பற்றிச் சொல்லுங்கள்; ஆட்களையும், வண்டிகளையும் அனுப்புங்கள்; கூட்டுப்பண்ணையின் முழு ஆதரவு இருந்தால்தான் காரியம் எளிதில் நிறைவேறும்.'' பாறையை உடைப்பதைப் பற்றிய திட்டத்தைக் கெஸ்ஸோ விவரித்துக் கொண்டிருந்தபோது, அவன் குரலில் பரிபூரண நம்பிக்கை குடிகொண்டிருந்தது.

கான்ஸ்டான்டின் நெடுநேரம் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் மெதுவாகச் சொன்னான்:

''அருமை நண்பா! நல்ல யோசனை மிகச் சிறந்த யோசனை. ஆனால் இது எளிதான காரியமல்ல. இதைப்பற்றி நன்றாகச் சிந்திக்க வேண்டும்.''

''ஆனால் வஸந்தம்?'' என்று கெஸ்ஸோ பொறுமையின்றிக் கத்தினான். ''வஸந்தம் காத்திராதே!''

''இதுபோனால் மற்றொரு வஸந்தம் வருகிறது'' என்று அமரிக்கையாகப் பதிலளித்தான் கான்ஸ்டான்டின், ''என் யோசனை இதுதான்: இந்த விஷயத்தைப்பற்றி நன்றாக

ஆராயவேண்டும்; சோதனைப் பகுதி ஒன்று ஆரம்பித்தாலும் நல்லதுதான் இதைப்பற்றி ஜில்லாக் கமிட்டியுடன் கலந்தாலோசிக்க வேண்டும்...விவசாய நிபுணர்களுடனும்......நிலத்தைப் பயிரிடுவதைப் பற்றியும் அதைப் பராமரிப்பது பற்றியும், நன்ருகச் சொன்ஞய்...அதுதான் சரியான பேச்சு—பிரபல கூட்டுப் பண்ணைகளெல்லாம் அப்படித்தான் நடக்கின்றன...'' சிறிது நின்று விட்டு கான்ஸ்டான்டின் மீண்டும் தொடர்ந்தான். ''குன்றைப்பற்றி உனக்குச் சந்தேகமில்லையே? அந்த உரத்தின் பெயர் என்ன? பாஸ்பரைட்தானே?''

அவன் பேச்சு கெஸ்ஸோவிற்குப் பிடிக்கவில்லை. அவன் முகம் கறுத்தது. ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். வழி நெடுக, அவனிடம் இதமான தொனியில் கான்ஸ்டான்டின் என்னென்னவோ சொல்லி வந்தான். ஆனுல், கெஸ்ஸோ ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனுக்கு ஒரே ஏமாற்றம்...ஒரு மனிதன்—காதல் விஷயத்தைச் சொல்லுவதுபோல—மனம் திறந்து பேசுகிருன். ஆனுல் அவனுடைய பேச்சு மரியாதையுடன் மறுக்கப்படுகின்றது! இது, மூஞ்சியில் அறைபடுவதைவிட மோசமானது. எந்த வலியையும்விட, இவ்வலிதான் மனதிற்கு அதிக வேதனையைத் தரும். மக்கள் அவனை நம்பவில்லை; அதுதான் வெட்ட வெளிச்சமாகி விட்டதே!...

அவர்கள் மீண்டும் வயலுக்குத் திரும்பினர். எங்கும் மூடுபனி கவிந்திருந்தது. உதய சூரியனின் கிரணங்கள் ஈட்டியைப் போலப் பூமியைத் துளைத்தன. வானிலே பறவைகள் பாடின. கோடையைப் போலக் கதகதப்பான நாளொன்று விடிந்தது.

''கெஸ்ஸோ!'' என்ருன் கான்ஸ்டான்டின்; குற்றவாளி சிரிப்பதைப் போன்று சிரித்தான், (அந்த இளைஞனைப் புண்படுத்திவிட்டோம் என்று அவன் உணர்ந்துவிட்டான்) ''செயலில் இறங்குமுன் நன்ருகச் சிந்தனை செய்யப்பா! குன்று இவ்விடத்தைவிட்டு எங்கும் ஓடிப்போய் விடாது, முக்கிய விஷயம் என்னவென்ருல், நிலத்தில் சரியான முறையில் பயிர் செய்வதுதான். எல்லாவற்றையும் குறித்த காலத்தில் செய்ய வேண்டும்; மக்கள் ஈடுபாட்டுடன் வேலை செய்யவேண்டும். தெரிந்ததா? குன்றின் விஷயம் என்னவானுலும் சரிதான். சிறந்த அறுவடைக்காகப் போராடுவேன் என்று நீயே சொல்லி இருக்கிருய்.'' தன் முன்னே பரந்து கிடக்கும் வயலைப் பார்த்துக் கையை வீசிக்கொண்டு, அவன் கம்பீர

மாகச் சொன்னான்: ''மலைகளும் கண்டிராத அளவுக்கு அறு வடை செய்வோம்!''

கெஸ்ஸோ அவனை எரித்துவிடுவதுபோலப் பார்த் தான். பற்களை 'நறநற'வென்று கடித்துக்கொண்டு சொன்னான்.

''தோழர் காரியதரிசியே! தங்கள் புத்திமதிக்கு நன்றி... அது எனக்குத் தேவையில்லை.''

## 12

நமது மகிழ்ச்சிக்குக் காரணமென்ன வென்று சில சமயம் நம்மால் கூறமுடிவதில்லை. காமாவின் நிலையும் அப்படித்தான் இருந்தது. அதைப்பற்றிய ரகசியம் ஒன்று மில்லை. நிச்சயமாக இல்லை! ஆனால், அந்த மகிழ்ச்சியின் காரணம் நமக்கு விளங்க வில்லை. குளிர்ந்த நிலா வொளி படர்ந்த மாலையும், நீல நிலா ஒளியில் குளிப்பாட்டப் பெற்றது போன்றிருந்த மலைகளும், மரங்களும், ரஸ்தாவும் காரணமாயிருக்கலாம். சோக முலாம் படர்ந்த, ஆனால் நேசிக்கத்தகுந்த கெஸ்ஸோ அவளருகில் நடந்துவந்ததும் காரணமாயிருக்கலாம். அல்லது ஒருத்தி யுடைய இருபத்தொன்றாவது வஸந்தம், அவளது அமைதியற்ற இதயத்தை இன்னும் அதிகமாகக் கொந்தளிக்கச் செய்கிறது போலும்!

அதன் காரணம் எதுவாக இருந்தாலும், தன் காதலியின் என்றுமில்லா உவகையைக் கெஸ்ஸோ கண்டுகொண்டான் அவளது பேச்சை அறைகுறையாகக் கேட்டவாறு, தன் இதயத்தை ஆக்கிரமித்திருந்த குன்றைப் பற்றித் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான். தன்னுடைய சந்தேகத்தினால் தானே வதைக்கப்பட்டு, நிக்கோலாவுடனும், கான்ஸ்டான்டி னுடனும்—அவனது யோசனை நிறைவேறுமா என்று கேட்கத் துணிந்த எல்லோருடனும்—தீவிரமாக விவாதம் செய்ய மனதிற்குள்ளேயே ஒத்திகை நடத்திக்கொண்டிருந்தான். ஜில்லா நிர்வாகிகள் எதை உருப்படியான யோசனை என்று தீர்மானிப்பீர்கள் என்றெண்ணும்போதுதான், அவனுக்குக் குழப்பம் வந்தது. கருணைக்குன்றானது வெறுமனே இயற்கைக் காட்சியாக மட்டும் விளங்குமானால—பயனற்ற வஸ்துக்களைக் கொண்டிருக்குமானால், சோளப்பயிருக்கு உரமிடும் திட்டம் தீய்ந்து போய்விடுமென்று கெஸ்ஸோ நன்கு உணர்ந்து விட்டான். ஆனால், குன்றின் உதவியில்லாமலே அவர்கள் பயிர் செய்யலாம். தமது சுய உழைப்பினால் நிலம் கொடுக்கக்

கூடிய சகல பொருள்களையும், விவசாயிகளால் சிருஷ்டிக்க முடியும். தெளிவாகச் சொல்லப்போனால், குன்றிலிருந்து கிடைக்கும் உரத்தைத் தவிர, இன்னும் எவ்வளவோ மகத்தான சக்திகள் இருக்கின்றன. எவ்விதமாக யோசித்துப் பார்த்தாலும், அந்தக் குன்றிலுள்ள வஸ்துக்களின் தன்மை இன்னும் விளங்காமல்தானிருக்கிறது; ஸாகேனில் அதைப் பற்றிய விபரம் அறிந்துகொள்ள வழியும் இல்லை. அதற்கு ஆராய்ச்சிக் கூடமும், நிபுணர்களும் தேவை...

ரஷீத் நாலு வாளிகளைத் தரையில் எறிந்த கட்டத்திற்கு வந்ததும் (அந்தக் கதையைத்தான் அவள் சொல்லிக்கொண்டிருந்தாள்) காமாவுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்துவிட்டது. தூரத்திலிருந்து வரும் எதிரொலியைப்போல, அவள் பேச்சைக் கேட்டிக்கொண்டிருந்த கெஸ்ஸோவுக்குத் திடீரென்று சுய நினைவு வந்தது.

''நிறுத்து! அந்த ரஷீத் உங்கள் பண்ணையில் என்ன செய்கிறான்?''

''இத்தனை நேரமும் நான் சொன்னதை நீங்கள் கேட்கவேயில்லையா? ஒருமணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர் எங்களுக்கு உதவி செய்ய முன்வந்தார். அவர் பெரிய தமாஷ் பேர்வழி. நானும் நீனாவும் கண்ணில் நீர் ததும்பும் வரை சிரித்துக்கொண்டிருந்தோம்.''

''நீ அவனுடன் காதல் நாடகமாடினாயாக்கும்?'' காமா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ''சிறிது கொஞ்சினாய் போலும்!''

இருவரும் சிறிது தூரம் பேசாமல் நடந்தனர்.

''அந்தத் துருக்கிச் சேவலான நிக்கோலா விஷயம் என்ன?'' என்று, மூஞ்சியை 'உம்'மென்று வைத்துக்கொண்டிருந்த கெஸ்ஸோ கேட்டான்.

காமா அவன் வீட்டிற்குச் சென்றிருந்ததாகவும், வேலைகள் எப்படி நடக்கின்றன என்று விசாரித்ததாகவும் கூறினாள். தான் அந்த வழியே சென்றதாகவும், ஆகவே அவன் வீட்டில் நுழைந்ததாகவும் சொன்னாள்.

''அவன் ஒரு பொய்யன்.''

''அவர் எங்களுக்கு வரியைக் குறைப்பதாகச் சொன்னார். கிழவர்களுக்கு இது சம்பந்தமாக ஏதோ சட்டம் இருக்கிறதாம்.''

''உனக்கு அப்படி யார் இருக்கிறார்கள்?''

''அப்பா, அம்மா...''

''அவன் உன்னை ஏமாற்றுகிறான் என்று உனக்குத் தெரிய வில்லையா? அவன் உன் தயவைச் சம்பாதிக்கப்பார்க்கிறான்!'' என்று கெஸ்ஸோ கத்தினான். ''அவனுக்கு வரியைக் குறைக்க யாதொரு அதிகாரமும் இல்லை. அப்படி வரியைக் குறைக்கு மளவுக்கு உன் பெற்றோருக்கு வயதாகி விடவும் இல்லை.''

''ஆனால், அவ்விதச் சட்டம் இருந்தாலோ?'' என்று காமா எதிர்த்துக் கேட்டாள்.

அவளுடைய விவாதங்கள், கெஸ்ஸோவின் காதில் ஏறவே யில்லை. பிறர் தன்னுடன் காதல் நாடகமாடும்படி விளையாட்டுப் புத்தியினால் அவள் அநுமதித்ததாக எண்ணிக்கொண்டு, அவள்மீது வசைமாறி பொழிந்தான். அவனுடைய வசவு களுக்கு முடிவேயில்லைபோலத் தோன்றியது. அவனுடைய கோபத்தை மாற்றுவதற்கு எல்லா வழிகளையும் கையாண்டு சளைத்துப் போய்விடவே, காமா அழத் தொடங்கிவிட்டாள். வருத்தத்துடன் கெஸ்கோ அவளை அருகில் இழுத்துக் கொண்டான்; அவள் அவனை வெறுத்து ஒதுக்கவில்லை.

காமாவின் குளிர்ந்த கன்னத்தில் தன் கன்னத்தைச் சேர்த்துக்கொண்டு, அவளுடைய காதில் சில அன்பு மொழிகளை மெல்ல முனகினான். அவை தொடர்பற்று இருந்தாலும், அதன் பொருள் படுமுட்டாள் தனமான பெண்ணுக்குக்கூட விளங்காமலிராது! அதுபோதும்; காமாவின் உள்ளத்தில் சாந்தி பிறந்துவிட்டது. அவர்கள் கோபமெல்லாம் ஆறிப் போய்விட்டது; ஒருவர்மீது ஒருவருக்கு அன்பு சுரந்து விட்டது; இருவரும் நடந்தனர். அவள் இவ்வளவு மேன்மை யும், அன்பும் நிரம்பியிருக்கிறாளே என்று—முக்கியமாக இவ்வளவு பணிவுடன் இருக்கிறாளே என்று, கெஸ்ஸோவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. காதலர்கள் உலகை மறந்து, ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு நிலவில் உலாவினர்.

காமா தான் முதலில் மௌனத்தைக் கலைத்தாள்.

''உங்களைப் பற்றி நீங்கள் ஏன் ஒன்றுமே சொல்லவில்லை?' என்று அவள் குழைவாகக் கேட்டாள்.

''சொல்வதற்கு என்ன இருக்கிறது? வழக்கமான வேலை தான். நாங்கள் உழ ஆரம்பித்துவிட்டோமென்று உனக்கு ஏற்கனவே தெரியும். இதை வெகு சீக்கிரம என்று ஜனங்கள்

சொல்லுகின்றனர்...நாங்கள் உண்மையாகவே ஸாகேனைத் திடுக்கிடச் செய்துவிட்டோம். அதனால் எங்களுக்கென்ன? நாங்கள் சட்டப்படி நடக்கிறோம்...கான்ஸ்டான்டினிடம் சிறிது சண்டைபோட்டுவிட்டேன்...''

''நீங்கள் அதைச் செய்திருக்கக் கூடாது'' என்று காமா அவன் அணைப்பிலிருந்து திமிறினாள். ''அவர் நல்ல மனிதர். அவருடன் ஒத்துப்போக முடியாவிட்டால், உங்களைத்தான் நீங்கள் குறைகூற வேண்டும்!''

''அது இல்லை, காமா! விஷயம் வேறு. அவர் என்னை நம்பவில்லை. நாம் ஆபத்தை எதிர் நின்று வசப்படுத்த வேண்டும். ஆனால் அவர்...''

கெஸ்ஸோ தன் திட்டங்களை அவளிடம் சொன்னான். அந்தக் குன்றில் ஏதோ இருக்கிறது—அதுமட்டும் உண்மை. இயற்கைப் பாஸ்பரைட்—அவர்கள் கண்ணெதிரே ஏராள மான உரம் களஞ்சியமாக இருக்கிறது...இருந்தும், அதன் முக்கியத்துவத்தைக் கான்ஸ்டான்டின் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

''என்ன இருந்தாலும், அவருடன் நீங்கள் சண்டையிடக் கூடாது. அவர் தங்கமான மனிதர்'' என்றாள் காமா.

அவள், அவன் கையிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டு, கலைந்துபோன தலையில் கைக்குட்டையைக் கட்டிய வண்ணம், பயத்துடன் சுற்றுமுற்றும் பார்க்கும் வழக்கமான இடம் வந்துவிட்டது ஆனால் இன்று கெஸ்ஸோ அவசரப்பட வில்லை. அவளை ஒரு பெரிய மரத்தின் நிழலுக்கு இழுத்தான். அடர்த்தியான மர நிழலில் இருவரும் விச்ராந்தியாக உட் கார்ந்திருந்தனர்.

அற்புதமான, புத்தம் புதிய காற்று வீசியது. ஸாகேன் நதிச் சமவெளியிலிருந்து, ஒரே இரைச்சல் வந்துகொண்டி ருந்தது; அங்கே மணல் திட்டுகளின் மீது நதி பாய்ந்து சென்றது. வெள்ளலைகளை வீசிய வண்ணம் வளைந்து வளைந்து செல்லும் ஸாகேன் நதியில், நிலவு முகம் பார்த்தது.

தம் முன்னர் விரிந்து கிடக்கும் அற்புத உலகைக் காதலர் அனுபவித்துக் கொண்டிருந்தனர். காமா மட்டும் காதைத் தீட்டிய வண்ணமிருந்தாள். பாதையில் ஏற்படும் ஒவ்வொரு சலசலப்பையும் கேட்டு நடுங்கிக் கொண்டிருந்தாள்.

இந்தப் போலிச் சலசலப்பைக் கண்டு ஒருதரம் நடுங்கிச் சமாளித்த பிறகு, காமா கேட்டாள்:

"நீங்கள் புகழுக்கு ஆசைப்படவில்லையே?''

கெஸ்ஸோ அப்போது குவாகுவா மலைச்சிகரத்திற்கு மேலே, மேகத்தில் பறந்து கொண்டிருந்தான். அவன் காமா வின் கேள்வியை உடனே புரிந்துகொள்ள வில்லை.

"என்ன சொன்னாய்? புகழா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான். "எனக்குத் தெரியாது...நான் அதைப் பற்றி நினைக்கவில்லை... நீயேன் கேட்கிறாய்?''

"சும்மா தான் கேட்கிறேன்.''

அவன் திரும்பத் திரும்பக் கேட்ட பிறகு, அவள் தன் எண்ணத்தை வெளியிட்டாள்.

"எங்கள் கோஷ்டியிடம், நீங்கள் ஒரு பெரிய தற்பெரு மைக்காரன் என்று நிக்கோலோ சொன்னார்.''

"இதைவிடக் கடுமையாகச் சொல்லியிருப்பானே? இல்லையா?''

"இருக்கலாம்''

கெஸ்ஸோ யோசித்தான். " புகழ்!—அது மிகப் பெரிய வார்த்தை அல்லவா?''

"ம்... நான் என்ன சொல்வது? நான் போர்க்களத்தில் இருந்தேன்...அங்கு உன்னைப் பற்றியும், நமது ஸாகேனைப் பற்றியும் நிரம்ப எண்ணினேன்...ஆனால் புகழைப் பற்றி எண்ணினேனா? இல்லை. அந்த எண்ணம் என் மண்டை யில் ஏறவேயில்லை!''

"உங்கள் பதக்கங்களை நீங்கள் ஏன் அணிவதில்லை?''

கெஸ்ஸோ அவள் கன்னத்தைத் தட்டினான்.

" நீ விரும்பினால் அணிந்துகொள்ளுகிறேன். விடுமுறை நாட்களில் நிச்சயம் அணிந்து கொள்வேன்''.

"இல்லை. நீங்கள் தற்பெருமைக்காரர் அல்ல'' என்று காமா மெதுவாகக் கூறினாள்.

அவன் மீண்டும் அவளைத் தன் அருகே இழுத்தான். அவள் தன்னம்பிக்கையுடன் அவன் மார்பின்மீது தலையைச் சாய்த் துக் கொண்டாள். அவர்கள் ஆடாமல், அசையாமல், தம்மைச் சுற்றியுள்ள உலகைப் போன்று, அமைதியுடன் காதலின்பத்தில் மெய்மறந்து உட்கார்ந்திருந்தனர்.

## 13

விவசாயிகளின் கோஷ்டி மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தது. கெஸ்ஸோ எவ்வித முட்டாள் தனத்தை யும் சகித்துக்கொள்ள மாட்டான். சோம்பேறித் தனத்தின் அறிகுறியை யாராவது கொஞ்சம் காட்டினால் போதும்; அந்த ஆசாமியைக் கெஸ்ஸோ சும்மாவிட மாட்டான். ஆண்டன் கெஸ்ஸோவின் கோபத்திற்கு அடிக்கடி இலக்காகி வந்தான். உண்மையில், ஆண்டன் தான் அந்தக் கோஷ்டியில் மிகவும் தொல்லை கொடுப்பவன்.

அவன் எப்போதும் நேரங்கழித்தே வயலுக்கு வந்தான். தனக்கு நோய் அல்லது குழந்தைகளின் இருமலால் இரவு முழு வதும் தூங்க முடியவில்லை...என்று காரணங்கள் சொல்லு வான்.

அவனை நன்ருகக் கண்டித்த குடாலிடம் சொன்னான்: ''நான் அப்படித்தான் இருப்பேன். என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்...என் காரியத்தை எப்படியாவது பார்த் துக் கொள்கிறேன்...ஆண்டவன் கிருபையால், இதுவரை எப்படியோ வாழ்ந்து விட்டேன்; இன்னும் சாகாமல் இருக் கிறேன். என்னை எப்போதும் கண்டிப்பானேன்? நான் என் சுதந்திரத்தை விரும்புகிறேன், அண்ணே! அது தான் விஷயம்''

சண்டைக்காரர்களின் நடுவே கெஸ்ஸோ வந்து அமர்ந்தான்.

''ஐயா நண்பரே! நீர் காதலிக்கும் சுதந்திரத்தைப் பற்றி எங்களுக்கு கொஞ்சம் சொல்லும்''.

''சரி, கேளுங்கள்! நான் என் சொந்த மூளையைக் கொண்டு வாழ விரும்புகிறேன். பிறருடைய மூளையால் அல்ல. எனக்குச் சோளம் விதைக்கத் தெரியாதது போல வும், அறுவடை செய்யத் தெரியாதது போலவும் பாடம் போதிக்க வந்துவிடுகிறீர்கள். முடியாது அண்ணே! என் சொந்த மூளையைத்தான் நான் உபயோகிக்க விரும்பு கிறேன்''.

''அது குறைவாக இருந்தால் என்ன செய்வது?''

''என்ன சொன்னாய்?'' என்று குதித்தெழுந்தான் ஆண்டன். அவன் முகமெல்லாம் சிவந்து போயிற்று.

''இதைக் கேளுங்கள்'' என்று அங்கு கூடியிருந்த விவசாயிகளைப் பார்த்துக் கெஸ்ஸோ சொன்னான்: ''நமது நண்பர் ஆண்டன் சொல்கிறார்: அவர் தமது மூளையை உபயோகித்து வாழப்போகிறாராம்! அவர் ஒரு சோம்பேறி என்பதும், உதவாக்கரை என்பதும் என் கருத்து. அநேக ஆண்டுகளுக்கு முன்பு அவர் சொந்த மூளையை உபயோகித்து வாழ்ந்தபோது ஓட்டைக் குடிசையில் இருந்தார். அப்புறம், அவர் நமது கூட்டுப்பண்ணையில் சேர்ந்தார். நாம் எல்லோரும் அவருக்கு ஒரு நிஜமான வீடு கட்டிக் கொள்ள உதவினோம். ஆண்டனுக்கு வாழ்வளித்தவர்கள் நாம்; இன்று ஆசாமி முறைக்கிறார்...''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!'' என்று கத்தினான் ஆண்டன்.

காதருகில் வட்டமிடும் கொசுக்களைக் கையினால் விரட்டுவது போல, ஆண்டனின் கூக்குரலை ஒதுக்கிவிட்டுக் கெஸ்ஸோ சொன்னான்: ''தோழர்களே! நான் உங்களைக் கேட்கிறேன்... இதுதான் நன்றியறிதலா?''

கெஸ்ஸோ கூறியதைக் குடால் ஆமோதித்தான்.

''அவன் மண்டைக் கனத்தை உடைத்தெறிய வேண்டும்'' என்றது ஒரு குரல்.

புகைக் குழாயை நடுக்கத்துடன் தடவிக்கொண்டு, ஆண்டன் சும்மா இருந்தான். தன் கருத்தை விவசாயிகள் ஆதரிப்பதை அறிந்து, கெஸ்ஸோ இன்னும் கடுமையாகச் சொன்னான் :

''ஆண்டன், இங்கே பாரும். என் கோஷ்டியில் இருக்க உமக்குப் பிடிக்கவில்லையானால், தாராளமாக வெளியே போகலாம். உம்மை யாரும் கையைப் பிடித்து இழுக்கவில்லை... அப்புறம் வருந்திப் பயனில்லை! எங்களோடு இருக்க வேண்டுமானால், இந்த ஏமாற்று வேலையை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டுக் காரியத்தில் இறங்க வேண்டும். தெரிந்ததா?'

விவசாயிகள் தமது வேலையைக் கவனிக்கச் சென்றார்கள். ஆண்டனும் தொப்பியை மாட்டிக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்தான்.

மத்தியானம் நிக்கோலோ அங்கு வந்தான். வயலை நோட்டம் பார்த்தான். ஒரு மண்ணாங்கட்டியை எட்டி உதைத்தான்.

''வேலை எப்படி நடக்கிறது?'' என்றான். கெஸ்ஸோ முன் சென்று அவனை வரவேற்றான்.

நிக்கோலா உழுதிருந்ததைப் பார்த்து: ''எவ்வளவு?''

''ஆழத்தையா கேட்கிறீர்கள்? இருபதிலிருந்து இருபத்தைந்து ஸென்டிமீட்டர்கள் இருக்கும்'' என்றான் கெஸ்ஸோ.

''உரம் போடப் போகிறாயா?''

கெஸ்ஸோ, கிராம சோவியத்தின் தலைவனாகிய நிக்கோலாவை எரித்துவிடுவது போலப் பார்த்தான்.

''ஏதாவது ஆட்சேபணை உண்டா?''

''ஆட்சேபணையா?''—நிக்கோலா தோள்களைக் குலுக்கினான். ''இதில் எனக்குச் சம்பந்தமில்லையே? நீ என் அனுமதியைப் பெறவில்லை... காரியம் வெற்றியடைந்தால் எங்கள் வந்தனம் உனக்கு உரித்தாகும்...இல்லையெனில், சரியான தண்டனை கிடைக்கும்.''

''ஆம். அதுதான் சரியான முறை...'' என்று, கெஸ்ஸோ நிக்கோலாவின் கரத்தைப் பற்றினான். ''கவலை வேண்டாம். நான் எல்லாவற்றையும் எழுத்து மூலமாகவே உங்களிடம் சமர்ப்பித்து விடுகிறேன்...''

''எழுத்து மூலமாகவா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் நிக்கோலா. (அவனுக்கு எழுத்து விஷயம் என்றாலே பயம்)

''நான் ஒரு ரிப்போர்ட் தந்து வருகிறேன்...ஒரு விளக்கம்...அதற்கு எந்தப் பெயரிட்டாலும் சரிதான்.''

கெஸ்ஸோவின் பணிவைக் கண்டு நிக்கோலாவுக்கு எரிச்சல் வந்தது. ஆனால், கோஷ்டியின் வேலை அவனுக்குத் திருப்தி அளித்தது.

''ஆண்டன்கூடப் பிரமாதமாக வேலை பார்க்கிறாப்போலிருக்கிறதே!'' என்றான் நிக்கோலா.

''நாங்கள் அவனுடன் சிறிது பேசிக்கொண்டிருந்தோம்!'' என்றான் கெஸ்ஸோ.

ஒழுங்காக வேலை நடக்காத மற்றப் பண்ணைகளுக்குப் போவதாகக் கூறிவிட்டு, நிக்கோலா கெஸ்ஸோவிடம் விடை பெற்றான்.

''மேற்பார்வை பலமாகத்தா னிருக்கிறது!'' என்று கூறிய வண்ணம், கெஸ்ஸோ கலப்பையை அழுத்திப் பிடித்தான். ''நாம் ஒரு பாட்டுப் பாடுவோமா?'' என்று இரைந்தான்.

இவ்விஷயத்தைப் பற்றி ஸாகேனியர்களிடம் இரு முறை கேட்கவேண்டாம்! அவர்கள் சிறந்த பாடகர்கள். விவசாயிகள், கோஷ்டிக் கானத்தை ஆரம்பித்தனர். முதலில் சுருதி சேராத இசை, பின்னர் சுருதி லயத்துடன் நாதவெள்ளமாகப் பெருகிற்று. அந்தப் பாடலினுல் அவர்களுக்குப் புதுப்பலம் தோன்றியது. கீழே பள்ளமான இடத்தில் வசிக்கும்ஜனங்கள், ஆச்சரியமேலிட்டு ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டனர்.

''அந்தப் பாட்டு எங்கிருந்து வருகிறது?''

அவர்கள் ஒன்றும் புரியாமல் மண்டையைச் சொரிந்து கொண்டிருக்கும்போது, நீலவானில் சிறகடிக்கும் பறவையைப் போல் அந்தப் பழக்கமான இன்சுவைப் பாடல் அவர்கள் தலைக்கு மேலே வட்டமிட்டுச் சுழன்றது.

**குன்றுக்குக் கீழுள்ள பசும் புல்லில்**
**ஒரு மான் நிற்கிறது.**
**இளங்கன்றுதான் எனினும்...**
**குன்றுக்குக் கீழுள்ள மானை**
**நீங்கள் கண்டதில்லையா?**
**அது தன் காதலிக்காகக் காத்திருக்கிறது.**
**காதலிக்காகக் காத்திருக்கிறது**
**நாள் முழுதும்......**
**அந்த மான்கன்றை நீங்கள் கண்டதில்லையா—**
**ஒளிமிகுந்த நாளிலே?**

## 14

ரஸ்தாவைக் கடக்க முடியாத காலத்தில் ரஷீத் (சமவெளியிலிருந்து) ஸாகேனுக்கு வந்தது, சமையலறைக் கணப்பின் பேச்சுக்குப் பொருளாயிற்று. அவன் எப்படிப் பிரயாணம் செய்தான்? இடைஞ்சல்களை யெல்லாம் எப்படிக் கடந்தான்? அவன் தனியாக வந்தானு அல்லது அனுபவமிக்க வேடர்கள் அவனுக்கு வழி காட்டினரா?— இது எல்லாம் சுவையான விஷயங்கள். ரஷீத் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லவில்லை. எல்லாவற்றையும் விகடத்தின் மூலம் சமாளித்தான். ஜில்லா நிர்வாகத்திடமிருந்து உதவி கிடைத்ததென்று குறிப்பாகச் சொன்னுன்.

ரஷீதைப் பற்றி அறிந்து கொள்ளாதவர்கள், "ஓஹோ, இந்த இளைஞன் பெரிய சூரப்புலிதான்!" என்று அதிசயித்தனர். ஆனால் கூட்டுப்பண்ணையில் ஒரு செருப்புத் தொழிற்சாலை வைக்கப் போவதாக ரஷீத் கூறியதும், அவர்களின் அதிசயம் இன்னும் விரிந்தது.

"நான் முதல் தரமான செம்மான் ஆகப்போகிறேன்" என்று ரஷீத் பெருமையுடன் சொன்னான்.

'முதல் தரமான செம்மான்' என்ற பேச்சையே ஸாகேனில் யாரும் கேள்விப்பட்டதில்லை. ஆகவே, ரஷீதின் சொற்களை முதலில் ஒருவரும் நம்பவில்லை. கிராம சோவியத்தின் காரிய தரிசியிடம் ஜனங்கள் விசாரித்தனர். அந்த இளைஞன், (இப்பொழுது அவனுக்கு ஜலதோஷம் இல்லை) ரஷீதுதான் புதிய தொழிற்சாலையின் நிர்வாகி என்பதை ஊர்ஜிதப் படுத்தினான். அது உண்மையிலேயே அதிசயமான செய்திதான்!

பின்னர், இதைவிடப் பரபரப்பூட்டும் செய்தியான கெஸ்ஸோவின் சபதம் பேச்சிலே அடிபட்டது. அவன் பயிர் செய்வதாக வாக்குறுதி யளித்துள்ள சோளம், புகையிலை ஆகியவற்றின் அளவைப்பற்றி ஜனங்கள் பேசிக்கொண்டனர். ரஷீதைப்பற்றிய பேச்சு மங்கி மறைந்தது; பொதுஜன விவாத மென்னும் பேரலையில் அது மூழ்கிவிட்டது.

இப்புதிய செய்தி மிகுந்த உற்சாகத்தை உண்டாக்கியது. யாரும் கெஸ்ஸோவை நம்பாமல் இருக்கலாம்; அவன் பேச்சை ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அமோக அறுவடையைப் பற்றிய கனவு ஆளை மயக்கத்தான் செய்தது.

கெஸ்ஸோவின் உற்சாகம் மிகுந்த திட்டங்களைப்பற்றிக் கிராமசோவியத்தின் தலைவனாகிய நிக்கோலாவிடம் கேள்விகள் கேட்கப்பட்டபோது, அவன் 'சூள்' கொட்டினான்! அவைகளை ஒப்புக்கொள்ள அவன் மனம் துணியவில்லை என்பது தெளிவு. இருந்தாலும், அவற்றைக் கண்டிக்கத் தயங்கினான். ஏனெனில் இப்போது அதைப்பற்றி ஒருவராலும் ஜோஸ்யம் சொல்ல முடியாது அல்லவா? ஸாகேனிய பாஷையில் சொன்னால், நிலைமை காடையை விட மோசமாயிருந்தது—சும்மாயிருக்கவும் முடியாது; பறப்பதென்றாலும் ஆபத்துத்தான்!

இது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் ஸ்டோர் மானேஜரான அதாமூர்தான் கருணைக்குன்றைப் பற்றிய கெஸ்ஸோவின் திட்டங்களில் நிரம்ப அக்கறை கொண்டிருந்தான்.

தன் நண்பனுன ரஷீதைப் பார்த்து, அவன் அலட்சிய தோரணையில் கேட்டான்: "ரஷீத்! ஸில்வர் மெடோர்வில் வெடிமருந்து கண்டுபிடிக்கிறார்களா?"

"டைனமைட்டாகக்கூட இருக்கலாம்?" என்றான் ரஷீத். அவனுடைய மூளை, சமீபத்திய குடிவெறிக் கேளிக்கைகளால் சிறிது மழுங்கிப் போயிருந்தது.

"அந்தக் குன்றை மிக விலை மதிப்புள்ளது என்கிறார்களே, ஆச்சரியந்தான்" என்று அதாமூர் மெதுவாக இழுத்தான்

ஆனால் ரஷீதுக்கு உலக நினைவே யில்லை. ஆருயிர்த் தோழனின் பேச்சுக்குச் சிறிதும் செவிசாய்க்காமல், அவன் திடீரென்று ஒரு மதுபான விருந்துக்கு ஆயத்தமானான்.

"இது காதலுக்கு!" என்று ஒரே மடக்கில் ஒரு கிண்ணம் மதுவைக் காலிசெய்தான்.

அதாமூர் கண்ணடித்துக்கொண்டு சொன்னான்:

"அந்த நிலம் என்னுடையது. உனக்குத் தெரியுமல்லவா?" சற்றுப் பேச்சை நிறுத்திவிட்டு, மீண்டும் பெருமூச்சுடன் தொடர்ந்தான்: "அந்த நிலம் எனக்குச் சொந்தமாய் இருந்தது."

"எந்த நிலம் அதாமூர்?"

"அந்தக் குன்றும். அது இருக்கும் நிலமும் என்னுடையவை. நண்பனே! அதிலிருந்து யோகம் அடிக்கப் போகிறது..."

"அதனாலென்ன? கெஸ்ஸோ முட்டாளல்ல. அவன் உன்னைச் சும்மா விடமாட்டான்."

"அப்படியா நினைக்கிறாய்? அவன் என்னுடைய சொந்தக்காரனுக்கும்..."

ரஷீத் அதாமூரிடம் கிண்ணத்தின் அடிப்பாகத்தைக் காட்டினான். குடிகாரர்களின் பகிரங்கக் குறிப்பு அது. கிண்ணத்தில் மீண்டும் மது நிரப்பப்பட்டது.

"அதாமூர்! அவனை உன் பக்கம் இழுக்க முயற்சி செய். வாயாரப் புகழ்ந்து பார்; மூக்கால் அழுது பார்—ஒரு வேளை கொஞ்சம் பங்கு கிடைத்தாலும் கிடைக்கும்...ஸாகேன் இருக்கிறதே, அது ஒரு கரடியின் குகை...உனக்கு யோகம் அடித்தாலும் அடிக்கும்...ஞாபகம் வைத்துக்கொள்' இது ஸாகேன்! இது ஸாகேன்!...இதற்கு நிகர் ஒன்றுமில்லை; அற்புதமான இடம்..." என்றான் ரஷீத்.

அதாமூர் சோகக் குரலோடு, "கெஸ்ஸோ தந்திரக்காரப் பயல்!" என்றான். "அவன், உலகத்தில் பாதியைச் சுற்றிப் பார்த்திருக்கிறானும்...ம், என்ன நடக்குமோ? என்ன நடக்குமோ?"

அவர்கள் கிண்ணங்களை இடித்துக் கொண்டனர்.

"இது உயர்தரச் செருப்புத் தொழிற்சாலைக்கு! உனது காதலின் வெற்றிக்கு! நீ காமாவின்மேல் கண் வைத்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். அவள்மீது உயிரை வைத்திருந்தால் ஏன் அற்பவிஷயங்களில் கவனம்செலுத்துகிறாய்?" என்று, அவன் பக்கம் சாய்ந்து கொண்டு அதாமூர் மெல்லக் கூறினான்: "ஒரு ஆடை, நல்ல குதிரை, நம்பிக்கையுள்ள நண்பர்கள்-இவை கிடைத்தால் உன் மணமகள் உன் பாக்கெட்டில்தான்!"

அதாமூரின் சிவந்த முகத்தை ரஷீதின் குழம்பிய கண்கள் நோக்கின.

"எனக்கு உதவி தேவையானால்?"

தசை பருத்து, ரோமம் அடர்ந்த கையை அதாமூர் நீட்டினான்.

"இதோ இருக்கிறது!"

## 15

உழவு முடிந்து கொண்டிருந்தது. இன்னும் சில நாட்களுக்கு நல்ல பருவம் இருந்தால் போதுமானது. ஆனால் பருவநிலை மோசமாகிக் கொண்டிருந்தது. தெற்கிலிருந்து மேகங்கள் ஓடிவந்து கொண்டிருந்தன. அவை ஸாகேன் மீது சஞ்சரித்து மழைத்துளிகளைத் தூவின...

அதிகாலைமுதல் நள்ளிரவுவரை, கெஸ்ஸோவின் நேரம் வயலிலேயே கழிந்தது. அவனுக்கு ஓயாத ஒழியாத வேலை. மற்றவர்களுக்கு வேலையைப்பற்றி விளக்குவது; உழவின் ஆழத்தை அளப்பது; மறுநாளுக்கு வேண்டிய தயாரிப்புகளைச் செய்வது—இப்படியாகப் பற்பல வேலைகள். தன் பகுதியைப் பார்த்துக் கெஸ்ஸோ மிகத்திருப்தி அடைந்தான். நிலம் எப்படி யிருந்தபோதிலும், அது நெடுந்தொலைவில் சிதறிக் கிடக்கவில்லை; அவனது கோஷ்டியினர் ஒவ்வொருவரும், கூப்பிடு தூரத்திலேயே இருந்தனர். அது செம்மண் நிலம்; மணல் நிறைந்தது—சிருஷ்டிக் காலத்திலிருந்து

ஸாகேனுக்குள்ள துரதிருஷ்டம் இது. நீங்கள் எல்லாக் காரியத்தையும் நிலத்தின் போக்கில் விட்டுவிட்டால், அற்ப சொற்பமாகத்தான் விளையும்; உண்மை விளைச்சலைக்கண்ணுல் பார்க்க முடியாது. ஆனுல், அதன் இஷ்டப்படி விடாமல், அதைக் காலின் கீழ் போட்டு மிதித்தால், விளைச்சலின் மகிமையே தனிதான்!

குடால் எருதுகளை விரட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய கணீரென்ற குரல், வயலின் ஒரு மூலையிலிருந்து மறு மூலை வரையில் கேட்டது சாயங்காலத்தில், குடாலின் கோஷ்டியோடு கெஸ்ஸோ வீடு திரும்புவது வழக்கம்.

கெஸ்ஸோவுடன் நிலத்தை அளக்கும்போது, குடால் பாக்கெட்டிலிருந்து ஒரு தாளை எடுத்து அவனிடம் நீட்டினுன்.

''அது என்ன?'' என்று கெஸ்ஸோ ஆச்சரியத்தோடு கேட்டான்.

அது ஒரு நோட்டுப் புத்தகத்திலிருந்து கிழிக்கப்பெற்ற கால் தாள். அதன் நாற்புறங்களிலும் கோடு வரையப் பெற்றிருந்தது. அதிலே கீழ்க்கண்ட அழகிய வாசகம் காணப்பட்டது.

**அழைப்பிதழ் :**

**''நாளை—ஞாயிற்றுக்கிழமை—வருக, மின்சார விளக்குத் திறப்புவிழா நடைபெறும்''**

**தங்கள் உண்மையுள்ள,**

**குடால்**

''ஓஹோ! அசல் பட்டணத்து மோஸ்தர்தான் போலிருக்கிறது...நிரம்ப வந்தனம். ஏற்பாடு பூர்த்தியாகிவிட்டதா?''

''இதெல்லாம் என் மகனுடைய யோசனை. அந்தப் பயல் தான் இதற்கெல்லாம் மூலகாரணம். அவன்தான் எப்போதும் என்னைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறுன். அவசியம் வா, அப்பா! நன்ருகப் பொழுதுபோகும்...என்ன இருந்தாலும், எனக்கு இதைப்பற்றிச் சந்தேகமாகத் தானிருக்கிறது...என் மகன் ஸாகேனில் மின்சார விளக்குப் போடப்போகிறுன் என்பதை என்னுல் நம்பவே முடியவில்லை.''

''மீண்டும் ஒருமுறை வந்தனம். நாம் ஆழத்தை அளக்க லாம்'' என்று, அளைப்பிதழை அழகாக மடித்துக் கெஸ்ஸோ பையில் வைத்துக்கொண்டான்.

உழுத பள்ளத்தில் கெஸ்ஸோ அளவுகோலை வைத்தான். அவனும் குடாலும் தரையை ஒட்டிக் குனிந்தனர்.

''இருபதுக்கும் குறைவு. அண்ணு! உமது வேலை மோசமாகிவிட்டது''என்று கெஸ்ஸோ சஞ்சலத்தோடுசொன்னுன். ''வேலையிலே இன்னும் தீவிரமாக ஈடுபடும். பிறர் முன்னிலையில் என் மானத்தை வாங்கிவிடாதேயும்.''

''நாசமாய்ப் போக!'' என்று குடால் காறித்துப்பினுன். ''இரண்டு ஸென்டிமீட்டர்களுக்காகக் கவலைப்பட வேண்டுமா?''

''ஆம். நன்ருக ஞாபகமிருக்கட்டும். இரண்டு ஸெண்டி மீட்டர் ஆழம் மிக நல்லது. ஆனுல், இரண்டு ஸெண்டி மீட்டர் குறைந்துவிட்டாலோ மிக மோசமாகிவிடும், அண்ணு!'' பின்னர், குடாலின் முகத்தில் சோகத்தின் ரேகைகள் தென்படுவதைக் கண்டதும் கெஸ்ஸோ மிக அன்போடு சொன்னுன்: ''நான் சொல்லுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? ஆனுல், நாம் குறிக்கோளை அடையாமல் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டாலோ? நாம் விதிகளின்படி கண்டிப்பாக உழவேண்டும்—உரத்தைப்பற்றி மறந்துவிடுங்கள். குன்று இல்லையென்று மனத்தில் எண்ணிக்கொள்ளுங்கள்.''

''என்ன? குன்று இல்லையாவது?''

கெஸ்ஸோ உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தான். ''ஆம், குடால்! எதுவும் நடக்கக்கூடும். குன்றிலிருந்து ஒன்றும் கிடைக்கவில்லையென்று வைத்துக்கொள்வோம். அப்படியானுல் குடி முழுகிப் போய்விடுமா? அது இல்லாமலே நாம் வாழ முடியும். தெரிகிறதா?'' என்று சொல்லிவிட்டு அவன் தன்னைத்தானே திருத்திக் கொண்டான். ''நமக்குக் குறைவான அறுவடை கிடைக்கலாம். ஆனுல், அது சிறந்த விளைச்சலாயிருக்கும். முன்னூறு 'பூடு'கள் கிடைக்குமென்பதற்கு நான் ஜவாப்தாரி''

கெஸ்ஸோ கையை நீட்டினுன். குடால் ஒரு கணம் யோசித்துவிட்டுத் தன்னுடைய சொரசொரப்பான—முரட்டுக் கையை அதன்மீது அடித்தான்.

...அந்திப்பொழுதில் வானம் கறுத்தது. காற்றுச் சுழன்றடித்தது. இலையுதிர் காலத்தைப்போல ஒருவிதக் குளிர் தோன்றியது. வானத்தில் யாரோ மேகங்களை ஒன்று திரட்டி ஸாகேனுக்கு மேலே உதறியதைப் போல் மழை பெய்தது; ஊசி குத்துவதைப் போன்று மழைச்சரங்கள் விழுந்தன.

இருண்ட மழைக்கால அந்திப் பொழுதில் மறுநாளைப் பற்றி ஒருவனின் மனம் குழம்பாமலிருந்தால், அவனை ஒரு இன்பமயமான சோம்பல் சூழ்ந்து கொள்ளுகிறது.

இம்மாதிரியான மாலை வேளையில், நாலாபுறமும் பொறிகளைச் சடபடவென்று குஷியாகச் சிதறிக்கொண்டு நெருப்பு எரியும்போது, ஒருமனிதனின் உலகம் கணப்பைச் சூழ்ந்துள்ள தன் குடும்பத்தோடு ஒன்றிப்போவது இயற்கைதான். இது போன்ற வேளையில் மைவண்ண இரவு வரும்போது, ஒருவனுடைய வீட்டு முற்றத்திலேயே எல்லாம் அடங்கிவிட்டது போலத் தோன்றுகிறது. காலையைப் பற்றிய நினைவு, மனக் குகையின் எங்கோ ஓர் அழகான மூலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது; அது மனக் கதவை நன்ருகத் திறந்து, பரந்த வெளியை நோக்குகிறது; எல்லையின்றி விரிந்து, பேரழகுப் பிம்பமாயிருக்கும் உலகத்தைக் காண்கிறது. அப்புறம், காற்றிலே சாம்பல் சிதறும்படு மண் தரையில் கணப்பை வைத்துக்கொண்டு, அந்த வீடு கூனிக் குறுகிப் போய் எவ்வளவு புழுக்கமானதாக மாறிவிடுகின்றது!...

...ஸாகேனியக் குடிசைகளின்மீது மழைச் சரங்கள் தாளம் போட்டுக் கொண்டிருந்தன. மழைத் தண்ணீர் ரஸ்தாக்களில் பெருக்கெடுத்து, அவைகளை ஓடைகளாக மாற்றியது. வீட்டுக் கதவுகளின் முன்னுல் கனத்த திரைகளாகத் தொங்கும் மழையை, ஜனங்கள் பொறுமையின்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர்; அது எவ்வளவு நேரம் பெய்யப் போகிறதோ? வீடுகளிலுள்ள கணப்பு வெளிச்சம் வெளியில் மங்கலாகத் தெரிந்தது. ஸாகேன் நதியில் வெள்ளம் வந்து விட்டது. நதியின் மேற்பகுதிகளிலிருந்து வெகு சீக்கிரத்தில் கலங்கல் நீர் மலைப் பிராந்தியத்திற்கு வந்துவிடும். காலையில், ஸில்வர்மெடோக் கிராமத்தில் இருப்பவர்கள் நட்கல்லிக் கிராமத்திலிருப்பவர்களுடன் சமிக்ஞை மூலம் பேச வேண்டியதுதான்!...

இருண்ட இரவை ஊடுருவிப் பார்த்துக்கொண்டு, கெஸ்ஸோ ஜன்னலருகில் உட்கார்ந்திருந்தான். எண்ணெய் விளக்கின் ஒளி, ஜன்னல் கண்ணுடியின்மீது விழுந்

தது. கண்ணாடியிலிருந்து மழைத் தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.

வீட்டில் அமைதி நிரம்பியிருந்தது. கெஸ்ஸோவின் தகப்பனும் தங்கையும் உறங்கிக் கொண்டிருந்தனர். வீட்டருகே தூங்கிக்கொண்டிருந்த நாய், கெட்ட சொப்பனம் கண்டதைப்போலப் பயந்து ஊளையிட்டது.

மேஜைமேல் புத்தகங்கள் சிதறிக் கிடந்தன. கெஸ்ஸோவின் விரல்கள் புத்தகத்தின் பக்கங்களைப்புரட்டின. கெஸ்ஸோவுக்குத் தூக்கம் வரவில்லை. மனம் நிம்மதியற்றிருந்தது. போர்க்களத்தில் இதுபோன்ற ஓர் இரவை அவன் மனம் எண்ணியது. அவர்கள், தாக்குதல் உத்திரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். பதுங்குமிடத்தில் ஒரே புழுக்கம். அவனுடைய தபால் பையில் ஒரு வெள்ளைத் தாள் இருந்தது. அந்த மங்கிய வெளிச்சத்திலுங்கூட அது அற்புத வெண்மையாகத் தோன்றியது. கெஸ்ஸோ வீட்டிற்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். மனக் கண்ணில் அவனது வீடு, குடும்பம், அமைதி நிறைந்த குவா குவாமலை. பனி படர்ந்த மலைச் சிகரங்கள், பெருக்கெடுத்தோடும் ஸாகேன் நதி—எல்லாம் தோன்றின. ஆயிரம் மைல்களுக்கு அப்பால், வெகு தொலைவில் அவை உள்ளன!......ராணுவ மோஸ்தர்ப்படி அவன் கடிதத்தை அழகிய முக்கோண வடிவத்தில் மடித்து விலாசம் எழுதியபோது, ஒரு கனவு தோன்றியது. தனது சொந்தக் கிராமத்தில் அமைதியாக இரவைக் கழிப்பது போலவும், தென் பிராந்தியச் சூரிய வெளிச்சத்தை அனுபவிப்பது போலவும், சமாதானத்தின் இனிமையைப் பருகுவது போலவும் அவன் கனவு கண்டான். அப்பாடா! இப்போது ஒரு மட்டுக்கும் வீடு திரும்பியாயிற்று. ஆனால், அமைதியான வாழ்க்கை எங்கே? கெஸ்ஸோவால் அமைதியாகவே இருக்க முடியாதா?

அவன் ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து, அதன் நடுவிலிருந்த இரட்டைத் தாளைக் கிழித்தான். அறையில் அங்குமிங்கும் உலாவினான். இரவு மணி இரண்டாயிற்று. ஸாகேன் உறங்கிக் கொண்டிருந்தது. மக்கள் 'ஏழாவது கன'வைக் கண்டு பிடிப்பார்கள். கெஸ்ஸோ ஒருவன்தான் ஸாகேனில் அன்றிரவு விழித்திருந்தான். அவனால் தூங்க முடியவில்லை... நினைவு அலைகள் அவனை இறுகத் தழுவின......

மூன்றாண்டுகளுக்கு முன், கெஸ்ஸோ பிரயாணம் செய்த துருப்புகளின் ரயில் மாஸ்கோ அருகில் நின்றது. அன்று நிலவு பூத்த கோடை இரவு. கிரெம்ளினைக் காண முடியும்

என்று யாரோ சொன்னார்கள். கெஸ்ஸோ ரயிலின் கூரை மீதேறினான். அங்கே நிறையப் பேர் குழுமியிருந்தனர். எல்லோர் கண்களும் ஒரே திசையை—கிரெம்ளினை நோக்கி இருந்தன. எவ்வளவு சிரமப்பட்டுப் பார்த்தாலும், கெஸ்ஸோவுக்கு ஒன்றும் தெரியவில்லை. மற்றவர்களும் அந்நிலையில் தானிருக்கவேண்டும்! ஆனால், எல்லோரும் மதில் சூழ்ந்த கிரெம்ளினைச் சிறிதளவாவது பார்த்துவிட வேண்டுமென்று துடி துடித்தனர். தூரத்திலிருக்கும் கிரெம்ளினை வியந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

''இன்னும் சிறிது நேரத்தில் விடிந்துவிடும், தோழர்களே!'' என்று யாரோ சொன்னார்கள். ''தோழர் ஸ்டாலின் விழித்துக் கொண்டிருப்பார்......அவர் ஒருதரம் காலை ஐந்து மணிக்கு நமது தலைமைக் காரியாலயத்துக்குப் போன் பண்ணினார்!''

பேச்சு நின்றது. மீண்டும் எல்லோரும் புனிதமான அமைதியுடன் கிரெம்ளினை நோக்கினர்.

எல்லோரும் கீழிறங்கும் வரை காத்திருந்துவிட்டு, கெஸ்ஸோ கிரெம்ளின் இருக்கும் திசையில் வைத்த கண் வாங்காமல் நெடு நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்....

அவன் மேஜையருகே அமர்ந்தான். பேனாவை மையிலே தோய்த்து, பெரிய எழுத்துக்களில் எழுதினான்: ''ஸாகேன் கிராமத்தின் கட்சி ஸ்தாபனத்திற்கு இப்போது.......'' கெஸ்ஸோ ஒரு நிமிடம் யோசித்துவிட்டு எழுதியதை அடித்தான். காகிதத்தைச் சுருட்டி மேஜைக்கடியில் எறிந்தான்.

''உதவி வேண்டுமென்று நான் ஜில்லாப் பத்திரிகைக்கு எழுதினால் என்ன?'' என்று, கெஸ்ஸோ மௌனமாயிருந்த சுவர்களைப் பார்த்துக் கேட்டான்.

தலைப்பு இப்படியிருக்கலாம்: ''உள்ளூர் உரங்களின் உபயோகம்.'' உரம்? இருளிலிருந்து கான்ஸ்டான்டினின் முகம் மிதந்து வருவதுபோலத் தோன்றியது. ''அந்தக் குன்றைப் பற்றி உனக்கு உறுதிதானா?'' என்று அம்முகம் கேட்டது.

கான்ஸ்டான்டினோடு பேசிய பிறகு, ஆராய்ச்சியின்றி இதைச் செய்ய முடியாதென்று கெஸ்ஸோவுக்கு நன்கு புலப்பட்டது. இது ஏதோ சிறிய காய்கறித் தோட்டத்தைப் பற்றிய விவகாரமல்ல; எல்லாக் கூட்டுப் பண்ணைகளையும் பற்றியது; நிபுணர்களின் சிறந்த யோசனைகளைப் பெறவேண்டியது,

"முடியாது. பட்டணத்தின் உதவியின்றி நான் இதைச் செய்ய முடியாது!"

கெஸ்ஸோ மீண்டும் அறையில் உலாவினான். விளக்கின் திரியை வெட்டிச் சீர்படுத்தினான். மீண்டும் மேஜையருகில் உட்கார்ந்து, வைராக்கியத்துடன் எழுத ஆரம்பித்தான். அவன் அதிகாலைவரை எழுதிக் கொண்டிருந்தான்......

## 16

கெஸ்ஸோ காலையில் சிறிது நேரம் கழித்து எழுந்திருந்தான். காலத்தினால் கறுத்துப் போய்விட்ட கூரையை, வழக்கம்போல ஈடுபாட்டுடன் பார்த்துக்கொண்டிருந்தான். படுக்கையின் அருகிலுள்ள சுவரில், ஒளித் துண்டு ஒன்று துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது—காலைச் சூரியனின் முதல் கிரணங்கள் அவை.

வானம், மேகமின்றி நிச்சலமாக இருந்தது. நேற்றிரவு மழையினால் நனைந்த பூமி, காலை வெய்யிலில் வெகு சீக்கிரமாக உலர்ந்துவிட்டது. எங்கும் அமைதி நிலவியது. ஆனால், ஸாகேன் நதி மட்டும் 'ஹோ'வென்று இரைந்து கொண்டு ஓடியது. அதன் கோபம் என்றும் தணியாது போலும்!...... அது நிச்சயம். அவன் பட்டணத்திற்குச் செல்லப் போகிறான்; வஸந்தகால வெள்ளமிருப்பினும், எப்படியாவது அங்கு போய்ச் சேர்ந்து விடுவான். கெஸ்ஸோ கொட்டாவி விட்டு, உடலைச் சோம்புல் முறித்தான். மேஜையிலிருந்து நேற்றிரவு எழுதியதை எடுத்து வாசித்தான். அதில் விளைச்சலை அதிகரிப்பதற்காக அநேகம் யோசனைகள் கூறப்பட்டிருந்தன.

கெஸ்ஸோ அந்தக் காகிதத்தைக் கசக்கி மேஜைக்கடியில் எறிந்தான். அவனுக்கு அது தேவையில்லை. கான்ஸ்டான்டின்மீது அவனுக்கு ஏற்பட்ட திடீர்க் கோபம் தணிந்து போயிற்று. கான்ஸ்டான்டின் என்ன தீங்கு செய்துவிட்டான்! விஷயத்தைக் கொஞ்சம் தீர ஆலோசிக்கும்படி சொன்னான். அவ்வளவுதானே!...அந்த ஒளிக் கிரணம் அவன் கண் முன் தாண்டவமாடியது. ஜன்னலுக்கு வெளியே அழகு மிளிரும் வஸந்தப் பருவம். கெஸ்ஸோ மீண்டும் ஒருதரம் உடலை நெளித்தான்; படுக்கை கிரீச்சிட்டது......

நீனா, சூடான ஆட்டுப் பாலைக் கோப்பையில் ஏந்தி வந்தாள்.

"நீ என்னைக் கெடுக்கிறாய்" என்றான் கெஸ்ஸோ,

நீனு படுக்கையருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு, அதில் கோப்பையை வைத்தாள்.

''இதை மெல்லச் சாப்பிடு.'' அவள் கண்கள் மேஜைமீது திரிந்தன. ''எழுதிக் கொண்டிருந்தாயா என்ன? எதைப் பற்றி?''

கெஸ்ஸோ பதில் சொல்லவில்லை. நீனு தனக்குள்ளேயே முணு முணுத்துக்கொண்டு, அறையில் கிடந்த காகிதங்களைக் கூட்டினுள்.

''நீ இப்போது நிறையச் சிகரெட் குடிக்கிருய்...அறை முழுதும் புகை மண்டலமாயிருக்கிறது; அதைக் கத்தியால் வெட்டித் தள்ளலாம் போலிருக்கிறது? உள்ளூர் உரங்களின் உபயோகம்!... ஓஹோ!...அந்தக் குன்றைப் பற்றி எழுதியிருக் கிருயா?...அதைக் கானல் நீர் என்று அப்பா சொல்லுகிருர்; அதை எண்ணிச் சிரிக்கிருர். ஆனுல் பிறர் முன்னிலையில் அவர் உணக்காகப் போராடுகிருர். 'ஸாகேன் கிராமத்தில் கட்சி ஸ்தாபனத்திற்கு'...நானும் காமாவும் நேற்று உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்...''

கெஸ்ஸோ அவள் பேச்சின் பிற்பகுதியை வேண்டு மென்றே கவனிக்காமல் இருந்தான்.

''ரஷீத் அவளை எப்போதும் சுற்றிக்கொண்டே திரி கிருன்.''

கெஸ்ஸோவின் இதயத்துடிப்பு ஒருதரம் நின்றுவிட்டது. அவன் கோபத்துடன் பாலை ஒரே மடக்கில் குடித் தான்.

''ஐயோ தொண்டை புண்ணுகிவிட்டதே!'' என்று கூச்ச லிட்டான்.

''இவ்வளவு அவசரமாகக் குடித்தால்! . . . அந்த ரஷீதுப் பயலை எனக்குப் பிடிக்கவில்லை...''

''நாசமாப் போகிற பால்!...அவனை ஏன் உனக்குப் பிடிக்கவில்லை...? பொருமையா?''

நீனு வேடிக்கையாக ஒரு தும்மல் போட்டாள்.

''எனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? பொருமைப்பட வேண்டியது நீதான். நானல்ல!''

''அப்படியானுல் எனக்கு இதில் ஒருவிதச் சம்பந்தமும் இல்லை!''

காதலியைப் பற்றிய உணர்ச்சிகளை ஓர் ஆண் மறைத்து வைப்பது, ஸாகேனில் நீண்ட காலச் சம்பிரதாயமாகும். எந்த ஸாகேனியனும் தான் காதல் செய்வதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவே மாட்டான். பிறர்முன்னால் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளவும் மாட்டான். வேண்டுமென்றே அலட்சியமாக இருந்து, ஜாக்கிரதையாக அவ்வுணர்ச்சிகளை மறைத்து விடுவான். இது மலைப் பிராந்தியத்தில் எல்லோரும் ஒப்பக் கூடிய வழக்கமாகும். இதைத்தான் அங்கே வீரத்தின் முக்கிய சின்னமாகக் கருதுவார்கள். இது எண்ணற்ற தப்பபிப்பிராயங்களுக்கும் இடம் கொடுத்திருக்கிறது. ஏனெனில், அவைகளைப் புறக்கணித்துவிட்டு இளைஞர்கள் முன்னேறும் அபாயமும் அதற்கு அடிக்கடி வந்துவிடும்!

"அப்பா உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று காகிதங்களைக் கூட்டி வைத்துவிட்டு நீனு சொன்னாள். "இன்று மாலை குடால் வீட்டிற்குப் போகிறாயா?"

கெஸ்ஸோவுக்கு அழைப்பிதழின் ஞாபகம் வந்தது: "ஆம்...நாங்கள் போகப் போகிறோம்!"

இங்குமங்கும் அசைந்தாடியவாறு இடுப்பைத் தேய்த்து விட்டுக்கொண்டு, யேகூப் படியில் உட்கார்ந்திருந்தான். மழைக்காலம் சென்று, வெய்யில் காலம் வந்தவுடன் அவன் முகத்தில் வழக்கமாகத் தோன்றும் ஆனந்தக் களிப்பு, இன்றும் நிலவியது; பட்டணத்திற்குச் சென்று ஜில்லா அதிகாரிகளைப் பார்க்க உத்தேசித்திருந்ததைத் தகப்பனாரிடம் கெஸ்ஸோ கூறினான். மகன் ஆச்சரியத்தில் மூழ்கும் வண்ணம் தகப்பன் பேசினான்: அவன் அதைத் தடுக்கவில்லை; ஆமோதித்தான்!

அவன் சொன்னான்: "பட்டணத்திற்குச் சென்று அவர்களுடன் பேசி வா...நான் மட்டும் உன்னிலையில் இருந்தால், அந்தக் குன்றிலிருந்து கொஞ்சம் "ஸாம்பிள்" எடுத்துச் செல்லுவேன்...விவசாய சாஸ்திரிகள் அதைச் சோதனை செய்யட்டும்...துரதிருஷ்டவசமாக நாம் எங்கோ ஓர் மூலையில் இருக்கிறோம். இல்லாவிடில், அந்தக் குன்றின் விஷயம் எப்போதோ தீர்ந்து போயிருக்கும்..."

"பட்டணத்திலுள்ளோரிடம் அவர்களுக்குத் தேவையான உரவகைகள் இருக்கின்றன. அவை ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து கொண்டுவரப் படுகின்றன. ஸாகேனில் இருப்பதைப் போலவா?"

''நமது ஸாகேனுக்கு அதிருஷ்டம் இல்லையென்று தோன்றுகிறது'' என்றான் கிழவன். ''கூரைமேல் குந்தியிருக்கும் பந்தைப்போல, நம்மை எந்தக் கிறுக்கன் வீசி எறிந்தானோ தெரியவில்லை.''

''உழவு முடிந்ததும் நான் பட்டணத்துக்குப் போவேன்'' என்றான் கெஸ்ஸோ.

''நீ இல்லாமலே நாங்கள் சமாளித்துக் கொள்வோம். நமது கோஷ்டியில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறோம். ரஸ்தாச் சரியானதும், உடனே பட்டணத்துக்குக் கிளம்பு''.

''ரஸ்தா இப்போதே சரியாகத்தான் இருக்கிறது. ரஷீத் வரவில்லையா?'' என்று சமயலறையிலிருந்து நீனாவின் குரல் வந்தது.

''கிழவன் காறித் துப்பினான்.''

''அந்த நயவஞ்சகன், துடைப்பத்தைக் கூடத் தாண்டி வந்து விடுவான்..''

''அதிருக்கட்டும் அப்பா! நான் எப்படியாவது பட்டணம் போய்ச் சேர்ந்துவிடுவேன்'' என்றான் கெஸ்ஸோ.

கெஸ்ஸோவும், அவன் அப்பாவும் குடால் வீட்டிற்குக் கிளம்பியபோது இருட்டும் சமயமாகிவிட்டது. கிழவன் சிறந்த கோட்டையும், கபாதீனியின் ஆடையையும், வீட்டில் செய்த உல்லன் குல்லாயையும் தரித்துக் கொண்டான். கைத்தடியை ஊன்றிக்கொண்டு கம்பீரமாக நடந்தான். தகப்பனுக்கு இடதுபுறம், மகன் மரியாதையோடு நடந்து வந்தான். காலில் வலி ஒன்றுமில்லாவிட்டாலும், பழக்கத்தின் காரணமாகக் கெஸ்ஸோ நொண்டிக்கொண்டு சென்றான்.

குடால் வீட்டுக்கு முதல் முதலில் வந்தவர்கள் அவர்கள் தான். குடாலின் மகனான ஸ்மெல் என்னும் சிறந்த இளைஞன் அவர்களை வரவேற்றான். ஸ்மெல் இப்போதுதான் பட்டிணத்தில் வரவு செலவுக் கணக்குப் பயின்றுவிட்டு, கூட்டுப் பண்ணைத் தேனீச்சாலையில் வேலை பார்த்து வருகிறான் அவனுடைய விளையாட்டுப் புத்திக்கு அவனால் தேனீக்களுடன் ஒத்துப்போக முடியவில்லை. (அல்லது அவைகளால்தான் அவனோடு ஒத்துப்போக முடியவில்லையோ என்னவோ!) எனவே, அந்த வேலை அவனுக்குச் சிறிது எரிச்சலைத் தந்தது.

அவன், விருந்தாளிகள் உள்ளே நுழைவதற்காகச் சிறிது மரியாதையுடன் விலகி நின்றான். அவர்கள் சென்றதும்

வாயிற் கதவை மூடினான். கெஸ்ஸோ, முற்றம் முழுதும் மின்சாரக் கம்பிகள் படர்ந்திருப்பதைக் கண்டான்.

''உனக்கு எண்ணெய் விளக்குகளின்மீது வெறுப்பு வந்து விட்டதாக்கும்?'' என்று அவைகளைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

''ஆமாம்!'' என்று ஸ்மெல் அசட்டுச் சிரிப்புடன் கூறினான். ''இதனால் ஏதாவது பயன் ஏற்படுமானால், மற்ற ஜனங்களுக்கும்—யார் விரும்புகிறார்களோ அவர்களுக்கெல்லாம்—மின்சார வசதியளிக்க விரும்புகிறேன். நான் பணத்திற்கு ஆசைப்படவில்லை. முதலில் இந்த மிஷின்கள் வேலை செய்ய ஆரம்பிக்கட்டும்....

கெஸ்ஸோ கையை உதறினான்

''உனக்கு என்ன வயசு? இருபத்து மூன்று? இது ஒன்றும் அதிகமல்ல. உன் அப்பா உனக்கு உதவி செய்தாரா?''

அந்த இளைஞன் காதின் பின்புறத்தைச் சொரிந்தான்: ''ம்...பாருங்கள். ஜனங்கள் சில சமயம் புதுமையை வரவேற்பதில்லை...அப்பாவும் அப்படித்தான்...நான் வேலையை ஆரம்பித்தபோது—என்னைத் தடுக்கமுடியாது என்று கண்டுகொண்டார்..அப்புறம் என்ன செய்வது? உண்மையைச் சொன்னால் அவர் எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்.''

யேகூப் அவனுடைய விலாவில் இலேசாக இடித்தான்.

''பாவம் செய்யாதே, மகனே!'' என்றான்: ''உன் அப்பாவை நீ எடைபோடாதே, வீட்டில் நடக்கும் காரியங்கள் ஒவ்வொன்றிற்கும் மூல புருஷர் அப்பாதான். இதைத் தவிர வேறு எப்படி இருக்க முடியும்? ஒவ்வொன்றிற்கும் அதனதன் விதி இருக்கிறதல்லவா?''

கிழவன் ஸ்மெல்லின் வயிற்றிலே குத்தினான். அவன் பின்னால் சாய்ந்தான்; பிறகு கலகலவென்று சிரித்துக் கொண்டேயிருந்தான். அவனுடைய சிரிப்புவியாதி, கெஸ்ஸோவுக்கும் தொத்திக் கொண்டது. முடிவில், கிழவனும் அதற்கு இரையாகி விட்டான்; சிரிப்பும் இருமலும் ஒன்று சேர்ந்து அவன் உடலைக் குலுக்கிற்று.

படியில் அவசரமாக இறங்கி வந்த குடாலிடம், ''நமது பையன்கள் நம்மைவிட மேலேதான் பறக்கிறார்கள்......ஹே!'' என்றான் யேகூப்.

சில பெண்மணிகள் சமையலறையிலிருந்து வெளியே வந்தனர். ஒல்லியாய்—நெட்டையாய், வயதாகு முன்பே தலை நரைத்துப் போன ஒருத்தி விருந்தினரை நெருங்கினாள்.

அவள்தான் குடாலின் மனைவி.

"நல்வரவு, காமாசிச்!" என்று யேகூப் அவளை ஆர்ப்பாட்டத்துடன் வரவேற்றான். "நீ ஒருபோதும் வயசானவளாகத் தோன்றவே இல்லையே!"

"நாசமாய்ப் போக! யேகூப், துரதிருஷ்ட வசமாகக் கண்ணாடி என்று ஒன்று இருக்கிறதே..."

ஆனால் யேகூப் விட்டுக் கொடுக்கவில்லை. காமாசிச் சிறு வயதில் எப்படியிருந்தாளோ அப்படியே இன்னமும் இருக்கிறாள் என்று சாதித்தான். தன் பௌருஷத்தை விட்டுக் கொடாமலிருக்கப் பெரு முயற்சி செய்தான்.

கெஸ்ஸோ ஸ்மெல்லிடம் எலெக்டிரிக் மிஷின் பற்றிய எல்லா விவரங்களையும், அது வேலை செய்யும் விதத்தையும் கேட்டான்.

"எல்லோரையும் கூப்பிடு முன்பு, நீயே பரீட்சை பண்ணிப் பார்த்தாயா?"

"அது அபாரமாக வேலை செய்யும். பார்த்துக்கொண்டிருங்கள்!"

அவனுடைய கறுமணிக் கண்கள் கெஸ்ஸோவின் முகத்தில் வட்டமிட்டன. ஒரு சுறுசுறுப்பான—சாகஸமுள்ள—பணிந்து கொடுக்காத மலை ஆடு, அவன் முன்னே நிற்பது போன்ற பிரமை உண்டாயிற்று. கெஸ்ஸோவின் பக்கத்தில் குனிந்து நின்று, ஸ்மெல் தன்னம்பிக்கையோடு சொன்னான்.

"நம்மிடம் நல்ல ஆட்கள் இருக்கின்றனர். அவர்களை வைத்து நீங்கள் அற்புதங்கள் செய்யலாம். மற்ற ஜனங்களுக்கு வெகு விரைவில் வெளிச்சம் கிடைக்கும். ஒவ்வொருவரும் தம் வீட்டில் ஒரு மிஷினை வைத்துக்கொள்ளலாம்."

"நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு பெரிய மிஷினை நிறுவ வேண்டாமா?" என்று கேட்டான் கெஸ்ஸோ.

"வாஸ்தவம். நீங்கள் சொல்லுவதுதான் சரி" என்று கைகளைக் கொட்டினான் அந்த இளைஞன். "ஒரு பெரிய மிஷின் இருந்தால் போதும்."

''ரொம்ப நல்லது ஸ்மெல்! நாம் அடுத்த ஆண்டில் அதை நிறுவி விடுவோம். நீதான் அப்போது பிரதம மெக்கானிக்! என்ன சொல்லுகிறாய்?''

''சந்தேகமில்லாமல், நான் அதை ஏற்றுக்கொள்வேன். ஆனால் தற்சமயத்திற்கு இது போதும்.........'' என்று அவன் கெஸ்ஸோவை மின்சார விளக்குகள் மாட்டியிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

விருந்தாளிகள் சிறிது சிறிதாக வந்தனர். நிக்கோலா கடைசியில் வந்தான்.

முற்றத்துக்குள் நுழையும்போதே நிக்கோலா சொன்னான்: ''மன்னிக்கவேண்டும், இப்போதுதான் உழவு வேலைகளைக் கவனித்து வந்தேன்......'' அவன் நிரம்ப வேலையைச் சுமப்பவன்போலக் காண்பித்துக்கொண்டான்.

நிக்கோலாவுடன் ஸாகேனிய டாக்டர் வந்தார். வாயில் கதவை நோக்கி விரையும் டாக்டரைக் கண்டவுடன், அவரைப் பற்றி அறிந்தவர்கள் எல்லோரும் 'ஒரு துளி அதிகம் குடித்துவிட்டார்' என்று முடிவு கட்டினர். (இந்தப் பழக்கத்தை ஸாகேனுகிய 'குப்பைத் தொட்டியில்'தான் பயின்றேன் என்று அவர் சொல்லுவது வழக்கம்.)

''ஸ்பிரிடான்! என் முதுகு உமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது'' என்று டாக்டரைப் பார்த்து விரலை ஆட்டிக் கொண்டு, யேகூப் தமாஷாகச் சொன்னான்.

ஸ்பிரிடான் தன் மார்பில் கையை வைத்தார். இந்தச் சமிக்ஞைக்கு, ''உமது சேவைக்காகத் தயாராக இருக்கிறேன்'' என்று அர்த்தம்.

''நமக்கு வேறொரு டாக்டர் இருந்தால் தேவலை'' என்று, கான்ஸ்டான்டின் கெஸ்ஸோவின் காதில் முணங்கினான். ''ஜில்லாக் கமிட்டியினருடன் பேசும்போது, இவ் விஷயத்தை எடுத்துக் கூறு.''

''ஆகட்டும்'' என்றான் கெஸ்ஸோ.

...இருள் கனத்துவிட்டது. ஆகவே, எண்ணெய் விளக்கை ஏற்றினார்கள். நடைக் கூட்டத்திற்கு அநேகம் விளக்குகள் (சீசாக்களில் திரி போட்டு எரிக்கும் விளக்குகள்) கொண்டுவரப் பட்டன. அணைக்கட்டின் அருகிலிருந்த வாலிபர்கள் 'டார்ச்' விளக்கின் உதவியால் இறுதி ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்.

காமாசிச், தன்னால் இயன்றவரை மிகச் சிறப்பாக விருந்தினரை உபசரித்துக் கொண்டிருந்தாள்.

கூரையிலிருந்து தொங்கும் பல்பைக் காட்டிக்கொண்டு சொன்னாள்: ''என் மகன் இங்கே வெளிச்சம் வரும்'' என்கிறான்.

கெஸ்ஸோ வீட்டுக்கார அம்மாளின் கையைப் பற்றினான்.

''நீ நம்ப மாட்டாயா?''

''நம்புவது கடினம்தான், மகனே!''

''கொஞ்ச நாழி பொறுத்திரு. அப்புறம் பார்.''

கிழவர்கள் ஒரு மூலையில் கும்பலாக உட்கார்ந்திருந்தனர். யேகூப்பும் அவர்களோடு சேர்ந்துகொண்டான். காமாசிச் 'நம்புவது கடினம்' என்று சொன்னவுடன், அவர்கள் அவளைத் திரும்பிப் பார்த்தனர்.

'ஸாந்தாகிளாஸை'ப் போன்று சிவந்த கன்னங்களையுடைய ஒரு தலை நரைத்த கிழவன் சொன்னான்: ''என்ன இது வீட்டுக்கார அம்மா? நமது ஸாகேனை அவமானப்படுத்த நினைக்கிறாயா? அந்நியர்கள் கேட்டால் என்ன நினைப்பார்கள்?''

காமாசிச், ஏதோ சமாதானம் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாள். ஆனால் யேகூப் அவளை விடவில்லை.

''அட! காமாசிச்! இதிலென்ன அதிசயம் இருக்கிறது? பட்டணத்தில் மின்சார வெளிச்சம் இருப்பதை நீ கேள்விப்பட்டதில்லையா?...இது சந்திரனைப் போன்றது. ஒளியைக் கொடுக்கும்; ஆனால் உஷ்ணம் இராது.'' அப்புறம் தன் ஆசனத்தில் சௌகரியமாக உட்கார்ந்துகொண்டு யேகூப் சொன்னான்: ''நண்பர்களே! என் வாழ்க்கையில் நான் யாரைப் பார்த்தும் பொறாமைப்பட்டதில்லை. ஆனால், சில காலமாகக் கணவாய்களுக்கு அப்பாலிருக்கும் கிராமங்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டதுண்டு. அங்கு மின்சார ஒளி இருக்கிறது. அவர்கள் பாக்கியசாலிகள். யுத்தம் வருமுன்பே அவர்களுக்கு வெளிச்சம் கிடைத்துவிட்டது. சிலருக்கு மட்டும் எல்லா அதிருஷ்டமும் பொங்குகிறது...''

''யுத்தம் என்றால் யுத்தம்தான்'' என்று கான்ஸ்டான்டின் பேச்சிலே கலந்துகொண்டான். அவனுடைய அமைதியான குரல், உடனே எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது. ''யுத்தம் குறுக்கிட்டிராவிடில், நாம் எப்போதோ

விளக்குகளைப் பெற்றிருப்போம். நமது ரஸ்தா இருக்கிறதே, அது மற்றொரு இடைஞ்சல்......யுத்தம் வராவிடில், நம்மூரில் இதற்குள் விமானப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கும். யுத்தத்திற்கு முன்பு, ஒரு விமானம் இங்கு வந்து இறங்கியதே ஞாபகமிருக்கிறதா!''

''பிளைவுட்டில் செய்யப்பட்டிருந்தது. அப்படித்தானே!'' என்றான் யேகூப்.

''இதில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை'' என்றான் கான்ஸ்டான்டின். ''அது கித்தான் துணியினால் செய்யப்பட்டது தான்; ஆனால் மிக உறுதியானது...நாம் ஓராண்டுக்குள் மின்சார விளக்குகளைப் பெற்று விடுவோம். பிறகு விமானங்கள் இங்கு வரும். அவர்கள் நல்ல ரஸ்தாவை அமைத்துத் தருவார்கள்.''

''ஆம் அற்புதமான விஷயம் தான்!'' கிழவர்கள் இருமிக் கொண்டு, திருப்தியுடன் கைகளைத் தேய்த்தனர். அவ்வறையில் சில நிமிடங்கள் அமைதி நிலவியது......

ஆவல் நிறைந்த கூட்டமொன்று கொஞ்சங் கொஞ்சமாக முற்றத்தில் கூடிவிட்டது. நிக்கோலாவுக்குக் குஷி கிளம்பியது. அவசரம் அவசரமாக ஒரு சிறு மகாநாட்டைக் கூட்டினான். அந்த விளக்குத் திறப்பு விசேடத்திற்குப் பொது ஜனத்தன்மை அளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. இது கான்ஸ்டான்டினுடைய யோசனை. குடால் இதைக் கண்டு பிரமித்து நின்றான். இந்த மாதிரிப் பெரிய விருந்திற்குத்தான் தயாரில்லை என்றான்—அடேயப்பா, எவ்வளவு விருந்தாளிகள்! சிலர் தாங்களாகவே ஒயின் கொண்டு வருகிறோம் என்றனர். மற்றவர்களும் அவர்களைப் பின்பற்றி வெளியே சென்றனர்.

''நீங்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கும் போது, நாங்கள் எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்து விடுவோம்'' என்று அவர்கள் கூறினர்.

பள்ளி உபாத்தியாயரான முஷாக் (அருமையான சொற்பொழிவாளன்; சரியான டம்பாச்சாரி) விருந்தை நடத்தி வைக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். சிறந்த துணியினாலான அவனது நிஜார்கள், உயர்ந்த பூட்ஸுக்குள் அலட்சியமாகத் திணிக்கப்பட்டிருந்தன; இது, அவன் சொந்த உடைமைகளை எவ்வளவு பத்திரமாக வைத்துக்கொள்ளுகிறான் என்பதைக் காட்டியது. (இதை ஸாகேனியப் பெண்கள் வியந்து போற்றத் தவறுவதில்லை!)

கான்ஸ்டான்டினுடைய யோசனையின் பேரில், குடாலின் வீட்டு விசேடத்தைப் பற்றி அவன் பேசினான்:

''தோழர்களே!'' என்று உணர்ச்சி வேகத்துடன் ஆரம்பித்தான்: ''மக்கள் நெடு நாட்களாக மின்சாரத்தின் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். இன்றைய விசேடத்தைப் பற்றி நன்றாகச் சிந்திக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நம் கண் முன்னே பிறந்து வளர்ந்த ஒரு பையன், இன்று தானாகவே ஒரு மின்சார நிலையத்தைக் கட்டியிருக்கிறான். யுத்தம் வந்திராவிடில், நாம் முன்பே ஒரு எலெக்ட்ரிக் ஸ்டேஷனிலிருந்து வெளிச்சத்தைப் பெற்றிருப்போம். இன்று குடாலின் வீட்டிலும் அதற்கு அடுத்த வீடுகளிலும் விளக்குகள் ஒளி வீசப் போகின்றன. தோழர்களே! கிராம சோவியத்தின் சார்பாக உங்களிடம் அறிவிக்கிறேன்: 1948ல் நாம் சொந்தமாக...கூட்டுப் பண்ணையைச்சேர்ந்த எலெக்டிரிக் ஸ்டேஷனைப் பெறுவோம்!''

அவனது இறுதி வார்த்தைகள் கரகோஷத்திலும், சந்தோஷ ஆரவாரத்லும் அழிந்து போயின. அந்த விசேடம் உண்மையிலேயே பிரமாதமாகிவிட்டது. சோவியத் சர்க்காருக்கு நன்றி தெரிவித்துப் பிறர் பேசியவைகளும், இதே உற்சாகத்துடன் பாராட்டப் பெற்றன.

''ஸ்டாலின் நீடூழி வாழ்க!'' என்ற கோஷம் எழுந்தது. உடனே கூட்ட முழுவதும், இடிமுழக்கம் போன்ற கரகோஷத்தினால் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

திடீரென்று ஒரு கிழவன் முற்றத்தை நோக்கி ஓடி வந்தான். அவன் தலைப்பாகையை ஆட்டிக்கொண்டு, ஆவேசமாகக் கத்தினான்.

''நண்பர்களே! அமைதி! அமைதி, தயவு செய்து அமைதியாயிருங்கள்தோழர்களே'...கிராமத்தினர் எல்லோரும் ஒன்று திரண்டுதமது சொந்தக் கரங்களினால் மின்சார சக்தியைக் கட்ட வேண்டுமென்று நான் பிரேரேபிக்கிறேன்...''

''எலெக்டிரிக் ஸ்டேஷன் என்று சொல்லும்!'' என்று முஷாக் திருத்தினான்.

''ஆமாம் எலெக்டிரிக் ஸ்டேஷன்'' என்றான் கிழவன்.

''ஆமோதிக்கிறோம்'' என்று கூட்டம் கோஷமிட்டது. நிக்கோலா திடுக்கிட்டான். ஆனால், கான்ஸ்டான்டினின் இதயம் குளிர்ந்தது.

''இது ஒரு சிறந்த தீர்மானம் ஜனங்கள் எதை ஆதரிக்கிறார்களோ. அதுதான் சரியான முடிவு'' என்றான் கான்ஸ்டான்டின்.

''ஜில்லா நிர்வாகிகள் இதற்கு என்ன சொல்வார்கள்?'' என்று கேட்டான் நிக்கோலா.

''அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? நமது தீர்மானத்தை அவர்களுக்கு அறிவிப்போம்; சம்பிரதாயங்களை முறைப்படி அனுஷ்டிப்போம்.''

ஸ்மெல்லும் அவனது தோழர்களும் அணைக்கட்டு விஷயத்தில் மும்முரமாயிருந்தனர். சாய்வான தொட்டியின் இறுதியில் ஒரு பல் சக்கரம் பொறுத்தப்பட்டது. அதிலிருந்து எலெக்டிரிக் மிஷினுடன் ஒரு பெல்ட் இணைக்கப்பட்டது அதனருகில் வோல்ட் மீட்டரும், பொத்தானும் கொண்ட ஸ்விட்ச் போர்டும் இருந்தது. ஜனங்கள் இவைகளையெல்லாம் பரம அதிசயத்துடன் பார்த்துக்கொண்டு நின்றனர்.

'ஏய், ஸ்மெல்! வேலை எப்படி நடக்கிறது?'' என்று பொறுமையற்ற சோம்பேறிகள் கத்தினர். (அவர்களுக்குப் பஞ்சமேயில்லை!)

''வீடு தீப்பிடித்துவிட்டது போலக் கத்துகிறீர்களே!'' என்று ஸ்மெல் சிரித்தான். அவன் தலை பள்ளத்தில் மறைந்தது. சுவர்களை ஒரு மண்வெட்டியினால் ஒழுங்கு பண்ணிக் கொண்டு, அவள் மண் தரையில் ஊர்ந்தான். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு கன்னங்கரேலென்று வெளியே வந்தான்.

''பிசாசு!'' என்று அவனைப் பெண்கள் பரிகாசம் பண்ணினர். ''அசல் பிசாசுதான்!''

ஆனால், கிழவர்கள் ஸ்மெல்லைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். இந்த ஸ்மெல் உண்மையிலேயே அறிஞன்தான்; சந்தேகமில்லை!

கடைசி வினாடி நெருங்கிக் கொண்டிருந்து. இரு முரட்டு ஆசாமிகள் அணைக்கட்டையைத் திறந்துவிட்டார்கள். தண்ணீர் தொட்டி வழியாகப் பாய்ந்து சென்றது. முஷாக்கும், ஸ்மெல்லும் மிஷின் அருகே சென்றனர்.

''அதோ பாருங்கள்!'' என்று விளக்கைச் சுட்டிக் காட்டினான் கெஸ்ஸோ'

மின்சார சக்தி இயங்க ஆரம்பித்தது. மிஷின் இலேசாக இரைந்தது. சிறு மின்னல் வீச்சைப்போல் விளக்கு எரிய ஆரம்பித்தது; பிறகு திடீரென்று அணைந்துவிட்டது.

''பெல்ட் அறுந்துவிட்டது'' என்றான் முஷாக்.

நிக்கோலாவின் நிழல்போல நின்றிருந்த அதாமூர் வெறுப்புடன், மெல்லிய குரலில் அவனிடம் சொன்னான்;

''பாவம்...இந்தப் பையன்கள் பெரிய அவசரக் குடுக்கைகள்!''

பெண்கள் சமயலறையில், அடுப்பு வெளிச்சத்தில் வேலை செய்துகொண்டிருந்தனர். ஏனெனில் எல்லாச் சீசா விளக்குகளும், அவைகளுக்குப் பதில் மின்சார வெளிச்சம் கிடைக்கும் என்ற வாக்குறுதியுடன், அணைக்கட்டிற்கு எடுத்துச்செல்லப் பட்டிருந்தன. ஆனால் பாவம், மின்சார வெளிச்சம் தலை காட்டவில்லை!

கால் மணி நேரத்திற்குள் பெல்ட் பழுது பார்க்கப் பட்டுவிட்டது. மீண்டும் மிஷின் இரைய ஆரம்பித்தது. வீட்டிலும், சமையலறையிலும், நடைக் கூடத்திலும், முற்றத்திலும், வாயிலுக்கு மேலும், மாட்டுக்கொட்டகையிலும், கிணற்றிலும் திடீரென்று விளக்குகள் எரிய ஆரம்பித்தன. ஒரு நிமிடம், இரண்டு நிமிடம், ஐந்து நிமிடங்கள் எரிந்துகொண்டேயிருந்தன.

''ஸ்மெல்! ஸ்மெல் எங்கே?'' என்ற கோஷம் எழுந்தது.

''ஸ்மெல் வாழ்க! ஸ்மெல் வாழ்க! ஸ்மெல் வாழ்க!''

''அவனை மேலே தூக்கிப் போட்டுப் பிடியுங்கள்!''

தங்கள் கிராமத்தில் ஸ்மெல் என்று ஒரு சிறந்த இளைஞன் இருப்பதைக் காண, ஸாகேனியர்களுக்குக் கங்கு கரையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

மதுச்சாடிகள் சுற்றிவரத் தொடங்கின. மாமிசப் பலகாரங்கள் வழங்கப்பட்டன, அநேகர் மதுவைப் பருகிக் கொண்டிருந்தனர். விளக்குகள் இன்னும் எரிந்துகொண்டு தானிருந்தன.

''ஸாகேன் நதி வற்றும் வரையில், விளக்குகள் எரிந்துகொண்டேயிருக்கும்!'' என்றான் கெஸ்ஸோ.

ஆம், நண்பர்களே! ஸாகேனில் அது மறக்க முடியாத இரவுதான்; அற்புதமான இரவுதான்!

## 17

மின்சாரம் கண்டுபிடிக்கப் பட்டவுடன் உலகத்தினருக்கு இவ்வளவு ஆச்சரியம் ஏற்பட்டிருக்காது. தமது கிராமத்து இளைஞன் ''பட்டணத்து விளக்கை'' உண்டாக்கியதைப் பற்றி அவ்வளவு ஆச்சரியப்பட்டனர் ஸாகேனியர்கள்! மின்சார விளக்கு உலகில் இருப்பது அந்த ஜனங்களுக்கு அதிசயமாகப் படவில்லை. அது ஸாகேனுக்கு வந்துவிட்டதைப் பற்றித்தான் அவர்களுக்குப் பரம அதிசயம்! யாரோ சிலர் கிராமத்தை அப்படியே கிள்ளியெடுத்து, பட்டணத்திற்குச் சமீபத்தி லுள்ள பள்ளத்தாக்கில் வைத்துவிட்டதைப் போன்ற உணர்ச்சி!

ஸ்மெல்லை இதற்கு முன் பார்த்திராதவர்கள் போல, விவசாயிகள் அவனுடைய உடலைத் திருப்பித் திருப்பி நாலா புறங்களிலிருந்தும் நோக்கினர். அவனைத் திரும்பத் திரும்பக் கேட்டனர்.

''இதைச் செய்தது உண்மையில் நீதானே?''

ஸ்மெல் உளம் குளிரப் புன்னகை செய்தான். ''நான் என்னத்தைச் சொல்வது? இதைப் போன்ற இயந்திரத்தை உங்களுக்குச் செய்து தரட்டுமா?'' என்று பைக்குள் கையைப் போட்டுக்கொண்டு, கேள்வி கேட்டவரைப் பெருமையாகப் பார்த்தான்.

இந்த இளைஞனின் உடலை வியப்புடன் பார்த்துக்கொண்டு அவர் கூறினார்;

''நீ பெரிய பெரிய காரியங்களையெல்லாம் சாதிக்கப் போகிறாய். அதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.''

ஒரு நாள், தொண்டு கிழவனான ஷாங்கேரி கான்பா ''பட்டண விளக்''கைப் பார்ப்பதற்காக வந்தான். அவன் கதவை அடைத்துத் திரைகளைப் போடச் சொன்னான்.

''இப்போது அந்தச் சக்தியைக் காட்டு'' என்றான்.

இலேசாக மஞ்சள்நிற வெளிச்சம் அறையில் பரவியதும், அந்தக் கிழவன் ஒன்றும் பேசாமல் வெளியே வந்தான்; மிஷின் அருகே சென்று, அங்கேயே நெடுநேரம் நின்றுகொண் டிருந்தான். வெள்ளிச் சரிகை இழையும்பழைய ஸிர்காசியன் கோட்டும், கையில் 'அக்ரூட்' மரத்தடியும் உள்ள அந்தக் கிழவன் சிருஷ்டியின் புதிரை விடுவிக்க முயலும் யாரோ ஒரு

ரிஷியைப்போல நின்றுகொண்டிருந்தான். பிறகு குடாலின் பக்கம் திரும்பிக் கம்பீரமாகச் சொன்னான்:

''நீ ஒரு அசல் மனிதன்!''

அவன் ஒரு மரக்கட்டையில் உட்கார்ந்தான். புகைக் குழாயை வெளியில் எடுத்தான். சக்கிமுக்கிக் கல்லை மடிமீது போட்டுக்கொண்டான். அவனுடைய கொள்ளுப் பேரனை பத்து வயதுச் சிறுவன், பஞ்சை நாலாபுறமும் சிதறினான்; கொஞ்சம் பிய்த்தெடுத்துத் தாத்தாவிடமும் கொடுத்தான். குடால் கிழவனருகே உட்கார்ந்தான்.

ஷாங்கேரி, மெதுவாகத் தனது பழங்காலப் புகைக் குழாயை நிரப்பினான். அவனுடைய காளான் போன்ற உதடுகள் மெல்ல அசைந்தன.

''இதை யார் உனக்குக் கற்றுத் தந்தார்கள், குடால்?'' என்று, அணைக்கட்டைப் பார்த்துத் தலையை அசைத்துக் கொண்டு கேட்டான்.

நன்றாகப் பேரம் பண்ணுமுன் ஜனங்கள் கையைத் தேய்த்துக் கொள்வதுபோல, குடால் கையைத் தேய்த்துக் கொண்டான்.

''அதோ இருக்கிறானே என் மகன்—அவன்தான்.''

''குடால்! அவனுக்கு வயசு என்ன?''

''இருபத்துமூன்று.''

''இன்னும் கலியாணமாகவில்லையே?''

குடால் இல்லையென்று தலையசைத்தான்.

''இல்லை. சொற்ப வயசுதானே ஆகிறது.''

கிழவன் சக்கிமுக்கிக் கல்லைத் தட்டினான். அந்த வேலையில் நெடுநேரமாகக் கர்ம சிரத்தையுடன் ஈடுபட்டான் பஞ்சு புகைய ஆரம்பித்ததும், அவன் வருத்தமாகக் காட்சியளித்தான்.

''உன்னுடைய பையனா?'' என்று, தன்னிடமிருந்து ஓடப் பார்க்கும் சிந்தனையை இழுத்துப் பிடித்துக்கொண்டு கேட்டான்: ''அவனுக்குக் கற்றுக் கொடுத்தவர் யார்?''

''ஷாங்கேரி! அதை நான் எப்படிச் சொல்ல முடியும்? அவன் பள்ளிக்கூடம் போனான்...வேலை வெட்டிகளில் கெட்டிக்காரன். முன்பு ஒரு தரம் பட்டணத்திற்குச் சென்றான்...

அங்குள்ள அதிசயங்களை எல்லாம் பார்த்தான்...என்னிடம் பணம் வேண்டுமென்று கேட்டான்; எல்லா மிஷின்களையும் வாங்கினான். அங்கு பலமுறை சென்று, எல்லா இரும்புகளை யும் இங்கே கொண்டுவந்து விட்டான்...''

''அற்புதம்தான். ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். அற் புதம்தான்!'' என்று, புகைக் குழாயை வாயிலிருந்து எடுத்துக் கொண்டு அக் கிழவன் சொன்னான்: ''காலம் எவ்வளவு மாறிப்போய் விட்டது...!''

சிறிது நேரத்திற்குப் பின் ஷாங்கேரி மீண்டும் புகை குடிக்க ஆரம்பித்தான். சாம்பல்நிறப் புகை, அவன் கண் முன்னர் மிதந்து சென்றது. தனது நீண்டகால வாழ்க்கையை அவன் நினைத்துப் பார்த்தான். அவர்கள் ஐந்து சகோதரர் கள்; ஐந்து காண்பாச் சிங்கங்கள்! அவர்களில் ஷாங்கேரிதான் கடைகுட்டி. மூத்தவனை தாவுத், அன்பும் இரக்கமும் நிறைந்த இளைஞன். குலவிரோதி மார்ஷன் இளவரசனின் கைக்கூலி ஒருவனால் கொல்லப்பட்டான்...அவனது ஆன்மா சாந்தியடைக! அவனுக்குப் பத்தாள் பலமிருந்தது. பசுமை யான மலைகள்கூட அவனுக்கு ஈடாகா. அவை ஒருக்காலும் ஈடாகமாட்டா!...யாரோ ஒரு பணக்காரனின் குதிரை விஷய மாக, அழகில் சிறந்த இரண்டாவது இளைஞனும் ஸைபீரியா வுக்கு நாடு கடத்தப் பெற்றான்; பிறகு அவன் திரும்பி வரவே யில்லை. அவன் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று ஜனங்கள் சொன்னார்கள். ஆனால் அவன் இளைத்துப்போய் விட்டான்; சிறையில் மெழுகைப் போன்று உருகிக் கரைந்துபோய் விட் டான். மீதமுள்ள இரு சகோதரர்களும் மதுவில் நாட்டம் கொண்டு விட்டனர். அவர்கள் விருந்துகளுக்கும், விழாக் களுக்கும் அழைக்கப்பெற்று, ''தமாடா''க்களாக (மதுவை ஆரம்பத்தில் குடிப்பவர்களாக) அமர்த்தப்பட்டனர். மது அவர்களின் உயிரைக் குடித்து விட்டது. அவர்களுடைய குடல் அழுகிப் போய்விட்டது. அம்மா அடிக்கடி சொல்வாள், ''குடிக்காதே, குடிக்காதே!'' என்று. அவர்கள் இருவரும் அவ்விதம் மாண்டனர். எவ்வளவு நல்ல மனிதர்கள்! ஷாங் கேரி மட்டும்? கை முஷ்டியினால் ஒரு காளையை வீழ்த்திவிடக் கூடியவன். அவனது வலிமை பெயர் பெற்றது. ஒரு வார்த்தை சொன்னால் போதும். அவன், நரகலோகத்திற்குச் சென்று அங்குள்ள கொள்ளிக் கட்டையைத் தூக்கிக்கொண்டு வந்து விடுவான்! அவன் வாழ்நாளில் செய்ததெல்லாம் ஒரு காரியமா? நூற்றைம்பது ஆண்டுகள் வாழ்ந்துதான் என்ன பயன்?

''ஐயோ, குடால்!...'' என்று முனகினான் கிழவன்.

''என்ன ஷாங்கேரி?''

''குடால்! என் வாழ்க்கை...என்னத்தைச் சொல்ல? என் இதயத்தில் ஒரு வேதனை புழுவைப்போலக் குடைகிறது. அதன் பெயர் பொறாமை; நல்லதைப் பார்த்து ஏங்கும் பொறாமை. ஆனால் அதை, நீ புரிந்துகொள்ள முடியாது... என் வார்த்தையைக் கேள். நான் இங்கே பிறந்து வளர்ந்தவன்; இன்ப மதுவைச் சுவைக்கலாம் என்று கனவு கண்டு வாழ்ந்தவன். ஆனால், அந்திமகாலம் நெருங்கும்போது, அந்த மதுக்கோப்பை......அதைப்பற்ற எனக்குச் சக்தியில்லை; அதை எட்டி வாங்க என் கையால் இயலவில்லை...''

ஷாங்கேரி பெருமூச்சுவிட்ட வண்ணம் எழுந்தான். அவள் குடாலிடம் விடைபெற்றுக்கொண்டு, தன் கொள்ளுப் பேரனின் தோளில் சாய்ந்தவண்ணம் நடந்து சென்றான்.

கெஸ்ஸோ அவனை வழியில் சந்தித்தான்.

''தாத்தா! உங்களுக்குக் குடால் வீட்டில் இருப்பது பிடிக்கிறதா?''

கையைக் கண்ணில் குவித்துக்கொண்டு, ஷாங்கேரி உற்றுப் பார்த்தான்.

''நீயா?'' என்று கரகரத்த குரலில் கேட்டான்: ''கரற்மனின் பேரனா?...... உன் தாத்தாவைப் போலவே இருக்கிறாய்!...'' என்று சொல்லிக்கொண்டே போக முயன்றான்.

''ஒரு நிமிஷம்...தாத்தா...எங்கள் வீட்டுக்கு வருகிறீர்களா?'' என்று, கெஸ்ஸோ பெருமுயற்சி செய்து ஷாங்கேரியைத் தடுத்து நிறுத்தினான்.

''முடியாது'' என்று தலையாட்டிக் கொண்டே சொன்னான் கிழவன்: ''இந்த விஷயத்தைப்பற்றிச் சாவகாசமாய் யோசிப்பதற்காக நான் சீக்கிரம் வீட்டிற்குப் போக வேண்டும் தெரிகிறதா? குடாலின் தாத்தா அவர் ஒரு விசித்திரப் பிறவி...அவருடைய பேரனும் அவரைப் போலவே இருக்கிறான். என்ன?''

கெஸ்ஸோ கேள்வி கேட்கத் தயங்கினான்.

''எங்கள் வீட்டுக்குப் பின்புறமுள்ள சாம்பல் நிறக் குன்றைப்பற்றி உங்களிடம் தெரிந்துகொள்ள ஆசை.''

''குன்று?''

''அதாமூரின் நிலத்திலுள்ள குன்று—முன்பு அதாமூரின் நிலமாக இருந்ததே அதிலுள்ளது...''

''எந்த அதாமூரைச் சொல்லுகிறாய்? யாருடைய மகன் அவன்?'' கிழவனின் கண்கள் சுருங்கின. அவன் நீண்ட பெரு மூச்சு விட்டான். அவனிடம், புப்புசங்களுக்குப் பதிலாகக் கொல்லனின் துருத்திகள் இருந்தனபோலும்! எனக்கு அநேகம் குன்றுகளைத் தெரியும். உனக்குத் துப்பாக்கி மருந்து செய்வதைப் பற்றிச் சொல்லித் தரட்டுமா?... அநேகம் தடவை நான் அதைச் செய்திருக்கிறேன்...கறுப்பு மலைப் பாறை, பெட்டைக் கோழியின் கழிவுப் பொருள்கள், அடுப்புக் கரி... கடவுள் என்னைக் காப்பாராக!''

கிழவன் மூச்சுவிடுவதற்காகச் சிறிது நின்றான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கெஸ்ஸோ வேகமாக மற்றொரு கேள்வியைக் கேட்டான்.

''ஸாகேனில் சிறந்த சோள விளைச்சல் இதுவரை எவ் வளவு இருக்கும்?''

''நூறு!'' என்று தலையாட்டிக்கொண்டே சொன்னான் கிழவன்: ''நூறு பூடுகள்தான்...சிறந்த விளைச்சலின் போது... புரிகிறதா?''

''அப்படியானால் நீங்கள் குன்றைப்பற்றி ஒன்றும் கேள் விப்பட்டதில்லை?''

கிழவன் ஆழ்ந்து யோசித்தான்; அவன் உதடுகள் அசைந்தன.

''ஞாபகம் வருகிறது!'' என்று கடைசியாக நடுங்கும் விரல்களால் தாடியை உருவி விட்டுக்கொண்டு சொன்னான்: ''குடாலின் தாத்தா—நான் தவறிவிடாமல் இருக்கக் கடவுள் அருள்புரிவாராக!— விநோதமான மிஷின்களைச் செய்துகொண்டிருப்பார்...அவர் இங்கு ஓர் அதிகாரியுடன் நெருங்கிப் பழகினார்...அவர்கள் குன்று விஷயமாக ஏதோ செய்கிறார்களென்று மக்கள் நிச்சயமாகப் பேசிக்கொண் டார்கள்...அது கட்டுக்கதையாகவும் இருக்கலாம்...நீ என் வீட்டிற்கு வா. துப்பாக்கி மருந்து செய்வதைப் பற்றிச் சொல்லித் தருகிறேன்...அதை நானே செய்வது உண்டு... அது ஒருகாலம்!'' கிழவன் மீண்டும் யோசித்தான் ஒன்றும் ஞாபகம் வராததால், கெஸ்ஸோவிடம் கையை நீட்டினான்.

''மகனே! என் வீட்டுக்கு வா'' என்முன்.

கெஸ்ஸோ, அவன் தலை மறையும் வரைபார்த்துக் கொண்டு நின்முன். ஸாகேனின் சரித்திரத்திலே ஒரு நூற்ருண்டு நடந்து செல்வது போலிருந்தது; பிரமிக்கத் தகுந்த, நீடித்த ஆயுள் உள்ள பற்பல மனிதர்களை உலகுற் குத் தந்த சரித்திரம் நடந்து செல்வதைப் போலிருந்தது. இப்பேறற்பட்டவர்கள் எல்லோரும், நிலத்தின்மீது விழும் நிழல்களைப்போலக் காலப்பாழில் மறைந்துவிட்டது வருந்தத் தக்க விஷயந்தான்.

## 18

வஸந்தம் அவ்வாண்டில் மிகச் சரியான வேளையில் வந்துவிட்டதென்பது, ஸாகேனியர்களின் ஒருமுகமான கருத்து. நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்; ஆச்சரிய மூட்டத்தக்க விதத்தில் முன்னுடியே தோன்றியுள்ள வெது வெதுப்பு, அற்புதத் தன்மைவாய்ந்த குன்றைப் பற்றிய பேச்சுக்கள், குடாலின் மின்சார விளக்கு—இவை யெல்லாம் அதிமுக்கியமான சம்பவங்கள் அல்லாமல் வேறு என்ன? ஆகவே, கிராமம் முழுதும் பரபரப்பாக இருந்ததில் வியப் பில்லை. ஒவ்வொரு நாளும் புதுமையையும், ஆச்சரியத்தை யும் அள்ளிக்கொண்டு வருவதாகத் தோன்றிற்று.

ஆனல், ஸாகேனியர்களின் மகிழ்ச்சியைச் சகித்துக் கொள்ளாத, அவர்களது உற்சாகத்தை ரசிக்க முடியாத—இவ்வாறு அது அதாமூரின் மதுச்சாலையில் ஒத்துக்கொண்டது —பிறவி ஒன்று ஸாகேனில் இருந்தது அந்தச் சுடுமூஞ்சிக்கு, ஸாகேனிய இதயமே இல்லை! குடாலின் மின்சார விளக்கைப் பற்றி அவன் சொன்னன்: ''இதை யெல்லாம் தூக்கி அடிக் கக்கூடிய விஷயங்களை நானும் பார்த்திருக்கிறேன்.'' பிறகு அவன் மதுக்கிண்ணத்தை உயர்த்திக்கொண்டு 'கடகட' வென்று சிரித்தான். அந்தச் சுடுமூஞ்சி, ஸாகேனியர்களின் குதூகலத்தை அனுபவிக்கவில்லை; அவர்களின் கோபத்திற்கு ஆளாக நேருமே என்று அஞ்சவுமில்லை. அந்த ஆசாமியின் பெயரை நீங்கள் அநேகமாய் ஊகித்திருப்பீர்கள். அவன் பெயர் ரஷீத்.

தன் கிராமத்தினரை ஏளனம் செய்து அவமதிப்பதற் தாக, அவனை யாராவது முன்கோபிகள் சரியானபடி உதைக் கக்கூடும். ஆனல், ரஷீதிடம் ஓர் அபூர்வமான ஆகர்ஷண சக்தி இருந்தது; ஆகவே, அவனைப் பெரும்பாலும் அவர்கள்

மன்னித்து விடுவார்கள். இதுதவிர, அவன் ஓர் அருமை யான செம்மான். அவனுடைய தொழில் நுட்பம் ஸாகேனி யப் பெண்களின் இதயத்தைக் கவர்ந்தது. அவனுடைய வேலைத்திறன் அப்பழுக்கற்று இருந்தது. அவன் பெண்களின் செருப்புகளையும், மெல்லியதோலினாலான—பட்டுக் காலுறை களைப் போன்றிருக்கும் உயர்ந்த பூட்ஸுகளையும் செய்து வந்தான்.

ஆனால் அவனுக்குப் பிசாசின் குரூரமும், தற்பெருமை யும் இருந்தன!

பிறருடைய தோட்டத்தின் முன் வாயிற்படி வரையில் தன்னுடைய குதிரையைச் செலுத்தித் தலைக்கு மேலுள்ள ஆப்பிளின் மீது பின்னாலிருந்து சுடுவது பற்றியோ, அல்லது எல்லோருடனும் ஒன்றாக மதுவருந்துவது பற்றியோ அவன் கவலைப்படவில்லை. ஆகவே வயது முதிர்ந்த பெரியோர்கள்' அவனைத் தன் இஷ்டப்படி விட்டுவிட்டால் தானாகவே அழி வைத் தேடிக்கொள்வான் என்றனர். ஆனால் ரஷீத் ஒன் றுக்கும் கவலைப்படவில்லை. அவன் மாமிசத்துண்டுகளை நக்கி னான்; பெண்கள் மீது கண் வீகினான்.

அவன் அப்பொழுது பக்கத்து வேலியை ஜாக்கிரதை யாக அணுகிக்கொண்டிருந்தான். அங்கு ஒரு கிணறு இருந் தது. வேலியின்மீது சாய்ந்துகொண்டு, ஐம்பது அடிக்கு அப்பாலுள்ள சதுரவடிவமான கதவை உற்றுப்பார்த்தான். அவன் வாய் ஒரு பாடலை முணகிற்று.

ஐந்து நிமிடம் ஆவதற்குள், ஒரு பெண் வாளிகளுடன் முற்றத்திற்கு வந்தாள். ஊளையிடும் நாய்களை அதட்டிய வண்ணம் அவள் கிணற்றை நோக்கிவந்தாள். உருளைமீது சங்சிலி 'கட கட' வென்று சப்திக்கத் தொடங்கியபோது, ஒரு இனிய குரல் கேட்டது.

சங்கிலியின் சப்தம் நின்றது.

''யார் அது?''

''நான்தான் ரஷீத்'' என்று வேலிக்கு அப்பாலிருந்து பதில் வந்தது. நமது மன்மதன், தன் வார்த்தைகளை நிரூபிக்க வேலியைத் தாண்டிக் குதிக்க முயன்றான்.

''குதிக்கக்கூடாது!'' என்று காமா வேலிவரை ஓடிவந்து சொன்னாள். அவளது சொற்கள் ரஷீதுக்கு அந்நியோன்னிய மாகப்பட்டன. தன்னை அவள் வெறுத்து ஒதுக்கவில்லை என்ற

தைரியம் அவனுக்கு உண்டாயிற்று. எனினும், மேலும் முன்னேறாமல் மனதை அடக்கிக்கொண்டான்; மீண்டும் நாசூக்காகப் பழைய இடத்திற்கே குதித்து நின்றான்.

''காமா! சௌக்கியமா?'' என்று தன்னால் இயன்ற வரையில் இதமான தொனியுடன் ரஷீத் பேசினான். காமா தன்னைச் சமாளித்துக்கொண்டு, சிறிதும் தட்டுத்தடங்கலின்றிப் பேசத்தொடங்கினாள். இவ்வகையில் ஸாகேனியப் பெண்கள் கெட்டிக்காரிகள். (நாம் அறிந்தவரையில் உலகத்திலுள்ள மற்றப் பெண்களும் அப்படித்தான்.)

''உங்களுடைய அன்புக்கு நன்றி'' என்றாள் காமா. ''இருட்டைக் கண்டு உங்களுக்குப் பயமில்லையா?''

''காமா! நான் தினந்தோறும் இரவில் உன் வீட்டருகே நிற்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா?''

''தெரியாது.''

''நான் இவ்விடத்தில் மணிக்கணக்காக நிற்கிறேன்!'' என்று ஒரு அண்டப்புளுகை அவிழ்த்துவிட்டான் ரஷீத்.

''நீங்கள் அப்படிச் செய்யக்கூடாது, எதற்காக நிற்க வேண்டும்? உங்களைப் பார்த்தால் ஜனங்கள் என்ன நினைப்பார்கள்?''

''அவர்கள் என்ன நினைத்தால் எனக்கென்ன?'' என்று ரஷீத் வார்த்தைகளைக் கொட்டிவிட்டான். ஆனால், உடனே அவ் வார்த்தைகளுக்காக வருந்தினான்.

''அப்படியானால்—போய் வாருங்கள்!'' என்று காமா தண்ணீர் இழுக்கத் தொடங்கினாள். சங்கிலி அதிர்ந்தது தண்ணீர் இரைச்சலுடன் வாளியில் பாய்ந்தது.

''ஒரு நிமிஷம் பொறு, காமா!'' என்று ரஷீத் கெஞ்சினான்: ''என் பேச்சைக் கேட்காவிடில் அங்கே குதித்துவிடுவேன், காதில் விழுகிறதா?''

இந்தப் பயமுறுத்தலுக்குப் பலன் இருந்தது. காமா மீண்டும் வேலியருகே வந்தாள்.

''நான் சொல்ல நினைத்தது அதுவல்ல...''என்று ரஷீத் குரலைத் தணித்து வேகமாக முனகினான்: ''என்னை ஏசாதே; என்னைக் கோபிக்காதே நான் உன்னைக் காதலிக்கிறேன்.........''

''ரஷீத்!''

''ஆம்'' என்று அந்த வாலிபன் கூறினன்: ''உண்மை. நான் உன்னைக் காதலிக்கிறேன்.''

உண்மையை மறைக்காமல் அவனிடம் சொல்லி விடுவது தன் கடமை என்று காமா தீர்மானித்தாள்.

''ஐயோ பாவம்!'' என்று அவனது உணர்ச்சி மிகுந்த சொற்களுக்காக இரங்கினுள்: ''நீங்கள் சொல்வது புரிகிறது. ஆனுல் பயனில்லை.''

''காமா, ஏன்? ஏன்?''

ரஷீத் உண்மையிலேயே காமாவைக் காதலிக்கிருனு? அல்லது அவன் காதலுக்கு வேறு காரணங்கள் உண்டா? அவள் தனியாக இருப்பதினுல்தான் இந்த ஸாகேனிய மன்மதனுக்குக் காதல் பொங்கி விட்டதா? இதற்கு நாம் பதில் சொல்ல முடியாது—காரணம் எவ்விதமாகவும் இருக்கலாம்; இது ஸாகேனைப் பற்றிய உண்மைக் கதையாதலால், நாம் கற்பனுலங்காரம் செய்ய விரும்பவில்லை.

''முதலாவதாக...'' என்று அதை நிறுத்திவிட்டு இரண்டாவதற்குப் போகத் தீர்மானித்தாள் காமா...''இரண்டாவதாக...'' என்று சிறிது நிறுத்தி விட்டுத் தொடர்ந்தாள்: ''இந்த விவகாரங்களைப் பற்றி யோசிக்க இது தருணமல்ல... நான் கல்வி கற்க விரும்புகிறேன்...''

''கல்வி கற்கவா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் ரஷீத்: ''நீ பள்ளிக்கூடம் போனதில்லையா?''

''ஏழாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். ரஷீத்! ஏழே வகுப்புகள் தான். விவசாயக் கல்லூரியைப் பற்றி நீங்கள் எப்போதேனும் எண்ணியதுண்டா?''

''இல்லை எண்ணியதே இல்லை'' என்று ரஷீத் ஒப்புக் கொண்டான்.

''நான் அதைப்பற்றிநிரம்ப யோசித்திருக்கிறேன்'' என்று காமா இனிமையாகச் சொன்னுள்; ''கல்வி என்பது ஒளி; அறியாமை என்பது இருள்''.

ரஷீத் 'கடகட' வென்று சிரித்தான். அவளுடைய காரணத்தை நொண்டிச் சாக்கு என்று கருதினுன். ''பொல்லாத கள்ளி. அதிகக் கிராக்கி பண்ணுகிருள்'' என்று எண்ணினுன்.

''இதில் ஏதோ சூது இருக்கிறது. படிப்பிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அரைகுறை விவசாய நிபுணனை கெஸ்ஸோ

தான் இதற்கு மூல காரணம். அந்தக் கிறுக்கன் தான் உன் மூளையைக் குழப்பி விட்டானோ?'' ரஷீத், கெஸ்ஸோவை இறக்கிப் பேசிக் கொண்டேயிருந்தான், அந்தப் பெண் அவனை மதிக்கக்கூடாது என்ற கருத்திலே.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு, காமா அமைதியாகச் சொன்னாள்: ''இவ்வளவுதானா?''

''ஆம்.''

''வணக்கம்!'' என்று வீட்டை நோக்கித் திரும்பினாள் காமா.

## 19

மறுநாள் காலையில் குளிர் அதிகம். விண்ணையும் மண்ணையும் அற்புதச் சரங்கள் இணைத்தன. இந்த அடர்த்தியான மழையில், யேகூப் வீட்டிற்குள் ஒரு விருந்தாளி நுழைந்தான். யேகூப் அதாமூரை வாயிலில் சந்தித்து வரவேற்றான்; கணப்பருகே குளிர்காயும்படி அழைத்தான்.

''கெஸ்ஸோ எங்கே?'' என்று அதாமூர் உட்காரும்போது கேட்டான்.

''இதோ இருக்கிறேன்'' என்று கெஸ்ஸோ சமையலறையிலிருந்து வெளியே வந்தான்.

''மழைக்காலம் திரும்பி விட்டது'' என்றான் அதாமூர் ''உடலுக்கு மிகக் கெடுதல்—உஷ்ணத்திற்குப் பிறகு குளிர்ச்சி நல்லதல்ல.''

''அம்மா, கிண்ணங்களை எடுத்து வா'' என்று மகளை அழைத்தான் யேகூப். ''இக்காலத்தில் குளிருக்கு ஏற்ற மருந்து 'வோட்கா' தான். எனக்குப் புளித்த வோட்காதான் பிடிக்கும். உனக்கு?''

''அதுதான் ஸ்டிராங்கான வோட்காதான் எனக்கும் வேண்டும். அது வாத நோயைக் குணப்படுத்தி, வீரிய சக்தி உண்டாக்குகிறது.''

வோட்காவை ருசிபார்த்து, அதன் மருந்துச் சத்தை ஆராயும் சந்தர்ப்பம் அதாமூருக்கு அளிக்கப் பட்டது. அவர்கள் சோள உப்புமாவையும், வறுத்த பால் கட்டியையும் சாப்பிட்டனர்.

கெஸ்ஸோவிற்கு மதுவருந்தும் எண்ணமே இல்லை. நெஞ்சு நிரம்பக் கவலையிருப்பினும், (ஸாகேனில் சொல்லுவது போல) விருந்தாளியோடு உட்கார்ந்து தமாஷாகக் குடிப்பது வீட்டுக்காரனின் முதல் கடமையாகும். விருந்தினனை உபசரிப்பது, பிற வேலைகளைப் போல ஒரு வேலையாகும். (அப்படித்தான் ஸாகேனியர்களாகிய நாங்கள் எண்ணுகிறோம்.)

சாதாரணத் தொனியில் அதாமூர் கெஸ்ஸோவிடம் கேட்டான்: ''கெஸ்ஸோ! உன் திட்டம் எப்படியிருக்கிறது?''

''எந்தத் திட்டம்!''

''வயல்களுக்கு மருந்து தயாரிக்க, நீ அந்தக் குன்றைப் பிளந்துவிடப் போகிறாய் என்று கேள்விப் பட்டேன்.''

பதில் என்ற பெயருக்குக் கெஸ்ஸோ ஏதோ முனகினான். கணப்பில் இன்னும் கொஞ்சம் விறகை வீசினான். புகை படிந்த கூரையை நோக்கி ஆயிரம் பொறிகள் கிளம்பின.

''ஏன் கூடாது? அது ஒரு நல்ல யோசனை; குன்றும் மிகச் சிறந்தது; தங்கச் சுரங்கம்தான். அதைக் கண்ணின் கருமணி போலக் காப்பாற்றினோம்'' என்று அதாமூர் புளுகினான். ''சத்தியமாகச் சொல்லுகிறேன். என் தகப்பனார் என்ன சொன்னார் தெரியுமா? 'அதைக் கவனமாகப் பார்த்துக்கொள். அது ஒரு களஞ்சியம்; குன்று அல்ல!' என்றார். அது நமது சொந்த இடத்தில் இருக்கிறது தெரியுமல்லவா?''

குன்றின் இருப்பிடத்தைப் பற்றிய அதாமூரின் குறிப்பு அவர்களுக்குச் சுரீரென்றது.

''அருமை நண்பர்களே! நீங்கள் சம்பாதிக்கப் போகும் லாபத்தை நானும் அறிவேன்.''

''லாபமா?'' என்று கெஸ்ஸோ எரிச்சலுடன் மீண்டும் கேட்டான். ''என்ன லாபம்? எங்களுக்கு அது ஏன் கிடைக்க வேண்டும்?''

''ஏனா? இது உன் எண்ணம்தானே உனது வேலைதானே? இல்லையா? ஆகவே லாபமும் உனக்குத்தான். நீ அதை இப்போது விற்கவந்தால்—கிலோகிராமாகவோ அல்லது 'பூடா'

கவோ விற்கவந்தால்—ஆயிரக்கணக்காகச் சம்பாதிக்கலாம். ஒருவிதச் சிரமமும் இல்லாமல்! எளிதானவேலை. ஒரு கோடாரியால் அதில் கொஞ்சம் எடுத்துக்கொள்; அதை நிறுத்துப்பார். அதை நீ விற்கமுடியாவிட்டாலும், பட்டணத்திலுள்ளவர்கள் உனக்கு உயர்ந்த பரிசு கொடுப்பார்கள் சிறந்த கண்டு பிடிப்பு அல்லவா?''

யேகூப் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால், அதாமூரின் கருத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. 'என்ன லாபம்? என்ன துண்டுகள்? இதற்கிடையில், அதாமூர் கண்களை மூடிக் கொண்டு ரூபிள்களையும், கோபெக்குகளையும் பிரமாதமாகக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். கணக்கு முடிந்ததும், மீர்பா இனத்தை வானளாவப் புகழ்ந்தான். யேகூப், கெஸ்ஸோ ஆகியோருடைய சுயநலமின்மையை முன்கூட்டியே தூக்கிப் பேசினான்.

''வந்தனம், வந்தனம்'' என்றான் யேகூப்.

ஆனால் கெஸ்ஸோ? இந்த வாய் வீச்சைக்கண்டு மகிழ்ந்து விடவில்லை. அவன் கருமமே கண்ணாயிருந்தான்.

''என்னிடம் எதை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று வெளிப் படையாகக் கேட்டான்.

இதைக் கேட்டவுடன் அதாமூருக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. அவன் வியாபாரியாதலால், வியாபாரத் தோரணையே அவனுக்குப் பிடித்திருந்தது.

''அன்பர்களே! நான் இந்த வீட்டிற்குப் புதியவனல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் உறவினர்களைப் போல ஆகிவிட்டோம். ஆம். அதில் ஐயமில்லை. நான் உங்களுக்கு அந்நியன் அல்ல; ஆகவே, நீங்களும் எனக்கு அந்நியர்கள் அல்ல நீங்கள் ஒருபோதும் என் சொத்துக்கு ஆசைப்பட மாட்டீர்களென்றும், என் வாயிலுள்ள உணவைப் பறித்துக் கொள்ள மாட்டீர்களென்றும் நம்புகிறேன்.''

கிழவன் 'ஆம்' என்று தலையை ஆட்டினான்.

''நான் சாப்பிடும் இந்தப் பட்டாணிக் கடலையின்மீது ஆணை. என்னிடமிருந்தும் நீங்கள் உறுதியாக இதையே எதிர்பார்க்கலாம். வேர்களிலிருந்து ஒரு மரம் சக்தியைப் பெறுவது போல, நண்பர்களிடமிருந்து ஒரு மனிதன் பலத்தை அடைகிறான்... உங்களுக்குத் தெரியும்—அந்த நிலப்பரப்பு முழுதும்

(அதாமூர் வலது கையை வீசிக் காட்டினுன்) எனக்குச்... சொந்தமானது...இல்லே, நெடு நாளேக்கு முன்பு . . எனக்குச் சொந்தமாயிருந்தது...என்பது வாஸ்தவம்தான், நான் நிரம்ப நஷ்டமடைந்து விட்டேன். ஆனுல்! அதைப்பற்றி இப்போது பேச்சில்லே. அன்பர்களே! இங்கே வயது முதிர்ந்த பெரியோர்கள் இருக்கின்றனர். எது யாருக்குச் சொந்தம் என்பதெல்லாம் அவர்களுக்கு ஞாபகமிருக்கும். நியாயப்படி, குன்றிலிருந்து கிடைக்கும் வருமானம் என்னேச்சேரவேண்டும். இதுதான் என் கருத்து. நான் பெரிய அறிவாளி அல்ல. உண்மைதான். ஆனுல், என்னேவிடப் புத்திசாலிகளெல்லாம் இதைத்தான் கூறுகின்றனர்... சுருக்கமாகச் சொன்னுல் நான் உங்களேத்தான் நம்பியிருக்கிறேன். கிடப்பதை நாம் நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளுவோம்.''

பயங்கரமான அமைதி நிலவியது. கிழவன் வேகமாகக் கணப்பைக் கிளறிக் கொழுந்துவிட்டு எரியச் செய்தான். கெஸ்ஸோ கையிலிருந்த கிண்ணத்தைத் தூரத் தள்ளினுன். கோபத்திஞல் வார்த்தைகள் வெளிவரவில்லே.

''உனக்குப்பைத்தியம் பிடித்துவிட்டது''என்று கெஸ்ஸோ கடைசியில் சீறினுன். ''இந்த யுகத்தில், அதுவும் இந்நாளில் இந்த யோசனேயைக் கூறுகிறீர்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லே. விளங்கவே வேண்டாம்! என் திட்டம் நிறைவேறுமாஞல், கூட்டுப் பண்ணே முழுவதற்கும் நன்மை உண்டு. இதற்கும் நமது குடும்ப உறவுகளுக்கும் என்ன சம்பந்தம்? தூங்கிக்கொண்டிருந்தீரா என்ன? முப்பது ஆண்டுகளுக்குக் குறையாமல் தூங்கிக் கொண்டிருந்தவன்தான் இவ்வாறு பேசுவான். அதாமூர்! காலம் மாறிவிட்டது. அத்துடன் மக்களும் மாறிவிட்டனர்! ஸாகேன்கூட முன்னேப்போல இல்லே!'

சமையலறையின் கதவை ஓங்கி அடைத்துக்கொண்டு கெஸ்ஸோ வேகமாக வெளியேறினுன்.

''சண்டை போட்டீர்களா?'' என்று, நீஞ சகோதரனேப் பார்த்துக் கேட்டாள்.

''குன்றுக்காக அதாமூருக்குப் பங்கு வேண்டுமாம்!''

''பைத்தியம்! என்ன பங்கு வேண்டுமாம்?''

''அவனே நீயே கேளு. உர விஷயத்தைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறுன். உடனே ஊமை மாட்டிடம் கறப்பது

போல, நம்மிடமும் கறக்க வந்துவிட்டான்! பழங்கால ஞாபகம் வந்துவிட்டது அந்த முட்டாளுக்கு!''

கோட்டை அணிந்துகொண்டு, கெஸ்ஸோ பரந்த முற்றத்தின் வழியே வேகமாக நடந்து சென்றான். போகும்போது தங்கையிடம் சொன்னான்: ''நான் சோவியத்திற்குப் போகிறேன்.'' போகும் வழியெல்லாம், அதாமூரின் முட்டாள்தனமான எண்ணத்தை நினைக்க நினைக்க அவனுக்குக் கோபம் பொங்கியது.

சோவியத்தில் ஒருவரும் இல்லை. கெஸ்ஸோ அடுத்த அறையின் கதவைத் திறந்தான். அங்கே கான்ஸ்டான்டினும் ஹெட்மாஸ்டர் முஷாக்கும் இருந்தனர்.

''இங்கே வா. உன்னைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்'' என்றான் கான்ஸ்டான்டின். ''ஒரு நிமிஷம் உட்கார்.'' அவன் மீண்டும் ஹெட்மாஸ்டருடன் பேசத் தொடங்கினான்: ''முஷாக்! ஒரு அருமையான சொற்பொழிவும், பள்ளிப்பிள்ளைகளின் அமெச்சூர் கச்சேரியும் வைத்தால் நல்லது.''

''எனக்குச் சம்மதம்தான்'' என்று ஒரு நோட்டுப் புத்தகத்தில் முஷாக் ஏதோ குறித்துக்கொண்டான்.

''இதெல்லாம் என்ன?'' என்றான் கெஸ்ஸோ.

நெற்றியையும் புருவங்களையும் தேய்த்துக்கொண்டு, மனக்கவலையில் ஆழ்ந்திருந்தான் கான்ஸ்டான்டின்.

''ஜனங்களெல்லாம் கவலைப் படுகின்றனர். மழை ஒரு போதும் நிற்காதென்றும், நாம் விதைக்கவே முடியாதென்றும் அறுவடையைப் பற்றிய பேச்சே இல்லையென்றும் கூறுகின்றனர். 'கடவுளின் சாபம்' என்றுகூடச் சில கிழடுகள் முனகத் தொடங்கிவிட்டன. நாம் அவர்களுக்கு விஷயத்தை விளக்கிச் சொல்லவேண்டும். மழை என்பது ஒரு இயற்கைத் தத்துவம் என்று, ஒரு சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.''

அடுத்த ஞாயிற்றுக்கிறமை மாலை, மிகச் சிறப்பாக இருக்குமென்று முஷாக் உறுதியளித்தான். அவனே பேசப் போவதாகவும், அவனது பேச்சுக்குப் பிறகு பள்ளிக்கூட இன்னிசைக் கோஷ்டியினரின் கச்சேரி இருக்குமென்றும் கூறினான்.

''முஷாக்! உங்களுடைய ரேடியோ ஸெட் எங்கே இருக்கிறது?''

''அது ரிப்பேராகிவிட்டது. 'அக்யூமலேட்ட'ரில் (பாட்டரியில்) மின்சாரம் இல்லை.''

''அதற்குக் குடாவின் மின்சார நிலையம் பயன்படாதா?' என்றான் கெஸ்ஸோ.

முஷாக் நெற்றியைத் தட்டிக்கொண்டான்.

''ஏன் முடியாது? நான் அதைப்பற்றி யோசிக்கவே இல்லை. அதைச் சரிபண்ண முடியும். அது நேர்—மின்சாரம் தான்—அதுதான் எனக்குத் தேவை.''

''அப்படியானால் உங்களுக்கு ஒரு வேலை தருகிறேன் முஷாக்! அந்த ரேடியோ ஸெட் தினந்தோறும் வேலை செய்யட்டும். ஒவ்வொரு நாள் காலையிலும், வானிலை அறிக்கையைக் குறித்துக்கொண்டு அதைப் பள்ளிக்கூடக் கதவில் தொங்கவிடுங்கள். தெரிகிறதா? ஜனங்கள் பருவ நிலையைப் பற்றிய விபரங்களையெல்லாம் தெரிந்துகொள்வார்கள். கிராம சோவியத்திலும் ஒரு ரேடியோ இருக்க வேண்டியது அவசியம்.''

முஷாக் தனது ரேடியோவைச் சரிபண்ணுவதாக வாக்களித்தான்.

''கெஸ்ஸோ! உன் விஷயம் என்ன? காரியங்கள் எல்லாம் எப்படி நடக்கின்றன?''

''பிரமாதமாக ஒன்றுமில்லை, கான்ஸ்டான்டின்! இதுவரை மழைதான் முந்தி நிற்கிறது. ஆனால் நாங்கள் கொஞ்சம் உழவும் ஆரம்பித்திருக்கிறோம்......நான் பட்டணத்திற்குச் செல்ல விரும்புகிறேன். உங்கள் கருத்து என்ன?''

''சரியான யோசனை நானே அதைச் சொல்லலாமென்றிருந்தேன். அதற்கு முன்னால் நீயே சொல்லிவிட்டாய். நாம் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறோம். நமக்குத் தெரியவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. அந்தக் குன்றிலிருந்து கொஞ்சம் மாதிரிக்கு எடுத்துக் கொண்டு போ. அதைப் பற்றிய அபிப்பிராயத்தை அறிந்து வா. இங்குள்ள கட்சிக் குழுவினர் உனக்கு அளித்துள்ள வேலை என்று இதைக் கருது. தெரிகிறதா? நல்லது நீ திரும்பி வந்த பிறகு, ஒரு கூட்டத்தில் உன் பிரயாணத்தின் விளைவைப்பற்றிக் கூற வேண்டும் தேவையானால், நாங்கள் உனக்கு உதவுவோம்; நாங்கள் உன்னைக் கைவிட மாட்டோம்''

கான்ஸ்டான்டின் ஆழ்ந்த குரலில் தயாளம் தொனித்தது. என்றாலும், அவன் மிகுந்த தன்னம்பிக்கையுடன் பேசி

ஞன். அதற்காகக் கெஸ்ஸோ அவனது தொனிப்பொருளை மன்னித்துவிட்டான்.

கெஸ்ஸோ தனது உயரமான பூட்ஸுகளை மாட்டிஞன்.

''சரி, நான் பட்டணத்திற்குப் போய் வருகிறேன்.''

''சபாஷ்! கட்சிப் 'பிளீனம்' (மகாநாடு) பற்றியுள்ள செய்திப் பத்திரிகைகளையும் கொண்டு வா.''

அவர்கள் முற்றத்திற்குச் சென்றனர் அப்போதும் மழை பெய்து கொண்டிருந்தது. அற்புதமான, விடாது பெய்யும் மழை. இதைப் போன்ற மழை எப்போதும் பெய்து கொண்டே இருக்கலாம். நதியிலிருந்து மெல்லிய இரைச்சல் கேட்டது! கற்கள் நிறைந்த படுகையிலே ஸாகேன் நதி இடைவிடாமல் உருண்டோடுகிறது. பளிச்சென்று மின்னல் வீசியது. அதைத் தொடர்ந்து இடியும் கைகொட்டிச் சிரித்தது. நதியின் இரைச்சல் கணவாய்களின் ஊடேயும், மலைச்சரிவுகளின் வழியேயும், மழைத் துகிலால் மூடிக்கொண்டிருந்த சிகரங்களின் மீதும் மிதந்து சென்று கணவாய்களுக்கு அப்பால் எங்கேயோ மறைந்தது; எண்ணிக்கையற்ற மலை இடுக்குகள் அதை விழுங்கிவிட்டன.

''இடிச் சப்தம் கேட்கிறதா?'' என்ருன் கான்ஸ்டான்டின் ''இந்தப் பருவநிலை நெடுநாள் இராதென்பதுதான் இதறகுப் பொருள்.'' அவன் படிகளில் இறங்கிஞன்.

## 20

ஞாயிற்றுக் கிழமை ஓர் அருமையான நாள். என்ருலும், அதற்கு முந்திய மாலையில் வானம் மிகப் பயங்கரமாய் இருந்தது. ஆஞல் இப்போது மழை நின்றுவிட்டது. பசுமை கலந்த வானத்தில் கதிரவன் தோன்றிஞன்.

அதிகாலையில் கிராம சோவியத்திலும், பள்ளிக்கூடக் கதவிலும், வானிலை அறிக்கைகள் ஒட்டப்பெற்றிருந்தன. உலகம் முழுவதும் சூரியன் காய்ந்து கொண்டிருக்கிருன் என்பதை, அது ஸாகேனியர்களுக்கு உணர்த்திற்று. ஆர்க்கேஞ்சலிலும், கிரான்ஸ் நோயார்ஸ்கிலும் கூடச் சூரிய ஒளி தோன்றிவிட்டது. என்ன காரணத்திஞலோ டாஷ்கண்டில் மட்டும் மழை பெய்துகொண்டிருக்கிறது. வானிலை அறிக்கைகளை மக்கள் வாசித்து மகிழ்ந்தனர். சோவியத் யூனியனில் பெரும்பகுதி கதிரொளியில் மூழ்கியிருக்கிறது என்பதை அறிந்து, ஸாகேனிய இதயங்கள் பூரித்தன.

பருவநிலையில் ஏற்பட்டுள்ள மாறுதலை அறிந்து, கெஸ்ஸோவும் மகிழ்ந்தான். அவன் அப்போது நீண்ட பயணத்திற்குத் தயாராகிக்கொண்டிருந்தான். கெஸ்ஸோ கதகதப்பான ஆடைகளை அணிந்தான். தோளில் ஒரு கனமான மூட்டையைத் தொங்கவிட்டான்; கையிலே ஒரு கழியை வைத்துக்கொண்டான், பிறகு குடும்பத்தினரிடம் பிரியாவிடைபெற்முன்...ஆனால் மேட்டு நிலத்தில் ஏறுவதற்குப் பதிலாக, நீரோடையருகில் காத்திருக்கும் காமாவைக் காண்பதற்காகக் கீழிறங்கினான்.

இந்த இளம் காதலர்களின் சந்திப்பையும், அவர்களுடைய காதல் மொழிகளையும் வர்ணித்து, வாசகர்களுக்குத் தொந்தரவு தர நாம் விரும்பவில்லை. விடைபெறும் படலம் நீண்டநேரம் நிகழ்ந்தது என்று சொன்னாலே போதுமானது...

''ஆருயிரே! சுகமாகப் போய் வாருங்கள்'' என்றாள் காமா.

''போகிறேன்'' என்று சிறிதும் யோசனையின்றிக் கூறினான் அந்த இளைஞன். இந்த அமங்கலமான வார்த்தையைக் கேட்டுக் காமா அழுதுவிட்டாள்.

''போகிறேன், என்று ஏன் சொல்லுகிறீர்கள்?''

''போய் வருகிறேன்'' என்று தன்னைத் திருத்திக்கொண்டான் கெஸ்ஸோ.

''போகிறேன், என்று ஏன் சொன்னீர்கள்?''

''கண்ணே! நான் அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. வாய்தவறி வந்துவிட்டது...நாம் பிரியமாட்டோம்; இது உறுதி.''

அந்தப் பெண் வருத்தத்துடன் கைகளைத் தொங்கவிட்டாள். மீண்டும் மிகமெல்லிய குரலில் கேட்டாள்:

'' 'போகிறேன்' என்று ஏன் சொன்னீர்கள்?''

''காமா! அதை மறந்துவிடு. என்னை மன்னித்து விடு... வழிநெடுக நான் உன்னைப்பற்றியே எண்ணிக் கொண்டிருப்பேன்; கனவு கண்டுகொண்டிருப்பேன்.''

''பட்டணத்திலுமா?''

''ஆம். பட்டணத்திலும்கூட...''

அவர்கள் பிரிந்தனர். அவன் சிறிது நொண்டிய வண்ணம், உறுதியான நடையில் சென்றான். அவள் அழுகையை அடக்க முடியாமல் அங்கே நின்றாள்.

## 21

கடையை ஒட்டியுள்ள இடத்தில் (ஸாகேனியக் கேளிக்கையாளர்களுக்கு அது பிடித்தமான இடம்) ரஷீத், ஆண்டன், யேஷிக் என்னும் ஒரு மெலிந்த உருவம் ஆகிய மூவருக்கும் அதாமூர் விருந்து அளித்துக்கொண்டிருந்தான். யேனிக்கின் வருகை, ஏதோ அசாதாரணமான காரியம் நடக்கப் போவதைக் காட்டியது—இவ்விஷத்தை விசாலப் பார்வையுள்ளவர்கள் விரும்பினால் எளிதாகத் தெரிந்துகொள்ளலாம். யேனிக் மிராம்பாக் கிராமத்தில், யார் கண்ணிலும் படாமல், (அவ்வூர்க்காரர்கள் சொல்லுவதுபோல) தண்ணீரைவிட அமைதியாகவும், புல்லைவிடப் பணிவாகவும் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ''வீரச் செயல்கள்'' என்று தோன்றும் காரியங்களில் சில வேளை ஈடுபட்டு வந்தான். அச்சமயம் அவன் மனப்பாங்கில் முழுமாறுதல் ஏற்பட்டு, அவன் கிராமத்திலிருந்து வெளியே நழுவிவிடுவது வழக்கம். எவ்விதமிருப்பினும், அவன் வைத்திருக்கும் பெரிய மதுக்கிண்ணதிலிருந்து, அவனை ஒரு சூரப்புலி என்று தீர்மானித்துவிடலாம்.

ரஷீத் யோசனையில் ஆழ்ந்திருந்தான். அவன் தாகத்தைத் தணிக்க முடியாதவன்போல, மதுவைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் கொண்டிருந்தான்.

தன் பங்கு மதுவைக் காலி செய்வதற்காக, ஆண்டன் ஒரு பெட்டியின்மேல் உடம்பை நெளித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிரே அதாமூர் இருந்தான். தன் நண்பர்களின் நெடுநேர இன்பக் கூத்திலே யாரும் தலையிட்டுத் தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காக, அவன் கதவை உட்பக்கமாகத் தாளிட்டிருந்தான்.

'அசல் மனிதர்' களுக்கிடையே நேசம் பெருகவேண்டுமென்று ஒரு முறை குடித்தாயிற்று. மற்றொரு முறை குடிக்கப் போகிறோம் என்பதற்கு அடையாளமாக, அதாமூர் மீண்டும் கிண்ணத்தை நிரப்பி நாக்கைச் சப்புக் கொட்டினான்.

''அருமை நண்பர்களே! நம்மிடையே இப்போது ஒரு நல்ல மனிதர், ஏன்—மிகச் சிறந்த மனிதர் வந்திருக்கிறார். நட்பிற்காக உயிரையும் கொடுப்பார்... அவர் நண்பர்களை

நேசிக்கிறார்; நண்பர்களும் அவரைப்பற்றி மிக உயர்வாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர்...இப்போது இவ்விளைஞர், ஓர் உண்மை மனிதனுக்குரிய செயலை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார். அவரது நண்பர்களாகிய நாம் இதை முழு மனதுடன் வரவேற்கிறோம்!'' இவ்விதம் சொல்லி, ரஷீதின் கரத்தில் முத்தமிட்டான் அதாமூர்.

''உண்மை மனிதன் யாரென்று எளிதில் கண்டு பிடித்து விடலாம்'' என்று, ஆண்டன் வியாபாரத்தோரணையில் பேசினான். ''ரஷீத்! ஸாகேன் உன்னை மறவாது!''

''அதிலும் ஸாகேனிலுள்ள ஒரே ஒரு ஆசாமி உன்னை மறக்கமாட்டான்!'' என்று பரம திருப்தியோடு சொன்னான் அதாமூர்.

ஆண்டனுக்குத் திடீரென்று கோபம் வந்துவிட்டது. அவன் மேஜைமீது ஓங்கிக் குத்தினான். அதன் மீதுள்ள உணவுப் பொருள்களைக் கொட்டிவிடவிருந்தான்.

''எனக்குக் கோபமே வராது. ஆனால் என்னிடம் ஒரு திட்டவட்டமான முடிவு உண்டு; நான் தான்தோன்றிகளை வெறுப்பவன். கெஸ்ஸோ பட்டணத்திற்குச் செல்லட்டும்; திரும்பி வரும்போது அவனுக்கு இங்கே நல்ல சேதி கிடைக்கும்!'' என்றான் ஆண்டன்.

குடிகாரக் கும்பல் கெக்கலித்தது. ஆண்டன் தொடர்ந்து பேசினான்:

''கெஸ்ஸோ வருவதை அனுபவிக்கட்டும். அவனைப் போன்ற அயோக்கியப் பயலுக்குக் காமா ஏற்றவளல்ல!''

நண்பர்களையெல்லாம் நெருக்கமாக அழைத்துக் கொண்டு, அதாமூர் ரகசியக் குரலில் சொன்னான்: ''பட்டணத்திற்கு அவன் ஒரு பையை எடுத்துப் போயிருக்கிறானாம்.''

''என்ன பை அது?'' என்று காதைத் தீட்டிக் கொண்டு கேட்டான் யேனிக்.

''விலைமதிப்புள்ள சாமான் நிறைந்த பை.''

''அதில் என்னதான் இருக்கிறது?'' என்றான் யேனிக்.

''மண்!'' என்று அதாமூர் குலுங்க நகைத்துக் கொண்டு சொன்னான்.

''என்ன மண்?''

"அந்தப் பாடாவதிக் குன்றிலுள்ள மண்!" என்று ரஷீதும், ஆண்டனும் யேனிக்கிற்கு விஷயத்தை விளக்கினர்.

"இதையா அவன் நூறு கிலோமீட்டர் தூரத்திற்குச் சுமந்து செல்கின்றான்?"

"ஆம்."

"அவனுக்குப் பைத்தியமா?"

"மற்றவர்களுக்குப் பாடம் கற்பிக்கவேண்டும் என்ற மண்டைக் கனம் வேறு அல்லவா அவனுக்கு இருக்கிறது!"

"அவன் பட்டணத்தில் மண்ணை விற்கப் போகிறானா என்ன?"

"அவன் யாருக்கும் தெரியாமல் குன்று முழுவதையுமே விற்றுவிடப் போகிறானாம்!"

"அவன் அவ்வளவு முட்டாளல்ல" என்றான் யேனிக்.

அப்புறம், அவர்களின் எதிர்காலத் திட்டம் பற்றி வியாபார ரீதியில் விவாதம் நடைபெற்றது.

யேனிக் தன் திட்டத்தைச் சொன்னான். மார்ட்டன் குகை வழியாகத்தான் காமா வழக்கமாக வீடு திரும்புவாள். அங்கே ஒரு ஆள் குதிரையுடன் பதுங்கி இருக்கவேண்டும். அப்புறம், ஒரு விநாடியில் அவளை மூட்டையாகக் கட்டிக் குதிரையில் தூக்கிச் சென்றுவிடலாம்! விரும்பினாலும் விரும்பிவிட்டாலும், அன்று மாலையே அவள் ரஷீதின் மனைவியாகிவிடுவாள்.

"அவள் போராடமாட்டாளா?" என்று, தன் ந்சதேகத்தை நீக்கிக்கொள்ள அதாமூர் கேட்டான். அதற்குப் பதிலாக, 'மணமக'னிடமிருந்து ஒரு முனகல்தான் வெளிப்பட்டது. இது, அதாமூரைத் தளர்ச்சியுறச் செய்தது.

"என்ன? ஒரு இளைஞனை எதிர்த்து விடுவாளா அவள்?" என்று அவன் கத்தினான்.

ஆண்டன் குறுக்கிட்டான்.

"அட பைத்தியமே! அவள் சம்மதிக்காவிட்டால் தான் என்ன?...ஒரு விநாடி யோசித்துப் பாரும். ஒரு தடவை அவளைத் தூக்கிச் சென்றுவிட்டால், அப்புறம் யார் அவளை ஏறெடுத்துப் பார்ப்பார்கள்? ஏன், எதற்காக என்று

ஜனங்கள் யோசிக்கப் போகிருர்களா? தூக்கிக்கொண்டு போய் விட்டார்களா—விஷயம் தீர்ந்தது!......அருமை நண்பர்களே! அவளைப் பத்தயத்தில் அடைத்துவிட வேண்டியதுதான். படார்! எலிப் பத்தயத்தின்கதவு மூடிக்கொண்டது! அனாதி காலம் தொட்டு இவ்விதம்தான் நடந்து வருகிறது''

''பேஷ்'' என்று அதாமூர் தலையாட்டினுன்: ''அவள் அகப்பட்டுக் கொள்வாள். ஆனுல் நிலைமை அவ்வளவு தூரம் போகாதென்று நம்புகிறேன் என்ன ரஷீத்.''

ரஷீத் ஒன்றும் சொல்லவில்லை; சதிக்காரர்கள் தமது திட்டத்தைத் தொடர்ந்து விவாதித்து, அதன் பலா பலன்களையும் ஆராய்ந்தனர்.

இந்த ஆசாமிகள் எல்லோரும் ''குகை''யை விட்டு வெளியே வந்து மாலைக் காற்றைச் சுவாசித்தபோது அவர்களுக்குக் குஷி பிறந்துவிட்டது; தாங்கள் எங்கே செல்கிருேம் என்பதைப் பற்றியே அவர்கள் கவலைப்படவில்லை; ரஸ்தாவிற்கு அப்பாலுள்ள பள்ளிக்கூட ஜன்னலில் மின்சார விளக்குகள் கண்ணைப்பறிக்கவே, அவர்களுடைய கால்கள் தாமாகவே அங்கு சென்றன.

''ஓ! அவர்கள் இன்று விழாக் கொண்டாடுகிருர்களாக்கும். நாம் அங்கே சென்று சொற்பொழிவைக் கேட்போம்'' என்று ஆண்டன் கிண்டலாகச் சொன்னுன்.

''நான் எங்கு வேண்டுமானுலும் வரத்தயார்—நரகத்திற்குக்கூட!'' என்று அதாமூர் பதிலளித்தான். பிறகு அவன் பள்ளிக்கூட முற்றத்தின் கதவைப் பலமாகத் தள்ளினுன். கோழிக்குஞ்சின் சிறகு அடுப்பில் வாட்டப்படும்பொழுது வெடிப்பதைப்போல, அந்தக் கதவு 'சடசட' வென்றது.

முற்றத்தில் ஒருவருமில்லை. எல்லோரும் ஹாலில் இருந்தனர். அதன் இறுதியில் ஒரு சிறிய மேஜை இருந்தது. அநேகம் எண்ணெய் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. முஷாக்கின் பிரசங்கம் நடைபெற்ற மேடையில் ஒரு விளக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. முஷாக் சிருஷ்டியின் மர்மத்தைப் பற்றியும், ஒரே விதிக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைப்போல இயற்கைச் சக்திகள் உலகில் தொழில் படுவதைக் குறித்தும், சீதோஷ்ண தத்துவம் குறித்தும், இன்னேரன்ன பல விஷயங்களையும் பேசிக் கொண்டிருந்தான். யேனிக் முனகினுன்.

''அவன் பேச்சு நன்றாயிருக்கிறது—அவன் பொய் சொல்லாமல் மட்டுமிருந்தால்!''

முன் வரிசையில் கிழவர்கள் வீற்றிருந்தனர். அவர்கள் எல்லோரும் சொல்லி வைத்தாற்போல், மோவாயில் கழியை ஊன்றிக் கொண்டிருந்தனர்.

''இளங் கலைஞர்கள்'' தங்கள் திறமையைக் காண்பிக்க வேண்டும் என்ற துடிதுடிப்பினால், பக்கவாட்டிலிருந்து உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். சொற்பொழிவிற்குப் பிறகு, உள்ளூர் ஆசிரியரின் நாடகமொன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

சொற்பொழிவின் இறுதியில், (எல்லோரும் கரகோஷம் செய்தனர்) ''எல்லாம் புரிந்ததா?'' என்று முஷாக் கேட்டான் ''யாராவது பேச விரும்புகிறார்களா?''

பதில் இல்லை.

''ஏதாவது கேள்விகள்?''

நடு வரிசையில் வீற்றிருந்த ஒரு பள்ளிச் சிறுவன் கையை உயர்த்தினான்.

''நான் கேட்கலாமா?'' என்று அவன் பயத்தோடு கேட்டான்: ''பூமியிலிருந்து சந்திரனுக்கு எவ்வளவு தூரம்?''

''சுமார் நாலு லட்சம் கிலோ மீட்டர்கள்'' என்று பதில் வந்தது.

பையன் திருப்தியுற்று உட்கார்ந்து விட்டான். உடனே அவனைச் சுற்றி ஆரவாரம் உண்டாயிற்று. அவனுடைய தோழர்கள் எதையோ காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

முன் வரிசையினர், டைரக்டரின் அழுத்தம் திருத்தமான பதிலை அரைகுறை நம்பிக்கையோடுதான் ஏற்றுக் கொண்டனர்.

''மகனே!'' என்று ஒரு கிழக்குரல் ஆரம்பித்தது. ''நீ கூறியதை நான் என் மனைவியிடம் சொன்னால், (ஹாலில் சிரிப்பு) யார் அளந்து பார்த்தார்கள் என்று அவள் உடனே கேட்பாள்.''

பிரசங்கியின் விளக்கம் பதினைந்து நிமிடங்கள் நீடித்தது. என்றாலும், அது கிழவர்களுக்குப் பூரண நம்பிக்கையைத் தரவில்லை,

''சென்ற வருடம் என்வீட்டிற்குப் பக்கத்திலுள்ள துண்டு நிலத்தை மூன்று முறை அளந்தார்கள். ஒவ்வொரு முறையும் அளவு வித்தியாசப்பட்டது'' என்றது பழைய குரல்.

யேனிக் குதித்தெழுந்து, தானும் பேச விரும்புவதாகச் சொன்னான்.

''ஆகாயம் தெளிவாக இருக்கும்போது, பூமியில் பனித் துளி காணப்படுவானேன்?''

ரஷீத், அவனது கோட்டின் மூலையைப் பிடித்திழுத்து உட்காரவைக்க முயன்றான். பிரசங்கி சொல்வதைக் கேட்டுக் கொண்டே யேனிக் நின்றான். பிறகு பதிலில் திருப்தியடைந்தவனாய், கனைத்துக் கொண்டே உட்கார்ந்தான்.

எல்லா வானமண்டலப் பிரச்சினைகளும் தீர்ந்த பிற்பாடு, திரை தொங்கவிடப் பெற்றது. இரைச்சல், பேச்சு, இருமல், தும்மல், ஆகியவைகளினால் அந்த அறைமுழுவதும் எழுந்து நின்று ஆடுவது போலத் தோன்றியது.

முஷாக் மேடையிலிருந்து இறங்கி, கான்ஸ்டான்டினைத் தேடிச் சென்றான்.

வியர்வை ததும்பும் நெற்றியைக் கைக்குட்டையினால் துடைத்தவாறு, ''பேச்சு எப்படி?'' என்றான்.

''அற்புதம் ! பயனுள்ள பேச்சு'' என்றான் கான்ஸ் டான்டின்.

இந்தப் புகழ் மொழிகளினால் முஷாக் மிகவும் திருப்தி அடைந்தான். அவசர; அவரசமாக ஸீன்களுக்குப் பின்னால் சென்று, மீண்டும்திரையைத் தூக்கும்படி சொன்னான் நாடகம் ஆரம்பமாயிற்று.

## 22

பிரயாணத்தின்போது கெஸ்ஸோ அனுபவித்த இன்னல்களையெல்லாம் விரிவாகக் கூறினால், அதுவே ஒரு நாவலாகி விடும். பௌதிக சாஸ்திரத்தில் ருசியுள்ளவர்களுக்குக் கெஸ்ஸோவின் பிரயாணம் அற்புதமாகத் தோன்றலாம். பொருள்கள் கீழே விழும் பௌதிகத் தத்துவத்தைச் சுயமாக ஆராய்ந்து இன்பங் காணுவதற்காக, அந்த ஆசாமி இதைப் போன்று பிரயாணம் செய்ய விரும்பலாம். ஆனால், இங்கே நாம் ஒரு நிபந்தனை போடவேண்டியிருக்கிறது. ஜுலை அல்லது ஆகஸ்டில் ஸாகேனுக்குச் செல்ல விரும்பும் எவரும், மற்றப்

பருவங்களில் பெறும் இன்பத்தில் பாதியை இழந்துவிடுவார்கள். ஏப்ரல் மாத ஆரம்பத்தில் கெஸ்ஸோ பட்டணத்திற்குக் கிளம்பி இருக்கிறான் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்; மலைப்பிரதேசத்தில் இதைத் கோடைகாலமாக யாரும் எண்ணமாட்டார்கள். ஸாகேனைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ள விரும்புவோர், வஸந்தம் அல்லது இலையுதிர் காலத்தில்தான் அங்கு செல்லவேண்டும். அப்போதுதான் வழி மறித்துக்கொண்டிருக்கும் ஒன்பது கணவாய்களும், எட்டு நீரோடைகளும், தமது சக்தியை உங்களிடம் காண்பிக்கும். உங்கள் வீரச்செயலைப்பற்றியும், அதன் விளைவுகளைப் பற்றியும் நீங்கள் கவலைப்படவில்லையானால், உங்களோடு சில நண்பர்களையும் அழைத்து வருமாறு நான் சிபாரிசு செய்கிறேன். அவர்களுடன் நீங்கள் 'குஷி'யாகப் பிரயாணம் செய்யலாம்; அத்தக் குஷியான கும்பலுக்கு ஊமைக்காயங்களும், சுளுக்குகளும், கீரல்களும் கிடைக்கும்; இந்தச் சந்தர்ப்பத்தில், காயம் படாமல் தப்பித்துக்கொண்டவர்கள் வயிறு வெடிக்கச் சிரிக்கலாம்!

உலகம் தோன்றியபோது, ஸாகேனுக்கு அதிர்ஷ்டமில்லை என்றுதான் சொல்லவேண்டும். இந்தப் பகுதிகளெல்லாம் ஒரு காலத்தில் கடலுக்கு அடியில் இருந்தனவென்றும், ஸாகேனுக்கு மேலே ஒரு ராக்ஷஸ நீர்ச்சுழல் இருந்ததென்றும் பூமி நூல் வல்லோர் கூறுகின்றனர். ஸாகேனியர்களின் இருப்பிடமென்று ஆண்டவன் நிர்ணயித்திருந்த சிறிய கடற்படுகையை அந்த நீர்ச்சுழல் நாசப்படுத்தி விட்டதாம்.

ஸாகேனியப் பிரயாணிகள், அங்கேயுள்ள ரஸ்தாவை இங்ஙனம் வர்ணிப்பார்கள்:

''நண்பர்களே!'' (இதற்குப் பின் நீண்ட மௌனம் நிலவும். ஒரு மனிதன் புகை குடிக்கவேண்டாமா என்ன?)''என்னை நம்புங்கள். இந்த ரஸ்தா மந்திரக் கதைகளில் உள்ளது போலவே இருக்கிறது. முதலில் நீங்கள் மிகக் குறுகலான பாதை வழியே செல்லுவீர்கள் அதன் இடது புறம் ஒரு மலைச் சிகரமும், வலதுபுறம் ஒரு குன்றும் இருக்கின்றன. பிறகு நீங்கள் ஒரு வாள் முனையில் நடந்து செல்வீர்கள். (அந்த வாளின் நீளம் ஒருமைல் இருக்கும்) அதற்கு ஓநாயின் தாடை என்று பெயர். அப்புறம் நீங்கள் கயிற்றின்மீது நடக்கும் சர்க்கஸ்காரன் ஆகிறீர்கள். அந்த இடத்தின் பெயர் கரடியின் பல். இவ்விதம் பத்துப் பன்னிரெண்டு வன விலங்குகளின் பற்களை எண்ணிய பின், பிசாசு வளைக்கு வந்து சேரு

வீர்கள். அரைமைல் நீளமுள்ள பள்ளம் அது. அதிலே ஒரு பெரிய அடுப்பை வைத்து, பாபிகளையும் அதற்குள் தூக்கிப் போட்டுவிட்டால் அசல் நரகமாகிவிடும்! முயலின் வளையையும், அணிலின் உதட்டையும் தாண்டியபின், ஆண்டவன் கருணையிருந்தால் காட்டெருதுப் புல்வெளிக்கு வந்து விழுகிறீர்கள் ஆம். நீங்கள் வந்து சேருவதில்லை; வந்து விழுகிறீர்கள்! ஏனெனில், ஒருவரும் அந்த வழுக்குப் பள்ளத்தில் காலை வைத்து இறங்கியதில்லை. பிசாசுப் பாலம் உங்களைத் தற்காலிகமாகக் குரங்காக்கிவிடும். அப்புறம்...''

ஸாகேனியப் பிரயாணிகளின் பயங்கர வர்ணனைகள், உங்களுடைய இரத்தத்தை உறையச் செய்துவிடும்.

எனவே, ஸாகேனிலிருந்து பட்டணத்திற்குச் செல்லும் பயணத்தைப் பற்றி, உங்கள் கற்பனையினால் தீர்மானித்துக் கொள்ளுங்கள். கற்பனைப் பிரயாணத்தின் முடிவில், ஒரு வற்றுத குட்டையின் அருகே—காண்பவர்களுக்குக் கண்வலியை உண்டாக்கக்கூடிய குட்டைக்கு அருகே, கெஸ்ஸோவைக் காண்பீர்கள்.

ஆனால் அது அவ்விடத்திலேயே இருப்பதைக் கண்டதும், கெஸ்ஸோ மிக மகிழ்ச்சியடைந்தான். இல்லாவிடில் அவன் தனது பூட்ஸுகளை எங்ஙனம் கழுவியிருக்க முடியும்? செம் மண் படிந்த ரப்பர் மழைக்கோட்டைத்தான் எப்படிக் கழுவியிருக்க முடியும்? அல்லது பையைத்தான்...? அந்தப் பையும் கெஸ்ஸோவைப் போல மிகுந்த அவதிக்குள்ளாகியிருக்கிறது; அதன் உரிமையாளனைப் போல அதையும் சுத்தப்படுத்த வேண்டியது அவசியந்தான்.

வஸந்த சூரியனின் அற்புத ஒளி, புதிய இலைகளின் நறுமணம், கவுன் அணிந்து சிரித்துக்கொண்டு நிற்கும் குமரிகள், ஷர்ட் அணிந்து நிற்கும் இளைஞர்கள், உள்ளத்திலே விம்மி எழும் நம்பிக்கைகள்—இவையெல்லாம் ஒரு மனிதனை அபூர்வக் கனவில் ஆழ்த்தி, அவனை வாய்விட்டுப் பாடச் செய்யவா என்ன?

பூட்ஸுகள் சப்திக்க, உதடுகள் இன்னிசையை முணுமுணுக்க, கெஸ்ஸோ நடந்து சென்றான். அவன் உள்ளத்தில் ஒரு பாடல் பிறந்தது.

'' காதலி !
உன் காலடியைத் தேடிக்கொண்டு
பசும் சிகரங்களின் மீதெல்லாம்

செல்கின்றேன்.
நீ இவ்வழியாகச் சென்றிருக்கலாமென்று
கணவாய்களில் எல்லாம் திரிகின்றேன்.
காதலி !
மலைகளுக்கு மேலேதான் என் வீதி
சிகரங்களின் வழியேதான் என்பாதை
ஆனால் உன் காலடிகள் அங்கில்லை.
உன்னுருவும் அங்கில்லை.
இருப்பினும் நீ என்னருகில்
இருக்கின்றாய்.
இது உறுதி !
என்னருகில் இருக்கின்றாய். ''

*ஜனங்கள் கெஸ்ஸோவைக் கடந்து சென்றனர். அவனைப் பார்த்து எல்லோரும் சிரிப்பதாகத் தோன்றியது. அந்த இளம் மலைநாட்டான், என்ன செய்தி கொண்டு வருகிறான் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டதோ? தனது ஜீவாதாரமான திட்டத்தை அமுல் நடத்துவது பற்றி, கெஸ்ஸோ மனதிற்குள் ஓர் ஆவேசப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான்; அவன் கால்களை வேகமாக எட்டிப் போட்டான். ஸாகேன் கிராமம் முழுவதும் பட்டணத்தை நோக்கிப் படையெடுத்ததைப் போல, அவனது பூட்ஸுகள் பிளாட்பாரத்தில் ஒலி எழுப்பின.*

*தனக்குப் பழக்கமான தெருக்களின் வழியே கெஸ்ஸோ நடந்தான். யுத்தத்தில் அடிபட்ட கிராமப்புறமெல்லாம் புத்துயிர் பெற்று மின்னியது, கெஸ்ஸோவால் தன் கண்களை நம்பவே முடியவில்லை. கருகிய புஷ்பம் மீண்டும் மலருமா? அமைதியான உக்ரேனியச்சோலையில், குண்டுபட்டு அழிவுற்ற பேரீச்சமரம் மீண்டும் துளிர்க்குமா? ஸ்டெப்பிச் சமவெளியில் பாழாகக் கிடக்கும் புகைக்கூண்டுகள் மீண்டும் எப்போது புகை கக்குமோ?...*

*இந்த ஐந்துவருட யுத்தகாலத்தில் போர்க்களத்துக்கு வெகு தொலைவில் இருந்தாலொழிய, எந்த நகரமும் புகை படிந்து, அழுக்காகி, கிழடுதட்டித்தான் போயிருக்கும். ஜனங்களுக்கு வேறு கவலைகள் இல்லையா என்ன? கெஸ்ஸோ தார் போட்ட வீதிகளின் வழியாகப் பேரீச்ச மர நிழலிலும், புன்னை மர நிழலிலும் நடந்து சென்றான். இவையெல்லாம் இதற்கு முன்னால் இல்லவேயில்லை. பாத்தி பாத்தியாகப் புஷ்பங்கள்! எங்குபார்த்தாலும் புதுக்கட்டிடங்கள்! வெய்யிலில் எருதுகள்*

நிற்பதைப்போல ரோட்டு எஞ்சின்கள் தெருக்களில் நின்று கொண்டிருந்தன. அந்த நகரம் வஸந்த சூரியனின் யௌவன ஒளியில் குளித்து நின்றது; 'வா வா' வென்று கெஸ்ஸோா வைப் பார்த்துக் கை நீட்டியது.

தெருமுனையில் 'பாலிஷ்' போடுபவன் நின்று கொண்டிருந்தான். தன் பூட்ஸுகளுக்குப் பாலிஷ் போடக் கெஸ்ஸோ தீர்மானித்தான் பக்கத்தில் ஒரு பார்பர் ஷாப் இருந்தது; க்ஷவரம் செய்து கொண்டாலும் நல்லதுதான்!

இந்த மலைவாசியின் சரடுமுரடான முகத்தில், நாவிதன் சிரமப்பட்டுச் சோப்பைத் தடவினான். கதவருகில் வைக்கப் பட்டிருக்கும் பையை ஓரக்கண்ணால் பார்த்தான்.

''அது பால்கட்டிதானே?'' என்று கேட்டான் நாவிதன்.

''இல்லை. மண்'' என்றான் கெஸ்ஸோ, ஏகப்பட்ட சோப்பு நுரையை விழுங்கிய வண்ணம்.

''மண்ணா?'' தோல்பட்டையில் வேகமாகக் கத்தியைத் தீட்டினான் நாவிதன். கண்ணாடியைப் பார்த்து, எங்களுக்கும் ஹாஸ்யத்தை அனுபவிக்கத் தெரியும் என்ற ரீதியில் கண்ணைச் சிமிட்டினான்.

''ஆம். மண்தான். நீர் நம்பவில்லையா?'' என்று கெஸ்ஸோ மீண்டும் அழுத்தமாகச் சொன்னான்.

விநோதமான மீசையுடைய (அந்த மீசை பறவையைப் போலச் சிறகடித்துக் கொண்டு எந்த நிமிஷத்தில் பறந்து விடுமோ என்றிருந்தது!) அந்த நாவிதனின் முகத்தில் நம்பிக்கை தோன்றியது.

''மிக மதிப்புள்ளது போலும்'' என்று துணிந்து கேட்டான்.

''ஆம், மிக மிக மதிப்புள்ளது நல்ல விளைச்சல் கொடுக்கக்கூடியது.''

நாவிதனால் அந்தப் பையைத் திறக்காமல் இருக்க முடியவில்லை. அவன் அதை உற்றுப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்தான். ஆம். உண்மையிலேயே அது மண்தான்!

## 23

விவசாய இலாக்காவின் வாயிலில், கெஸ்ஸோ நிஜமாகவே நெட்டித் தள்ளப்பட்டான். பெரிய 'பிரேம்' உள்ள கண்ணாடி அணிந்து, பக்கத்தில் நிறையத் தஸ்தாவேஜிகளுடன்

நின்றிருந்த ஒரு சிப்பந்தி, ஈவு இரக்கமில்லாமல் கெஸ்ஸோா வைத் துரத்தித் தள்ளினன்.

நீண்ட வராந்தாவில் மக்கள் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தனர். கதவுகள் அவசர அவசரமாகத் திறந்து மூடின. டைப் மிஷின்களின் இரைச்சலும், கணக்கு இயந்திரங்களின் ஓலமும் செவியைத் துளைத்தன. கெஸ்ஸோ ஜெனரல் ஆபீசைக் கண்டுபிடித்து விட்டான்.

''பிரதம விவசாய ஆராய்ச்சியாளர் எங்கிருக்கிருர்?''

கெஸ்ஸோ தன் குரலில் எவ்வளவு மரியாதை காட்ட முடியுமோ அவ்வளவையும் காட்டினன். அவன் கண்களில் பவ்வியம் மிளிர்ந்தது. அவன் வெட்கப்படுவதற்குப் போதிய காரணம் இருந்தது! எதிரே சுறுசுறுப்பாகக் காரியதரிசி வேலை செய்துகொண்டிருந்தாள். ஒரு நிமிஷம் அவள் டெலிபோனை எடுப்பாள்; மறு நிமிஷம் பிளாட்டிங் பேப்பரை எடுப்பாள்; அப்புறம் ரப்பர் ஸ்டாம்பிற்காக மேஜை டிராயரைத் திறந்து கிளறிக் கொண்டிருப்பாள். வேண்டுகோளுக்கோ, கெஞ்சலுக்கோ, மிரட்டலுக்கோ அவள் அசைந்து கொடுக்காதவள். அவள் சமயா சமயங்களில் குதித்தெழுந்து அறைக்குள் ஓடுவாள். யாருடனே இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு, அலுத்துப் போய்த் தோள்களைக் குலுக்குவாள். டெலிபோன் மணியைப்போல அவள் வெட்டி வெட்டிப் பேசினள். கெஸ்ஸோவைக் கிஞ்சிற்றேனும் அவள் கவனிக்கவே இல்லை. அவனைக் கடைசியாக மனமிரங்கிப் பார்த்தபோது—அவன் அவள் முன்னே அரைமணி நேரமாகத் தவம் செய்துகொண்டிருக்கிருன்—அவள் 'பட்'டென்று சொன்னுள்:

''உட்காருங்கள்.''

''வந்தனம். ஒரு அவசரமான விஷயம். நான் பிரதம விவசாய ஆராய்ச்சியாளரைக் காணவேண்டும்.''

''அவருக்கு வேலை அதிகம். இன்று அவர் ஒருவரையும் பார்க்கப் போவதில்லை'' என்று உறுதியாகச் சொன்னுள் காரியதரிசி.

அவர்களின் விழிகள் சந்தித்தன. இரண்டு கூர்வாள்களைப் போல (ஒன்று உருக்கினுல் ஆனது; மற்றொன்று ஈயத்தினுல் ஆனது) முறைத்துப் பார்த்தனர். ஈயவாள்—கெஸ்ஸோவினுடையது—தாழ்ந்து பணிந்தது. ''மன்னிக்கவேண்டும்'' என்று ஈனஸ்வரத்தில் கூறினுன் கெஸ்ஸோ. ''நான் அவரைச் சந்திக்க வேண்டியது மிகவும் அவசியம்.''

காரியதரிசியின் கத்திபோன்ற புருவங்கள் தணிந்தன டெலிபோன் மணி அடித்தது. அவள், எதிரே நின்ற ஆளையே மறந்துவிட்டாள்.

''இதோ பார்!'' என்று டெலிபோனில் கத்தினள்: ''அந்த அறிக்கை இன்று போகவேண்டும். உன்னால் நான் குட்டு வாங்க முடியாது- தெரிந்ததா?'' என்று சடாரென டெலிபோனைக் கீழே வைத்தாள்.

கெஸ்லோ பணிவும், பவ்வியமும் பயன் தராதென்று அவைகளை உதறித் தள்ளிவிட்டு, உரக்கக் கத்தினன்.

''நான் பிரதம ஆராய்ச்சியாளரை எங்கே பார்க்கலாம் என்று கேட்கிறேன்.''

அப்போதுதான் தண்ணீரில் மூழ்கி எழுந்தவளைப்போலக் காரியதரிசி ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டாள்.

''தோழரே, இன்று அறிக்கை தினம்! இன்று பார்த்து வந்திருக்கிறீர்களே?'' என்றாள்.

''அதனால் என்ன?''

''அதனால் என்னவா? இன்று எங்களுக்கு ஓய்வு ஒழிவற்ற வேலை இருக்கிறது?''

அவள் மீண்டும் டெலிபோனில் பேச ஆரம்பித்தாள். ராணுவ மோஸ்தரில் அவளிடம் பேச வேண்டுமென்று கெஸ்லோ நினைத்தான். ஆனால் எரிச்சலை அடக்கிக்கொண்டு, பிரதம ஆராய்ச்சியாளரை நேரில் காண்பதற்காக நீண்ட வராந்தாவின் வழியே நடந்தான். வலது பக்கத்திலுள்ள இரண்டாவது கதவின் வழியாக அவரது ஆபீசுக்குச் செல்லலாம். கெஸ்லோ கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

ஆராய்ச்சியாளர் ஒரு பெரிய மேஜையருகில் உட்கார்ந்திருந்தார். அநேகம் துண்டுகளை ஒன்றாகச் சேர்த்து ஒட்டப் பெற்றிருந்த காகிதம் அவர் முன்னால் விரிந்து கிடந்தது. மேஜை விரிப்பு மாதிரி அதன் முனைகள் பக்கவாட்டில் தொங்கின. கணக்கு யந்திரத்தின் கைப் பிடியைத் திருகிக்கொண்டு, ஆராய்ச்சியாளர் எண்களைக் கட்டமிட்ட பகுதிகளில் பதிவு செய்துகொண்டிருந்தார்.

''இன்று அறிக்கை தினம்'' என்று அமைதியாக—தீர்மானமான குரலில் கூறினார்: ''இன்று ஒருவரையும் பார்ப்பதற்கில்லை''

நிச்சயமாகத் தன்னுடன் அல்ல; வேறு யாருடனே ஆராய்ச்சியாளர் பேசிக் கொண்டிருக்கிருர் என்று கெஸ்ஸோ எண்ணினன்.

கெஸ்ஸோ மகிழ்வுடன் "வணக்கம்" என்ருன். ஆராய்ச்சியாளர் ஆழ்ந்த பெருமூச்சுவிட்டு, வாய்க்குள் ஏதோ முனகினர். அவர் உட்காரச் சொல்லும்வரை காத்திராமல், கெஸ்ஸோ மேஜையருகில் உட்கார்ந்தான்; தனது கனத்த பையைத் தரையில் வைத்தான்.

"நான் ஸாகேனிலிருந்து வருகிறேன்......" எதிர்பாராத அதிதியைக் கண்டதும், ஆராய்ச்சியாளர் திகைத்துப் போவார் என்றெண்ணினன் கெஸ்ஸோ.

"இன்று உம்முடன் பேசுவதற்கு நேரமில்லே."

"ஆனல் நான் அதற்காகத்தான் வந்திருக்கிறேன். நான் வந்திருப்பது ஒரு முக்கியமான, ஆச்சரியம் நிறைந்த காரியத்திற்காக..."

"இப்பவே நான் ஆச்சரியத்தில் அமிழ்ந்துதான் கிடக்கிறேன்" என்று காகிதத்தில் விழுந்துவிட்ட தப்பிதமான இலக்கத்தை அழித்தவண்ணம் ஆராய்ச்சியாளர் கூறினர்.

அவரது வாழ்வையும், அவரைச் சுற்றியுள்ளோர் வாழ்வையும் நஞ்சாக்கிக்கொண்டு, ஆராய்ச்சியாளர் பல நாட்களாக ஈடுபட்டிருக்கும் காகிதத்தைக் கெஸ்ஸோ ஏறிட்டுப் பார்த்தான். அந்த எண்களே நோக்கியதும் அவன் மண்டை கிறங்கியது; பாதி புகைத்திருந்த சிகரெட்டை ஜன்னல் வழியாக வீசி எறிந்தான்.

டெலிபோன் மணி அடித்தது.

ஆராய்ச்சியாளருக்குக் கோபம் வந்துவிட்டது. கொஞ்சம் நஞ்சமிருக்கும் அவரது சாந்தத்தையும் டெலிபோன் மணி சிதற அடித்துவிட்டது போலும்.

"சரி சரி. நாளே வாரும்; அல்லது திங்களன்று வாரும்" என்று யாரையோ பார்த்துக் கத்தினர்: "நான் இன்று யாரையும் பார்க்க முடியாது. அது நடக்காத விஷயம்."

கெஸ்ஸோ பையைத் தோளில் போட்டவண்ணம், ஜன்னல் கதவுகளெல்லாம் நடுங்கும்படி அறைக் கதவை அடைத்துக்கொண்டு வெளியேறினன்.

இதயத்தில் வேதனே குடைந்து கொண்டிருக்க, அவன் பிளாட்பாரத்தில் தள்ளாடி நடந்தான். அந்தப் பை முன்

லைப்போல மூன்று மடங்கு கனத்துவிட்டதாகத் தோன்றி யது. சூரிய ஒளியும் மனதுக்கு இதமாயில்லை; வெய்யில் ஆளை வெதுப்பியது. சுருங்கச் சொன்னால், அந்த இளைஞனது ஆர்வமெல்லாம் தவிடுபொடியாகிவிட்டது.

## 24

கட்சியின் ஜில்லாக் கமிட்டிக் கட்டிடம் கடற்கரையருகில் இருந்தது. நீலவானும் கடலும் தழுவி நிற்கும் பின்னணியிலே, வெள்ளை அடிக்கப் பெற்றிருந்த அந்த வீடு கப்பலின் பாய்மரம் போலத் தோன்றியது.

கெஸ்ஸோ இரண்டாவது மாடிக்கு ஏறிச்சென்றான். கறுப்புநிற மெழுகு துணித் திரையுள்ள கதவை ஜாக்கிரதையாகத் திறந்தான். அதில் "வெயிட்டிங் ரூம்—முதல் காரிய தரிசி" என்ற போர்டு காணப்பட்டது.

அறையில் தணிந்த குரலில் பலர் பேசிக் கொண்டிருந்தனர். கதவுக்கு அருகில் வலது பக்கத்தில், வெளிறிய—சாம்பல் நிறக் கண்களுடைய ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் தபாலில் வந்த கடிதங்களை வாசித்துக் கொண்டிருந்தாள். அவற்றை வாசித்தபின் வெவ்வேறு 'பைல்'களில் போட்டாள்.

கெஸ்ஸோ ஒரு மூலையில் ஜாக்கிரதையாகப் பையை வைத்துவிட்டு, பூட்ஸுகளின் சப்தம் கேட்காதவாறு அப் பெண்ணை நோக்கி மெதுவாக வந்தான்.

"நான் காரியதரிசியைப் பார்க்கலாமா?"

"தோழரே! உட்காருங்கள். நீங்கள் அலெக்ஸாண்டர் ஜவனோவிச்சைப் பார்க்க வேண்டுமா?"

"ஆம். முதல் காரியதரிசியை..."

"உட்காருங்கள்."

கெஸ்ஸோ மேஜையருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டான். அந்தப் பெண் அவனை உன்னிப்பாய்க் கவனித்தாள். அவன் தன்னையறியாமலே சிரித்துவிட்டான். அந்த இள நங்கையின் மிருதுவான வதனத்திற்கும், அவளுடைய கடுகடுப்பான—வியாபார ரீதியான பார்வைக்கும் பொருத்தமேயில்லை

"வந்த காரியம் என்ன?"

அவளுடைய குரல் ஸாகேனியப் பெண்களின் குரலைப் போலவே ஒலித்தது! ஒரு சிறந்த நண்பனின் இருப்பிடத்திற்கு வந்தாற்போல, கெஸ்ஸோவுக்கு அமைதியும், மகிழ்ச்சியும் பொங்கின. அவன் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது. அந்தப்பெண்ணுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''எதற்காகச் சிரிக்கிறீர்கள்!''

''மன்னிக்கவேண்டும். உங்களைக் கண்டதும் எனக்கு ஏதோ ஞாபகம் வந்துவிட்டது.''

காரியதரிசி சிவப்புப் பென்சிலால் ஒரு கடிதத்தில் குறிப்பு எழுதினாள்.

''நல்ல ஞாபகமா, கெட்ட ஞாபகமா?''

''கெட்டது ஒன்றுமில்லை'' என்று கெஸ்ஸோ அன்புடன் மறுத்தான்: ''உங்களைப் பார்த்தால் கெட்ட ஞாபகம் வரமுடியுமா?''

''உஷ். மெதுவாகப் பேசுங்கள்,'' என்று அவள் அவனை அன்பாகக் கடிந்துகொண்டாள். ஆபீஸ் தோரணையை அமுல் நடத்த முயன்றுகொண்டு, ''நீங்கள் வந்த காரியமென்ன? எந்த ஸ்தாபனத்திலிருந்து வருகிறீர்கள்?'' என்றாள்.

''நான் இப்போது தான் பட்டணத்துக்கு வந்தேன்.''

''எங்கிருந்து?''

''ஸாகேனிலிருந்து.''

''ஓ! ஸாகேனிலிருந்தா? நீங்கள் இதைச் சொல்லவே இல்லையே!'' அவள் சகல காகிதங்களையும் ஒதுக்கித் தள்ளினாள்: ''அபூர்வமான விருந்தாளியாச்சே!''

''நான்...வந்து...''

''உங்களுக்காக ஒரு வண்டி தஸ்தாவேஜுகள் குவிந்து கிடக்கின்றன. நான் ஒரு நொடியில் ஜெனரல் ஆபீசுக்குச் சென்று இந்த நல்ல சேதியைச் சொல்லி வருகிறேன்.''

அவள் மேஜையிலிருந்து குதித்து ஓடினாள்; கதவின் வழியாக மறைந்துவிட்டாள். கூரைக்கு அடியில் எங்கோ ஒரு மணி அடித்தது. இரண்டாம் தடவையும் அதுவிடாமல் ஒலித்தது. காரியதரிசியை எங்கே என்று தேடுவதற்காகக் கெஸ்ஸோ எழுந்தான். அவளைக் கதவருகில் சந்தித்தான்.

"உங்களைக் கூப்பிடுகிறார்கள்" என்றாள் காரியதரிசி.

நோட்டுப் புத்தகத்தைத் தேடி எடுப்பதற்காக அவள் மேஜையைக் கிளறிக் கொண்டிருந்தாள்.

"காரியதரிசியிடம் நீங்கள் இங்கிருக்கிறீர்கள் என்று கூறி விடுகிறேன். உங்கள் பெயரென்ன?" என்று அவள் அவசரமாகக் கேட்டாள்.

"கெஸ்ஸோ மீர்பா."

"ஸாகேனிலிருந்து" என்று அவள் இணைத்துக்கொண்டு, பிரைவேட் ஆபீஸ் கதவுவழியாக மறைந்தாள். ஒரு நிமிடம் கழித்துத் திரும்பி வந்தாள்.

"தோழர் மீர்பா!"

"ஆஜர்" என்று ராணுவ மோஸ்தரில் கெஸ்ஸோ பதிலளித்தான்.

"அலெக்ஸாண்டர் ஐவனோவிச் (அவள் கதவைப் பார்த்துத் தலையை ஆட்டினாள்) உங்களைக் காண்பார்."

"வந்தனம்" என்றான் கெஸ்ஸோ; தன் தங்கையைச் சகோதரவாஞ்சையோடு முத்தமிடுவதுபோல, அவளையும் முத்தமிடலாமா வென்று தோன்றிற்று. கெஸ்ஸோவுக்கு மீண்டும் குஷி கிளம்பிவிட்டது. அவன் ஜன்னலருகே, முதுகுக்குப் பின்னால் கையைக் கட்டிக்கொண்டு நின்றான்.

புன்னை மரங்களிலிருந்தும், யூகலிப்டஸ் மரங்களிலிருந்தும் ஜன்னல் வழியாகச் சுகந்தமணம் கமழ்ந்து வந்தது. கட்டிடத்தின் முன்னாலுள்ள பெரிய சதுக்கத்தில் மோட்டார்கள் செல்லும்போது, 'ஸ்விஷ்' என்ற சப்தம் உண்டாயிற்று. தூரத்தில், கடற்கரையில் பெண்களும் குழந்தைகளும் உலாவிக் கொண்டிருந்தனர். செம்படவர்கள் தமது வலையைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் சைக்கிளில் சுழன்று சுழன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

கெஸ்ஸோ, தனக்கே கேட்காத குரலில் ஒரு பாட்டை முனக ஆரம்பித்தான்.

"சலிப்பாக இருக்கிறதா?" என்றாள் அந்தப் பெண்.

"இல்லை" என்று கெஸ்ஸோ மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டான்.

அவன் கூறியது உண்மையே. அலுப்புச் சலிப்பில்லாமல் அவன் அந்த அறையில் இருக்கத் தயார். ''அவளைப் போன்ற அழகி அலுவல் பார்ப்பதைக் காண்பதே பரமானந்தம்'' என்று அவன் அன்பு ததும்பக் கூறினான். ஆனால், அந்தப் பெண் அவன் நினைத்ததை விடப் புத்திசாலி பிரைவேட் ஆபீசின் கதவுக்குப் பின்னால் தனக்கு ஆகவேண்டிய காரியத்தைப் பற்றி அவன் மிக ஆர்வம் காட்டினான்—இல்லையா? அவள் அவனைப் பார்த்து எச்சரிக்கையாக விரலை அசைத்துக் கொண்டே கேட்டாள்:

''ஸாகேனிலுள்ள மனிதர்களெல்லாம் இவ்வளவு தந்திர சாலிகளா?''

''இல்லை, எல்லோரும் இல்லை''

இருவரும் சிரித்தனர். அவன் கலகலவென்று உரக்கச் சிரித்தான். அவள், ''இது சரியல்ல, அவர்கள் காதில் விழுந்தால்!'' என்னும் பாவத்தில், பிரைவேட் ஆபீசைப் பார்த்துத் தலையசைத்தவாறு மெல்லச் சிரித்தாள்.

''முக்கியமான காரியத்திற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்று நம்புகிறேன்'' என்று அந்தப் பெண் பேச்சை மாற்றினாள்.

''ம்...நான் என்னத்தைச் சொல்வது?...ஒரு சாதாரண விவசாயிக்கு என்ன முக்கியமான வேலை இருக்க முடியும்?''

''உங்களுக்குத் தன்னடக்கம் அதிகம்.''

இந்தப் புகழ்ச்சியினால் கெஸ்ஸோவுக்கு உச்சி குளிர்ந்தது.

அச்சமயம் கதவு திறந்தது. இரண்டுபேர் வெளியே ஓடி வந்தனர். வெயிட்டிங் ரூமிலுள்ள ஒருவரையும் ஏறிட்டுப் பார்க்காமல், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் அவர்கள் கம்பி நீட்டினர்.

''சரியான 'டோஸ் கிடைத்திருக்கிறது'' என்று அவள் ரகசியமாகக் கூறினாள்: ''நீங்கள் உள்ளே போகலாம் தோழர்...''

''மீர்பா'' என்று அவளுக்குத் தன் பெயரை ஞாபகப் படுத்தினான் கெஸ்ஸோ.

அவன் தூசி துரும்பற்ற, விசாலமான அறையில் நுழைந்தான். அங்கே சுவர்களை யொட்டி நாற்காலிகள் போடப்

பட்டிருந்தன. இடதுகை மூலையில் ஒரு எழுதும் மேஜை இருந்தது. பசுமைநிற உல்லன் கம்பளியால் மூடப்பெற்ற மற்றொரு நீண்ட மேஜை அதை யொட்டி இருந்தது. அதன் மீது புத்தகங்களும் பத்திரிகைகளும் குவியல் குவியலாகக் கிடந்தன. வலதுகைப் புறத்தில் பற்பல டெலிபோன்கள்.

இளம் மலைநாட்டானைச் சந்திப்பதற்காக ஒரு மனிதர் எழுந்திருந்தார். மத்திம உயரம். கறுப்புச் சூட்டும், வெள்ளை ஷர்ட்டும், பளபளக்கும் நீலநிற 'டை'யும் அணிந்திருந்தார். பரந்த முகம், உயர்ந்த தாடை எலும்புகள். மேடான நெற்றி சுருட்டைமயிர்.

அறைக்குள் அடியெடுத்து வைத்ததும், கெஸ்ஸோ இவற்றையெல்லாம் ஒரு விநாடியில் கவனித்துவிட்டான்.

"தயவுசெய்து உள்ளே வருக" என்று ஆபீஸர் வரவேற்றார்: "அபூர்வமான விருந்தாளி. பேஷ்! பேஷ்!" அவர்கள் கை குலுக்கினர்.

"உங்கள் பெயர் தான் மீர்பாவா?"

"ஆம். தோழரே!" என்று ராணுவச் சுருக்கமாகச் சொன்னான் கெஸ்ஸோ.

"ராணுவ மோஸ்தர் எதற்கு? நாம் ஸிவிலியன்கள் தானே?" என்று, காரியதரிசி சிரித்துக் கொண்டே கேட்டார்:

"நீங்கள் ஒரு மாஜி சிப்பாயா?"

"ஆம்"

"எங்கெல்லாம் போயிருந்தீர்கள்? எப்பொழுது? என்ன செய்தீர்கள்?"

கெஸ்ஸோ திடுக்கிட்டுப் போனான். சென்றகால நிகழ்ச்சிகளை அவர் கேட்பாரென்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. கூட்டுப்பண்ணைத் திட்டத்தைப் பற்றியும், எத்தனை சதவிகிதம் வேலை நடந்திருக்கிறது என்பதைப் பற்றியும், வருங்கால அறுவடையைப் பற்றியும் அவன் ஒரு காகிதத்தில் குறித்து வைத்திருந்தான். அவரைக் கண்டதுமே அந்தக் காகிதத்தைத் தயாராய் கையில் எடுத்துக்கொண்டான். ஆனால் அவர் வேறு கேள்விகளைக் கேட்டவுடன், அதை ஒருவரும் கவனிக்காமல் மீண்டும் பையில் வைத்துக் கொண்டான். அந்தக் காகிதத்தைக் கண்டு அவனுக்குத்

திடீரென்று வெட்கம் வந்துவிட்டது—அசல் சொற்பொழி வாளனைப் போல இவன் பேச்சைத் தயாராக வைத்திருக் கிருனே என்று அவர் எண்ணக்கூடும்!

''நான் ராஸ்டாவ் போர்க்களத்தில் 'ஞானஸ்நானம்' பெற்றேன் காயமடைந்தேன். கீவ் நகரைப் பிடிப்பதில் உதவி செய்தேன். அங்கும் இலேசான காயம். பிறகு போலந் துக்குச் சென்றேன்.''

''பெர்லினுக்குச் சென்றீர்களா?''

''இல்லை. நான் மிகவும் பிந்திவிட்டேன். மே ஒன்பது வந்துவிட்டது.''

''நீங்கள் போகாவிட்டாலும் மற்றவர்கள் போயிருப் பார்கள். கட்சி அங்கத்தினரா?''

''ஆம். 1943-லிருந்து.''

டெலிபோன் மணி அடித்தது. அலெக்ஸாண்டர் ஐவனே விச் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு, கெஸ்ஸோவைப் பார்த்து மற்ருெரு கேள்வி கேட்டார்:

''நீங்கள் இவ்வூருக்குச் சிலகாலமாக வரவில்லையென்று நினைக்கிறேன்?''

''சென்ற இலையுதிர்காலத்தில் ஒருநாள் இவ்வழியாகப் போர்க்களத்திலிருந்து ஊருக்குத் திரும்பினேன்; அதைச் சேர்க்காவிட்டால், ஐந்துவருடமாக இங்கு வரவேயில்லை.''

''எங்களூரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தோழர் மீர்பா! அதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.''

''யுத்த காலத்திற்கு முன்பிருந்ததைவிட மிக அழகாய் இருக்கிறது...''

அலெக்ஸாண்டர் ஐவனேவிச், கெஸ்ஸோவின் கையைப் பிடித்துச் சுவரில் மாட்டியிருந்த ஒரு பிளானை நோக்கி அழைத்துச் சென்ருர்.

''நான் உமக்கு நிலைமை எப்படியிருக்கிறதென்று விளக்கு கிறேன்'' என்று அந்தப் பிளானில் பல இடங்களைச் சுட்டிக் காட்டினுர்: ''பத்துத் தெருக்களை மீண்டும் புதுப்பித்துவிட் டோம். இதோ, இந்தத் தெருக்களையெல்லாம் புதுப்பித்து, பொது ஜனங்களுக்காகக் குளிக்குமிடம் ஒன்று கட்டப் போகி ருேம், முடிந்தால் ஒரு சினிமாக் கொட்டகையும் கட்டு வோம். மொத்தச் செலவு என்ன ஆகும்மென்ருல்...''

அலெக்ஸாண்டர் ஐவனேவிச் புருவத்தை நெரித்துச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார். ஒன்று அவர் ஏதோ முக்கிய விஷயத்தை நினைவுபடுத்தியிருக்க வேண்டும்; அல்லது அவருக்குத் திடீரென்று சில சந்தேகங்கள் முளைத்திருக்க வேண்டும். ஏனெனில், செலவுத் தொகையைச் சொன்னவுடன் அவர் டெலிபோனை எடுத்தார். நகர சோவியத்தை அழைத்து, நடப்பு வருடத்தின் செலவுத் தொகையைப் பற்றியும், அது சம்பந்தமான தீர்மானங்களைப் பற்றியும் யாருடனே பேசினார்.

''தோழர் மீர்பா!'' என்று மீண்டும் கெஸ்ஸோவுடன் பேச ஆரம்பித்தார். ''நான் சொன்னவற்றுடன் இன்னொரு லட்சத்தையும் கூட்டிக் கொள்ளுங்கள்; இதுதான் சீரமைப்பு வேலைக்கும், டவுன் பிளானிங்கிற்குமுள்ள எங்கள் பட்ஜெட்.''

அலெக்ஸாண்டர் ஐவனேவிச் எல்லாவற்றையும் மிக விரிவாக எடுத்துச் சொன்னார். அவர் சொல்லுவதைப் பார்த்தால், தேவையான பணத்திற்குக் கெஸ்ஸோவையே கேட்கப் போவதுபோல் தோன்றியது! ஜில்லாக் கமிட்டிக் காரியதரிசி ஏன் இவற்றையெல்லாம் தன்னுடன் பேச வேண்டுமென்று கெஸ்ஸோவுக்கு விளங்கவில்லை. ஒரு புறம், இவ்வளவு முக்கிய விஷயத்தைப் பற்றியெல்லாம் தன்னுடன் பேசுகிறாரே என்று அவனுக்குப் பெருமையாக இருந்தது. மறுபுறத்தில், இந்த எதிர்பாராத பேச்சுக்கு அப்பால் என்ன நிகழுமோ என்ற கவலை தோன்றியது. ஸாகேனில் இம் மாதிரிப் பேச்சுக்களுக்குப் பின்னல், ஏதாவது திட்டம் மறைந்திருக்கும்! ஆகவே, கெஸ்ஸோ திகைப்புக் கடலில் தத்தளித்தான்...

பிளானைச் சுட்டிக் காட்டிக்கொண்டு அலெக்ஸாண்டர் ஐவனேவிச் பேசினார்:

''இது சதுப்பு நிலம். இதன் ஈரத்தைப் போக்கவேண்டும்...இந்த இடத்தில் இன்னும் ஒன்றிரண்டு நாளில் ஒரு பள்ளிக்கூடம் திறக்கப்படும். அது எங்களுக்கு மற்றொரு வெற்றியாகும்... அங்கே உங்கள் பள்ளிக்கூடமெல்லாம் எப்படியிருக்கிறது?'' என்று திடீரென்று கேட்டார்.

அப்புறம் அவர் எல்லாவற்றையும் விவரமாகக் கேட்க ஆரம்பித்தார். கூட்டுப் பண்ணை, பள்ளிக்கூடம், கட்சியின் வேலை, கிராம சோவியத், ஸாகேனிய மக்கள் ஆகியவை பற்றி விவரமாகக் கேட்டார். அவருடைய கேள்விகளுக்கெல்லாம் கெஸ்ஸோ விடையளித்தான். தனது பதில் சில சமயம் அவ

ருக்குத் திருப்தியளிக்கவில்லை என்பதையும் உணர்ந்தான். அப்போது அவர் புருவங்களை, ஏதோ ஒரு ஈ அவற்றின்மீது உட்கார்ந்து விட்டதைப் போலச் சுருக்குவார்.

''மக்கள் மக்களாய்த் தானிருக்கிறார்கள். நல்லவர்களும் உண்டு, கெட்டவர்களும் உண்டு'' என்றான் கெஸ்ஸோ.

அலெக்ஸாண்டர் ஐவனோவிச் கெஸ்ஸோவின் மார்பை விரலினால் குத்திவிட்டுச் சிரித்தார்.

''நீங்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்? நல்லவரா? கெட்டவரா?''

''என்னையா கேட்கிறீர்கள்?'' கெஸ்ஸோவுக்கு வெட்கம் வந்துவிட்டது: ''நான்...நான் என்ன சொல்வது?''

அலெக்ஸாண்டர் ஐவனோவிச் புன்னகை செய்து கொண்டு, மேஜையின்மீது அமர்ந்தார்.

''பாருங்கள்! உங்களைப் பற்றியே உங்களுக்குச் சரியாகச் சொல்ல தெரியவில்லை...உங்கள் ஜனங்களைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லுங்கள்.''

கெஸ்ஸோ அநேகரைப் பற்றிச் சொன்னான். தன் கிராமத்தினரைப் பற்றி அபிப்பிராயம் சொல்லும்போது, வார்த்தைகளை அளந்து பேசினான்.

அலெக்ஸாண்டர் மேஜையின்மீது பென்சிலின் அடியைத் தட்டிக்கொண்டே பேசினார்: ''இன்னும் எவ்வளவோ நல்ல ஜனங்கள் இருக்கிறார்களென்று நம்புகிறேன். ஆம், எவ்வளவோ பேர் இருக்க வேண்டும்; சரி, அதைப்பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். இப்போது நீங்கள் வந்த காரியம் என்ன?''

அவனுடைய பதில் தனக்குத் தெரியும் என்ற தோரணையில் காரியதரிசி கெஸ்ஸோவைப் பார்த்தார். அவரது கரு விழிகளில் குறும்பு மின்னிற்று.

''மிக முக்கியமான விஷயம்'' என்று கெஸ்ஸோ ஆரம்பித்தான்: ''எங்கள் கிராமத்தில் விளைச்சலை அதிகரிக்க எனக்குத் திடீரென்று ஒரு யோசனை உதித்தது. (அது ஒரு பைத்தியக்கார யோசனை என்ற வார்த்தை அவன் நுனி நாக்குவரை வந்துவிட்டது!)

''தோழர் மீர்பா! உங்கள் யோசனை மிக அருமை, அதி அற்புதம். நீங்கள் உத்திரவை வாசித்தீர்களா?''

''எந்த உத்திரவு?''

''இதை வாசியுங்கள். அறுவடைக்கும், சிறந்த அறுவடைக்கும் நமது அரசாங்கம் பரிசு வழங்கப் போகிறது. 'சோஷலிஸ உழைப்பு வீரன்' (Hero of Socialist Labour) என்ற பட்டத்தை வழங்கப் போகிறது. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

கெஸ்ஸோ அரசாங்க உத்திரவை ஊன்றிப் படித்தான். சோளத்தைப் பற்றிக் கூறப்பட்டிருந்த வரிகளை ஆர்வத்தோடு வாசித்தான்

''அற்புதம்!'' என்று மேஜைமீது குத்தினான். பிறகு சுய நினைவு வரவே, அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

கெஸ்ஸோவை அலெக்ஸாண்டர் ஐவனேவிச் உன்னிப்பாகக் கவனித்தார். இந்த இளைஞனின் துருதுருத்த—கள்ளங்கபடமற்ற முகமும், மனோபலம் அவ்வளவையும் குவித்து வைத்திருப்பவைபோல முஷ்டியாக மடிந்திருந்த உறுதியான கரங்களும், அவரைக் கவர்ந்தன.

''அலெக்ஸாண்டர் ஐவனேவிச்! எனக்கு உத்திரவைப் பற்றி ஒன்றும் தெரியாது...ஸாகேனில் ஒரு ஹெக்டாருக்கு நூறு 'பூடு'கள் விளைவதையே என்றும் அதிசயமாகக் கருதுவார்கள். ஆனால் அது சரியல்லவ!''

''தோழர் மீர்பா! சரியாகச் சொன்னீர்கள்.''

''தோழர் காரியதரிசி! நாங்கள் வேறு விதமாக இந்த அலுவலை முடிப்பதென்று தீர்மானித்து விட்டோம்.''

''எப்படி?'' அலெக்ஸாண்டர் ஐவனேவிச் நாற்காலியில் சௌகரியமாக அமர்ந்துகொண்டு, கெஸ்ஸோ சொல்வதைக் கேட்கத் தயாரானார்.

''முதலாவதாக, வயலில் சரியாக உழவேண்டும். நிலத்தை இலேசாகக் கீறினால் மட்டும் போதாது. இரண்டு முறை உழுது, நன்றாகப் பரம்படிக்கவேண்டும். ஓநாய்களை ஒழித்துக் கட்டுவதைப்போல, களைகளைப் பிடுங்கி எறிய வேண்டும்.''

''ஆம்......ஆம்'' என்று ஒரு துண்டுக் காகிதத்தில் ஏதோ வரைந்துகொண்டு, அலெக்ஸாண்டர் ஐவனேவிச் தலையாட்டினார்: ''அது சரிதான். நிலத்தைச் சரியாகப் பண்படுத்தினால் முப்போகம் விளையும்.''

அவருடைய பேச்சுக்கள், கெஸ்ஸோவுக்குத் தைரியம் தந்தன. ஆகவே அவன் மேஜைமீது கைகளை வைத்துக் கொண்டு பேசினான்:

''அதுதான் விஷயம்—பண்படுத்துதல்—சரியான முறையில் நிலத்தைப் பண்படுத்துதல். இது மட்டுமல்ல, இன்னும் கொஞ்சம் இருக்கிறது. எங்கள் கிராமத்தில் ஒரு குன்று உண்டு. தோழர் காரியதரிசி, அது ஒரு தினுசான குன்று! அதில் உரம் இருக்கிறது—பாஸ்பரைட்.''

''என்ன—பாஸ்பரைட்?'' என்று ஆச்சரியத்துடன் ஏறிட்டுப் பார்த்தார் அலெக்ஸாண்டர் ஐவனேவிச்.

''ஆமாம். அந்தப் பாஸ்பரைட்டை நாம் உரமாக உபயோகித்தால், நமக்கு எவ்வளவோ நன்மை உண்டாகும். அது இரண்டு மடங்கு விளைச்சலைத் தரும்.'' பிறகு, தனது தன்னம்பிக்கைக்காக மன்னிப்புக் கோருவதுபோல அவன் பேசினான்; ''எனக்கு நில ஆராய்ச்சியைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். நான் பயிற்சி வகுப்பில் தேறி இருக்கிறேன். நான்...இதோ வந்து விடுகிறேன்...''

கெஸ்ஸோ ஆபீசிலிருந்து வெளியே ஓடி, ஒரு விலை மதிப்பற்ற பையுடன் திரும்பினான். அதை அவிழ்த்து, ஒரு நாற்காலியின்மீது வைத்து, அதிலிருந்து ஒருபிடி சாம்பல் நிற மண்ணை எடுத்தான்.

''இதோ இருக்கிறது'' என்று கெஸ்ஸோ கம்பீரமாகச் சொன்னான்: ''இதை ஒரு சம்மட்டியால் அடித்து நொறுக்கி, சோதனை செய்வதற்காக இங்கே கொணர்ந்தேன்.''

காரியதரிசி என்ன நினைக்கிறார் என்பதைக் கவனித்துக் கொண்டு, கெஸ்ஸோ தன் திட்டங்களை விளக்கினான். அலெக்ஸாண்டர் ஐவனேவிச் குறுக்கே பேசாமல் கேட்டுக்கொண்டே வந்தார். அவர் எதற்காகவோ ஒரு சிட்டிகை மண்ணை எடுத்து மோந்து பார்த்தார்; பிறகு ஒன்றும் சொல்லாமல் டெலிபோனிடம் சென்றார். ரிஸீவரை எடுக்குமுன் கெஸ்ஸோவின் பக்கம் திரும்பினார்:

''அந்தக் குன்று பெரியதா?''

''ஆம். பிரும்மாண்டமானது! வண்டி வண்டியாக மண் எடுக்கலாம்.''

''நாங்கள் பாஸ்பரைட்டுக்காக எங்கெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறோம் தெரியுமா? ஆயிரம் மைலுக்கப்பா

விருந்து நாங்கள் சூப்பர் பாஸ்பரைட்டை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம்; நம் இடத்திலேயே அது மலிவாகக் கிடைக்குமானால், வேறு என்ன வேண்டும்?'' அவர் பையை அணுகினர்: ''பாஸ்பரைட்—இதில் சந்தேகமே இல்லை. அதன் தன்மை என்ன?'' என்று கெஸ்ஸோவைப் பார்த்துக் கேட்டார் ஐவனேவிச்.

''அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது ஐவனேவிச்!''

''சுத்த மோசம். (கெஸ்ஸோவின் இதயம் நின்றுவிடும் போலிருந்தது) ஆனால் அது உண்மையான பாஸ்பரைட்டானல், உங்களுக்கு யோகம் தான்......வாஸ்தவம். சூரிய காந்தி விதையைப்போலே அதை நொறுக்கிவிட முடியாது. மில்களும், மோட்டார்களும் அதற்கு அவசியம்......பரவாயில்லை. அதனால் நமக்கு ஒரு இடைஞ்சலும் இல்லை.''

அலெக்ஸாண்டர் ஐவனேவிச் 'சட்'டென்று ரிஸீவரைக் கையிலெடுத்தார்.

''ஹலோ! ஜில்லா நிர்வாகக் கமிட்டித் தலைவருடன் பேசவேண்டும். அப்புறம் விவசாய இலாக்காவுடன் பேச வேண்டும். அதன்பின்...வேண்டாம் இப்போது இதுபோதும் ...ஹலோ! ஒரு முக்கிய சமாசாரம். நீங்கள் உடனே இங்கு வர முடியுமா? ரொம்ப சரி...ம்...ஹலோ! யார் அங்கே? உங்களைக் காண ஒரு மனிதர் ஸாகேனிலிருந்து என்னிடம் வந்திருக்கிறார். விளையாட்டுக்குச் சொல்லவில்லை. நீங்கள் வருகிறீர்களா? ஐந்து நிமிடத்தில் உங்களை எதிர்பார்க்கிறேன். நல்லது.''

அவர் ஒரு பொத்தானை அழுத்தி, உள்ளே வந்த பெண்ணிடம் சொன்னார்.

''காரியதரிசிகளை இங்கே வரச் சொல்லுங்கள்'' அலெக்ஸாண்டர் ஐவனேவிச் சிந்தனையில் ஆழ்ந்தவராய், அங்குமிங்கும் உலாவினர்.

''இதற்காகவா நீங்கள் இங்கு வந்தீர்கள்?'' என்று பையைச் சுட்டிக் காட்டினர்.

''ஆம்.''

''உங்கள் ஜனங்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்.''

அவர்களுக்குச் சந்தேகமாயிருக்கிறது, ஐவனேவிச்!''

''ஆனல், பொதுவாக உங்களை ஆதரிக்கிறார்கள் அல்லவா?''

''ஆம்; எல்லோரும்'' என்று புளுகினான் கெஸ்ஸோ.

''எல்லோரும் அதிலே ஆர்வம் செலுத்தமாட்டார்களென்று எனக்குத் தோன்றுகிறது'' என்று கெஸ்ஸோவை உன்னிப்பாகக் கவனித்தார் காரியதரிசி: ''நீங்கள் ஸாகேனுக்குத் திரும்பும்போது அந்த உத்திரவையும், இன்னும் சிலவற்றையும் எடுத்துச் செல்லுங்கள்......அங்குள்ளோர் வாசிக்கட்டும்.''

காரியதரிசிகள் ஒவ்வொருவராக உரத்த குரலில் முகமன் கூறிக்கொண்டு உள்ளே வந்தனர்.

''என்ன இது? பீரோ (Bereau) கூட்டமா?'' என்று யாரோ ஒருவர் திகைப்புடன் கேட்டார்.

ஐவனேவிச் 'கட கட'வென்று சிரித்தார்.

''அதுமாதிரித்தான்'' என்றார்: ''தயவு செய்து, எல்லோரும் இங்கே வாருங்கள்; இந்தப் பையைப் பாருங்கள். அதற்குமுன், ஸாகேனிலிருந்து வந்திருக்கும் தோழர் மீர்பாவை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்.''

''ஸாகேன்'' என்ற வார்த்தை உணர்ச்சிப் புயலைக் கிளப்பியது.

''ஓஹோ! இவ்வருஷம் சீக்கிரமாகவே பட்டணத்திற்கு வந்து விட்டீர்களே?''

''ஸாகேனிலிருந்தா? இங்கு எப்படி வந்தீர்கள்?''

கெஸ்ஸோ அவர்களோடு கை குலுக்கினான்.

''அப்படியானல் ரஸ்தா திறந்திருக்கிறதா?''

''நான் முதுகினால் தான் பிரயாணம் செய்தேன்'' என்று கெஸ்ஸோ கிண்டலாகப் பதிலளித்தான்.

''அப்படி வந்தாலும் ஆச்சரியமில்லை!'' என்று யாரோ சொன்னார்கள்.

''ஆச்சரியமில்லை தான்.''

......ஒரு மணி நேரம் சென்றது. அலெக்ஸாண்டர் ஐவனேவிச்சிடம் கெஸ்ஸோ விடைபெற்றான்.

விடை கொடுத்தனுப்பும்போது காரியதரிசி கூறினார்:

''தோழர் மீர்பா! உங்கள் திட்டத்தை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். ஸாகேனுக்கு அதிருஷ்டம் அடிக்கிறது. நாளை யாவது, நாளை மறு நாளாவது இதைப்பற்றிய ஆராய்ச்சியின் முடிவு தெரியும்; ஆனால் இதை மட்டும் நீங்கள் நம்பிக் கொண்டிருக்கமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன். ரொம்ப சரி. குன்றின் விஷயம் தானாக நடக்கும். ...ஆராய்ச்சி அனு கூலமாகிவிடுகிறதென்று வைத்துக்கொள்வோம். என்ன, காதில் விழுகிறதா? அங்கே ஒரு மில்லையும், எஞ்சினையும், அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளையும் கொணர்ந்தாக வேண்டும். இது எளிதான காரியமல்ல. உழுவதுதான் தற் போதைக்கு உங்களுடையவேலை. கட்சி ஸ்தாபனத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்; எல்லாம் சரி யாக நடக்கும். (ஐவனோவிச் சிறிது நின்றான்) போல்ஷிவிக் குகளாகிய நாம் தன்னடக்கம் உள்ளவர்கள். நாம் ஒருவரை யொருவர் புகழ்ந்து கொள்ள விரும்புவதில்லை. இருந்தாலும், அருமையான இளைஞர்!...நீங்கள் வெளி உலகத்தோடு நீங்கள் ஓர் தொடர்பின்றி இருக்கிறீர்களென்று சிலர் நினைக் கலாம். அது தவறு தேசம் முழுவதுமே உங்களுடன் இருக் கிறது: நீங்கள் தனியாக இல்லை. மலைகள், கணவாய்கள், நதிகள் வழியாகப் போல்ஷிவிக் உணர்வு எங்கும் ஊடுருவிப் பாய்கிறது. இதோ பாருங்கள்!'' என்று, கெஸ்ஸோவைத் தேசப் படத்தை நோக்கி அழைத்துச் சென்றார் அவர் ''இதோ இருக்கிறது சோவியத் யூனியன், பரந்த— வலு வுள்ள உலக அரசு; நீங்கள் அதில் ஒருவர். மாஸ்கோவில் ஸ்டாலினுக்கு அருகில் வேலை செய்வதைப் போன்று-நீங்கள் வேலை செய்யவேண்டும்; வாழவேண்டும், தெரிகிறதா?''

அலெக்ஸாண்டர் ஐவனோவிச் மெதுவாக, நிறுத்திப் பேசினார். அவரது அங்க அசைவுகளில் வேகம் இல்லை. அது அவருக்குச் சிறிது வரண்ட தோற்றமளித்தது. அவரது வெளித் தோற்றத்தில் ஒருவித உணர்ச்சியும் இல்லாவிடினும், ஒவ்வொரு வார்த்தையும் உணர்ச்சி செறிந்து, இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிவந்தது. அவருடைய பேச்சைக் கேட் கும்போது, கெஸ்ஸோவுக்குச் சிறகு முளைத்துப் பறப்பதைப் போலிருந்தது.

''தோழர் மீர்பா! நினைவிருக்கட்டும். அறுவடைதான் நம் ஜீவாதாரம். அதற்காக இம்மியும் விடாமல் போராடுங்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். மாஸ்கோ உங்கள் தானி யத்தை எதிர்பார்க்கிறது . . ஆம். உங்களை ஒருவரும் மறக்க வில்லை. தெரிகிறதா? நாங்கள் இந்தக் கோடையில்

ஸாகேனுக்கு விமானப் போக்குவரத்தைத் துவக்குகிறோம். யுத்தத்திற்கு முன்பு யாரோ அங்கே விமானத்தில் வந்தார்களல்லவா?''

''ஆம். ஒரு தடவை...''

''விமானப் போக்குவரத்து—பிரமாதமான வார்த்தை! ஆரம்பத்தில் 'U—2' விமானங்கள் வாரம் ஒருமுறை உங்களூருக்கு வந்து செல்லும்.'' குறும்புச் சிரிப்புடன் ஐவனோவிச் தொடர்ந்தார்; ''சிறிது காலத்தில் உண்மையான விமானப் போக்குவரத்து ஏற்பட்டுவிடும். என்ன நினைக்கிறீர்கள்?''

''நிச்சயமாக விமான சர்வீஸ் ஏற்பட்டுவிடும், ஐவனோவிச்!''

''தோழர் மீர்பா! நாளை அல்லது நாளை மறுநாள் உங்களுக்கு ஆராய்ச்சியின் முடிவு தெரியும். அப்போது என்னை வந்து பாருங்கள்...உங்களை விமான மூலம் வீட்டுக்கு அனுப்ப விரும்புகிறேன். இன்னும் ஐந்தாறு நாளில் அந்த ஏற்பாட்டைச் செய்யமுடியும்.''

''ஆனால் எனக்கு அவசரம். விதைக்கும் வேளை நெருங்கிவிட்டது.''

''இருந்தாலும், இப்போது போய் வாருங்கள்; அப்புறம் யோசிப்போம்''

அருமையான விருந்து சாப்பிட்டவன் போல, குடியாமலே தலை கிறங்க, தன்னைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களும் சுழன்று வர, ஆனால் கால்கள் மட்டும் தடுமாறாமல் இருக்க, கெஸ்ஸோ நடந்து வந்தான். உலகம் வானவில்லின் வண்ணத்துடன் பிரகாசிப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. இவை எல்லாம் கனவல்ல; பரிபூர்ண உண்மை!

## 25

ஸாகேனில் வழக்கம்போல வாழ்வு கழிந்தது.

யேகூப்பின் உஷாரான கண்காணிப்பிலே, கெஸ்ஸோவின் கோஷ்டி உழுது முடித்துவிட்டது மகனுடைய வருகையைத் தாங்கமுடியாத ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் யேகூப். பொதுவாக, சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் 'பிரகாசக் கிரணக் கூட்டுப் பண்ணை (Bright Ray Collective Farm)யில் வேலை நன்றாக நடந்தது.

ஆனால் இடைஞ்சல் இல்லாமல் இல்லை.

வெள்ளம் வந்து குடாலின் எலெக்டிரிக் ஸ்டேஷன் அணைக்கட்டை அடித்துக்கொண்டு போய்விட்டது.

கிழட்டு ஷாங்கேரி படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனுடைய உயிர் போய்விடுமென்று டாக்டர் பயந்தார்; தினந்தோறும் மாலையில் அவனைப் பார்க்க வந்தார்.

நிக்கோலா வேட்டையில் மும்முரமாக இருந்தான். நாட்கணக்காகக் காட்டிலேயே தங்கிவிட்டான். திறமை மிக்க வேடர் கோஷ்டி யொன்றைத் திரட்டித் தருமாறு கான்ஸ்டான்டினிடம் கேட்டு, அதில் வெற்றியும் பெற்றுவிட்டான்.

''இலாபமெல்லாம் கூட்டுப்பண்ணைக்குத் தானே வரப் போகிறது. பிற்பாடு நாம் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்'' என்று அவன் விவாதித்தான்.

மே முதல் தேதி நெருங்கிக்கொண்டிருந்தது. கான்ஸ்டான்டினும், முஷாக்கும் அதை வியரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டனர். நாற்றங்காலில் கூட்டுப் பண்ணைக் காக மே தினப் பரிசு தயாரிக்கப்பட்டது—திட்டத்திற்கு மேலே ஐம்பதினுயிரம் நாற்றுக்கள்! சிறந்த தொழிலாளிக ளான காமாவுக்கும், நீனுவுக்கும் போனஸ் கிடைக்கும்.

அதாமூருக்கு நல்ல வியாபாரம். மோசமான பருவத்தில் கூட அபாரமான வருமானம். ரஷீத் சம்பந்தப்பட்ட வரை யில்......அவனுக்கு விடுமுறையில் உற்சாகமில்லை; வேறு கவலைகள் இருந்தன.

அந்த எழுதப்படாத சட்டம், ஆண்மையின் வீரப்பிர தாபம்—சம்பிரதாயப் பற்றுக்கொண்ட ரஷீதை இறுதி நட வடிக்கையில் இறங்கத் தூண்டியது சொல்லைச் செயலாக்கும் தருணம் இதுதான்; இல்லாவிடில் நண்பர்கள் மானத்தைக் கப்பலேற்றிவிடுவார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

ஆகவே நாளும், பொழுதும் நிர்ணயிக்கப்பட்டன.

மார்ட்டினின் குகையில் சதிகாரர்கள் சந்திக்கத் தீர் மானித்தனர். ஸாகேனிய மரபின்படி, அது வனுந்திரப் பேய் பிசாசுகள் வசிக்குமிடமாகும். ஆண்டன் ஒரு கட்டை யில் உட்கார்ந்து, தன் சகாக்களை எதிர்பார்த்துப் புகை குடித்துக்கொண்டிருந்தான். அந்த மாலை மசக்கலில் அவன் ஒரு காட்டுப் பேயாகவே தோன்றினுன்.

'வந்து விட்டாயா நீ? உன் எண்ணத்தைக் கைவிட்டு விட்டாயோ என்று பயந்தேன்'' என்று அவன் பெருமூச்சு விட்டான்.

ஆண்டனும் இந்த ஒல்லி மனிதனும் புதருக்குள் மறைந் தனர். பாதையின் அருகில் ஆண்டன் இருந்த கட்டைமீது விரகதாபம் மேலிட்டு ரஷீத் உட்கார்ந்துகொண்டான். அவன் புதிய உல்லன் சட்டையும், குதிரைப் பட்டாளத்தா னின் தோல் நிஜாரும், செம்மறித்தோலினாலான கோட்டும் அணிந்திருந்தான். அவனது துணிகர உள்ளத்திற்கேற்ப பூட்ஸுகள் கிரீச்சிட்டன. அவன் தலையில் அதாமூரிட மிருந்து இரவல் வாங்கிய 'ஆஸ்ட்ராக்கன் தொப்பி' இருந்தது. அவன் அங்கேயே இருந்தாலும்,வளைந்துநெளிந்த பாதையின் வழியே அவன் சிந்தனை கூட்டுப் பண்ணையின் வெப்பமான பாத்திகளுக்கு ஓடிற்று. அப்பாதையின் வழியாக, அவனது இருண்ட எண்ணங்களை நோக்கிக் காமா வந்தாள். பாதை யின் வளையில் அவள் நீனுவிடம் விடை பெற்றுக்கொண்டு, தனியே நடந்தாள்.

அவள் திடுக்கிட்டுவிடக் கூடாது என்ற பயத்துடன் ஒரு பாட்டை முனகிக்கொண்டு. ரஷீத் அவள் எதிரே சென்றான்.

ரஷீதைக்கண்டதும் காமா அவ்வளவாக ஆச்சரியமடைய வில்லை. அவள் அவனுக்கு முகமன் கூறிவிட்டு, மேலே செல்ல முயன்றாள். ஆனால் அவன் வழியை மறித்தான்.

"நீ வீடு திரும்பும்போது துணைக்கு வரவேண்டுமென்று நான் காத்திருக்கிறேன்."

"வந்தனம்."

அவன் அவளது புஜத்தை இறுகப் பற்றினான். பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னான்:

"நீ என்னை நெடுநாளாக வாட்டிவதைக்கிறாய் என்பதை அறியாயா? ஆம், காமா! உன் மீதுள்ள காதல் இதுவரை ஏறிவிட்டது. (அவள் குரல்வளையைத் தொட்டுக் காட்டி னான்) சிரிக்காதே. எல்லாவற்றுக்கும் ஓர் அளவு உண்டு."

அவள் கிண்டலாகப் பதிலளித்தாள். ஆனால் ரஷீதுக்குக் கிண்டலை அனுபவிக்கக்கூடிய மனோநிலை இல்லை.

பேச்சு சுருதியைவிட்டு விலகிற்று. ரஷீதின் குரலில் ஈவிரக்கமற்ற பயங்கரம் தொனித்தது. காமாவுக்கு உதறல் எடுத்துவிட்டபோதிலும், அதை மறைக்க முயன்றாள். பேச் சைக் கிண்டலாகவே தொடர எண்ணினாள்.

ரஷீத் பொறுமை இழந்துவிட்டான். அவன் பளீரென்று ஒரு விசில் அடித்து அவளைப்பற்றிக் கொண்டான். ஆண்டனும், யேணிக்கும் எங்கிருந்தோ குதித்தோடி வந்தனர். கண் மூடித் திறப்பதற்குள் அவளை ஓர் ஆடையால் மூடினர்; ஒரு குதிரைமீது தூக்கி வீசினர். இவ்விதமாக—காமா அபகரிக்கப் பெற்றாள்!

இதுபோன்று கடத்திச் செல்லுதலில் உண்மையான காதல் இல்லை. நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். காமா மயங்கி விழுந்துவிடவில்லை. இப்பெண்ணின் சௌகரியத்தைக் குதிரைவீரர்களும் துளிகூடப்பொருட்படுத்தவில்லை. இவ்விலையுயர்ந்த சுமையை ஏற்றிக்கொண்டு, குதிரையும் காற்றினும் கடுகிச் சென்றுவிடவில்லை. அது பாதையில் அசைந்தாடி நடைபோட்டது. குதிரையின் கழுத்திலுள்ள கோணிப் பையைப் போல, ஒரு ஜீவன் இங்குமங்கும் அசைந்தாடிச் செல்வது துயர்மிகுந்த அனுபவமாகும்.

பெண்ணைக் கடத்திச் சென்றவனும் அவளைப் போலவே கஷ்டப்பட்டான். அவன் கைகள் விறைத்துப் போய்விட்டன; அவன் பாதங்கள் மரத்துப் போயின; அவன் கழுத்து முறுக்குண்டு கிடந்தது. பழங்காலக் காதல் கதைகளின்படி பார்த்தால், வெற்றிகரமாகப் பெண்ணைக் கடத்திச் சென்றவனின் ஆனந்தத்தில் ஒரு துளியைக்கூட ரஷீத் அனுபவிக்கவில்லை.

இரண்டு மணி நேரம் கழித்து, காமா ஒரு நூதனமான வீட்டுப் பெஞ்சில் உட்கார்ந்திருந்தாள். அறையில் அமைதி நிலவியது. ஆனால், மெல்லிய மரத்தட்டிகளின் வழியே ஆண்களின் பேச்சுக்குரல் கேட்டது. அவளால் தலையைத் தூக்கவே முடியவில்லை. தடிகொண்டு தாக்கியதுபோல அவள் உடல் முழுவதும் வேதனை. இருப்பினும், அவளை நெருங்கத் துணிந்த எவருடைய கண்களையும் அவள் பிடுங்கத்தயாராய் இருந்தாள்.

கதவு கிரீச்சிட்டது. கையில் ஒரு தட்டுடன் கிழவி உள்ளே நுழைந்தாள்.

"மகளே! அஞ்சாதே" என்று அன்பாக மொழிந்தாள். "மனதைக் குழப்பிக் கொள்ளாதே தவிர்க்க முடியாததற்குத் தலை வணங்கிவிடு...இதுதான் பெண்களாகிய நமது தலைவிதி. முன்னையோ, பின்னையோ நாம் தூக்கிச் செல்லப் படுகிறோம். முதலில் அவர்களால் (அவள் தட்டியைக் காண்

பித்தாள்); அப்புறம், ஈவு இரக்கமற்ற சாவினுல்,'' அவள் நடுங்கியவாறு பேசினுள்; அவளுடைய வளைந்த மூக்குத் துடித்தது: தன் வரண்ட உதடுகளைச் சிரமத்துடன் அசைத்தாள். அவளது வயதிற்கு, அவள் கண்கள் மிகப் பிரகாசமாயிருந்தன; அவை ஆழ்ந்த பள்ளத்தில் பதிந்திருந்தன.

காமா பெஞ்சிலிருந்து எழுந்திருந்தாள். அவள் கால்கள் தள்ளாடின. இருப்பினும் அக்கிழவி தந்திரமாகப் பின்னுல் நகர்ந்தாள்.

''ஏ கிழவி! இம்மாதிரி விஷயங்களில் தலையிட உனக்கு வெட்கமில்லை? அருவறுக்கத்தக்க தொழிலில் முட்டாள்களுக்கு உதவுகிருயே?'' என்று ஆத்திரமாக முன்னுல் பாய்ந்தாள்: ''அந்த ஆஷாடபூதியை மணக்க விருப்பமா என்று நீ என்னிடம் கேட்டாயா?''

அக்கிழவி கையை உதறினுள்.

''ஏன் மகளே...அவன் தன் மனைவியுடன் வருவதாக அல்லவா என்னிடம் சொன்னுன்? எனக்கு எப்படித் தெரியும்? நாமெல்லாம் மனித ஜென்மங்கள்தானே?—கண்ணே!—உனக்கு நல்வரவு!''

காமா கணப்பருகில் உட்கார்ந்தாள். கணப்பிலே கட்டைகள் கருகிக்கொண்டிருந்தன.

''குளிருகிறது: கணப்பைக் கிளறவேண்டும்.''

''மகளே. அதை நான் செய்கிறேன்...'' என்று முனகினுள் கிழவி.

''எனக்கு வேண்டியதை நான் கவனித்துக்கொள்வேன். பாட்டி! உனக்குச் சிரமம் இல்லாவிடில், உண்பதற்கு ஏதாவது கொடு. பசிக்கிறது...அதிருக்கட்டும். அந்தப் பைத்தியங்கள் எங்கே இருக்கின்றன?''

''சமையலறையில்'' என்று கிழவி தட்டுத் தடுமாறிச் சொன்னுள்.

''ஒரு நிமிஷம் பொறு'' என்று காமா சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பழங்காலத் துப்பாக்கியை எடுத்தாள்.

''இதனுல் சுட முடியுமா?''

''அட கடவுளே!...—ஐம்பது வருஷமாக இது சும்மா கிடக்கிறது.''

''பரவாயில்லை. ஒரு தடியாகவாவது இது பயன்படும் என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே. இதில் மருந்து இருக்கிறதென்று அவர்களிடம் கூறு.''

கிழவி தலையசைத்தவண்ணம், கதவருகே நொண்டிக் கொண்டு சென்றாள்.

''அந்தப்பயலை—என்னைத் தூக்கி வந்தவனை—இங்கே அனுப்பு.'' காமாவுக்குக் கடுங்கோபம். ஸாகேனியப் பெண்களுக்குக் கோபம் வந்துவிட்டால், கடவுள் தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்!...

காமா முன்னால் அடியெடுத்து வைத்து, அந்தத் துப்பாக்கியைப் பரீட்சித்தாள். வெள்ளித் தகட்டினால் செய்யப்பட்டிருந்த அத்துப்பாக்கி அவளுக்குப் பரவச மூட்டியது. அவள் அதைத் தூக்கி, கதவின் கைப்பிடியைக் குறிப் பார்த்தாள்.

அச்சமயம் கதவைத் திறந்து கொண்டு, வெளிறிய—குழப்பமடைந்த முகத்துடன் ரஷீத் உள்ளே வந்தான். காமாவின் கையில் துப்பாக்கி இருப்பதைக் கண்டதும் பின் வாங்கினான்.

''என்ன செய்கிறாய்? ஏன்?'' என்று குளறினான்.

''ஒன்றுமில்லை'' என்று காமா அலட்சியமாகக் கூறினாள்:

''இதைச் சும்மாதான் பார்த்தேன். நல்ல துப்பாக்கி! ஆனால் வீட்டுக்காரி எங்கே? எனக்குப் பசிக்கிறது.''

''என்ன எழவு!'' என்று ரஷீத் நினைத்தான்: ''அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். அல்லது அவள் இரண்டிலொன்று பார்த்துவிடத் தீர்மானித்திருக்க வேண்டும்.'' சீக்கிரம் உணவு கொண்டுவரச் சொல்வதற்காக அவன் வீட்டுக்காரியிடம் ஓடினான். விரைவில் திரும்பி வந்து ஒரு மூலையில் அடக்கமாக உட்கார்ந்தான்.

''உன் தோழன் எங்கே?''

''சமையலறையில்.''

''அவன் ஏன் இங்கே வரவில்லை? நான் அவனைப் பார்க்க வேண்டும்.''

''அவனைப்பற்றிக் கவலைப்படாதே, காமா!'' என்று ரஷீத் அவளை நெருங்க முயன்றான்.

''ஒரு அடிகூட எடுத்து வைக்காதே. தெரிந்ததா?''

ரஷீத் பணிந்தான்.

''இதைக் கேள்'' என்று அவன் ஒரு விநாடி கழித்துக் கூறினான்: ''உனக்கு எல்லாம் தெரியுமென்று நினைக்கிறேன். என் நிலையை—என் உணர்ச்சிகளை எண்ணிப்பார். என்னுள்ளே காதல் புயல் வீசுகிறது. நான் அமைதி இழந்து தவிக்கிறேன்.''

காமா அவனை வெறுப்போடு பார்த்தாள். பூமியைக் காலால் உதைத்துக் கொண்டு சொன்னாள்:

''நாம் எந்த ஆண்டில் வசிக்கிறோம் தெரியுமா? 1947-ல் தானே? ஹா! இந்த ஆளரவமற்ற இடத்தில்கூட, ஸாகேனைப் போன்ற கரடிவளையிலுங்கூட, சர்க்கஸ் காட்சி மாதிரித்தான் காரியம் நடக்கிறது!''

''நம் முன்னோர்களின் வழக்கத்தைப் பழிக்கும் முறையில் நான் ஒன்றும் செய்துவிடவில்லையே?''

''ஓ!...ஒன்றும் செய்துவிடவில்லை!'' என்று கத்தினாள் காமா: ''அந்தப் பழைய சம்பிரதாயம்தான் உனக்கு அவமானம் விளைத்துவிட்டது.''

அவள் அருகில் வரத் திட்டமிட்ட வண்ணம் ரஷீத் அங்குமிங்கும் உலாவினான்.

''தூரப்போ!'' ஒரு விநாடியில் அவன் நெற்றிக்கு நேரே துப்பாக்கி குறி பார்த்தது.

''அதனால் சுடமுடியாது'' என்று ரஷீத் நையாண்டி பண்ணினான்.

''ஆனால் துப்பாக்கிச் சனியன் பலமாக இருக்கிறது'' என்று காமா அதை வீசிக் காட்டினாள்.

''உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது'' என்று, பழைய மூலையில் அமர்ந்துகொண்டு ரஷீத் சீறினான்: ''சரி, விடியும் வரையில் நீயும் நானும் கிளியந்தட்டு ஆடுவோம். ஆனால் இதன் அர்த்தம்தான் எனக்கு விளங்கவில்லை.''

''அதிகாலையில் நான் வீட்டுக்குச் செல்ல ஒரு குதிரை தயாரித்து வையென்று நான் சொல்லும்போது, உனக்கு விளங்கும்.''

ரஷீத் எரிந்து விழுந்தான். அப்போது கையில் தட்டுகளுடன் கிழவி கதவருகில் தோன்றினாள். அவள் செவியில்

காமாவின் சொற்கள் விழுந்தன: ''என்ன?'' என்று ஆச்ச ரியத்துடன் கூவினுள் கிழவி: '' நீ போய்விடுவாயா? தனி யாகவா?''

கிழவியின் வயதுக்கு மரியாதை கொடுப்பதற்காகக் காமா எழுந்திருந்தாள்.

''ஆம். தனியாகத்தான்—எனக்கு துணை அனுப்ப இவருக்கு மூளை இல்லாவிட்டால்''

''நீ வீட்டுக்குப் போகப் போகிருயா?''

''பின் எங்கே?''

''காமா! முதலில் யோசித்துப்பார். நீயும் நானும் ஒரு வகையில் தம்பதிகளாகி விட்டோம் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்.''

''அதை எப்படிக் கண்டுவிட்டாய் நீ?'' என்று சீறினுள் காமா.

''நான்தான் சொன்னேனே—'ஒரு மாதிரியாக' என்று. நீ என்னோடு ஓர் இரவு தங்கிவிட்ட படியால், ஸாகேனுக்கு இதுபோதும் என்று எண்ணுகிறேன்.''

''அட அயோக்கியா! நான் அப்படி எண்ணவில்லை'' என்று சூடு கொடுத்தாள் காமா.

''இது சத்தியம்......''என்று ரஷீத் ஆரம்பித்தான். ஆனல் அவள் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண் டாள்.

''முதலில் உன் முகத்தில் காறி உமிழப் போகிறவன் கெஸ்ஸோ'' என்று பழி வாங்கினுன் ரஷீத்.

''கெஸ்ஸோ?''

''ஐயோ மகளே!'' என்று மேஜையின் மீது உணவு வகை களை வைத்துக்கொண்டு கிழவி குறுக்கிட்டாள்:

''ஆண்களைப் பற்றி உனக்குத் தெரியாது. எச்சில் உணவை யார்தான் புசிக்க விரும்புவர்?''

காமா பெருமிதத்துடன் தலை நிமிர்ந்தாள். அவளது வைராக்கியம் நிறைந்த வதனத்தைக் கண்டதும், கிழவி தன்னையறியாமலே அவளைப் புகழ்ந்தாள்—அவளது கண் ணிமைகளின் இடைவெளி ஒரு சிவப்புக் கோடாகக் குறுகிற்று.

''கெஸ்ஸோ சிறிதளவேனும் உன்னைப் போன்றிருந்தால், அவரையும் உறித எறியத் தயங்கமாட்டேன். அவர் இல்லாமலே என்னால் வாழ முடியும்!''

கிழவி காமாவிடம் சென்று, அவளது இடையை வளைத்து முத்தமிட்டாள். (தன் கன்னத்தை ஒரு கல் உராய்ந்தது போன்றிருந்தது காமாவுக்கு!)

புருவம் வரை தொப்பியை இழுத்துவிட்டுக் கொண்டு, ரஷீத் அலட்சியமாக மொழிந்தான்:

''ரொம்ப சரி. காலையில் நீ என்ன பல்லவி பாடுகிறாய் என்பதைப் பார்ப்போம்.''

அவனது மூர்க்கத்தனம் கிழவிக்கு ஆத்திரமூட்டியது.

''ரஷீத்! உனக்கு வெட்கமில்லை? விருந்தினர்கள் என் வீட்டில் முரட்டுத்தனமாக நடந்துகொள்வது எனக்குப் பிடிக்காது. நாங்கள் இங்கே இருக்கிறோம்; நீ சமையலறைக்குப் போய் பேசாமல் தூங்கு. ஆண் சிங்கங்களுக்குரிய இவ் வேலையை நீ மேற்கொண்டது பிசகு,''

ரஷீத் படுக்கையில் படுத்துக்கொண்டு சிகரெட்டைப் புகைத்தான். (அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான்) புகை குடித்த வண்ணம், காமாவின் மனப்போக்கில் ஏதாவது மாறுதல் ஏற்படுமென்று மனப்பால் குடித்தான்.

பொழுது விடிந்ததும், அவர்கள் இருவரும் படுத்திருக்கும் அறையை ரஷீத் உற்றுப் பார்த்தான். கிழவியும் காமாவும் அன்னியோன்னியமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

—இவ்விதமாக ரஷீதின் மானங்கெட்ட வீராவேசம் முடிந்தது.

## 26

வஸந்தப் பகுதியின் அரவணைப்பில் உலகம் மெய்மறந்திருக்கும்போது, ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் — ஸாகேனில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது.

திடீரென்று வானத்தில் ஒரு புள்ளி தென்பட்டது; அது வரவரப் பெரிதாகி, ஒரு விமானமாக மாறிற்று. அந்த விமானம் ஓரிருமுறை கிராமத்தின் மீது வட்டமிட்டு, பாட்ஜார்ஜ் மீடில் வந்து இறங்கிற்று. அவ்விடத்தை நோக்கி நாலா புறங்களிலிருந்தும் மக்கள் ஓடிவந்தனர். முற்றத்தைக் கடந்துவர வெட்கப்படும் விருந்தாளியைப் போன்ற விமானத்தைச் சூழ்ந்துகொண்டனர்,

பாதாதிகேசம்வரை தோலாடை தரித்திருந்த ஓர் இளைஞன் இறகுப் பக்கத்திலிருந்து இறங்கினான். அவன் கீழே குதித்ததும், மக்கள் அவனைக் கட்டித் தழுவினர். அவன் மூச்சு நின்றுவிடும் போலிருந்தது. கண்ணாடியைக் கழற்றிவிட்டு அவன் எல்லோரையும் பார்த்தான்.

''இதுதான் ஸாகேனா?''

''ஆம். இதுதான் அச்சு அசலான ஸாகேன்'' என்று பதில் வந்தது.

''இங்கு வந்துள்ள முதல் விமானி நான்தான் என்று எண்ணுகிறேன்.''

''இல்லை. நீங்கள் கொஞ்சம் பிந்திவிட்டீர்கள். யுத்தத்திற்கு முன்பு உங்களைப் போன்ற விருந்தாளிகள் இங்கு வந்துள்ளனர்.''

தாவுத், தாமி என்ற ஆலன் சகோதரர்கள் அதிருப்தி அடைந்தவர்கள் போலத் தோன்றினர்.

''ஏழாண்டுகளுக்கு முன் இதேமாதிரி விமானத்தில் ஒரு ஆசாமி வந்தார். ஆம்—இதே கித்தான் இறகுகள்; இதே மெல்லிய பலகை...நாசமாய்ப்போக! யுத்தத்திற்குப் பிறகு இதைவிட நல்ல பறவைகள் இங்கு வருமென்று நம்பினேன்'' என்றான் தாவுத்.

விமானியின் முகம் சுருங்கிற்று. ''உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்'' என்று வருத்தத்தோடு கூறினான். ''நீங்கள் சொல்லுவதுபோல இது சமீபகாலத்திய மாடல் அல்ல; ஆனால் பிரயாணத்திற்கு லாயக்கானது. மலைப் பிரதேசங்களில் இது சுகமாகப் பறக்கும். இருப்பினும் வெகு சீக்கிரத்தில் வேறு விமானங்கள் இங்கே வரும். அவை வேகமாகச் செல்லும்; அழகாகவும், சௌகரியமாகவும் இருக்கும். அவைகளை எங்கள் விமான நிலையத்தில் கண்டேன்.''

கீழே இறங்கும்போது அவனுக்குத் தோன்றிய எண்ணங்களை விமானி கூறினான்: ''மேலே, எல்லாம் வெள்ளை வெளேர் என்று தோன்றுகிறது. கீழேயுள்ள மேகங்கள் பஞ்சைப்போலவும், மலைகள் வயலிலுள்ள உழுத பள்ளங்களைப் போலவும் தோன்றுகின்றன.''

''ரஸ்தாவைப் போலவே விமான மார்க்கமும் மோசமாகத்தானிக்கிறது; விமானம் மேலும் கீழும் பறக்கவேண்டியிருக்கிறது.''

விமானி பையைத் துழாவி ஒரு கடிதத்தை எடுத்தான். விலாசத்தை வாசித்துவிட்டுக் கேட்டான்:

''கெஸ்ஸோ மீர்பா எங்கிருக்கிறுர்?''

''அவன் பட்டணத்துக்குச் சென்றிருக்கிறுன்.''

''இல்லை. ஐந்து நாட்களுக்கு முன்பே அவர் பட்டணத்திலிருந்து கிளம்பிவிட்டார்.''

''அப்படியானுல், அவன் எந்த நிமிடமும் இங்கு வரக் கூடும்.''

விமானத்தைச் சுற்றி இன்னும் மக்கள் குழுமிக்கொண்டிருந்தனர். அதை வெடி மருந்துக் குழாய் என்று எண்ணிக் கொண்டு ஷாங்கேரி சுற்றிச் சுற்றிப் பார்த்தான். குடால் அக்கிழவனுக்கு விளக்கம் தர எண்ணினுன் அவனை விமானத்தின் மூக்கருகே அழைத்துச் சென்றுன்.

''இது தான் எஞ்சின். இது இந்தக் காற்றுடியைச் (Propeller) சுழற்றுகிறது......இது ஒரு பிரசித்தி பெற்ற விமானம் இதன் பெயர்—U-2.''

''அப்படியா மகனே!'' என்று ஷாங்கேரி வியப்புடன் கேட்டான்; ''நல்ல விமானம்தானே?''

''மோசமில்லை. சிறகுகளைப் பாருங்கள்—இரண்டு ஜோடி உள்ளன. கழுகுக்கூட ஒரு ஜோடிதான் இருக்கிறது.''

சந்தையில் விலைக்கு விற்பவன் போல, குடால் அந்த விமானத்தை மிகப் புகழ்ந்தான். கிழவனை வாலின் பக்கமும், காற்றுடியின் பக்கமும் மாறி மாறி அழைத்துச் சென்றுன். பத்துப் பன்னிரண்டு விவசாயிகள் அவனைத் தொடர்ந்தனர். குடால் சொல்லுவதைக் கேட்க ஒவ்வொருவனும் முழங்கையால் இடித்துக்கொண்டு முன்னேறினுன். குடாலும், எல்லோரும் வியக்கும் வண்ணம் இயந்திர நுணுக்கங்களை விவரித்தான். அவன் பேச்சைக் கேட்கும்போது, அவனேதான் அந்த விமானத்தைக் கட்டினுன் என்று நம்பத் தோன்றும். குடால் பேசி முடித்த பிறகு கிழவன் கேட்டான்:

''ஆகவே இந்தச் சாமான் பறக்கிறது?''

குடாலின் பிரசங்க மெல்லாம் வீண்தான். மீண்டும் பிளேட்டைத் திரும்பவேண்டியது தானே என்று அவனுக்குத் தோன்றிற்று! ஆனுல் குடால் தொண்டை வலி என்று சொல்லித் தப்பிவிட்டான்,

''அப்படியானல் ஸைமனைக் கூப்பிடுவோம்'' என்று யாரோ சொன்னார்கள்.

'' அதுதான் சரி!'' என்று மற்றவர்கள் ஆமோதித்தனர்: ''ஸைமன் மாஜி ராணுவத்தான். அவன் விபரமாகச் சொல்லுவான்.''

''ஹே, ஸைமன்! இறகிலிருந்து கீழே இறங்கு!''

கூட்டம் வழிவிட்டது. ஸைமன் முன்னால் வந்தான். அந்த இளைஞன் பண்ணைக் கோஷ்டியின் தலைவனாக இருந்தான். யுத்தத்தில் மூன்று இடதுகை விரல்களையும் இழந்துவிட்டான். அவன் கெட்டிக்காரனாக இல்லாவிட்டால், தலையைக்கூட இழந்திருப்பான். ஏனெனின், அவனுக்கு வந்த ஆபத்துக்கள் பற்பல. அவர்களுக்கு என்ன வேண்டுமென்று அவன் கேட்டான்.

''ஏன், எதற்கு என்றெல்லாம் அதைப் பற்றி விபரமாகச் சொல்லவேண்டும்.''

''விவரிக்க என்ன இருக்கிறது?...இந்த ஐந்துக்களைப் பற்றி யாருக்குத்தான் தெரியாது!'' என்று அவன் எரிந்து விழுந்தான்.

கூட்டத்திலிருந்து ஒரு குரல் சொல்லிற்று: ''உனக்கு ஞாபகம் இருக்கிறதா ஸைமன்? நாம் அவைகளைப் பார்த்துக் குல்லாயை வீசுவோமே? அவை அவ்வளவு தாழ்வாகப் பறந்து சென்றன!''

ஸைமன் விமானத்தின் விலாப் புறத்தில் தட்டிக்கொண்டு சொன்னான்.

''இது பிளவுட் அங்கே, வாலின் அருகே கித்தான்... ...இது போர் விமானமாகவோ, வெடி விமானமாகவோ இருக்கவேண்டும். அண்ணா! அங்கே உமது தலையைக் கெட்டியாக வைத்திருக்கவேண்டும்; இல்லையேல் போகிற போக்கில் உமது தலை பறந்துவிடும்!...''

ஸைமன் 'சிறகுள்ள அதிதி'யை இறக்கிப் பேசியது ஷாங்கேரிக்கு வருத்தமாயிருந்தது. இதைப்பற்றி நீர் என்ன நினைத்தாலும் அது உம்முடைய அதிதி அல்லவா?

''மகனே! உன் வார்த்தைகள் பிறர் மனத்தைப் புண் படுத்தாவா?'' என்று பாவியை ஞானி நோக்குவது போல, ஷாங்கேரி அவனைப் பார்த்தான்: ''அது சரியல்ல, மகனே! நீ இன்னும் சிறுவன்தான்...''

ஸாகேனிய மக்கள் ஏன் இப்படி முரடர்களாக, அடக்க மில்லாதவர்களாக ஆகிவிட்டார்களென்று ஷாங்கேரிக்குப் புரியவில்லை. 'பட்டண விளக்கு' அவர்களுக்கு அற்ப விஷய மாகப் படுகிறது; மேகத்தின்மீது சஞ்சரிக்கும் ஆகாய விமானம் சர்வ சாதாரணமானதாகப் படுகிறது! அக்கிழவ னின் மெல்லிய இதயம் புண்பட்டு விட்டது. ஏனெனில், இந்நாளை அதன் தன் வாழ்நாளிலேயே ஒரு சுபதினமாகக் கருதினுன். (இதைப் போலவே அவ்ன் எலெக்டிரிக் ஸ்டேஷ னைப் பார்வையிடும் போது குடாலிடம் சொன்னுன்!)

''ஆம்'' என்று அவன் மெல்ல முனகினுன்: ''மக்கள் மாறிவிட்டனர்...அதிதியைப் பற்றி நீ அவ்விதம் பேசவே கூடாது. அது நம் சம்பிரதாயத்திற்கு விரோதமாகும்.'' வருத்தப்பட்டுக்கொண்டு அவன் கூட்டத்தை விட்டுக் கிளம் பினுன். அந்த வெள்ளி நிறமுள்ள மிஷினைக் காண்பதற் காகச் சிறிது தூரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

இளவட்டங்கள் கிழவனைக் கிண்டல் பண்ணிச் சிரித் தனர். ஆனுல் ஹெட்மாஸ்டர் முஷாக் சும்மாயிருக்கவில்லை.

''நீங்கள் அந்தக் கிழவனின் மனத்தைப் புண்படுத்தி இருக்கக்கூடாது. உண்மை, நான்கூடப் போர்க்களத்திற்குச் செல்லவில்லை. ஆனுல் நான் ஒன்றுவிடாமல் எல்லாப் பத்தி ரிகைகளையும் கவனமாகப் படித்தேன். இந்த U-2 பார்வைக்கு அழகான மிஷினுயில்லாவிடினும், பிரமாதமான சேவை செய்தது. இரவில் எதிரியின் முன்னணியைத் தகர்க்கும் போது அல்லது பார்ட்டிஸான்களுடன் தொடர்பு வைக்கும் போது இது அற்புதமாக வேலை செய்தது.''

இதைக் கேட்டு ஸாகேனியர்கள் மிக மகிழ்ச்சியடைந் தனர். அதை மீண்டும் ஒரு முறை சுற்றி வந்து, மூக்கிலிருந்து வால்வரை தொட்டுப் பார்த்தனர்.

எல்லோரும் விமானத்தை ரசிப்பதிலேயே மூழ்கியிருந் தனர். ஆகையால், புல் தரையில் கெஸ்ஸோ வருவதை ஒரு வரும் கவனிக்கவில்லை. தாடியும், மீசையுமாய், பிரயாணக் களைப்புடன் வந்த கெஸ்ஸோ கிராமத்தினருக்கு முகமன் கூறி னுன். 'இறகுள்ள தூதனை'க் கண்டு அவன் சிறிதும் ஆச்சரிய மடையவில்லை.

''யந்திரங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டான்.

அவர்கள் விமானத்திலிருந்து இறக்குமதியாகும் சில யந்திரத்தின் பாகங்களைக் காட்டினர்.

''பேஷ்'' என்ருன் கெஸ்ஸோ: ''வெகு விரைவில் அவை இன்னும் அதிகமாக வந்து சேரும். நான் ஐந்து நாட்களாகப் பிரயாணம் செய்தேன். ஆனல் இந்த விமானம் ஒரு மணி நேரத்தில் இங்கு வந்திருக்கும்!...''

## 27

வெப்பமான பருவநிலை இருப்பினும், மலைப் பிராந்தியத்தில் ஏப்ரல் மாத மாலையில் குளிராகத் தானிருக்கும். உங்களுடைய வீடு உயரமான இடத்தில் இருந்தால் நீங்கள் முற்றத்தில் நின்றுகொண்டு நிலவொளியில் குளிக்கின்ற பனிபடர்ந்த சிகரங்களைக் காணலாம். மலைகளிலிருந்து வரும் காற்று, பனிமூடிய சிகரங்களில் பட்டுக் குளிர்ந்து விடுகிறது; இதுதான் குளிர்ச்சிக்குக் காரணம்.

இரவின் பசுமை கலந்த கறுமைக்கு மேலே கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் இச் சிகரங்களைக் கண்டவுடனேயே உங்களுக்குக் குளிர் வந்துவிடும். இச் சிகரங்கள் வெள்ளைக் குல்லாயை அணிந்துகொண்டு பல்லூழி காலமாக உறைந்து நிற்கின்றன. அவைகளுக்குக் கீழே, 'ஆ' வென்று வாயைத் திறந்திருக்கும் பள்ளம் இருக்கிறது. மலைவாசியின் ஆடையைப் போன்ற இருண்ட பள்ளம். இதையெல்லாம் கண்டவுடன் உங்கள் மனம் தானுகவே சமையலறைக் கணப்பையும் அதன் கதகதப்பையும் நாடிவிடும்.

யேகூப்பின் வீட்டில் விருந்து நடந்து கொண்டிருந்தது. கணப்பைச் சுற்றி விருந்தினர்கள் கூடியிருந்தனர். யேகூப் படுத்திருந்தான். கெஸ்ஸோ சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்தான். நீனு ஒரு மூலையில் மாவைச் சலித்துக் கொண்டிருந்தாள். ஒரு விறகுக் கட்டையால் சாம்பலை மௌனமாகக் கிளறியவண்ணம், கெஸ்ஸோவின் கதையைக் கான்ஸ்டான்டின் கேட்டுக்கொண்டிருந்தான். குடாலின் முதுகுக்குப் பின்னல் இருளில் பதுங்கியிருந்தான் ஆண்டன். கெஸ்ஸோவின் கண்கள் அவனைக் கண்டு பிடிக்கப் பலதடவை முயன்றன.

கெஸ்ஸோ சாங்கோபாங்கமாகத் தன் பிரயாணத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். (ஸாகேனியர்களுக்கு

விபரங்கள் என்றால் மிகவும் பிடிக்கும் ) காரியதரிசி அவனை வரவேற்றதைப் பற்றியும், அவர் உதவி செய்வதாக வாக்களித்ததைம் பற்றியும் கூறும்போது, அவனிடமிருந்து புகழ்மொழிகள் அருவிப்போலப் பாய்ந்தன.

''ம்...அவர்கள் உனக்கு நல்ல வரவேற்பு அளித்தார்களாக்கும்'' என்றான் கான்ஸ்டான்டின்.

எதையோ ஞாபகத்திற்குக் கொணர்பவன் போல, கெஸ்ஸோ ஒருகணம் சும்மாயிருந்தான்.

''என்னை அற்புதமாக வரவேற்றார்கள். இதைத் தவிர வேறு வார்த்தைகளில் அதைச் சொல்லிவிட முடியாது.'' அவன் குரலைத் தணித்துக்கொண்டு மேலும் சொன்னான்: ''அலெக்ஸாண்டர் ஐவனோவிச் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு பண்ணினார். நம் திட்டத்தைப்பற்றி எல்லோரும் விவாதித்தனர்: ஆராய்ந்தனர்; குன்றைப் பற்றி அவர்கள் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். இனி நான் என்ன செய்ய வேண்டுமென்றும், பிரச்னையை எப்படித் தீர்க்க வேண்டுமென்றும் அவர்கள் ஆலோசனை கூறினர். அதன்பின் இந்தத் தீர்மானங்களைத் தந்தனர் — இவை மாஸ்கோவிலிருந்து, கிரெம்ளினிலிருந்து வந்தவை.''

அவன் தன் முழங்காலின் மீது பத்திரிகையை விரித்து வைத்தான். நிஜார்ப் பையிலிருந்து ஒரு சிறு நூலை எடுத்தான்.

''இது பிப்ரவரிப் 'பிளீ'னத்தைப் பற்றியும், அதன் கட்டளையைப் பற்றியும் கூறுகிறது...''

''நாம் அதைக் கேட்போம்'' என்று கூட்டத்தைப் பார்த்துச் சொன்னான் கான்ஸ்டான்டின்.

குடால் கெஸ்ஸோவின் அருகில் நாற்காலியை இழுத்துப் போட்டு, கொக்கைப்போல் கழுத்தை வளைத்துக் கொண்டு அந்தக் காகிதத்தைப் பார்த்தான்.

''கட்டளை!'' என்று முனகினான்.

அறையில் அமைதி நிலவியது. கட்டைகள் வெடிக்கும் சப்தத்தைத் தவிர—அவற்றிலுள்ள ஈரத்தின் 'ஸ்' ஒலியைத் தவிர வேறு அரவம் இல்லை.

யேகூப் கைத்தடியின்மீது சாய்ந்திருந்தான். காற்றிலும், கதிரிலும் அடிபட்டுக் கறுத்துப் போன அவன் முகத்தைக்

கணப்பு வெளிச்சம் அழகுபடுத்தியது. அவனுடைய தொப்பி தலையின் பின்புறத்தில் நழுவிக் கிடந்தது.

கெஸ்ஸோ வாசிப்பதைக் குடால் மிகவும் கூர்ந்து கவனித்தான். அருமையான கதையைக் கேட்டுக் குழந்தைகள் பரவசமடைவதைப்போல, அவன் அக் கட்டளையைக் கேட்டுப் பரவசம் அடைந்தான்.

கோபம் தெறிக்கும் கண்களை ஆண்டன் கவனமாய்த் துடைத்துக் கொண்டான். இருமல் அவன் மூச்சை அடைத்தது. என்றாலும், ஸாகேனில் சொல்லுவதைப் போல அதை அடக்கி ''வயிற்றுக்குள் தள்ள'' முயன்றான்.

கான்ஸ்டான்டின் கால்களை அகலவிரித்து, கையில் தலையைக் கவிழ்த்துக்கொண்டு, சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

மாவு சலிப்பதை நிறுத்திவிட்டு, நீனா பெஞ்சின் ஓரத்தில் வந்து உட்கார்ந்தாள்.

தாவுத் சகோதரர்கள் மிக நெருக்கமாக உட்கார்ந்து, கணப்பில் தமது கையை வாட்டிக் கொண்டிருந்தனர். மகிழ்ச்சியினால் அவர்கள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

சமையலறையில் கெஸ்ஸோவின் மணிக்குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. எல்லோரும், ஒரு வார்த்தையைக் கூட விட்டுவிடக் கூடாதென்று அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். கிரெம்ளினின் கட்டளையை ஆர்வத்தோடு பருகிக் கொண்டிருக்கும் ஸாகேனிய விவசாயிகளைப் படம்பிடிக்க, ஒரு புகைப்படக்காரனும் இல்லையே என்றுதான் நமக்கு வருத்தம் உண்டாகிறது...

கம்பீரமும், கருத்தின் கவர்ச்சியும் நிறைந்த இந்த அற்புத வேலை சிரஞ்சீவியாய் இருக்கட்டும்! நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் சுபிட்சம் நல்கும்படி கோடிக்கணக்கான மக்களை உன்னத உழைப்பிற்கு உந்தித்தள்ளும்அவ்வார்த்தைகள் நீடூழி வாழட்டும்! சோவியத் அரசாங்கம் தன் மக்களுக்காக, விவசாயிகளுக்காக — நாஜி மிருகங்களின் படையெடுப்பை முற்றிலும் முறியடித்து, மீண்டும் இலட்சியத்தை நோக்கித் தன்னம்பிக்கையுடன் நடைபோடும் நாட்டிற்கு மகிழ்வு அளிப்பதற்காக—எவ்வளவு கருணையும் முற்போக்கு எண்ணமும் கொண்டிருக்கிறது என்பதை அறியும்போது, என் நாட்டவரின் இதயம் எக்களித்தது. இவ்விதம்தான், சோவியத் அரசாங்கத்தின் கட்டளையை விசாலமான—வலிமை மிக்க என்

நாட்டு மக்கள் எல்லோரும் புரிந்துகொண்டனர்; ஸாகேனிய மக்களும் இவ்விதம்தான் அர்த்தப்படுத்திக் கொண்டனர்......

யேகூப் சுத்திஞன்.

''நண்பர்களே! இது மாபெரும் விஷயம்; மகோன்னத விஷயம்...''

கெஸ்ஸோ குறுக்கே பேசிஞன்.

''ஸாகேனியர்களாகிய நாம் நம்மைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறேம்; ஆஞல் ஸ்டாலின் உலகம் முழுமைக்கும் பேசியுள்ளார்.''

'' உண்மை, உண்மை '' என்று கிழவன் ஆமோதித்தான்.

வாசித்து முடிந்ததும், கெஸ்ஸோ பத்திரிகையைக் கீழே வைத்தான்.

''ஆம். அதிசயமான விஷயம் என்றுதான் சொல்ல வேண்டும். கீழேயுள்ள சமவெளியில் மக்கள் ஒரு ஹெக்டாருக்கு ஆயிரம் 'பூடு'கள் அறுவடை செய்கின்றனர்......... அதிலே பாதியாவது நம்மால் அறுவடை செய்ய முடியுமாஞல்!'' என்ருன் கெஸ்ஸோ.

''என்ன பேராசை!'' என்று சிரித்தான் குடால்.

''கெஸ்ஸோ, நாம் சோளம் பயிர்செய்யப் போகிறேமல்லவா?'' என்று கேட்டான் கான்ஸ்டான்டின்.

''நிச்சயமாக.''

''அப்படியாஞல் அதைப்பற்றிப் பேசு. நாங்கள் அதைக் கேட்க ஆசைப்படுகிறேம்.''

''ரொம்பசரி'' என்று பட்டணத்துச் சிகரெட் ஒன்றைக் கெஸ்ஸோ பற்ற வைத்தான்: ''நம் கோஷ்டியின் திட்டம் இதுதான். நமக்காக மூன்று ஹெக்டார்கள் நிலம் எடுத்திருக்கிறேம். அதிலே ஐநூறு 'பூடு'கள் விளைவிப்போம். இது சத்தியம்.....''

ஆலன் சகோதரர்கள் நீண்ட பெருமூச்சைக் கக்கினர். ஆண்டன் தொண்டையைக் கனைத்தான். குடால் மகிழ்ச்சியிஞல் கணப்பைக் கிண்டிஞன்; கணப்பிலிருந்து தங்கப் பொறிகள் தெறித்தன.

தீம்பிழம்பை உற்றுப் பார்த்துக் கொண்டு கெஸ்ஸோ பேசிஞன்: ''தோழர்களே! முக்கிய விஷயம் என்னவென்ருல்

—இதைப்பற்றி அலெக்ஸாண்டர் ஐவஞேவிச் என்னிடம் மிக வற்புறுத்திக் கூறிஞர்—உழுதல், பரம்படித்தல், களை பிடுங்குதல் ஆகியவைதாம். எல்லாவற்றையும் மணிப்பிர காரம், நியதிப்படி கண்டிப்பாய் நிறைவேற்ற வேண்டும். குன்று சம்பந்தப்பட்ட வரையில் ஒரு விஷயம் உண்மை; அதில் இருப்பது பாஸ்பரைட் தான். நம் மக்கள் அதற்காக நிறையப் பணம் செலவிடுகின்றனர்; உலகின் நாலாபுறங்களி லிருந்தும் வாங்கி வருகின்றனர். ஆனல், நம் கண் எதிரிலேயே நாம் அதைப் பெற்றிருக்கிறோம்! கல் உடைக்கும் மில்லையும், எஞ்சினையும், எரிபொருள்களையும் அவர்கள் நமக்குத் தருவார் கள்...நாம் அதை உடைத்துத் தூளாக்குவோம்; நிலத்திலே தூவுவோம். அப்புறம் பாருங்கள் என்ன நடக்கிறதென்று! ஆராய்ச்சியின் முடிவு தெரிந்தவுடன் என் நெஞ்சிலிருந்து பெரும்பாரம் இறங்கிற்று. அந்தக் குன்று மட்டும் என்னை ஏமாற்றியிருக்குமாஞல் நான் மலைக்கு ஓடிவிடுவேனென்று ஐவஞேவிச்சிடம் சொன்னேன். அவர் விழுந்து விழுந்து சிரித் தார்...'குன்று விஷயம் எப்படியாஞலும், ஸாகேனியர்களா கிய நீங்கள் மட்டும் மலைக்குச் செல்லவே மாட்டீர்கள். யுத்தத் திற்கு முன்பு உங்கள் நிர்வாகம் மோசமாக இல்லையே!' என்ருர்.''

''சரியான பேச்சு'' என்ருன் குடால்.

''ஆனல் எல்லாம் நன்மையாகவே முடிந்துவிட்டது. நாம் பாஸ்பரைட் உரத்தை உபயோகிக்கப் போகிறோம். நமக்குத் துளிகூடச் செலவில்லை. பட்டணத்துக்காரர்கள் இங்கே ரஸ்தா அமைக்கப் போகின்றனர்..அப்புறம் நாம் மற்றக் கூட்டுப் பண்ணைகளுக்கும் உதவலாம். ஏன் கூடாது?...ஆனல் இப் பொழுது...நமக்கு உதவி தேவை கான்ஸ்டான்டின்!''

''இந்தப் பிரச்னையை ஒரு கூட்டத்தில் கொண்டு வரு வோம்'' என்ருன் கான்ஸ்டான்டின். அதுதான் முதல் விஷ யம். கூட்டுப் பண்ணைப் போர்டுடன் அதைப் பற்றி விவா திப்போம்—இது இரண்டாவது விஷயம். இது சகலருக்கும் சம்பந்தப்பட்ட விஷயமாகும். இல்லையா?''

''நிக்கோலாமீது ஒருவருக்கும் நம்பிக்கை இல்லை; அவனைப் பற்றி உமக்குத் தெரியும்'' என்ருன் தாமி.

''கான்ஸ்டான்டின்...'' என்று கெஸ்ஸோ தொடங்கி ஞன். பிறகு நிறுத்தி விட்டான்: ''அதை நாம் அப்புறம் பார்த்துக்கொள்வோம்...நிக்கோலாவைப்பற்றி ஒரு விஷயம் ...பட்டணத்திலே அவனைப்பற்றி ஒரு தீர்மானமான முடிவு

வைத்திருக்கிறார்கள்.'' அவன் திரும்பவும் கூறினான்: ''தீர்க்க மான முடிவு.''

''ஹ்ம்!'' என்று கெஸ்ஸோவின் குறிப்பைத் தான் உணர்ந்து விட்டதாகக் கான்ஸ்டான்டின் இருமினான். நிக்கோலாவுக்குப் பதிலாக, மிகச் சிறந்த திறமையும், சுறுசுறுப்பும் உள்ள வேறு யாரையாவது போடவேண்டியதின் அவசியத்தைக் குறிப்பாக உணர்த்தினான் கெஸ்ஸோ.

கெஸ்ஸோ கர்ம சிரத்தையோடு பேசினான்:

''குன்றைத் தூளாக்குவோம். அந்தத் தூளைக் கொண்டு வயலுக்கு உரமிடுவோம். அப்படியானால், நல்ல விளைச்சல் காணுமென்று விஞ்ஞானம் உறுதியளிக்கிறது.''

மீசையைத் திருகிக்கொண்டு, தாமி பலமாக இருமினான்.

''அருமையான திட்டம்'' என்றான்: ''நாம் எம் முயற்சிக்கும் பின்வாங்கோம்—வெடிமருந்தைக் கண்டுபிடிப்பதுபோல. அப்படித்தானே? நமக்கு உதவியதற்காகப் பட்டணத்திலுள்ளோருக்கு நன்றி செலுத்தவேண்டும்.''

யேகூப் முக்கி முனகிக்கொண்டு படுக்கையின் இடப்புறமும் வலப்புறமும் புறண்டான்.

''இளவட்டங்களாகிய நீங்கள் செய்வதைத்தான் நாங்கள் பார்க்கப்போகிறோம். கிழங்களாகிய நாங்கவெல்லாம் அடிபட்டுப் போய்விட்டோம்.''

''அப்படியில்லை'' என்று ஆண்டன் வெட்கம் படிந்த முகத்தோடு இருமிக் கொண்டு சொன்னான்: ''நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்தே உழைக்கவேண்டும். சரிதானே?''

கெஸ்ஸோ அவனை உற்றுப் பார்த்தான்—அது கத்தியைப் போன்ற கூர்மையான பார்வை. ஆண்டனின் உடல் நடுங்கிற்று. 'அவனுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது: அவர்கள் சொல்லிவிட்டார்கள்' என்று ரஷீதைச் சபித்தபடி மனத்திற்குள் எண்ணினான் ஆண்டன்.

''கெஸ்ஸோ! நாளைக் கட்சிக் கூட்டத்தில் உன் ரிப்போர்ட்டைப் பற்றி விவாதிப்போம்'' என்றான் கான்ஸ்டான்டின்: ''கட்டளையைப் பற்றியும் விவாதித்து முடிவு எடுப்போம். தம்பீ! குன்றின் பிரச்னை தீர்ந்துவிட்டது; நிச்சயமாகத் தீர்ந்துவிட்டது. வண்டி மாடுகளைக் கொடுத்து ஜனங்களிடம் வேலையை ஆரம்பிக்கச் சொல்ல

வேண்டியதுதான். கிராம சோவியத் நமக்கு உதவி செய்யும்......''

கான்ஸ்டான்டின் எழுந்தான்.

''எங்கே போகிறீர்கள்?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் யேகூப்: ''மகளே! இங்கேவா. மேஜையைப் போடு.''

வீட்டுக்காரர் இவ் வார்த்தைகளைச் சொன்னதும், விருந்தாளிகள் தம் இடங்களில் மீண்டும் அமர்ந்தனர். சம்பாஷணையில் வழக்கம்போலச் சிறிது ஓய்வு ஏற்பட்டது, இப்போது விருந்தாளிகளை உபசரிப்பது வீட்டுக்காரனின் கடமை. யேகூப் பேச்சுக்குப் புதிய பொருளைத் தேடிக்கொண்டு, ''ஆமாம்'' என்ற ஒரே சொல்லை அடிக்கடி கூறினான்.

அவன் எதிர்பாராத இடத்திலிருந்து உதவி வந்தது.

''அப்பனே, கெஸ்ஸோ!'' என்று ஆரம்பித்தான் தாமி: ''உலகில் என்ன விசேஷம்? மக்கள் எதைப்பற்றிப் பேசுகின்றனர்! அமைதியாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன்.''

''அது ஆளைப் பொறுத்தது'' என்று கெஸ்ஸோ மொட்டையாகக் கூறினான்: ''ஆனால், பொதுவாகப் பரிபூர்ண அமைதி இல்லை...''

யேகூப் குறுக்கே பேசினான்:

''இதைக் கேளு நமது அண்டை வீட்டுக்காரர்களான கதரொாவும், கானுவும் சண்டையிட்டுச் சமாதானமான பிறகும், ஆறுமாதமாக முகாலோபனம் செய்யவில்லை. முகமன் கூறும் வழக்கத்தையே விட்டுவிட்டோமென்று அவர்கள் கூறினர். இப்படியிருக்கிறது நம் சகோதரர்களின் போக்கு. நீயோ உலகத்தில் உடனே சமாதானம் நிலவவேண்டும் என்கிறாய்!''

''அவர்களிடம் புதிய குண்டுகள் இருக்கின்றனவாம். உலகமே அவர்களுக்குத்தான் சொந்தம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.'' என்றான் தாவுத்.

கெஸ்ஸோ புன்னகை செய்தான்.

''நம் தேசம் ஸாகேனைப் போன்று அசைக்க முடியாத கோட்டையாகும்... ஆனால் இந்தோனேஷியாவின் நிலைமை

மிக மோசமாக இருக்கிறது'' என்று திடீரென்று கூறினன். ''அவர்கள் குடியரசுக்குத் துரோகம் செய்கின்றனர்.''

மக்கள் இதைக் கண்டனம் செய்தனர்.

''இந்தோனேஷியாவா? அது என்ன? நகரமா, தேசமா?'' என்று கேட்டான் தாமி.

''தேசம்.''

''இந்தோனேஷியாவா? அங்கு யார் துரோகம் செய்கின்றனர்?'' என்று தாமி மீண்டும் கேட்டான்.

''வழக்கம் போல அதே ஆட்கள் தான்—அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும்'' என்ருன் கெஸ்ஸோ.

''சரி. நம் விஷயம் எப்படி?'' என்று கேட்டான் யேகூப்.

''சோவியத் யூனியனைப் பற்றியா கேட்கிறீர்கள்? நாம் இந்தோனேஷியாவை ஆதரிக்கிருேம்.''

''அப்படியா?'' என்று யேகூப் துள்ளி எழுந்தான்: ''நான் சொல்லுவதை நம்புங்கள். இந்தோனேஷியாவில், இனி அமெரிக்கா வாலாட்ட முடியாது!''

யெகூப் விருந்தாளிகளைக் கம்பீரமாக நோக்கினன். இம் மாதிரி முக்கிய விஷயங்களில், தான் அபிப்பிராயம் சொல்லக்கூடிய நிலையில் இருப்பது பற்றி அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

கெஸ்ஸோ ஆண்டனின் கண்களைச் சந்திக்க முயன்ருன். ஆனல் ஆண்டன் பிடிவாதமாக அப்பார்வையிலிருந்து தப்பித்து வந்தான். 'திருட்டுப்படவா!' என்று ஏசிய வண்ணம், கெஸ்ஸோ வெறுப்புடன் வேறுபக்கம் திருப்பிக்கொண்டான்.

''அவர்கள் ஏன் மீண்டும் யுத்தத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிருர்கள் என்பது தான் எனக்கு விளங்கவில்லை?'' என்ருன் தாவுத்.

''விளங்கவில்லையா உமக்கு?'' என்று கான்ஸ்டான்டின் அந்தப் பக்கம் திரும்பி உட்கார்ந்தான்: ''ஏகாதிபத்திய வாதிகள் தான் அப்பேச்சை ஆரம்பித்துள்ளனர். நமது சோவியத் ஆட்சி அவர்கள் கண்ணை உறுத்துகிறது.''

மௌனம். எங்கும் அமைதி. ஆஜானுபாகுவான தாவுத், இந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு கம்பீரமாகப் பேசினான்:

''நம் சோவியத் அரசாங்கத்தை அவர்கள் நேசிக்க வில்லையா? அப்படியானால் அவர்களுக்குச் சனி பிடித்து விட்டது!''

இத்தருணத்தில் மதுக்கிண்ணங்கள் வந்தன. அவை சரியான சமயத்தில் வந்ததால், அவர்கள் எல்லோரும் கோஷித்தனர்.

''சோவியத் ஆட்சியின் க்ஷேமத்திற்கு!''

வாசகர்களே! தங்கள் குடும்பத்தின்—தாய் தந்தையரின் நலனுக்கு முன்பு, தமது அரசாங்கத்தின் நலனுக்காக மதுக் கிண்ணங்களை உயர்த்தும் ஸாகேனியர்களின் இதயப் பண்பை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். நீங்களே சிந்தித்து முடிவு கட்டுங்கள்; இந்த விவசாயிகளுக்குச் சகல உடைமையையும் —சுதந்திரம், சுபிட்சம், பொறுமையான உழைப்பு, பெரு மிதம் கலந்த தேசபக்தி, நிகழ்கால இன்பம் எதிர்காலத்தில் அசைக்க முடியா நம்பிக்கையும்—தந்தது யார்? சோவியத் அரசாங்கம். ஆகவே அவர்கள் அதைக்கொண்டாடுவதில்—காதலிப்பதில் வியப்பென்ன? அவர்கள் தங்கள் அரசாங்கத் திடம் மிக உயர்ந்த, மிகச் சிறந்த மரியாதை செலுத்து கின்றனர். ஏனெனில், அது இன்றேல் அவர்களுக்கு நிஜ வாழ்வு இல்லை!

விருந்தினர்கள் விடியற்காலைவரை இருந்தனர். அவர் கள் வெளியே வரும் போது, தலைக்கு மேலே வண்டிச் சக்கரம் போல் பெரிய சந்திரன் தொங்கிக் கொண்டிருந் தது. அது எவனுடைய இதயத்தையும் நெகிழச் செய்யும் சந்திரன். எங்கோ ஒரு புதரிலிருந்து கண்ணுக்குத் தெரியாத சிறு பறவை பாட ஆரம்பித்தது. பரந்த உலகத்தில் ஒரு சின்னஞ் சிறு குரல்! என்றாலும் அதன் குரல் தெளிவாக ஒலித் துக் கொண்டிருந்தது.

''உஷ்'' என்றான் கெஸ்ஸோ: ''அது பாடிக்கொண் டிருக்கிறது.''

வீட்டுக்காரர்களும், விருந்தினர்களும் பறவையின் இனிய கீதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர். சந்திரன் பூமியின்மீது அமுத தாரையை வர்ஷித்தது...

பிரயாணம், பேச்சு, சிந்தனைகள் ஆகியவற்றால் களைத்துப் போன கெஸ்ஸோ தூங்குவதற்கு ஆயத்தம் செய்தான்.

அப்போது அறைக்கு வெளியே நீனா நிற்பதைக் கண்டான். அவள் முகத்தில் கலவரம் படிந்திருந்தது. அவன் தங்கையின் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''அவள் பேரில் குற்றமில்லை, எனக்கு எல்லாம் தெரியும்'' என்று நீனா அழுதாள்.

கெஸ்ஸோ படுக்கையில் காலை நீட்டிக்கொண்டு அலட்சியமாகச் சொன்னான்:

''உனக்கு என்ன தெரியும்? பெண்கள் தாமாக ஆசைப்பட்டாலொழிய, அவர்களையாரும் தூக்கிச் செல்வதில்லை. இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்? அவள் தன்னைத் தூக்கிச் செல்ல அனுமதித்துவிட்டாள். அதுவும் யாரால்?'' என்று சீறினான் கெஸ்ஸோ.

நீனா சிறிதும் விட்டுக்கொடுக்கக் கூடாதென்று உறுதியாய் நின்றாள். அண்ணாவை உறுத்துப் பார்த்துக்கொண்டு சொன்னாள்:

''அவள் மாலை மாலையாகக் கண்ணீர் விட்டாள். இன்னும் கண்ணீர் வடித்துக் கொண்டே யிருக்கிறாள். சிரிக்காதே. அவள் நல்லபெண். எல்லாம் ரஷீதின் குற்றம். ஆகவே, அவன் ஓடிப்போனதில் ஆச்சரியமில்லை...''

''சரி. நான் இப்போது என்ன செய்யவேண்டும்?''

''அவளோடு பேசவேண்டும்.''

''ஓ! தாராளமாக!''

''போதும் விளையாட்டு. நிஜமாகச் சொல்லுகிறேன்.''

''நான் பொய்யா சொல்லுகிறேன்?''

''நீயும் ஒரு மனிதன் என்று இருக்கிறாய்! பிறரைப் பிற்போக்காளர்கள் என்று விரட்டுகிறாய். நீ மட்டும் என்னவாம்?''

தங்கையிடமிருந்து இத்தாக்குதலைக் கெஸ்ஸோ எதிர்பார்க்கவில்லை. இதுவரையில் அவளைக் குழந்தை என்றுதான் அவன் எண்ணியிருந்தான்.

''ம்...அப்புறம்?'' என்ருன் சிரித்துக்கொண்டு.

''நான் வேெருென்றும் கூறப் போவதில்லை'' என்று நீரு சீறினுள்: ''காமாவுக்குத் தன் பாதையை வகுத்துக் கொள்ளத் தெரியாதென்ரு நினைக்கிருய்? நீ யில்லாவிடில் அவளால் வாழ முடியாதென்ற எண்ணமா? இல்லை ஐயா இல்லை!......நீ அவளை மதிக்காவிட்டால், அவள் ஒரு நாளும் உன்னிடம் திரும்பிவரப் போவதில்லை. காலம் மாறி விட்டது!''

''ஓஹோ! சரிதான்.''

''ஒரு அயோக்கியன் ஒருத்தியை அவமானப்படுத்தினுனென்ருல், மற்றவனும் அதையே செய்ய வேண்டுமென்று நினைக்கிருயா?''

''மற்ெருரு அயோக்கியனு?''

''இல்லை, மற்ெருரு மனிதன்—அவனிடம் துளிகூட மரியாதை இருக்குமானுல்.''

''எனக்குத் தெரியாது.'' அவளுடைய வசைமொழிகளைக் கெஸ்ஸோ மிகவும் ரசித்தான்: ''என்னுடைய சின்னத் தங்கை இப்படியாகிவிட்டாளா?'' என்று எண்ணினுன்; மனத்திற்குள்ளாகவே அவளைப் பாராட்டினுன்.

நீரு அடுத்த அறைக்குச் சென்ருள்; பிறகு திரும்பிவந்தாள். நடைக்கு அப்பால் நின்றுகொண்டு சொன்னுள்:

''நாங்கள் முன்னைப்போல் இல்லை? கண் மூடித் திறப்பதற்குள் நீங்கள் கழுத்தை நெறிக்கும் கோழிக் குஞ்சுகள் அல்ல!'' அவள் படீரென்று கதவைச் சாத்திவிட்டு வெளியேறினுள்.

பட்டணத்திற்குச் சென்ற முக்கிய காரியம். இனிது மூடிந்தது என்ற திருப்தியோடு கெஸ்ஸோ உறங்கினுன். ஆனுல் ஒரு கசப்பான எண்ணம் அவன் இன்பத்தைக் குலைத்துக் கொண்டிருந்தது.

''ரஷீதுப் பயல் நாசமாய்ப் போக!'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு, சுவரைப் பார்த்துச் சொன்னுன்; பிறகு போர்வையை இழுத்து மூடிக்கொண்டு தூங்கி விட்டான்.

## 28

ஒரு மாதத்திற்கு முன்னுல் நீரோடைப் பக்கம் இருப்பது அவ்வளவு இனிமையாக இல்லை. இப்போது பருவ நிலை ரம்மியமாக மாறிவிட்டது. ஸ்படிகம் போன்ற தண்ணீர் மனதைக் கவர்ந்தது. குளிர்ச்சியை விரும்புகிறவர்களுக்கெல்லாம் மனோரம்மியமான இடமாக இந்த ஓடை வெகு விரைவில் மாறிவிடும்; யாருடைய இதயத்தைக் காதல் கனல் தகித்துக்கொண்டிருக்கிறதோ அவர்களுக்கும் உகந்த இடமாகிவிடும். நிலவொளி நிறைந்த ஜுன் மாத அந்திப்போதில், அந்தப் பாசி படர்ந்த பாறைகள், அநேகம் வெட்கம் கலந்த முனகல்களையும், இதயத்திலிருந்து எழும் காதல் மொழிகளையும் கேட்டு நிற்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. கெஸ்ஸோவும் காமாவும் எதிரெதிரே பாறைகளில் உட்கார்ந்திருந்தனர். அவள் வெண் பட்டு அங்கியையும், தலையில் நீலக் கைக்குட்டையையும் அணிந்திருந்தாள். தன்னிடமிருக்கும் சிறந்த பூட்ஸுகளைத் தரித்திருந்தாள்; பின்னல் வேலை செய்த, விலையுயர்ந்த காலுறை அணிந்திருந்தாள். (இந்தப் பின்னல் வேலைக்கு ஸாகேனில் மதிப்பு அதிகம்) காமா அன்று பேரழகியாகத் திகழ்ந்தாள்; அவளது கருங்கூந்தல் இரட்டைச் சடையாகப் பிரிந்து, மார்பில் கிடந்தது.

''தான் கடத்திச் செல்லத்பெற்ற''தைக் காமா விவரித்துக்கொண்டிருந்தாள். ஓ! அன்றிரவு அவள் ஸாகேனியப் பெண்ணின் சொரூபத்தைக் காட்டிவிட்டாள்!

கெஸ்ஸோ, கவனமின்றி மணலில் சித்திரங்கள் வரைந்துகொண்டிருந்தான்.

''இவ்வளவுதானு?'' என்று கேட்டான்.

''ஆம். இவ்வளவுதான்.''

அங்கே பயங்கரமான அமைதி நிலவியது. காமா அழுகை பொங்கும் குரலில் சொன்னுள்:

''நான் இவ்வூரை விட்டுப் போகிறேன் வெகு விரைவில்...''

அவன் வேகமாக அவளை நோக்கித் திரும்பினுன். மங்கலான கண்ணுடியின் வழியே பார்ப்பது போன்று, அவளது துயரவிழிகள் தன்னை நோக்குவதைக் கண்டான். அவளை முத்தமிடவேண்டும்; அவளுக்கு ஆறுதல் சொல்லவேண்டு

மென்றுதான் அவனுக்கு முதலில் தோன்றிற்று. 'நாசமாய்ப் போக! நான் ரஷீத் இல்லையென்பதை அவள் உணர வேண்டும்' என்ற எண்ணம் உடனே மின்வெட்டியது. இல்லை காமா நல்ல பெண்; தங்கமான பெண். அவள் இன்னும் என்ன சொல்லுகிறாள் என்பதைக் கேட்க அவன் விரும்பினான்.

''காமா, நீ எங்கே போகிறாய்?''

''பட்டணத்திற்கு.''

அவன் அவளை வெறித்துப் பார்த்தான்.

''நான் போகக்கூடாதா என்ன? நீங்கள் மட்டும் தான் அங்கு போக முடியுமோ? நான் படிக்கப் போகிறேன்.''

அந்த எண்ணம் அவளுக்குப் பரவசமூட்டியது. நீல வானத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு, சபதம் எடுப்பது போலச் சொன்னாள்:

''நான் பட்டணத்தில் படிக்கப் போகிறேன். ஆண்டவன் புண்ணியத்தில், அங்கே பள்ளிக்கூடங்கள் நிறைய உள்ளன. ஜனங்கள் எனக்கு உதவி செய்வார்கள். நான் எதற்கும் பயந்தவளில்லை......மூன்று ஆண்டுகள் சென்ற பிறகு, நான் உங்களையெல்லாம் காண இங்கு வருவேன்—'' அழுகை பீறிக்கொண்டு கிளம்ப, அவள் அங்கிருந்து ஓடினாள். செங்குத்தான பாறையில்குதித்தேறி, தடுமாறி விழுந்து, மீண்டும் ஓடினாள். இப்போது அவள் உச்சிக்கு வந்துவிட்டாள். ஒரு விநாடி கழிந்தது. அவள் புதரில் மறைந்துவிட்டாள்.

கெஸ்ஸோ குதித்து எழுந்தான்...

ஆனால் அவளைப் பிடிக்க முடியவில்லை. அவளது, வெண்பட்டு அங்கி, காற்றில் படபடவென்று பறந்துகொண்டிருந்தது!

கெஸ்ஸோ தனியாக நின்றான். தன் சிந்தனைகளுடனும், பரந்த உலகத்துடனும் தனித்து நின்றான். சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால், அதே ஓடையருகில், அதே பாறையின்மீது கெஸ்ஸோ உட்கார்ந்திருந்தான், தலைக்கு மேலே வஸந்த வானம் சிரித்துக்கொண்டிருந்தது. குவா குவா, கிளைச் மலைச் சிகரங்களில் யாரோ ஈரக்குச்சியைக் கொண்டு நெருப்புப் பற்ற வைத்ததுபோலப் பனி மூட்டம் போட்டிருந்தது. கீழே ஸாகேன் நதியிலிருந்து மெல்லிய ஓலம் மிதந்து வந்தது. வலப்புறம் ஸில்வர் மெடோவும், இடப்புறம் நட்கல்லியும், மிராம்பாவும் தென்பட்டன. ஸாகேனில் ஒவ்வொரு குடிசையின்

மீதும் புகைப்படலம் சூழ்ந்திருந்தது. நீலவானத்தின் பகைப் புலத்தில் மிளிரும் பனி படர்ந்த மலைகளுக்கு அசையும் சக்தியிருக்குமானால், அவை வட்டமாக நின்று ஆனந்தத் தாண்டவம் ஆடியிருக்கும்...

கெஸ்ஸோ எழுந்தான். மெல்லிய மணலில் சிறியகாலடித் தடங்களைக் கண்டான். அவைகளின் அருகே தன்னம்பிக்கையோடு தன் காலடியைப் பதித்து நடந்தான். தூரத்தில் பெரிய காலடித் தடங்கள் தெரிந்தன...

ஏப்ரல் மாதம் முடிந்து கொண்டிருந்தது. வெய்யில் கொளுத்த ஆரம்பித்தது; ரஸ்தாக்களில் புழுதி பதிந்து வந்தது. கோடைக் காலத்தின் உச்சிக் கட்டத்தைப்போல, காற்றுப் புழுதியை வாரி எறிந்தது.

செடிகொடிகளெல்லாம் துளிர்க்க ஆரம்பித்தன. எந்த மரத்தின் பட்டையைச் சுரண்டினாலும், பூமியிலிருந்து கிளம்பும் ஊற்றைப்போல ஈரம் பீறிட்டு அடித்தது.

பறவைகளின் இன்பகீதம் காற்றில் தவழ்ந்தது. புல்வெளிகளில் பசுக்கள் 'அம்மா'வென்றழைத்தன. அதிகாலையில் சேவல்கள் ஜம்பமாகக் கூவின.

விடியற்காலத்திலிருந்து கிராமம் முழுதும் வேலையில் ஆழ்ந்திருந்தது. தெருக்களில் வண்டிகள் சோம்பேறித்தனமாக அசைந்தாடிச் சென்றன. அவைகளின் இரைச்சல் நெடுந்தூரம் ஒலித்தது.

ஆம், நண்பர்களே! நான் வஸந்த காலத்தில் ஸாகேனை நேசிக்கிறேன்; அதை ஒரு தனிப்பட்ட முறையில் காதலிக்கிறேன். வஸந்த காலத்தில் அது யௌவனத் திமிருடன் திகழ்வதுதான் இதற்குக் காரணம்.

★

UNIVERSITY LIBRARY
28 ... 1968

# அண்ணாவின் சொற்செல்வம்

அறிஞர் அண்ணாவின் நூல் நிலையங்கள், (அ)ற நிலையங்கள், சொல்லும் பயனும், (பொ)ருள் என்ற நான்கு சொற்பொழிவுகள் (இந்)நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இவை (மு)ன்னர் தனித்தனி நூல்களாக வெளிவந்தவை. (நூ)ல் நிலையங்கள், அற நிலையங்கள், சொல்லும் (ப)யனும் என்ற சொற்பொழிவுகள் (தி)ரு. அன்புப்பழம்நீ அவர்களால் குறிப்பெடுத்(து)த் தொகுக்கப் பெற்றவை. பொருள் புலவர் (செ)ல்வராஜ் அவர்களால் தொகுக்கப்பெற்றது.

விலை ரூ. 1-25

★

## பாரி நிலையம்

*59, பிராட்வே, சென்னை - 1*

Jacket Printed at Neo Art Press, Madras-2